இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள்

(விடுதலைக்கு முன்)

பகுதி - I

பதிப்பாசிரியர்கள்

கரு.அழ. குணசேகரன்

தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள்

(விடுதலைக்கு முன்)

பகுதி - 1

பதிப்பாசிரியர்கள்

கரு.அழ. குணசேகரன்

தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book		Irupatām nūṟṟāṇṭut tamiḻk kaviñarkaḷ (Viṭutalaikku muṉ) Part - I
Editors		Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113 Dr. T. Mahalakshmi Senior Research Fellow International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Tharamani, Chennai - 600 113 Ph: 2254 2992
Publication No.	:	596
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg. TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	xiv + 322
No. of Copies	:	1200
Price		Rs. 100/- (Rupees One hundred only)
Printing		United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Pre-Independence Neo-Tamil poets

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

தேசிய விடுதலைக்கான பாடல்களை எழுதி விழிப்புணர்வு ஊட்டிய பாட்டுக்கொரு புலவன் பாரதியார், மொழிப்பற்று, மூடநம்பிக்கை, தமிழர் முன்னேற்றம் எனக் கருத்துகளைக் கொண்டு சமூக மாற்றத்துக்கான புரட்சி விதைகளைத் தன் கவிதைகளில் தந்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசன், காந்தீயச் சிந்தனைகளை மக்களிடையே விதைத்திடக் கவிதைகள் எழுதிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை என 20ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களுக்கு முன்னேர் பிடித்துச் சால்கள் அமைத்தவர்கள் இவர்கள். .

பாட்டாளி வர்க்கத்தைப் பாடுபொருளாய்க் கொண்டு பாடல்கள் எழுதிய கவிஞர்கள் பாவலர் வரதராஜன், வெ.நா. திருமூர்த்தி, ஜீவா, அறிவொளி, கவிதை என் கை வாள் என வந்த கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், தொ.மு.சி. ரகுநாதன் எனப் பட்டியல் நீளும். பசுவய்யா, அபி, விக்கிரமாதித்தன், பிரமிள் போன்ற கவிஞர்களின் கவிதைகளில் இருண்மைத்தன்மை படிமம் என்னும் கூறுகள் பொருந்தியிருந்தன. எழுபதுகளில் தமிழ்க் கவிதை உலகில் பாய்ச்சல் வேகம் கொள்ளக் காண நேர்ந்தது.

வானம்பாடிகள் நாங்கள்
வசந்த மின்னல்கள் நாங்கள்

என்று 'வானம்பாடி'க் கவிஞர்கள் தோன்றினர். கவிஞர் மீரா, சிற்பி, மு.மேத்தா, அப்துல்ரகுமான் எனப் பல கவிஞர்கள் புதுக் கவிதைகளில் உருவம், உள்ளடக்கம் இவற்றில் புதிய புதிய உத்தி முறைகளைக் கடைப்பிடித்து மரபு, தொன்மம் இவற்றின் வழியே சமூகச் சிந்தனைகளைத் தங்கள் கவிதைகளில் வடித்துத் தந்தனர்.

கவிஞர் பழமலய், தமிழச்சி போன்றோர் இயல்புநிலை வாழ்க்கையைப் புதிய பார்வையில் புதிய மொழிநடையில் தந்து புதிய தடத்தைக் கவிதைத் துறையில் காட்டியவர். ராஜமுருகு பாண்டியன், இந்திரன் போன்றோர் தலித் சிந்தனைகள் கொண்ட கவிதைகள் தருவதில் முனைப்புக் காட்டியவர்கள்.

காசி ஆனந்தன் போன்ற கவிஞர்கள் தமிழர், தமிழ் உணர்வு குறித்த அக்கறை கொண்ட கவிதைகளைப் படைத்து வருகின்றனர். கவிஞர் மீனாட்சி, கிருஷாங்கினி, மாலதி மைத்ரேய் போன்ற பெண் கவிஞர்கள் தம் கவிதையின் மொழி நடையையும், பாடுபொருள்களையும் பலவேறு தளங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டுக்குப் பிறகு படைப்புலகில் தலித் கலை இலக்கியங்கள் முகிழ்க்கத் தொடங்கின. சுகிர்தராணி, உமாதேவி போன்ற தலித் பெண் கவிஞர்கள் ஏனைய பிற பெண் கவிஞர்களிலிருந்து மாறுபட்டுத் தலித் பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்துக் கவிதைகள் எழுதி வருகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் என்னும் இந்நூலை இரு பகுதிகளாகப் பிரித்து 'விடுதலைக்கு முன்' என்னும் நிலையைப் பகுதி - 1 என்றும், 'விடுதலைக்குப் பின்' என்னும் நிலையைப் பகுதி - 2 என்றும் பகுத்து இந்நிறுவனம் வெளியிடுகிறது. இருப்பினும் குறிப்பிடப்பட வேண்டிய கவிஞர்கள் பலரின் கவிதைகள் குறித்த பதிவுகள் இடம்பெறாமல் போனமை வருத்தமளிக்கின்றது. எனினும் இந்நூலை வாசிக்கும்போது விடுபட்டுப் போன கவிஞர்கள் நம் கவனத்திற்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன முன்னாள் இயக்குநரும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் என் நன்றி.

'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள்' என்ற இக்கருத்தரங்கத்தின் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்துச் செம்மை செய்து, முறைப்படுத்தி, கவிஞர்களின் பிறந்த ஆண்டின் அடிப்படையில் விடுதலைக்கு முன், விடுதலைக்குப் பின் எனப் பகுத்தும் தொகுத்தும் மெய்ப்புத் திருத்தமும் செய்த இந்நிறுவனப் பதிப்பு மேற்பார்வையாளர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இக்கருத்தரங்கம் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், ஒளியச்சுச் செய்த கணிப்பொறியாளர்கள் மறைந்த திருமதி இரா. வெண்ணிலா, திரு. சு. கண்ணன், திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தேசியக் கருத்தரங்குகள், வாரக் கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் போன்றவற்றை நீண்ட காலமாகத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. அவ்வகையில் 2004-05 ஆம் ஆண்டுகளில் வெள்ளிக்கிழமை தோறும் **இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்** எனும் தலைப்பில் கட்டுரைகள் படிக்கப்பட்டன. இவை பெரிதும் அறிமுகம் இல்லாத கவிஞர்களை (சுரதா, நாமக்கல் கவிஞர் போன்ற ஓரிருவர் நீங்கலாக) அறிமுகப்படுத்துவதை நோக்காகக் கொண்டமைந்தன. ஆற்றலும், திறமையும், வலிமையும் மிகுந்த அளவில் இருப்பினும் உரிய சூழல் அமையாதவரை அவர்தம் வகைப்பாடுகள் சிறப்பாக வெளியே தெரிய வாய்ப்பு ஏற்படுவ தில்லை. எனவே, காலச் சூழலும், பின்புலமும் சரியாக அமையாததால் தங்களை வெளிக்காட்ட இயலாத கவிஞர்கள் பலர் இருக்கத்தான் செய்கின்றனர். அத்தகையோரை இனங்காண முயலுதல் எனும் நோக்கில் இத்தலைப்பானது தேர்வு செய்யப்பட்டது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போலத் தமிழ்நாடு முழுமையிலும் மிகப் பரந்த அளவில் இடம் பெற்றுள்ள கவிஞர்களுள் ஐம்பது கவிஞர்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளனர். தங்களுக்குப் பிடித்த கவிஞர்கள், நூல்கள்வழித் தங்களுக்குக் கிடைத்த கவிஞர்கள் என்ற தேர்ந்தெடுப்புதான் இதிலுள்ள கவிஞர்களின் அறிமுகத்திற்கு வழி கோலியிருக்கின்றது. முடிந்தவரை இவர்கள் அடையாளம் காட்டப்படுவதுடன், இவர்களது படைப்புகளிலுள்ள பாடுபொருள், நுட்பம் போன்ற பொருண்மைச் சிறப்புகளும் வெளிக்காட்டப்படுகின்றன. நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், நாடக ஆசிரியர், விமர்சகர், உடல் நல மருத்துவர், வங்கிப் பணியாளர் போன்ற நிலைகளில் அறியப்பட்ட தமிழறிஞர் களுக்குக் கவிஞர் என்ற முகமும் இருப்பது காட்டப்படுகின்றது.

கவிதைகள் கட்டுப்பாட்டை மீறுபவை; சுதந்திரத்தைக் கோருபவை. இத்தகைய கவிதைகளை உணர்த்தக் கவித்துவம் நிறைந்த மனம் வேண்டும். நிறுவன ஆசிரியர், திட்டப்பணியாளர், முனைவர் பட்ட ஆய்வாளர் ஆகியோர் இக்கவித்துவத்தைத் திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் உணர்த்த முயன்றுள்ளனர். இவர்களுடைய கட்டுரைகளின் தொகுப்பாக **இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்** எனும் இந்நூல் இருதொகுதிகளாக வெளிவருகின்றது.

வாழும் மானுடம் எதிர்வரும் காலத்தை, கடந்த கால அனுபவத்தோடு, பண்பாட்டோடு எதிர்கொள்ளும். இது உலகப்

பொது மரபு. அவ்வகையில் சங்கச் சான்றோர் தம் முன்னோர்களின் வாய்மொழிப் பாடல்களை ஏட்டில் ஏற்றினர்; அதன்வழி வாழ்வைத் திடமுடன் எதிர்கொண்டனர். அதேபோல் கடந்தகாலப் பண்பாட்டை எடுத்துப் பதிந்து கொள்ளுதல் எனும் முயற்சியே இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் பற்றிய அறிமுகம். நவீன வாழ்வின் தொடக்கமாக அமைந்த இருபதாம் நூற்றாண்டின் சாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு இருபத்தொன்றாம் நூற்றாண்டை எதிர்கொள்ள இது வழிவகுக்கும்.

ஒரு காலம் தனக்கு வேண்டியதைத் தேர்வு செய்து கொள்கிறது. அக்காலத்தில் வாழும் சமூகம் தனக்கு வேண்டிய விருப்பு வெறுப்புகளை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது. இருபதாம் நூற்றாண்டென்பது, தமிழ்க் கவிதை உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்திய காலம். உலகெங்கும் விடுதலை, சுதந்திரம், இன்ப வாழ்வு என்ற இடிமுழக்கம் கேட்டது. பாரதி, பாரதிதாசன் போன்ற மகாகவிகள் தோன்றி மக்களின் விடுதலை உணர்வைத் தட்டி எழுப்பினர். இந்திய விடுதலையானது மொழி விடுதலை, இன விடுதலை எனப் பிரிந்து இன்று பெண்ணிய, தலித்திய விடுதலைவரை விரிந்துள்ளது. சமூகம், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்பதில் தொடங்கிய புதுக்கவிதை தனிமனித சுதந்திரம், தனிமனித விருப்பு வெறுப்பு என்பதில் வந்து முடிந்திருக்கிறது. தமிழில் புதுக்கவிதை இயக்கமும் சுதந்திரத்திற்குப் பிறகு வீறுகொண்டு எழுந்தது. இவ்வியக்கங்களிலும் தனிமனித உணர்வுகளான தன்னழிவு, தன்னிரக்கம் என்பன பாடப்பட்டன.

இந்தக் கவிதைகளையும், கவிஞர்களையும் அளந்து காட்டும் அளவுகோல் எது என்று சொல்ல முடியாத நிலையே இருக்கிறது.

பாரதி, பாரதிதாசனைத் தொடர்ந்து, ஈரோடு தமிழன்பன், அப்துல் ரகுமான், இன்குலாப், பிச்சமூர்த்தி, பசுவய்யா, கல்யாண்ஜி, வைரமுத்து, பழமலய், சல்மா போன்றோர் இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்களாகச் சுட்டப்படுகின்றனர்.

தமிழில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளையும், அதன் போக்குகளையும் சுட்டிக் காட்டிய நூல்கள் மிகக் குறைவு. புதுக்கவிதை புதுப்பார்வை (பாலா), தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு (சு. அரங்கராசு), கவிதை நயம் (க.கைலாசபதி, இ. முருகையன்), தமிழ்க் கவிதை தோற்றமும் வளர்ச்சியும் (வல்லிக் கண்ணன்) இருபதில் கவிதை (தமிழவன்), தற்காலத்துத் தமிழ்க் கவிதை (ஆ. தசரதன்) போன்ற நூல்கள் ஓரளவு புதுக்கவிதையின் போக்குகளை அறிமுகப்படுத்துகின்றன. படிமம், தமிழ்ப் புதுக்கவிதைகளில் படிமங்கள் என்ற சுதந்திரமுத்து அவர்களின் நூல்கள் புதுக்கவிதையை, அதன் கட்டமைப்பை உணர்த்திக்

காட்டிச் சிறப்புற விளக்குகின்றன. கோவை ஞானியின் மார்க்சியமும் தமிழ் இலக்கியமும் என்ற நூலும், நாகார்ஜுனனின் கலாச்சாரம் அகலாச்சாரம் எதிர் கலாச்சாரம் என்ற நூலும் மேலை நாட்டுக் கவிதைக் கருத்துகளை உள்வாங்கி விளக்குவதைக் காணமுடிகின்றது.

தமிழ்க் கவிஞர்கள் இதழ்களில் அவ்வப்போது எழுதி வரும் கட்டுரைகளும், விமர்சனங்களும் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளை அறிந்துகொள்ள ஏதுவாக உள்ளன.

இதுபோன்ற பலவகையான திறனாய்வுக் கண்ணோட்டங்கள் வந்திருப்பினும் கவிதை குறித்துப் பொதுவான முடிவிற்கு வரமுடியாத நிலையே நிலவுகிறது.

நல்ல கவிதை என்பது பிரம்மன் படைத்தளித்த அற்புதங்களில் தலைசிறந்தது என்பார் பாரதி. இத்தகு சிறப்பைத் தன்னகத்தே கொண்டுள்ள கவிதையைப் படைக்கும் கவிஞர்க்குப் போதிய படிப்பறிவு, அனுபவம், கவிதையை உள்வாங்கும் கூடுதல் முயற்சி போன்றன இருத்தல் வேண்டும். **கவிதை என்பது சிறந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் சீரிய முறையில் வெளியிட்டு நிற்கும் சொற்கலையாக்கம்** என்கிறார் ச.அகத்தியலிங்கம். மொழியைப் பேணிப் புத்துயிர் அளித்து என்றும் சக்தியுள்ளதாக்குவது கவிதை என்பார் கைலாசபதி. எனவே, கொக்கு மீனுக்காக நிற்கும் சிரத்தை கவிஞன் வார்த்தைக்காகக் நின்று கவிதையில் வெளிப்படவேண்டும். அழகியல் உணர்வுடன் நவில்தொறும் புதுப்புது நயங்களை வழங்குவதாய்; பயன்தரக்கூடியதாய் இருத்தல் அதன் பண்பு எனலாம்.

சமூக உணர்வுகளையும், மனசாட்சியின் குரலையும் எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் இப்புதுக் கவிதைக்கு வடிவமும் யாப்பும் உண்டா என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. உருவம் என்று ஒன்று இருந்தால் அதற்கு உறுப்புகள் இருந்துதான் தீரவேண்டும்.

பிற இலக்கியங்களினின்று வேறுபட்டெழுந்த புதுகவிதைக்கெனப் பண்புகள் உள்ளதைக் காணமுடிகிறது. முன்பு இருந்த நிலையில் இருந்து இது மாறுபடுவதால் முன்பு இருந்த யாப்பும் மாறுபடுவது இயல்பே. **முற்பட்ட மரபுகளிலிருந்து விடுபட்டுத் தனித்துவமான முறையில் சுருக்கமான அமைப்பில் எழுதுவதே புதுக்கவிதை. எழுத்தாளரின் பிரதானப் பண்பு எனக் கொண்டால், அது தன்னுணர்ச்சிப் பாடலின் வரைவிலக்கணமாகவும் அமைந்து விடும் என்கிறார்** க. கைலாசபதி (இலக்கியச் சிந்தனைகள், ப.64). எனவே கடந்த கால இலக்கணம்போல் அமையாதிருப்பினும் புதுக்கவிதைக்கும் இலக்கணம் உண்டு என்பது புலனாகும்.

தமிழ்க்கவிதை இரண்டாயிரம் ஆண்டுகாலப் பாரம்பரியத்தை உள்ளடக்கியது. இதில் புதுக்கவிதையானது

எழுபது ஆண்டுகளைக் கடந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. சுமார் எழுபது ஆண்டுகளை நிறைவு செய்து விட்ட இப்புதுக்கவிதை காலந்தோறும் உருவத்தில் உள்ளடக்கத்தில் மாறுதல்களை ஏற்படுத்தி வளர்ச்சி கண்டுள்ளது.

காதல், வீரம், கொடை, நீதி, பக்தி, குறுநிலமன்னர் புகழ்ச்சி, சிற்றின்ப நிமித்தம், பாடுதல் போன்ற படிநிலை வளர்ச்சியினைக் காலந்தோறும் இலக்கியங்களிலுள்ள பொருண்மைகளில் காண்கிறோம். இப் புதுக்கவிதையும் மரபின் தொடர்ச்சிதான் என்றாலும், மரபிற்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பை இதில் காணமுடிகிறது.

சுவை புதிது பொருள் புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க நவகவிதை
எந்நாளும் அழியாத மகா கவிதை

என்கிறார் பாரதியார். எனவே நவீனக்காலக் கவிதையின் தலைமைப் பண்பு புதுமை பற்றியதாக அமைகிறது.

இத்தொகுப்பில் பொருண்மைகளாக, அனுபவம் காரணமாக வெளிப்ப்டும் கருத்துகளும், சில செய்திகள் ஏற்படுத்திய தாக்கத்தால் வெளிப்படுத்தியுள்ள கருத்துகளும் தோற்றம் கொண்டுள்ளன. இவை சமூக அவலங்களுக்குக் குரல் கொடுக்கின்றன; தீய நிகழ்வுகளைத் தூற்றுவதோடு ம்ட்டும் அல்லாமல், நல்ல நிகழ்வுகளைப் போற்றுகின்றன; சமூக அக்கறையுடன் அறிவுரை கூறுகின்றன; அறிவுறுத்துகின்றன; முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன; மக்களைச் சிந்திக்க வைக்கின்றன.

அவ்வகையில் இத்தொகுப்பில் சீர்திருத்தம், புரட்சி, பெண்விடுதலை போன்ற பொருண்மைகள் நாட்டுப்பற்று, தமிழ் மொழி, காதல், வீரம், இயற்கை, பெண்கல்வி, தலைவன், தலைவி புகழ் பாடுதல், சமயம், அரசியல், ஆன்மிகம், தத்துவம், அறிவியல், பொருளாதாரம், வேளாண்மை, பகுத்தறிவுச் சிந்தனை, பொது வுடமை நோக்கு, குழந்தைகளுக்கான விழிப்புணர்வு, மனிதநேயம் போன்ற தலைப்புகளிலும் பலவாறான உணர்வு நிலைகளிலும் பாடப்பெற்றுள்ளன.

இவை திராவிடப் பின்புலக் கவிதைகள், வானம்பாடிக் கவிதைகள், மார்க்சிய பின்புலக் கவிதைகள், வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் முன்முயற்சி செய்த கவிதைகள், குழந்தை களுக்கான கவிதைகள் போன்ற வகைப்பாடுகளில் அமைகின்றன.

எளிமையாகச் சொல்லும் பாங்கு, வார்த்தைகளைத் தன் ஆளுமையில் வைப்பது, நகைச்சுவை, எள்ளல், உருவகம் போன்ற அணிநயம், எதுகை, மோனை நயம், சொல்லாட்சி, ஓசைநயம், பன்முறை அணுகினும் எளிதில் பிடிபடாக் குறியீடு, படிமம், உவமப் படிமம் போன்ற உத்திமுறைகளையும் இக்கவிதைகளில்

காணமுடிகின்றது. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஓரிரு கவிதைகளைக் காண்போம். சில கவிதைகள் அவை எழுந்த காலங்களைக் காட்டி நிற்பதை,

மேட் இன் ஜப்பானுக்கு
ஏக கிராக்கி
ஹைற கூவிலும்

என்ற ரவிசுப்ரமணியனின் ஹைகூ, ஹைகூ பிரபலமாகியிருந்த எண்பதுகளைக் காட்டி நிற்கின்றது. கவிதை வடிவமான ஹைகூவில் பேசுவது, ஹைகூவைப் பற்றி, மேலும் ஹைகூ பிறந்த நாடு, பாடுபொருள் எனப் பலநிலைகளை இக்கவிதை சிந்திக்க வைக்கிறது. பூரணியின்,

அவைகள் மனிதர்கள்
அல்ல, அதனால்
இணையைப் பிரித்து
இஞ்சக்ஷன்
செய்து
இனத்தைப் பெருக்கி
இலாபமடை;
நீயோ மனிதன் ஆகையால்
கருத்தடை மூலம்
குழந்தைகளை ஒழித்து
கட்டற்ற
கலவியில் திளை

என்ற கவிதை எழுபதுகளில் வடிவெடுத்திருக்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலக் கவிதைகள் என்பதை,

பண்மணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென், மனைவியைப் பாதுகாக்கு நனாய்

என்ற பரிதிமாற் கலைஞரின் கவிதையும்,

புருடனைக் கண்ட புதுப்பெண் போல
தரித்திரம் காமனைப் போல் பார்வையில் எரித்திடும்

என்ற நாமக்கல்லாரின் கவிதையும் உணர்த்தி நிற்கின்றன. மேலுமிவை உவமைகள் கூறுவதே கவிதையின் உயர்ந்த வேலை என்பதையும், பெண்பற்றிய அவர்களது கண்ணோட்டம் எத்தகையது என்பதையும் காட்டுகின்றன. வடிவத்திலும் பெண்ணிய நோக்கிலும் இவை மிகவும் பின்னால் நிற்கின்றன.

படிமக் கவிதைகள் பல சிறப்புற இடம்பெற்றுள்ளன என்பதை,

பழம் உதிரும் என்று
கிளையை அசைக்க

மேலிருந்து கூடு
விழுந்தது கீழே
இப்போது
கூடு கலைத்த பாவம் வேறு

என்ற யூமா வாசுகியின் கவிதை காட்டுகிறது. இக்கவிதை வரிகளின் பின்னால் கதறும் மனிதனின் தீனமான குரல் கேட்கிறது. இணையக் கவிஞரான சேவியரின்,

கைத்தடி உடைந்த குருட்டுக்
கிழவன் போல்
தடுமாறி நகரும்
கும்மிருட்டு

என்ற கவிதை இருள் படிமமாவதைக் காட்டுகிறது. இவை போன்று இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளால் கவிஞர்களின் புகழ் வெளிக்காட்டப்படுகின்றது. அவர்களின் கவிதைகள் விவரித்து வகைப்படுத்தப்படுகின்றன. இக் கவிதைகளின் சில தன்மைகளை முன்வைத்து இக்கவிஞர்களை அணுகுவதற்கு இத்தொகுப்பு வழிவகுக்கும். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் (நூல்கள்) மேற்கூறிய சிறப்புகளைப் பெற்றிருப்பினும் பரவலாக அறியப்படாதவை. ஒட்டுமொத்தத் தமிழ் உலகினரின் கவனத்திற்கு வராதவை. எம்மாதிரியான பாடு பொருள்கள் பாடப்படுகின்றனவோ அவற்றையே இப்படைப்பு களிலும் காணமுடிகின்றது. சமூக வளர்ச்சிக்கு இலக்கியப் பங்களிப்புச் செய்யவேண்டுமென்ற கோட்பாடும், கொள்கைப் பிடிப்பும் இவற்றில் ஊடுறுவியுள்ளன. இருப்பினும், இவை சரியான முறையில் அடையாளங் காட்டப்படவில்லை. இதற்குரிய சூழலும் பின்புலமும் அமையாததுகூடக் காரணமாக இருக்கலாம்.

பாடுபொருளானது புகழ்பெற்ற கவிஞருக்கு உணர்வின் உச்சநிலையிலும், சில புதுக்கவிஞருக்குச் சமநிலையிலும், இன்னும் சிலருக்கு உணர்வின் தொடக்க நிலையிலும் வெளிப்படுகின்றன. எனவே, உணர்வின் எல்லைகள் குறுகியிருப்பதும் வெளியீட்டு உத்திகள் வலுவற்றிருப்பதும் அடையாளம் காட்டப்படாமைக்குக் காரணமாக இருத்தல் கூடும். மேலும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள தனிமனித வருத்தம், சமுதாய அவலம், கற்பனையின் சிதறல், காதல், இயற்கை போன்ற பொருண்மைகள் பலராலும் முன்பே கவிதைச் சிறப்புடன் கூறப்பட்டவை. ஏனெனில், புதுமையானதைக் கூறுவது என்பதும் எளிதன்று. மகாகவிகள் சிலர் சிறப்புக்குரியதைப் படைத்துவிட்டுச் செல்லும் ஆற்றலுடையவர்கள். அவற்றினின்றும் உயர்வானவை தோன்ற மற்றோர் யுகமாற்றம்வரை சமூகம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

பாரதி, பாரதிதாசன் போன்றோருடைய கவிதைகள் சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் அன்றைய சமூகம்

நெருக்கடிமிக்கதாகவும், விடுதலை உணர்வு வேண்டுவதாகவும், வெள்ளையரை வெளியேற்றும் தேவையுடையதாகவும் இருந்தது. அதற்காக மொழி, இன அடையாளங்களை மீட்டெடுக்கும் வரலாற்றுப் பணிகளைச் செய்ய வேண்டிய தேவையும் இருந்தது.

இன்னும் சமூகம் சிக்கல் நிறைந்ததாகத்தான் உள்ளது. எனினும், சமூகம் முழுமைக்குமான தீதும் நன்றும் எதுவெனக் காட்டுவதில் தெளிவற்ற குழப்ப நிலையே நிலவுகின்றது. சமூக நெருக்கடிகளிலிருந்து மெல்ல மெல்ல விடுபடும்போது சமூகக் கூட்டுணர்வு மழுங்கி மறைகிறது. இத்தகைய சூழல்களில் உருவாகும் கவிதைகள் ஆற்றல் மிக்கதாக அமைவதென்பது மிக அரிதான பணியாகும்.

துயர்களைய வேண்டுவதும், கருத்தைச் சொல்லத் துணிந்த அளவிற்கு மாற்றுத் தீர்வைச் சொல்ல முற்படுவதும், தேவையை நிறைவடையச் செய்ய முயல்வதும் இனிவரும் கவிதைப் படைப்புகளில் அமையும்போது அவை காலங்கடந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று வாழும் கவிஞர்களுள் ஒரு சிலர் சிறந்த கவிஞர்களாகத் தெரிகின்றனர். பலர் தெரிவதில்லை. அதுபோல் ஒருசில கவிதைகளே எழுதியிருப்பினும் கவிஞராகக் கருதப் பட்டவரும் உண்டு. ஓராயிரம் கவிதைகள் எழுதியும் கவிஞராகக் கருதப்படாதவர்களும் உண்டு. முன்னோர் கவிதைகளுள் சிறப்பானவற்றை நாம் இப்போது அடையாளம் கண்டு கொள்கிறோம். அதுபோல் இன்றைய சிறந்த கவிஞர்கள் நாளை அடையாளம் கண்டுகொள்ளப்படுவார்கள்.

புதுக்கவிதை தொடர்பான நூல்கள் அனைத்தும் ஓரிடத்தில் கிடைக்கும் நிலை உருவானால் கவிதை ஆய்வு தரமாக அமையும். பிரபலமான பதிப்பகங்கள் அறிமுகப்படுத்தும் கவிஞர்களே கவிஞர் என்ற மாயை நீங்கிக் கவிதைகளின் வழியாகவே கவிஞர்களின் நிலை முடிவு செய்யப்பட வேண்டும்.

இந்நூல் வெளிவரத் தோன்றாத் துணையாக நின்ற மேனாள் இயக்குநர்கள் முனைவர். சா. கிருட்டினமூர்த்தி மற்றும் முனைவர் ம. ராஜேந்திரன் (முழுக்கூடுதல் பொறுப்பு) அவர்களுக்கும், இயக்குநர் முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும், கட்டுரைகளை வழங்கிய நிறுவன ஆசிரியர் களுக்கும், ஆய்வாளர்களுக்கும், இந்நூல் ஆக்கத்திற்குத் துணைநின்ற முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் கை. சங்கர், மா. பெரியசாமி ஆகியோருக்கும் ஒளியச்சுக் கோர்வை செய்த மறைந்த திருமதி இரா. வெண்ணிலா, திரு.சு.கண்ணன், திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் என் உளம்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி. மகாலட்சுமி

பொருளடக்கம்

1.	பரிதிமாற் கலைஞர்	த. பூமிநாகநாதன்	1
2.	நாமக்கல் கவிஞர்	தா. ரெங்கநாதன்	11
3.	புதுமைப்பித்தன்	கே.பி. வித்யாதரன்	23
4.	மீனாட்சி	அன்னிதாமசு	37
5.	வெ.நா. திருமூர்த்தி	கே.வி. வித்யாதரன்	50
6.	க.நா.சு.	ஆ. மணவழகன்	62
7.	பூரணி	அன்னிதாமசு	74
8.	தொ.மு. சிதம்பர ரகுநாதன்	மா. பெரியசாமி	88
9.	முருகு சுந்தரம்	ச. சிவகாமி	98
10.	நா. புகழேந்தி	ரெ. சொர்ணபிரபா	117
11.	பசுவய்யா	ரா. ராஜேஸ்வரி	124
12.	சிவனடியான்	கே.பி. வித்யாதரன்	141
13.	புஞ்சையரசன்	அ. சரசுவதி	154
14.	திலகவதி	த. பூமிநாகநாதன்	168
15.	காரை மைந்தன்	அ. பூங்கொடி	182
16.	அன்புநிலவன்	க. ஜெயந்தி	194
17.	காசி ஆனந்தன்	மு. வளர்மதி	208
18.	மீரா	அ. பூரணலதா	227
19.	இவரா	ஆ. தசரதன்	243
20.	பழமலய்	க. ஜெயந்தி	254
21.	ஆ. கோவிந்தராசலு	மு. வளர்மதி	268
22.	பொன். அய்யனாரப்பன்	ஜே. சரஸ்வதி	285
23.	சேஷாசலம்	செ.ஜீன் லாறன்ஸ்	299
24.	ஆவத்தி வெங்கடாசலம்	தி. மகாலட்சுமி	307
25.	ரவி சுப்பிரமணியன்	கு. பகவதி	319

பரிதிமாற்கலைஞர்

இருபதாம் நூற்றாண்டு எனும்போது அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்தோடு தொடர்புடையது. ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே தற்காலத் தமிழ்க் கவிதைகளுக்கு வித்தூன்றப்பட்டது.[1] பொருண்மை, உணர்ச்சி, கற்பனை, கவிநயம் பற்றிய கோட்பாடு, நவீனக்கால வாழ்க்கைக்குரிய சிந்தனைகள் எனப் பலநிலைகளிலும் வளர்ச்சியும் புரட்சியும் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை கண்டுள்ளது.

பொருண்மை

இக்காலக் கவிதையில் பெரும்பாலும் நாட்டுப்பற்று, காதல், வீரம், தமிழ்மொழி, இயற்கை, பெண்ணியம், தலைவர் புகழ்பாடுதல், சமயம், அரசியல், ஆன்மீகம், பகுத்தறிவு பற்றிய சிந்தனை, பொதுவுடைமை நோக்கு போன்ற பல்வேறு பொருண்மைகள் இடம்பெற்றுள்ளதாகக் காணலாம். 'பழைமைவழிப் புதுமை' என்ற நிலை இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் ஏற்பட்டது. பழம் இலக்கிய வடிவத்தின் சாயல் பெற்றுக் கவிதைகள் செய்தனர். இவை காப்பியத் துணுக்காகவும், குறுங்காப்பியங்கள் ஆகவும் கதைக்காப்பியங்கள் ஆகவும் அமைந்தன. **கண்ணகி புரட்சிக் காப்பியம், அகலிகை வெண்பா** போன்றவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம் எனத் **தற்காலத் தமிழ்க் கவிதைகள் - ஆய்வு (1982)** என்ற நூல் காட்டும் செய்தி ஈண்டு எண்ணத்தக்கது.

ஆங்கிலக் கவிதை மரபைப் பின்பற்றி சானட் (Sonnet) என்ற வகையும், கையறுநிலை என்பதுவும், லிரிக் (Lyric) எனப்படும் தன்னுணர்ச்சிப்பா வடிவமும் தமிழுக்குப் புது முயற்சியாகும்.[2] இம்முயற்சியைப் பரிதிமாற் கலைஞர் மேற்கொண்டு கவிதை யாத்துள்ளார்.

பண்டித மரபு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் வாழ்ந்த கவிஞர் சிலரின் கவிதைக்குரிய பாடுபொருளாகப் **பக்தி** அமைந்தது. அதன் விளைவாக அந்தாதி, உலா, சதகம், பள்ளு போன்ற இலக்கிய வடிவங்கள் பக்திப் பொருண்மையைச் சுமக்கும் ஊடகங்களாக விளங்கின. இக்கவிதைப் பொருள்களைப் பண்டிதர்களான கருப்பையா பாவலர், அரசஞ் சண்முகனார், அருணாசலக் கவிராயர், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், மனோன்மணி அம்மையார் போன்றோர் கையாண்டனர்.[3] பத்தொன்பதில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டில் கொழுந்துவிட்டெறிந்த விடுதலை உணர்வு பல அறிஞர்களையும் கவிஞர்களையும் ஈர்த்தது. அதன் பயனாக அசலாம்பிகை அம்மையார் **(காந்தி புராணம்)**, கிருட்டிணன் **(பாரத அம்மானை)**, கா.மு. சுந்தர முதலியார் (காந்தி சதகம்) போன்றோர் பல படைப்புகளை வெளிக்கொணர்ந்து முன்னோடிகளாக விளங்கினர்.[4]

பாரதி மரபு

இருபதாம் நூற்றாண்டின் திருப்புமுனைக் கவிஞராக விளங்கிய பாரதி, தொடக்கத்தில் பக்தியைக் கவிதைப் பொருளாகக் கொண்டாலும் தேசிய விடுதலை, பெண் கல்வி, சாதி ஒழிப்பு, குழந்தைகளுக்கான விழிப்புணர்வுப் பாடல் எனச் சமூகச் சிந்தனையோடு ஒரு புதிய மரபை ஏற்படுத்தினார். அவர்வழி கவிமணி, சுத்தானந்த பாரதி, பாரதிதாசன் எனப் பலர் நின்று சிறந்து விளங்கினர்.[5]

பாரதிதாசன் மரபு

பாரதியின் சக்திப் பொருளில் பாடி, சமூகப் பொருளை விரித்து, இயற்கையில் தழைத்து, தமிழில் முகிழ்ந்து ஓர் ஆல விருட்சமாக விரிந்து தற்காலக் கவிதையுலகில் பாரதிக்குப்பின் ஒரு மரபை ஏற்படுத்திக் கொண்டவர் பாரதிதாசனே ஆவார்.[6]

'காதலை' மையமாக வைத்துப் பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் சில காவியங்கள் ஜனநாயக அமைப்பில் உள்ள தடைகளை வெல்வதற்கு முதன்மை தந்து, காதலர் கூடி

மகிழ்வதாக உள்ளன. பழைய இலக்கியக் கதைக்கருக்களைத் தற்காலத்துக்கேற்பப் பாடும் பாரதிதாசனைப் பின்பற்றி வாணிதாசன், சுரதா போன்றோர் கவிதை உலகில் சிறப்புற்று விளங்கியவர்கள் ஆவர்.

பிச்சமூர்த்தி மரபு

பாரதியின் வழியில் வந்த ந. பிச்சமூர்த்தி தமக்கென ஒரு தனிமரபை ஏற்படுத்திக் கொண்டவர். பாரதியின் வசன கவிதை வடிவம், குயில் பாட்டு தரும் உருவக உத்தி கண்ணன் பாட்டின் தாக்கம் என்பன பிச்சமூர்த்திக்கு அடித்தளங்களாயின. தொடக்க காலத்தில் பாரதியின் பிடிப்பிலிருந்த பிச்சமூர்த்தி பின்பு பாரதியினின்று விலகி, தனிப்பட்டு விளங்கினார். இவ்வாறாக நான்கு விதமான கவிஞர் மரபுகள் இந்நூற்றாண்டில் விளங்கின.[5]

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கும் இருபதாம் நூற்றாண்டிற்கும் தொடர்புடைய பரிதிமாற் கலைஞரின் படைப்புகளில் ஒன்றுதான் அவரது தனிப்பாசுரத் தொகை.

சூரியநாராயண சாஸ்திரி என்ற இயற்பெயரைத் தூய தமிழில் பரிதிமாற்கலைஞர் என மாற்றிக் கொண்ட அருளாளர் சிறந்த இயற்றமிழ், நாடகத் தமிழ்ப் படைப்பாளராகப் பலரும் அறிந்திருக்க வாய்ப்புண்டு. அவர் ஒரு சிறந்த கவிஞராகவும் விளங்கினார் என்பதை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நூல் வரலாறு

இந்நூல் ஜி.யு. போப்பின் மொழிபெயர்ப்போடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 1997இல் மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலே இவ்வாய்வுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலில் 43 கவிதைகள் உள்ளன. கடவுள், அறிவு, வாய்மை, அன்பு, காதல், இசை, கல்வி, நூல், குரு, மாணவன், மனம், உடல், மனிதன், மாதர், அழகு, வரைவு, கணவன், மனைவி, கற்பு, இல்லறம், தொழில், நிலன், கடல், பரிதி, மதி, விண்மீன், மலை, யாறு, வழி, முகில், காலை, இரவு, துகில், பொழில், மலர், புள், காமம், வரைவின் மகளிர், வெகுளி, மயக்கம், திருவள்ளுவர், போர், எறும்பு ஆகிய 43 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவை மேலை இலக்கிய வகைகளில்

ஒன்றாகக் கருதப்படும் Sonnet என்ற இலக்கிய வகையைப் பின்பற்றி அமையப்பெற்றன. சானட் வகை என்பது ஒரு பொருளைப் பற்றிப் பதினான்கு அடிகளில் அமையப் பெற்றதாகவும், பாட்டின் இறுதிச்சீர் எதுகை நயம் உடைத்தாகவும், பாடலின் முதல், இடை, கடை என்ற மூன்று நிலையிலும், பாடுபொருளின் தோற்றம், வளர்ச்சி, முடிபு என்று மூன்று நிலை கொண்டதாகவும் விளங்கும்.

இவ்விலக்கிய வகையில் தமிழுக்கோர் புதிய படைப்பைத் தரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகக் கலைஞர் அகவற்பாவில் இன்னோசை தரவல்ல அடி முதல் எதுகையை வைத்துப் பாடல்களைப் புனைந்துள்ளார். சானட் வகையை எடுத்தாளுகின்ற பொழுது பின்பற்றக் கூடிய அடிஇறுதி எதுகையை இவர் தவிர்த்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரப்பிய ஜி.யு. போப் இந்நூலின் சுவை கண்டு அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்குத் தந்துள்ள பெருமை ஈண்டு எண்ணி மகிழத்தக்கது.

இந்நூல் படைத்தற்கான காரணத்தைப் பரிதிமாற் கலைஞர் கூறும்பொழுது,

> 'ஆங்கில நூல் பயிற்சியுடைய தமிழ்மக்கள் தமிழ்மொழியைப் பெரிதும் கவனித்தலின்றி ஆங்கிலம் மட்டுமே போற்றப்படுகின்றனரெனப் பலரும் கூறும் வசைமொழி எம் செவிப்படலும் மனம்பொறேம். புதுமை வழியால் ஏதேனும் செய்ய வேண்டும் என்று புகுந்தேம். அங்ஙனம் புக்குழியாம் அவ்வக் காலங்களில் சிற்சில விடயங்களைப் பற்றிக் கொண்ட கருத்துகளைச் செய்யுள் உருவமாய்ச் செய்து வெளியிடலாம் என்று உன்னினேம். அவ்வாறே அவ்வக்காலத்துச் செய்த பாசுரங்களை 'ஞான போதினி' என்னுமொரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாகச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தினேம். இது கண்ட சில அபிமானிகளும் எமது நண்பரும் அவை அனைத்தையும் ஓராற்றாற்றொகுத்துத் தனியே ஒரு நூலாக வெளியிடவேண்டுமென்று வேண்டினர். அன்னார் வேண்டுகோளுக்கு இணங்கி வெளியிடப் புகுந்த யாம் இப்பாசுரங்களில் சிலபுதுக்கருத்துகள் காட்டியிருக்கின்றமை

பற்றி அஞ்சுவேம். எமது மெய்ப்பெயரின் வெளியிடாது பரிதிமாற் கலைஞன் என்னும் புனைவுப் பெயரின் வெளியிடுவோமாயினேம்.[8]

இந்நூலில் ஒருசில பாடல்கள் பரிதியாரின் கவித்துவம் புலப்பட ஈண்டுச் சிந்திக்கப்பட்டுள்ளன. பொதுவாகப் பரிதியாரின் நடை பண்டிதத் தமிழில் அழகுற அமைந்த நடையாகும். அன்றைய காலக்கட்டத்தில் தனித்தமிழ் போற்றப்பட்ட நேரம். ஆகவே, தூய தமிழில் வெளிவரும் படைப்புகள் கற்போரால் பெரிதும் ஏற்றுப் போற்றப்பட்டன. இக்கட்டுரையில் பரிதியாற் கவிதையில் காணும் கருத்துச் செறிவு, அழகிய சொல்லாக்கத் தொடர்கள் ஆகியன பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

கருத்துச் செறிவு

அறிவு என்ற பாடலில் அறிவின் சிறப்பைப் பற்றிச் சொல்லும்போது,

அறிவே! மக்கட் மாருயிர்க் குறுதியே!. . .
தெரிதருந் தீயே! பெரிதுமென் மனக்களி
றடக்குமங் குசமே! கடக்கரு வாழ்க்கைக்
கடற்செல விற்றிசை காட்டுங் கருவியே
என்னுள மன்னித் துன்னிரு டுமித்தொளிர்
நந்தா விளக்கே! சிந்தாமணியே!

என்ற இந்த வரிகளின் வாயிலாக அறிவின் இன்றியமையாமையை ஆசிரியர் விளக்குகிறார். அக்காலக்கட்டத்தில் கல்வி என்பது பலருக்கும் கிட்டிய ஒன்று அன்று. கல்வி அறிவு பெற்றவர் சமூகத்தில் உயர்ந்த நிலையில் கருதப்பட்டனர். பண்டிதர் என்றும், அறிஞர் என்றும் போற்றப்பெற்றனர். ஆகவே, கல்வி தரும் அறிவு என்ற செல்வத்தை அனைவரும் பெறவேண்டும் என்பதே கலைஞரின் நோக்கம். 'வாய்மை' என்ற கவிதையில் கூறும்போது,

. . . சிறப்பொடு மாட்சிசேர் குணனே!
மேற்கோள் எவற்றினும் மேற்படும் இயல்பே!

என்றும் பாராட்டுவதன் வாயிலாக வாய்மையின் சிறப்பை எடுத்து விளக்குகிறார். இந்தச் சிறப்பை உணர்ந்த போப்,

O Truth, with beauty and high glory crown'd
Thou conqueror still of every stubborn foe!

என மொழிந்திருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. 'அன்பு' என்ற தலைப்பில் அமைந்த பாடலில் அன்பைப் பற்றிச் சொல்லும் போது,

அன்பே! அன்பே! அழகுசா லன்பே!
என்பே ருளத்திற் கியைந்த செவிலியே!

என்கிறார். இவ்விடத்தில் செவிலியே என அன்பை ஆசிரியர் வர்ணித்திருப்பது கவிதைச் சுவைக்குத் தக்க சான்று.

'காதல்' என்ற பாட்டில் காதலைப் பற்றிக் குறிப்பிடும்போது காதலுக்கான புது விளக்கத்தை ஆசிரியர் தருவது படித்து இன்புறத்தக்கது.

தற்செய லாகத் தனித்தெதிர்ப் படுநரை
இச்சை கொளுத்தி யிசைப்பா யவர்மனம்

என்ற வரியின் வாயிலாகக் கண்டதும் காதல் என்ற ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரின் Love at first sight என்ற வரியை நினைவு கூரச் செய்கிறார்.

மக்களுக்கு மிகவும் வேண்டப்படுகின்ற கல்வி பற்றி ஒரு கவிதை செய்துள்ளார். அந்தக் கல்வியைப் பாராட்டும் முகமாக,

. . . புலவர்தஞ்
செல்வியே! மனத்தின் செவ்விய வுணவே!

என்றும்,

கருத்தினிற் களிப்பை; உரைப்பை யாற்றுரை
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவுநன் னாடே! எதுவுநல் லூரே!!

என்ற இப்பாராட்டு வரிகள் "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற ஔவையின் வாக்கோடு ஒப்பிட வைக்கின்றன.

அடுத்தபடியாக நூல் என்ற தலைப்பில் ஒரு கவிதை அமைந்துள்ளது. இதில் நூலை ஆசிரியராகக் கருதிக் கொண்டு,

வாய்வா ளாமை மேயநூற் குரவிர்காள்!

என விளிப்பது இதுவரை எந்தக் கவிஞரும் முயன்று சொல்லாத ஒன்று. வாய் வாளாமை என்றால் "மௌனம்" என்பது பொருள். ஆகவே பேசா ஆசிரியர் எனக் கலைஞர் உருவகம் செய்திருப்பது புதுமையானது. இப்புதுமைப் பொருளில் கவர்ந்து ஈர்க்கப்பட்ட ஜி.யு. போப் இக்கவிதையின் முதல் வரிக்கு "My Silent Teachers" என்ற வரியையே தமிழுக்கு இணையாகப் பயன்படுத்தியுள்ளார்.

'மனன்' என்ற தலைப்பில் அமைந்த பிறிதொரு பாடலைக் காண்போம். இப்பாடலில் மனத்தைப் பற்றிச் சுட்டும்போது ஐம்பொறிப்பரி என உருவகித்திருப்பது கவிச்சுவைக்கு ஒரு சான்று.

'மனிதன்' என்ற கவிதையில் மனிதனைப் புகழ்ந்து கூறுவது போல அதனுள் ஒரு தத்துவத்தையும் இணைத்துச் சொல்லியுள்ளார். அது வருமாறு:

> **ஐம்பெரும் பூதமும் மொய்ம்பினில் வென்றனை!**
> **இன்னுமொன் றுளதது நின்னை நீ வேறலே;**
> **தனத்தா னுயர்த்திலன் றனக்கு மேலெனின்**
> **எனைத்துணை யோஓ வெளியன்!**
> **இயம்பிய மனிதனிந் நயங்கொண்ஞா லத்தே.**

ஐந்து பூதங்களை வென்றவன் மனிதன். நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி ஆகிய இவ்வைந்து பூதங்களின் மேலும் மனிதனின் ஆளுமை உண்டு. ஆனால் ஒன்றை மட்டும் அவன் வெற்றி கொள்ளவில்லை. அந்த ஒன்று தான் நான் என்ற அகந்தையாய் விளங்கும் அவன். அதை வெல்லாத வரை அவன் எளியவன் என்பது ஆசிரியர் கருத்து.

'அழகு' என்ற கவிதையில் அழகு என்பது என்ன, என்ற வினாவிற்கு விடை தருவது போல் ஆசிரியர் இக்கவிதையை அமைத்துள்ளார்.

திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்னும் பேராசிரியர் கருத்திற்கேற்ப அறத்தொடு பொருந்திய அழகே அழகு எனக் கூறுகிறார் ஆசிரியர். பாடல் வருமாறு:

அழகி னியலினை யநுபவித் தறியார்
பழகினர் போன்று பலபடப் பகர்ந்தனர்;
வண்ணமே வனப்பென வகுத்தனர்; அதான்று;
வடிவே யெழிலென வரைந்தனர்; அதான்று; நற்
குணனே கவினெனக் கூறினர், அதான்று;
பயனுடைப் பண்பெனப் பரிந்தனர்; அதான்று;
மற்றின்னும் பலவா யியம்பினர்; அவையல.
என்னே! அழகி னியலம் மம்ம!!
எல்லா நலனு மினிமையிற் கலந்து
கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்துத்
தன்வயப் படுக்குந் தன்மைத் தன்றோ?
அறத்தி னீங்கிய வழகு முண்டுகொல்?
மறத்தொடு படுமேன் மாண்பன்
றின்பஞ் செய்யு மியல்பா தலினே.

"வரைவு" என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதை பண்டைத் தமிழ் நெறியைப் போற்றும் தன்மையதாக விளங்குகிறது. இன்ப ஊற்று, துன்பப் பகை, இல்லற வாழ்க்கையின் நல்லுயிர், நாடெலாம் காக்கும் காவலன், வழியிற் காக்குறும் வாயிலோன், தவறான வழியிற் செல்வோரைக் கடிந்து ஒறுக்கும் தன்மையோன் என ஆசிரியர் உயர்திணையில் வைத்து வரைவைப் பாராட்டி இருப்பது கவிச்சுவையைக் காட்டும். அச்சிறப்புறு வரிகள் வருமாறு:

இன்ப வூற்றே! துன்பப் பகையே!
இல்லற வாழ்க்கையி னல்லுயி ராவோய்!
தலைவனுந் தலைவியும் நலமுறு காதலான்
ஒன்று கூடுத னின்றனா லன்றோ?
காதலின் குறியாங் காமரு குழவிகள்
காண்பர். நாடெலாங் காக்குங் காவலோய்!
வழியிற் காக்குறும் வாயிலோய் நீயே
அலாநெறி யுழலுநர் நிலாதிவ ணோட்டுவை
பாணரும் மகளிரும் பாடல்கள் பாடக்
காணரு மின்பங் களிப்பினி லளிப்பை

கணவனின் சிறப்பைப் பற்றிக் கூறும்போது மனைவியைக் காப்பவனே நல்ல கணவன் என்ற கருத்து புலப்பட, 'கணவன்' என்ற தலைப்பில் அமைந்த பாடலில் இவ்வாறு கூறுகிறார்.

பணமணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென் மனைவியைப் பாதுகாக் குநனாய்த்

இவ்வரிகளின் கவிதை நயம் உணர்ந்த போப் மொழிமாற்றம் செய்யும் போது,

He guards his spouse as in heaven - sent treasurerare

என விதந்து கூறியிருப்பது கலைஞரின் கவித்துவத்திற்குச் சான்று.

'மலர்' என்ற தலைப்பில் மலரைப் பற்றிக் கூறும்போது நிலத்தின் மகளே, நேசத் தலைவியே என்றும், 'காமம்' என்ற தலைப்பில் காமத்தைப் பற்றிச் சொல்லும்போது,

மாசறு திரையே! மனத்தைத் தளையிடுங்
கொடுங்கோல் வலனே! நடுங்குதுயர்ப் பேயே!

எனவும், 'வெகுளி' என்ற தலைப்பில் அமைந்துள்ள பாடலில்,

வெகுளித் தீயே! வெகுளித் தீயே!
துறக்கு மனத்தையுங் கறக்குங் காற்றே!
உற்ற குணக்கல னெற்றுஞ் சுறவமே!
உடற்பெரும் புற்றினின் றுடன்றெழு மரவே!

தெள்ளிய வறிவின ருள்ளப் பைம்புலைப்
பொள்ளெனக் கறித்தழி புன்றீ விலங்கே!
வீட்டுநூல் வலரையு மாட்டிடும் பேயே!
சேர்ந்தார்க் கோறல் சார்ந்த கடுவே!
'தீயரைக் காணிற் சேயரா யொதுங்குக'

என்ற முதுமொழி நன்றென வோர்ந்தனென்
நீயுந் தியோய் தூயை யல்லையால்
ஆதலின் விலகிப் போதுவல் யானும்.
நன்னெறி யொரீஇப் புன்னெறிச்
செலுத்துந் தன்மையை சிறுபைத் தியமே!

முடிவுரை

இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து விளங்கியவர் பரிதிமாற் கலைஞர் என்றாலும் கவிதைத் துறையில் அவரது ஆர்வம் பின்தங்கி விட்டது என்று

சொல்லலாம். தனிப்பாசுரத் தொகை என்ற தலைப்பில் தரப்பட்ட கவிதைகள் தவிர வேறு கவிதைகள் அவர் செய்யவில்லை என்றே தெரிகிறது. பல்சுவைத் திரட்டாக விளங்கும் இத்தனிப் பாசுரத் தொகை தமிழர் பண்பாடு, தமிழர் போற்ற வேண்டிய சிந்தனைகள், தனித்தமிழ் பற்றிய சிந்தனைகள் முதலியவற்றை உள்ளடக்கியுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

அடிக்குறிப்புகள்

1. *ஆ. தசரதன், தற்காலத் தமிழ்க் கவிதைகள் ஆய்வு, முன்னுரை, இன்டர்நேஷனல் பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ், குற்றலாம், 1982.*
2. *மேற்படி, ப.6.*
3. *மேற்படி, ப.10.*
4. *மேற்படி.*
5. *மேற்படி, ப.11.*
6. *மேற்படி, ப.12*
7. *மேற்படி, ப.13.*
8. *தனிப்பாசுரத் தொகை, முன்னுரை.*

மூலநூல்

Tani-pacura-togai, Tr. G.U.Pope, International Institute of Tamil Studies, Chennai, Reprint. 1997.

நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை 1888ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாளில் பிறந்தார். அவர் சிறந்த தேசபக்தராகவும், கவிஞராகவும் இருந்தார். காந்தியக் கொள்கைகளையும், அறவழி விடுதலைப் போராட்டத்தையும் தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்த்தினார். தமிழ்நாட்டு மக்களைப் பெருமைப்படுத்தித் "தமிழன் என்றோர் இனமுண்டு - தனியே அவர்க்கோர் குணமுண்டு" எனப் பாடினார். அவரது கவிதைகள் அமைதி நெறியைக் கொண்டு விளங்கின. அவரது கவிதைத் தொகுப்புகள் சங்கொலி, தமிழன் இதயம், தமிழ்த்தேன், காந்தி அஞ்சலி, அவனும் அவளும் ஆகும்.

சித்திரம் வரைவதைத் தொழிலாகக் கொண்டிருந்த நாமக்கல் கவிஞருக்கு 1906இல் நடந்த வங்காளப்பிரிவினையால் ஏற்பட்ட கிளர்ச்சிதான் தேசிய உணர்வை ஊட்டியது. இவர் திலகரின் கொள்கைகளில்தான் மிகுந்த ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தபின் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவுதான் அவருக்குக் காந்தியப் பற்றை ஏற்படுத்தியது (கி.ரா. அனுமந்தன், 1988, 32). பின்னர் இறுதிவரை காந்தியக் கவிஞராக இருந்தார்.

நாமக்கல் கவிஞர் காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார். இந்திய விடுதலையில் அதிகப் பற்றுடையவராக இருந்தமையால், ஓவியத்திலிருந்து கவிதைக்கு வந்தார். அவருக்கு நாடகக் கம்பெனிகளுடன் இருந்த தொடர்பும், நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதிய அனுபவமும் கவிதை எழுத வாய்ப்பாக அமைந்தன. அவர் 1930களில் நாடறிந்த புலவராக மாறினார். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது அவர் எழுதிய 'கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற வழிநடைப் பாடல்

அவரைத் தேசியக் கவிஞராக்கியது. 1922 முதல் 1960 வரை கவிஞரின் கவிதை நூல்கள் வெளிவந்தன.

இவர் 1949இல் தமிழ்நாட்டின் அரசவைக் கவிஞராக நியமனம் பெற்றார். 1956 முதல் 1966 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றினார். 1970ஆம் ஆண்டு மைய அரசு பத்மபூஷண் விருது வழங்கியது. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகக் கட்டடம் நாமக்கல் கவிஞர் மாளிகை என அழைக்கப்படுகிறது.

நாமக்கல் கவிஞரின் கவிதைகள் தேசியப்பாடல்கள், தமிழுணர்வுப்பாடல்கள், பக்திப்பாடல்கள் என வகைப்படுத்தப் படுகின்றன. இக்கவிஞரின் சமகாலப் புலவர்களாகப் பாரதியும், பாரதிதாசனும் கருதப்படுகிறார்கள். இவர்களுள் ஒருவர் தேசியக்கவியாகவும், மற்றொருவர் சுயமரியாதை இயக்கக் கவியாகவும் போற்றப்படுகிறார்கள்.

சமய ஒருமைப்பாடு

இராமலிங்கம் பிள்ளை, பாரதியாரைப்போலச் சமய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகிறார். மக்கள் கடவுளைப் பல்வேறு மதங்களின் அடிப்படையில் பிரித்து வேறுபடுத்திக் காண்கிறார்களேயொழிய அவர் ஒருவராகவே உள்ளார் என நினைப்பதில்லை. இதனை,

அல்லாவாய் புத்த னாகி
அரனரி பிரம்ம னாகி
அருளுடை சமணர் தேவும்
அன்புள்ள கிறிஸ்து வாகிக்
கல்லாத மனத்திற் கூடக்
காணாமல் இருப்பா ரந்தக்
கடவுளென் றுலகம் போற்றும்
கருணையைக் கருத்தில் வைப்போம்

(நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1960:2)

என்பார். நாமக்கல் கவிஞர் கடவுளை வேண்டும் இடத்திலும் விடுதலை கேட்டுப் பாடுகிறார். சொந்த நாட்டில் பிறருக்கு அடிமையாகி உண்ண உணவில்லாமல், உடுத்த உடையில்லாமல் மக்கள் வறுமையுடன் வாழ்கிற ஏழ்மை நிலை இறைவனிடம் தெரிவிக்கப்படுகிறது.

உலகெலாம் காக்கும் ஒருதனிப் பொருளே
உன்னருள் நோக்கி இன்னுமிங் குள்ளோம்
தந்தனை யிலையோ? தவறதில் உண்டோ
காடும் மலைகளும் கனிதரும் சோலைகள்
ஓடும் நதிகளும் உள்ளன எவையும்
இங்கே பிறந்தவர் எங்களுக்கிலையோ
எங்கோ யாரோ வந்தவர் துய்க்கச்
சொந்த நாட்டினில் தோன்றிடும் செல்வம்
எந்த நாட்டிலோ எங்கோ போய்விடக்
கஞ்சியு மின்றிக் கந்தையும் இன்றி
அஞ்சிய வாழ்வின் அடிமையிற் கிடந்து....(மேலது, 1960:13)

இறைவன் ஒருவனே என்ற கருத்தைக் கூறிய நாமக்கல் கவிஞர் பராசக்தியைப் புகழ்ந்து மூன்று பாடல்களைப் பாடுகிறார். இப்பாடல்கள் பாரதியாரின் சக்தி வழிபாட்டுப் பாடலின் தாக்கமாக இருக்கலாம். உடல் உறுதி, நோயற்ற வாழ்வு, நினைத்ததைப் பெறும் சக்தியைப் பாரதி வேண்டியது போலவே நாமக்கல் கவிஞரும் வேண்டுகிறார்.

ஆற்றல்கள் அனைத்தும் நீயே
அருளுவாய் எனக்கும் ஆற்றல்
போற்றிடும் வீரியம் நீ
எனக்கதைப் புகட்ட வேண்டும்.... (மேலது, 1960:14)

இது போன்று கண்ணனையும், முருகனையும், பிற தெய்வங்களைப் பற்றியும் நாமக்கல் கவிஞர் பாடுகிறார். பாரதியின் தாக்கம் கண்ணன், முருகன்மீது பாடல் பாடுமாறு நாமக்கல் கவிஞரைத் தூண்டியிருக்கலாம். கண்ணனைப் பற்றிய பல்வேறு கதைகள், கருத்துகள் இருந்தபோதிலும் நாமக்கல் கவிஞர் பல பெண்களுடன் கண்ணன் பழகியிருந்தாலும், அப்பழக்கம் தூய அன்பின் வெளிப்பாடு எனக் கூறுகிறார் (கஸ்தூரி நாகராஜன், 1990:19).

நாமக்கல் கவிஞர் கடவுள் ஒருவரே எனக் கருதிய போதும், மக்கள் தங்கள் விருப்பப்படி வழிபடலாம் என்பதையும் குறிப்பிடுகிறார். கடவுள் ஒருவர் உண்டு என்ற கருத்தையுடைய கவிஞர் அன்பே தெய்வம், காதலே கடவுள் எனவும் கூறுகிறார்.

கடவுள் என்ற பெயர் சொன்னால் அதில்
காதல் சக்தி வரும் முன்னால்
கணுவி னோடுகணுக் காதல் – ஒரு
கரும்பு நல்லசுவை ஆதல்
கணவனோடு பெண் காதல் – வீடு
கலக மற்றதென ஓதல்
அணுவினோடுஅணுக் காதல் – தானிவ்
வகில லோகநிலை ஆதல்
பணிவினோடு அதைப்பார்க்கின் – அதில்
பரமன் அருள் விளங்கும் யார்க்கும் (மேலது, 1990: 427–8)

தமிழ்நாட்டில் பகுத்தறிவு இயக்கம் தீவிரமாகச் செயல்பட்டபோது, நாமக்கல் கவிஞர் பாடிய பாடல்களில் சுயமரியாதை இயக்கத்தின் கடவுள் மறுப்புக் கொள்கைக்குப் பதில் அளிக்கும் தன்மை இருப்பதைக் காணமுடிகிறது. இயற்கைத் தோற்றத்தில் அமைந்த பொருட்களில் கடவுள் உள்ளார் என்று பாடி, அத்தோற்றத்திற்குக் காரணம் கடவுள் என்பதை உணர்த்த முயல்கிறார். இவ்வாறு கூறிய கவிஞர் பல்வேறு மதச் சடங்குகளைச் செய்வதாலும் கோயில்களுக்குச் செல்வதாலும் இறைவனை அறிய முடியாது எனவும் கூறுகிறார்.

ஐயம் இல்லை தெய்வம் உண்டெனப்
பையப் பைய என்னைப் பழக்கி
அன்னை என்னுடைச் சின்ன வயதில்
சொன்னது மட்டும் இன்னும் மறந்திலேன்
'உண்டு' என்பதைக் கண்டிலேன் . . . . .
இல்லையென் றுரைக்க தைரியம் இல்லை
தொல்லையென் றதனைத் துறக்கவும் துணிவிலை
இல்லையே ஆனால் தொல்லையே இல்லை
நல்லதே நம்மைக் கேட்பாரில்லை;
இருப்பதும் உண்மைதான் என்றால் என்ன
பொறுப்பதும் அவர்க்கே; காத்தருள் புரியும்
(மேலது, 1960: 455–6)

மனிதர்கள் திட்டமிடும் செயல்கள் பயனற்றுப் போவதை வலியுறுத்தி, அதன் வாயிலாக இறைவன் இருக்கிறான் என்று கூறுகிறார். சுயமரியாதை இயக்கத்தினரின் கொள்கையை மறுக்க நாமக்கல் கவிஞர் கடவுள் உண்டு என்ற கொள்கையில் ஈடுபடுவதாகக் குறிப்பிடப்படுகிறது (மேலது, 1990:22).

விடுதலைப் பாடல்கள்

நாமக்கல் கவிஞர் இந்திய நாட்டு விடுதலைக்காக உணர்ச்சி மிகுந்த பாடல்களைப் பாடினார். பாரதியாருக்குப் பின்னர் சுதந்திர உணர்வை ஊட்டுவதில் சிறந்த பங்காற்றினார். மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு இப்பாடல்கள் மிகவும் உதவியாக இருந்தன.

இந்தியத் தாயை வீரம் மிக்கவளாகப் பாரதி காட்டுகிறார். ஆனால், நாமக்கல் கவிஞர் இந்தியத் தாய் சோகம் மிகுந்திருப்பதாகப் பாடுகிறார்.

காலக் கதியடியோ
கைவிரித்து நான் புலம்ப
ஆலம் விதையெனவே
அளவிறந்த மக்கள் பெற்றும்
ஞாலத்தில் என்னைப்போல்
நலிந்தா னொருத்தியுண்டோ
நீலக் கடலுலகில்
நீடித்தும் பிள்ளைகளால்
கோல மிழந்துநிலை
குலைந்துருகி வாடுகின்றேன் (மேலது, 1960: 123–130)

இந்தப் பாடல் 200 வரிகளில் அமைந்துள்ளது. நாட்டைப் பற்றிச் சோகமாகப் பாடிய கவிஞர் நாட்டு விடுதலைக்காகச் சிறை சென்ற மக்களைப் பற்றிப் பாடும் போது மகிழும் வகையில் பாடல் அமைந்துள்ளது.

வீட்டினி லிருந்த போது
வெகுண்டெமை மருண்டு பார்ப்பாய்
கூட்டினிற் கிடக்கு மிந்நாள்
குளிர்ந்தனை சிரித்து வந்தாய்
நீட்டினை முடங்கி நொந்த
நின்னுடை அங்கம் பூத்துக்
காட்டினை என்றும் காணாக்
கட்டழ குடனே வந்தாய் (மேலது, 1960: 432)

இந்தப் பாடலில் நாமக்கல் கவிஞர் வீரத்தை வெளிப் படுத்துவதற்காக இந்தியத் தாயின் மனநிலையைக் கூறுவதன்

வாயிலாகக் காட்டுகிறார். ஆனால் பாரதியார் தன்னுடைய வர்ணனைத் திறத்தால் இந்தியத்தாயை வீரமிக்கவளாகக் காட்டுகிறார். நாமக்கல் கவிஞர் இந்தியத் தாயைப் பாரதியார் போன்று தெய்வமாகக் காட்டவில்லை (மேலது, 1990: 28).

இந்திய நாட்டைப் பற்றி நாமக்கல் கவிஞர் 26 பாடல்கள் பாடியிருக்கிறார். ஆனால் பாரதியார் 53 பாடல்களைப் பாடியிருக்கிறார். நாமக்கல் கவிஞர் இந்திய நாட்டைப் பாட்டன் சொத்து எனக் குறிப்பிடுகிறார்.

பாரத நாடென்றன் பாட் டன்றன் சொத்து
பட்டயத்துக்கென்ன வீண் பஞ்சாயத்து
முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்கெனப் பாடு

(மேலது, 1960: 116)

பாரதியார், தன் தாய் தந்தைக்குரிய நாடு எனக் கூறி உரிமையைக் கூறுகிறார். இரு கவிஞர்களின் கூற்றிலும் அதிக வேறுபாடு இல்லை. இருவரிடமும் அடிப்படையில் இந்திய நாட்டை அந்நியர் ஆள்வதனால் ஏற்பட்ட கோபமும், வெறுப்பும் வெளிப்படுகின்றன. இந்திய நாட்டின் தொழில்கள் அந்நியரால் நசித்துப் போனதையும், இந்தியத் தொழில்கள் வளர வேண்டுமானால், வெளிநாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது எனவும் நாமக்கல் கவிஞர் பாடுகிறார். இவர் விடுதலை உணர்வு ஊட்டும் செய்திகளை வெளிப்படையாகக் கூறிச் செல்கிறார். அடிமையுற்ற காலத்தில் பெருமையும், வளமையும் சீர்கெட்டது எனவும் கூறுகிறார். இந்திய நாட்டைப் பாடும்போது தமிழ்நாட்டைப் பற்றியும் பாடுகிறார்.

முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்கென்ப்பாடு;
சற்றும் உரிமையில் லாதவர் ஆளச்
சரிசரி யென்றது போனது மான
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே.

(மேலது, 1960: 117)

விடுதலை

நாமக்கல் கவிஞர் விடுதலை தொடர்பாக 31 பாடல்களைப் பாடியிருக்கிறார். இவர் விடுதலையைத் தேவியாக நினைத்துப் பாடுகிறார். பாரதியும் இது போன்றுதான் பாராட்டிக் கூறுகிறார். மற்றொரு இடத்தில் விடுதலையைக் கண்ணுக்கு ஒப்பிடுகிறார்.

கண்ணொளியின்றி மற்ற
கட்டழகிருந்தா லென்ன
பண்ணளி இனிமை யூட்டா
பாட்டுகள் கேட்பதென்ன
புண்ணிய புகழொன் றில்லாப்
பொற்பொதி யுடையார் போலும்
திண்ணிய சுதந்த ரத்தின்
தெரிசனம் இல்லா வாழ்க்கை (மேலது, 1960: 123, 132)

விடுதலையற்ற வாழ்க்கை இனிமையாக இருக்காது என இராமலிங்கம் பிள்ளை கூறுகிறார். இவர் அனைத்து மக்களும் புரிந்து கொள்ளுமாறு எளிய சொல்லில் விடுதலையின் பெருமையை எடுத்துரைக்கிறார். பாரதி, 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' எனக் கூறியது போல, 'திக்குத் தெரியவில்லை' என்ற பாடலில் விடுதலை வேட்கையை நாமக்கல் கவிஞர் வெளிப்படுத்துகிறார். விடுதலை பெறாத நாடுகள் அனைத்து அறங்களும், வளங்களும் கெட்டு வாழ்வின்றி நிற்கும் எனவும், அதனால் விடுதலை வேண்டும் எனவும் பாடல் வழியாக வெளிப்படுத்துகிறார்.

அறப்போராட்டத்தில் ஈடுபட்ட காந்தியடிகளும், காங்கிரஸ் தொண்டர்களும் சிறையில் இருந்த செய்தியைக் கூறி விடுதலை வேண்டும் எனக் கேட்கிறார் நாமக்கல் கவிஞர்.

பகைவர்கள் தங்களுக் குபசாரம்
பக்தரைச் சிறையிடும் அபசாரம்
நகைமிகும் அரசியல் முறைமாற
நம்முடை சுதந்திரம் நிறைவேற (மேலது, 1960: 134)

இதனைப் போன்று பாரதியும், வ.உ. சிதம்பரனார் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது பாடுகிறார். உயிரினங்கள்

விருப்பம்போலச் செயல்பட விரும்பும்போது, மனிதர்கள் மட்டும் விடுதலை உணர்வின்றி வாழ இயலாது. விடுதலை மக்களின் பிறப்புரிமை என்றும், அதனால், முழுமையான விடுதலை தேவை என்றும் கூறுகிறார். நாமக்கல் கவிஞர் விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளையும் கூறுகிறார். காந்திய வழிதான் வெற்றியைத் தரும். அறவழிதான் சிறந்த வழி என்கிறார்.

சத்தியம் நிலைக்கும் என்று சங்கூதுவோம்
சாந்தமே ஜெயிக்கும் என்று சங்கூதுவோம்
(மேலது, 1960: 155)

காந்தியடிகளின் காலத்தில் வாழ்ந்ததாலும், காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்ததாலும் அறப்போராட்டமே வெல்லும் என்கிறார். இவரது சமகாலத்தில் வாழ்ந்த பாரதியார் தீவிரவாதத்தையும் காந்தியவாதத்தையும் விடுதலை பெறுவதற்குரிய வழிமுறைகள் எனக் குறிப்பிடுகிறார் (**பாரதியார் கவிதைகள்**, 2003, 137). தற்காலத்தில் நடைபெறும் போர்முறைகளை இந்திய நாட்டு விடுதலைக்குப் பின்பற்றாமல், மகாத்மா காந்தியின் அறவழியைப் பின்பற்ற வேண்டும் என அனைத்து இடங்களிலும் வற்புறுத்துகிறார். இவர் பாரதியின் தீவிரவாதக் கொள்கையிலிருந்து மாறுபடுகிறார் என்பது கவிதைகள் வாயிலாகத் தெரியவருகிறது. இதற்கு இவர் வளர்ந்த முறையும் காரணம் என்பதை அறியமுடிகிறது (அனுமந்தன், கி.ர., 1988: 15).

கொடி வணக்கம் பாடும்போது, கொடியைப் போற்றிக் கும்பிடு, வாழிய கொடியே, இணையில்லாக் கொடி எனத் தலைப்பிட்டுப் பாடுகிறார். கொடியில் காணப்படும் நிறங்களையும் அதில் அமைந்துள்ள ராட்டையையும் பாடுகிறார்.

பச்சையாம் நிறத்தினாலே
பழமையாம் அன்பையூட்டும். . . .
அதிலொரு ராட்டை காட்டும் *(மேலது, 1960: 152)*

தண்டி யாத்திரையின்போது காந்தி நிகழ்த்திய உரைகளைப் பின்பற்றி எழுதிய 'சங்கநாதம் கேட்குது' என்ற பாடல் தொண்டர்களை ஊக்குவிக்குமாறு எழுதப்பட்டது (**நாமக்கல் கவிஞர் பாடல்கள்**, 1960: 112-113). நாமக்கல் கவிஞர் எப்போதும் காந்தியடிகளைப் பின்பற்றினார். எனவே, ஒத்துழையாமை இயக்கம் பற்றிக் கூறும்போது, வன்முறையைக்

காட்டிலும் ஒத்துழையாமைதான் வலிமை மிக்கது என்னும் பொருளில் அமைந்துள்ள 'கிளியும் விழியும்' (கஸ்தூரி நாகராஜன், 1990 : 45) என்னும் பாடலைப் பாடுகிறார்.

காந்திய அறவழிப் போராட்டத்தில் ஈடுபாடுடைய நாமக்கல் கவிஞர் தீவிரவாத விடுதலைப் போராட்டத் தலைவர்களையும் புகழ்ந்துள்ளதைக் காணமுடிகிறது. நாமக்கல் கவிஞரின் பாடல்களில் சாந்தமும், பாரதியின் பாடல்களில் வீரமுழக்கமும் காணப்படுகிறது.

தமிழ் உணர்ச்சி

நாமக்கல் கவிஞர் பாரதியார் போலப் பிறமொழிகளை வெறுக்காத தமிழ்ப்பற்று மிகுந்தவராக விளங்கினார். ஆனால் மொழிப்பற்று இல்லாதவர்களைக் கண்டிக்கிறார்.

பாலூட்டி வளர்த்த பாவையாம் தமிழைத்
தாலாட்டி வளர்த்த தாயாம் தமிழைப்
பாராட்டி வளர்த்த பழையதோர் தமிழை
கோவண முடுத்து பாவாடை தந்த
தேவியாம் தமிழைத் தெய்வநற் றமிழை
ஆசையாம் மனைவியை அகத்தினில்விட்டு
வேசையை விரும்பும் வெறியரைப் போன்ற
பாஷையை மறந்த பாதகர் பிறந்து
தேசமிந் நாட்டின் தீவினையாலே
சீச்சீ தமிழெனச் சீறிப்பழித்து
நாசியை நீட்டி நாய்போல் விழுந்து
ஏசித் திரியும் இழிவுடை மாக்கள்
பேசவும் கூசிடும் பேயர்கள் பிறந்து
தன்னை வளர்த்த தமிழைப் பேசுதல்
குன்றுந் தொழிலெனக் கூசியே நின்று
பன்னப் பன்னப் பல்லைக் காட்டிடும்
சின்னஞ் சிறியவர். . . . . (43)

தான் சொல்ல விரும்பும் கருத்துகளை எப்போதும் அமைதியான முறையில் கூறும் கவிஞர் தமிழ்மொழியிடம் பற்றில்லாதவர்களைப் பாரதிதாசன் போலக் கடுமையாகக் கண்டிக்கிறார். தமிழ் வளர்ச்சி பெற, பிறநாட்டு அறிவுச் செய்திகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிறார். புதிய சொற்கள் வேண்டும், தொழிற்கல்வி தொடர்பான நூல்கள் மிக

வேண்டும் என்கிறார் (நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1960: 41, 45). ஆங்கில மோகத்தைக் கண்டிக்கிறார். இந்தியைப் படிப்பதால் தமிழ்மொழிக்கு ஆபத்து வராது என்று கவிஞர் கூறினாலும், கட்டாய இந்தித் திணிப்பை அவர் என்றும் ஆதரிக்கவில்லை (அனுமந்தன், கி.ர. 1988: 68). பிறமொழிகளைப் படிப்பதால் தமிழ்மொழி அழிந்துவிடும் என்று கூக்குரல் கொடுப்பவர்களையும் மறுக்கிறார்.

எந்தமொழி வந்திடினும் தமிழ்மொழியை
என்ன செய்யும்? என்றே முன்னோர்
வந்த பிற மொழியையெலாம் வரவேற்றுத்
தமிழ்மொழியை வளரச் செய்தார்
செந்தமிழின் சரித்திரத்தைத் தெரியாமல்
மக்களுக்குத் திரித்துக் கூறி
இந்திமொழி வந்ததென்றே இகழ்ந்துரைப்போர்
தமிழ்நாட்டின் பெருமை எண்ணார் (30)

தமிழிசையின் இன்றியமையாமையைப் பற்றிப் பாடிய நாமக்கல் கவிஞர், தமிழருக்கு அந்நிய மொழியில் பாட்டுகள் பாடுவதையும் கண்டிக்கிறார். கேட்பவர்களுக்கு நன்கு புரிகிற மொழியில்தான் பாடல்கள் இருக்க வேண்டும் என்கிறார். ஆனால் வேறு மொழிகளில் பாடக் கூடாது எனவும் கூறவில்லை. தமிழுக்கு முதன்மை தர வேண்டுமென்பதே கவிஞரின் நோக்கம்.

ஆதலினால் தமிழ்நாட்டில் தமிழ்ப்பாட்டிற்கே
ஆதரவிங் ககத்தியமாய் அதிகம் வேண்டும்
காதலினால் தாய்மொழியைக் காப்பதன்றி
கடுகளவும் பிறமொழிமேல் கடுப்பதல்ல (47)

தாய்மொழிமேல் பற்று வேண்டும். ஆனால் மொழிவெறி கூடாது என்று கூறுகிறார்.

சீர்திருத்தவாதி

நாமக்கல் கவிஞர் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை குறித்துச் சிந்தனை செய்தார். அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் சிந்திக்கிறார். காந்தியக் கருத்துகளின் அடிப்படையில்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுகிறார். வறுமையும் ஏழ்மையுமில்லாச் சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றும், அதைச் செயல்படுத்துவதில் பொதுவுடைமையாளர்களிடமிருந்து மாறுபட்டும் நிற்கிறார்.

காந்தியடிகளின் தர்மகர்த்தா முறை என்ற அறவழியின் மூலம் புதிய சமுதாயத்தை அமைக்க முடியும் எனக் கூறுகிறார் (அனுமந்தன், கி.ர. 1988: 70). பொருளாதார வசதியுள்ளவர்கள் உழைப்பாளிகளிடம் சிறிது தாராளமாக நடந்து கொண்டால் வன்முறைப் புரட்சி ஏற்படாமல் தடுத்துவிட முடியும் எனக் கவிஞர் நம்புகிறார்.

வினோபாவின் பூமிதான இயக்கத்தை ஆதரிக்கிறார் கவிஞர். பூமிதான இயக்கத்தாருக்காக

> உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் (கடவுள்)
> உடைமையே, ஊரிலுள்ள விளைநிலங்கள் ஊர்ப்பொதுவாம்
> கடமையே

என்ற பாடலின் மூலம் சமதர்மக் கொள்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார். பொருளாதாரச் சமத்துவம் தொடர்பாகப் பேசும்போதும் கவிஞர் வேறுபடச் சிந்திக்கிறார். கீழிருப்போர் மேல்நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமேயன்றி மேலிருப்பவர்களைக் கீழே இழுக்கக்கூடாது என்பது நாமக்கல் கவிஞரின் குறிக்கோள். குறிக்கோள் தூய்மையாய் இருப்பது போன்று அதனை அடைய வேண்டிய வழியும் தூய்மையாய் இருக்கவேண்டும் என்கிறார்.

> தீமையினால் ஏது நன்மைகள் வரினும்
> தேய்ந்தவை மாய்ந்து விடும்
> வாய்மையின் அன்பால் வருகிற நலமே
> புரட்சி வாய்ந்த துவாம் (147)

எனக் கவிஞர் கூறுகிறார். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் சமத்துவத்தை ஓரளவு ஏற்படுத்த முடியும். முழுமையான பொருளாதாரச் சமத்துவத்தையும், சமுதாயச் சமத்துவத்தையும் ஏற்படுத்துவது நடக்காதது, விரும்பத்தகாதது என்றும் குறிப்பிடுகிறார். பெண்களின் நிலையைக் குறிப்பிடும் போது பாரதி கூறியது போன்று சரிசமமாக வாழ வேண்டும் என்கிறார். இருப்பினும் இருபாலாருக்கும் உரிய தனிப்பண்புகள் பேணப்பட வேண்டும்.

உவமைகள்

நாமக்கல் கவிஞரின் கவிதைகள் உவமை நயம் மிக்கவை. அவர் இயற்கை, மனிதர் ஆகியவற்றை உவமைகளாகக் கூறுகிறார். இயற்கைப் பொருட்களாக இடி, மலை, கடல், வெள்ளம், தீ, மரம், பறவை, விலங்கு, புதையல், விளக்கு ஆகியவற்றைக்

குறிப்பிடுகிறார். குழந்தை, ஊமை, பித்தர், கள்வன், குருடன், வீரன், புதுப்பெண் ஆகியோரையும் உவமையாக்கியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் பாடல்களில் தேசிய உணர்வும், சமுதாய உணர்வும் மேலோங்கியிருக்கின்றன. பாரதியின் காலத்தில் வாழ்ந்தமையால், அவரது தாக்கம் உள்ளது. அந்நிய நாட்டினரின் கொடுமைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. காந்திய நெறியைப் பின்பற்றிய காரணத்தால் இவரது கவிதைகளில் அறநெறியும், சாந்தமும் மேலோங்கியுள்ளன. தமிழ்ப்பற்று மிகுந்த இக்கவிஞர் ஆங்கில மோகத்தைக் கண்டிக்கிறார். தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடுடைய கவிஞர் ஒவ்வொரு மனிதனுக்கும் மொழி வளர்ச்சியில் பங்கு உள்ளது எனக் குறிப்பிடுகிறார். சமுதாயச் சீர்திருத்தத்தில் ஆர்வம் மிக்க கவிஞர் எல்லோரையும் உயர்த்துவதுதான் சமதர்மம் என்கிறார்.

துணை நூல்கள்

அனுமந்தன், கி.ர. 1988, **நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை,** சாகித்ய அக்காதெமி, புதுதில்லி.

-------------------- 1990, **நாமக்கல் கவிஞர் கவிதைகள்,** தேசியம்-காந்தியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

உலகநாதன், தணிகை. (தொகு.), 1960, **நாமக்கல் கவிஞர் பாடல்கள்,** லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை.

கஸ்தூரி நாகராஜன், 1990. **நாமக்கல் கவிஞர் படைப்புகள் ஓர் ஆய்வு,** ராஜன்ராம் பப்ளிகேசன்ஸ், மேலகரம்.

மாரியப்பன், சு., 1994, **இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் உவமைகள்,** நிர்மலா பதிப்பகம், செங்கல்பட்டு.

மெய்யப்பன், ச., (பதி.), 2003. **பாரதியார் கவிதைகள்,** தென்றல் நிலையம், சிதம்பரம்.

புதுமைப்பித்தன்

ஆசிரியர் வரலாறு

திருநெல்வேலியைப் பூர்வீகமாகக் கொண்ட சொக்கலிங்கம் பிள்ளை என்பார்க்கும் பர்வதத்தம்மாள் என்பார்க்கும் 1906ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் தேதி அன்று திருப்பாதிரிப் புலியூரில் பிறந்தவர்தான் விருதாச்சலம் என்ற இயற்பெயர் கொண்ட புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் வேளூர் வே. கந்தசாமிப்பிள்ளை என்ற பெயரையே கவிதைக்குரிய புனைப்பெயராக வைத்துக் கொண்டார் என்றும் விருதாச்சலம் என்ற பெயரிலும் ஓரிரு கவிதைகள் வந்துள்ளதாகவும் அறிகிறோம். இவர் இயற்றியதாகப் பல சஞ்சிகைகளில் வெளியான கவிதைகளை ஒருங்கிணைத்து, புதுமைப்பித்தன் கவிதைகள் என்ற தலைப்பில் எழுத்தாளர் ரகுநாதன் ஜூன், 1954இல் வெளியிட்ட நூலே ஈண்டுத் தரவு நூலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்நூலில் பத்தொன்பது தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. அவை வருமாறு:

1. நிசந்தானோ
2. சொப்பனமோ
3. ஓடாதீர்
4. உருக்கமுள்ள வித்தகரே
5. காதல் பாட்டு
6. மாகாவியம்
7. இணையற்ற இந்தியா
8. தொழில்
9. இருட்டு
10. பாதை

11. திருஆங்கில அரசாங்கத் தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவம்
12. கடவுளுக்கு கண்ணுண்டு, பொங்கல் நம்பிக்கை, அல்வா, காலைக்கடல், அசரீரி, பாரதிக்குப்பின், கங்கை நதி, பாட்டுக் களஞ்சியமே, உதிரிக் கவிகள், என்பனவாகும்.

இக்கவிதைகள் சிவாஜி, கிராம, ஊழியன், கவிக்குயில், கலாமோகினி, சக்தி, மணிக்கொடி போன்ற பத்திரிகைகளிலும் ஒருசில கவிதைகள் அச்சுக் காணாத நிலையிலும் அமைந்தனவாகத் தொகுப்பாசிரியர் ரகுநாதன் குறிப்பிடுகிறார்.

பொதுவாக இக்கவிதைகள் சமூகக் கண்ணோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாகத் தெரிகின்றன. இவரின் கவிதைகள் பற்றித் தொகுப்பாசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

> "புதுமைப்பித்தன் பாட்டு எழுதுவதில் ஒரு புதிய முறையை, வெற்றிக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய முறையில் ஆரம்பித்து வைத்தார் எனக் கூறுகிறார்."

இவருடைய பாடல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> அம்மானை சந்தத்தின் அடிப்படையில் மட்டும் புதுமைப்பித்தன் பாடல்கள் எழுதவில்லை. வெண்பாவிலும் பாடல்கள் எழுதினார். அவர் பாடிய வெண்பாவில் இலக்கணம் இராதுதான்; ஆனால் உயிர் இருந்தது, அதற்கு ஓர் உதாரணம் திருச்சி ரேடியோ நிலையக் கவியரங்கில் அவர் பாடிய பாட்டில் ஒரு வெண்பா.

**பண் என்பார்; பாவம் என்பார்; பண்புமர பென்றிடுவார்;
கண்ணைச் சொருகிக் கவிஎன்பார் – அண்ணாந்து
கொட்டாவி விட்டதெலாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே!
முட்டாளே இன்னமுமா பாட்டு?**

என்ற கூற்றின் வழியாகப் புதுமைப்பித்தன் எதையும் கூர்த்த நோக்கோடு மக்களுக்குப் பயன்படும் சிந்தனையை வரவேற்பாரே

அன்றி ஆடம்பரமாக அமைந்த எந்த ஒரு கருத்தையும் அவர் மதிக்கமாட்டார் என்பதைத் தொகுப்பாசிரியர் ரகுநாதன்வழி அறியமுடிகிறது.

மேற்சொன்ன கருத்துக்கு ஒப்பப் புதுமைப்பித்தன் கவிதைகளில் சமூக உணர்வு என்பது **அங்கதம்** என்ற உத்தி வழியே மிளிர்வதைக் காணலாம். புதுமைப்பித்தன் சிறுகதைக்கு எப்படிப் புதுப்புது உருவ அமைப்புகளை உண்டாக்கித் தந்தாரோ அதுபோலவே அவர்தாம் எழுதிய கவிதைக்கும் புதிய உருவ அமைதியை உருவாக்கித் தந்திருக்கிறார். இந்த உருவ அமைதியை மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் வரவேற்றார்கள். தமிழ்ச் செய்யுள் இலக்கணத்துக்குப் புறம்பானதாக அமைந்த புதுமைப்பித்தன் கவிதைகளின் உருவ அமைப்பைப் பண்டிதர்கள் செய்யுள் உருவமாக ஒப்புக் கொள்ளவும் இல்லை. ஏற்றுக் கொள்ளவும் இல்லை என விமர்சிக்கிறார் ரகுநாதன் (**புதுமைப்பித்தன் கவிதைகள்**, ப.11) புதுமைப்பித்தன் கவிதையில் இலக்கண அமைதி இல்லை என்றாலும், கவிதைச் சுவை குன்றி விடவில்லை எனலாம். அத்தகைய கவிதைகளில் ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

ஓடாதீர்

இத்தலைப்பில் அமைந்த பாடல் ஒரு நெடிய பாடல். எத்திப் பிழைக்கும் ஏமாற்றுக்காரர்கள் வாழும் இச்சமூகத்தில் அறிவுடைய மேன்மக்கள் வாழும் காலத்தில் போற்றப்படுவதில்லை; அவர்கள் மறைந்த பின் அவர் மேல் பற்றுடையவராகக் காட்டிக் கொள்ளும் போலி அபிமானிகள் அவர் பெயரில் நிதி திரட்டிச் செய்யும் சடங்குகளைப் புதுமைப்பித்தன் இக்கவிதையில் கடுமையாகக் கண்டிப்பதோடு இதுபோன்ற நிகழ்வு தன் வாழ்வில் நடைபெறாது அமைய வேண்டும் எனத் தீர்க்கமாகக் கூறுகிறார்.

உம்மைப் போல் நானும்
ஒருவன் காண்;
உம்மைப் போல் நானும்
ஊக்கம் குறையாமல்
பொய்கள் புனைந்திடுவேன்
புளுகுகளைக் கொண்டும்மை
கட்டி வைத்துக் காசை

ஏமாந்தால்
கறந்திடுவேன்.
ஊருக்கு மேற்கே
ஊருணியில் கண்டவளை
ஆருக்கும் வாய்க்கா
அரம்பை என்று,
கனவென்று,
சொல்லில் வனைந் திடுவேன்:
சோற்றுக்கு அலைக்காதீர்
"கன்னி எழில் வேண்டாம்;
காதல் கதை வேண்டாம்;
சொன்னபடி, தேச
பக்தி எழுப்பிடுவாய்,"
என்றக் கால்,
"அப்படியே, ஆஹா
அடியேன் இதோ" என்று
கல்லும் உயிர் பெற்று
காலன் போல், நடமாட
"வெல்லு, வெல்லு" என்று குத்தும்
வீறாப்புத் தார்க்குச்சி
எத்தனை வேணும்? – செய்து
இணையடியில் வைத்திடுவேன். . .
இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்பு கட்டி,
கல்லில் வடித்து
வையாதீர்:
"வானத்து அமரன்
வந்தான் காண்! வந்தது போல்
போனான் காண்" என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்.

(புதுமைப்பித்தன் கவிதைகள் பக். 38–40)

என்ற இப்பாடல் வழியாகப் புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தில் ஒருவரை வாழ்த்தாது அவர் இறந்த பின்பு அவரைப் பாராட்டித் திறமைகளை நினைவுகூர்ந்து வாழும் காலத்தில் வறுமைப்பட்ட அவர் குடும்பத்தார்க்கு இறந்த பிறகு நிதியம் திரட்டித் தருவதில் என்ன பயன்? என்பது போல் அவ்வாறான ஒரு நிலை தன் வாழ்வில் நடைபெற வேண்டாம் எனச் சாடிக் கூறுவது சிந்திக்கத் தக்கது. 1944ஆம் ஆண்டில் **கிராம ஊழியன்** ஆண்டு மலரில் இப்பாடல் வெளிவந்தது. வேலூர் வே. கந்தசாமிப்பிள்ளை என்ற புனைப்பெயரில் புதுமைப்பித்தன் எழுதிய முதல் பாட்டு இதுதான். இந்தப் பாடல் வெளிவருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் கு.ப. ராஜகோபாலன் காலமானார். அவர் இறந்த பின்னர் அவரது குடும்பத்துக்குத் தமிழ்நாடு சகாயநிதி திரட்ட முன் வந்தது. தமிழர்களின் இந்தத் 'தாராள மனப்பான்மை' கொண்ட நன்றியறிதலைக் கண்டெழுந்த வயிற்றெரிச்சலைத்தான், **"ஐயா, நான் செத்ததற்குப் பின்னால் நிதிகள் திரட்டாதீர்!"** என்ற வரிகள் பிரதிபலிக்கின்றன. கலைஞனைச் சாகவிட்டு, அவனது புகழுடம்பைத் தூக்கி வைத்துக் கூத்தாடும் இரசிகத் தனத்தைக் குத்திக் காட்ட எழுந்த 'வீறாப்புத் தார்க்குச்சி' தான் இந்தப் பாடல் என்ற தொகுப்பாசிரியர் ரகுநாதன் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது.

அல்வா (சீட்டுக்கவிதை)

அல்வா எனச்சொல்லி அங்கோடி விட்டாலும்
செல்வா நீ தப்ப முடியாதே – அல்வா
விருதுநகர்க் கெடியில் உன்னுடனே கட்டாயம்
வருதுஎனக் காத்திருப்னே் நான்

என்ற கவிதையில் நண்பர் ரகுநாதனைத் திருநெல்வேலியில் இருந்து திரும்பும் போது "அல்வா" வாங்கி வரும்படிக் கூறிய புதுமைப்பித்தன், ரகுநாதன் வரும்வரை விருதுநகரில் காத்திருப்பதாக அமைந்தது இப்பாடல். இப்பாடல் 1946ஆம் ஆண்டில் புதுமைப்பித்தன், ரகுநாதனுக்கு எழுதியது.

இக்கவிதை நூலில் சிறப்பானதொரு அங்கதப் பாடலாக அமைவது திரு. **ஆங்கில அரசாங்கத் தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவம்** என்ற தலைப்பில் அமைந்த கவிதையாகும். இதில் ஆங்கில அரசாங்க அதிகாரிகளையும் அவருக்கு அடங்கி ஒடுங்கிப் பணி செய்யும் இந்தியர்களையும் மறைமுகமாக 'எள்ளல்' நிலையில் சாடியுள்ளார்.

இப்பாடலுக்கு முன்னுரையாக ஸ்ரீயப்பதியாய் ஸிம்லாச் சிகரத்தில் எழுந்தருளா நின்ற அரசாங்க ஈச்வரன் வில்லிங்டன் மூர்த்தியாய்ச் சேவை காட்டிய திருக்கல்யாண குணங்களையும், வீரப் பிரதாபத்தையும் தான் சரண் புகுந்து உஜ்ஜீவித்ததையும் பாடுகிறார். இந்த முன்னுரையில் ஆசிரியரின் உளக்கருத்து தெற்றெனத் தெரிவதைக் காணலாம். 'விலிங்டன்' என்ற அரசாங்க அதிகாரியைச் சிம்லா சிகரத்தில் எழுந்தருளிய இறைவனாகவும், அவனது குணநலன்களை இறைவனுக்குச் சொல்வது போலத் திருக்கல்யாண குணங்கள் என 'எள்ளல்' தொனியில் கூறி இருப்பது நகைச்சுவை தருவதாகும்.

அடுத்து, குலசேகரவாழ்வார் திருமால்மீது பாடிய பாசுரமான, "உற்றாரை யான்வேண்டேன்; பேர் வேண்டேன்," என்ற பதிகத்தை அடிப்படையாகக் கொண்டு பாடல் ஒவ்வொன்றிலும் 'எள்ளல்' குறிப்போடு ஒரு கருத்தைச் சொல்லி இருப்பது படித்து இன்புறத்தக்கது.

சிற்றுருவ மானதொரு அட்டெண்டர் ஆகேனோ!. . .
இந்தியராம் உன்னடியார் உனைமறக்கச் செய்தவனை
தந்தியைப் போல் பாயுமுன தவசரச்சட்டமதனால்
சிந்தியே நிலைகுலையச் செய்தவமன மறவேனே. . .
மீளாத நரகமெனச் சிறையதனில் உற்றாரை
ஆளாக்கி வருத்திடினும் அதனையும் யான் பரவுவனே!

ஊனேறு செல்வத்துடன் பிறவியான் வேண்டேன்
தேனார் மொழிக்கிள்ளைத் தேவியரும் யான் வேண்டேன்
வானோங்கு புகழ்மிகுந்த நின்வாயி லிட்டுண்ணும்
மீனாய்ப் பிறக்கும் தவமுடைய னாவேனே. . .
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே. . .
ஞாலத்தை யொருகுடைகீழ் நடத்துநின் சீலத்தை
காலைக்கதிரழகின் கற்பனை என்றோதுவனே!

மன்னியதண்சாரல் சிம்லாவில் உறைவான்றன்
பொன்னியலும் சேவடியில் அமர்வான் புரிந்திறைஞ்சும்
சென்னியன் சீர் தொண்டரடிப் பொடியான் சொல் வார்த்தைகளை
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே!

இறை உணர்வோடு ஆழ்வார் யாத்த பாசுரத்தை அடிப்படையாக வைத்துப் போலி உணர்வோடு ஆள்வார்க்கு அடிபணியும் தேசியப் பற்றற்ற மனிதர்களை அழகு தமிழில் புதுமைப்பித்தன் விமர்சித்து இருப்பது படித்து இன்புறத்தக்கது.

இது **ஊழியன்** பத்திரிக்கையில் வெளிவந்தது. மகாத்மா காந்தியின் தேசிய இயக்கம் உச்ச நிலையில் இருந்த சமயத்தில் 1934ஆம் ஆண்டு எழுதப்பட்டது. சமயாச்சாரிய புலவர்களின் பதிக முறையைப் பின்பற்றிப் பாடிய "நையாண்டி" இது. "**ஆள்வார்**" என்ற சொல்லில் உள்ள சிலேடைப் பாடலுக்கு மேலும் வலுவூட்டுகிறது என்ற குறிப்பினைத் தருகிறார் ரகுநாதன்.

நிசந்தானோ சொப்பனமோ

இப்பாடலில் கலைமகளை முன்னிறுத்தி மெய்யா? கனவா என்ற வினாவை எழுப்பி, புன்மை உள்ளத்தோடு பொய்மையாக வணக்கம் செய்யும் புல்லர்களின் பக்தியில் இறைவி வாழ்கிறாளா? அல்லது இத்தகைய புல்லர்கள் துதியின் ஊடே அவள் கொலுவீற்றிருக்கிறாளா என்ற நிலையில் இப்பாடல் செல்கிறது.

> **செல்லரித்த நெஞ்சின்**
> **சிறகொடித்த கற்பனைகள்**
> **இடுப்பொடிந்த சந்தத்தில்**
> **இடரிவிழும் வார்த்தைகளில்**
> **ஊரில் பவனி வர**
> **உவப்புடனே நீ இருந்து**
> **முத்தமிழை -**
> **பாலித்து, பயிராக்கி**
> **பசிய உயிர் தான் தோன்ற**
> **வளர்த்து வரும் வார்த்தை**
> **நிசந்தானோ?**
> **சத்தியமாய் கேட்கிறேன்**
> **சரஸ்வதியே நிசந்தானோ?**

மேற்சொன்ன பாடலின் வழியாக உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே கலைமகள் எப்பக்கம் நிற்கிறாள் என்பதைப் போலப் பாடல்கள் அமைத்தும் வஞ்சகத்தால் செல்லரித்துப்போன

நெஞ்சங்களின் ஊனமுற்றுப் போன கற்பனையில் எழும் கவிதையில் கலைமகள் வாழ்கிறாளா? உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படியாக. . . இத்தகைய புல்லோர் புகழ்ச்சியில் அவள் மகிழ்ந்து புன்னகை புரிகிறாளா? அக்காட்சி சொப்பனமா? ஏமாற்றுக்காரர்களின் சொல்வண்மைக்கு அமைந்த சிறப்பாமோ? எனப் புதுமைப்பித்தன் இப்பாடலில் வினவுவது புதுமைப்பித்தனின் மனக்கொதிப்பை எடுத்துக்காட்டும் அங்கதம் ஈண்டுச் சமூகத்தின் அவலத்தைக் காட்டுவதாகும்.

இந்தப் பாடலின் இடையே அமையப்பெற்றுள்ள ஒரு சிலஅடிகள் கலிங்கத்துப்பரணி கடைதிறப்புப் பாடலில் "கலைப்போயகன்ற தறியாமல் நிலவைத் துகிலாய் எடுத்துடுப்பதாய்ச்" சொல்லப்பட்டுள்ள கருத்துக்கு இயைபாய் அமைந்துள்ளதைக் காணலாம். இப் பாடல் சிவாஜி 12ஆவது ஆண்டு மலரில் (1946ஆம் ஆண்டில்) வெளிவந்தது. கவிதா தேவியான சரசுவதியை முன்னிறுத்திக் கேட்கின்ற பாவனையில் பாடப்பெற்றது. மந்திரம், தந்திரம், செய்வினை, செய்பவன் முதலியோரைப் போலவே, கள்ளம் விளைந்த களரைப் பரப்பி நொள்ளைக் கதை சொல்வோரும் கூடத்தான் சரசுவதியைக் கலாதேவியராகக் கொண்டாடுகிறார்கள். இத்தனை சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்டு, கலாதேவி உயிர் வாழ முடியுமா? (அல்லது) இந்தப் புன்மைகள் எல்லாம் தன்னை வணங்க, அவள் கொலு அமர முடியுமா? - இது ஆசிரியரின் சந்தேக பாவம் எனக் குறிப்பு வரைகிறார் ரகுநாதன்.

இணையற்ற இந்தியா

பொதுவாகக் கவிஞர்கள் சமூகச் சீர்கேட்டை அந்நாட்டின் மீது ஏற்றிப் பேசுவது புதியதல்ல. நாட்டின் வளர்ச்சிதனை நினையாது தன் போக்காக வாழும் மக்களை ஒழுங்குபடுத்த கவிஞர்கள் கடுமையாகப் பேசுதல், மனம் வருந்திப் பேசுதல், எள்ளலாகப் பேசுதல், பிறநாட்டோடு ஒப்பிட்டு அந்நாட்டின் குறைபாட்டை எடுத்துக் கூறல் போன்ற உத்தியைக் கையாள்வது கவிஞர்கள் மரபு. பாரதி நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற பாடலில் அன்றைய தேசிய விடுதலையில் பங்கு பெறாத மக்களைப் பார்த்து வருந்தியதைக் காண முடிகிறது. விதவைப் பெண்ணுக்கு மறுவாழ்வு தராத தமிழ்நாட்டின் நிலை

கண்டு, பாரதிதாசன், வெட்கமில்லை, வெட்கமில்லை என்று சாடியதும் உண்டு. அவ்வகையில் கவிஞர் புதுமைப்பித்தன் இணையற்ற இந்தியா, என்ற தலைப்பில் வஞ்சப் புகழ்ச்சியாகச் சொல்லி உள்ள கவிதை ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. தொடக்கத்தில் கூறும்போது,

இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்! – என்று
யாங்களு மறிவோம் – வெள்ளை
ஆங்கில ரறிவார் – பிள்ளைத்
துருக்கனு மறிவான் – அறிவால்
சூழ்ந்தது தொல்லை

சமூகத்தில் ஒரு தரப்பினர் தங்களை மாமேதையாகக் கருதிக் கொண்டதால் பிறரை அவர்கள் தங்களினும் அறிவு குறைந்தவர் எனத் தீர்மானித்துக் கொண்டதால் அறிவால் சூழ்ந்தது தொல்லை எனக் கவிஞர் விமர்சிக்கிறார். மேலும் கற்றவராகக் கருதிக் கொள்ளும் இத்தகையோர் காந்தியின் அகிம்சைக் கொள்கையைப் போற்றுவது போலக் கதை பேசிக் காந்தியையே விற்று விடுகிறார்கள் எனச் சாடுகிறார் கவிஞர். இந்நாட்டின் அவல நிலையை அவர் கூறும்போது,

ஆற்றுக் கரையருகே அணிவயல்கள் உண்டு;
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது

என்றும்,

வேதம் படித்திடுவோம் வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!

என உணர்ச்சி பொங்கக் கவிஞர் பாடியிருப்பது போலிகளின் சட்டையைக் கிழித்துக் காட்டுகிறது எனலாம்.

உழைக்காமலே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானித்து விடமுடியும் என்ற கருத்தை நையாண்டியாக **வெறும் கையில் முழம் போடுதல்** என்ற மரபுத் தொடர் கொண்டு சுட்டி உள்ளது. உணவுக்காக இறை சிலையையே விற்றுவிடுவது

என்பதைச் சங்கரனை விற்றிடுவோம் என்ற தொடர் வாயிலாகக் கூறுவது, ஒத்துழையாமை என்ற பேராயுதத்தின் பெருமை பேசியே காந்தியின் கொள்கைகளை விற்று மனம் போனபடி வாழ நினைப்பவரை வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம் எனச் சாடுவது இக்கவிதையின் முத்தாய்ப்பான பகுதியாகும். இந்தியா தேசம் - அது இணையற்ற தேசம் என்ற முடிபு எள்ளல் குறிப்புக்கு ஒரு மகுடமாகும்.

இந்தப் பாடல் 'கலா மோகினி' பத்திரிகையில் வெளிவந்தது. 1945ஆம் ஆண்டில் எழுதியது. 'இந்தியா தேசம் - இணையற்றதோர் தேசம்! என்ற அடிகளில் பொதிந்துள்ள சிலேடை, நையாண்டி பாவத்துக்கு மேலும் வலுக்கொடுக்கிறது. நமது நாடு இருந்த இழிநிலையைக் குத்திக் காட்டும் நையாண்டிக் கவிதை இது என்ற ரகுநாதனின் குறிப்புரை இங்கே எண்ணத்தக்கது.

உதிரிக்கவிகள்

புதுமைப்பித்தன் தன் வாழ்நாளில் எழுதிய கடிதங்களில் கூடச் சில கவிதைகளைத் தீட்டி விடுவார். சில சந்தர்ப்பங்களில் ஆசுகவி போலப் பாடல்கள் சொல்வார், எழுதுவார்; அப்படிப் பல பாடல்கள் உண்டு. மேலும் அவர் எழுத முயன்ற பல பாடல்கள் உருப் பெறாமல் இடைவழியில் நின்று போனதுண்டு. அப்படிப்பட்ட பாடல்களே இந்த உதிரிகள் எனத் தொகுப்பாசிரியர் இக்கவிகளின் வரலாறு பற்றிக் கூறுகிறார். இத்தகைய கவிதைகள் பனிரெண்டு துணுக்குகளாக உள்ளன. அவற்றில் அழகியல் சார்ந்த ஓரிரு கவிகளை இங்குக் காணலாம்.

வண்ண மதுக்கிண்ணம்
வார்த்த கவிதையெல்லாம்
எண்ணக் குகையினிலே
எதிரொலித்து விம்முதடா!

இந்தச் சிறுபாடல் 'சோமு'வின் இளவேனில் என்ற பாடல் தொகுதியைப் பாராட்டிப் புதுமைப்பித்தன் எழுதிய கடிதத்தில் உள்ளது. 'முல்லையில்' வெளிவந்தது எனக்குறிப்பு வரைகிறார் ரகுநாதன்.

அரும்பு மலர்வதென
ஆசை முகம்தான் விரிய
விரும்பு விவாகம்
மனம் தரவே – கரும்பினிய
வாழ்வரசி கைப்பிடித்து
வளரும் நலம் பெற்று
வாழ்கவே சண்முக
நண்ப

இக்கவிதை சென்னை நவயுக பதிப்பகத்தின் உரிமையாளர் ராம. சண்முகத்தின் திருமணத்திற்கு அனுப்பி வைத்த வாழ்த்துப் பா. எழுதிய தேதி 22-8-1947 என்பது ரகுநாதன் இக்கவிதைக்கான பின்புலம்.

வருகின்றேன் சென்னைக்கு;
வந்தவுடனே கதையைத்
தருகின்றேன்; தவணை சொலித்
தப்பாதே – உருவான
பாதிக் கதை இங்கே
பஞ்சணையின் கீழிருக்கு
மீதிக்கதை அங்கே
வந்து!

புதுமைப்பித்தன் ஒரு சினிமாப் படத்திற்கு வசனம் எழுதுவதற்காக மதுரை சென்றார். கூட்டிச் சென்ற நபர் குறிப்பிட்ட காலத்தில் புதுமைப்பித்தனைச் சந்தியாத காரணத்தால் புதுமைப்பித்தன் மீண்டும் சென்னைக்கே திரும்பி வந்து விட்டார். வரும் சமயம், மதுரையில் தமது ஜாகையில் அந்த நபருக்காகப் புதுமைப்பித்தன் விட்டு வந்த நறுக்கு இது. 1947ஆம் ஆண்டில் நடந்தது எனக் குறிப்பு வரைகிறார் ரகுநாதன்.

கையது கொண்டு மெய்யது பொத்தி
போர்வையுள் கிடக்கும் பெட்டிப் பாம்பென
சுருண்டு மடங்கி சொல்லுக்கு இருமுறை
லொக்கு லொக்கென இருமிக் கிடக்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!

இந்தப் பாடல் சத்திமுற்றப்புலவர் 'பாடிய நாராய், நாராய், செங்கால் நாராய்' என்ற பாடலின் சாயலையும் ஒரு சில பதங்களையும் கொண்டு அமையப் பெற்றது. புதுமைப்பித்தன் இறுதிக்காலம் கொடுநோயான 'காசநோயால்' அரவணைக்கப் பட்டு விட்டது. நோயின் துன்பத்தில் போராடும் போது கூடப் புதுமைப்பித்தன் சொல்லில் நகைச்சுவை குன்றவில்லை. இப்பாடலுக்கான பின்புலத்தை ரகுநாதனின் குறிப்பின் வழியாக நாம் அறியும் போது நம் விழியும் கண்ணீரால் நனைகிறது. தற்சமயம் கோயமுத்தூர் சக்தி காரியாலய அதிபராயிருக்கும் கேடி தேவர் பம்பாயிலிருந்த காலத்தில் புதுமைப்பித்தன் பூனாவிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள வரிகள் இவை. அந்தக் கடிதத்தில்,

> " 'பழைய காலத்து தர்பாராக இருந்தால், மதுரை மண்டபத்தில் முடங்கிக் கிடந்து நாரை மூலம் தூது விடலாம்' என்ற வரிகளோடு இந்தப் பாடலை எழுதி, ஓர் ரங்கூன் வைரத்தைத் தயார் செய்து அனுப்பி அவளைத் திருப்தி செய்விக்கலாம். ஆனால் இது தபால் யுகமாச்சே!"

என்று புதுமைப்பித்தன் முடித்திருக்கிறார். காசநோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயத்திலும் அவரிடம் ஹாஸ்ய உணர்ச்சி எப்படியிருந்தது என்பதை நிரூபிக்கும் அத்தாட்சி இந்தப் பாடல் என உணர்வுப் பூர்வமாகக் குறிப்பு வரைகிறார் ரகுநாதன்.

புதுமைபித்தன் கவிதை நடை நயம்

பண்டிதப் புலவர்களைப் போலப் புதுமைப்பித்தன் அரிதான ஆழமான அகராதி பார்த்துப் பொருள் புரிந்து கொள்ளும்படியான சொற்களில் நாட்டம் கொண்டவர் இல்லை. சந்த நடை மிளிரத் தாள லயத்தோடு ஆடம்பரமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு உடையவரும் அல்லர். ஆயின் சொல்லும் செய்திக்கு ஏற்ற, ஜனரஞ்சகடான சொற்களைக் கையாள வேண்டும் என்பதில் கவனம் உடையவர். பொதுவாக இவரது நடையில் நெல்லைத் தமிழ் வட்டார வழக்குச் சொற்கள் தான் அதிகம் இடம்பெற்றிருக்கும். எளிய ஆங்கிலச் சொற்களும்

பழகி வரும் என்பது புதுமைப்பித்தனை வாசித்தவர்கள் அறிந்த ஒன்று. எளிய சொற்கள் என்றாலும் கவிதையின் கருத்தை வலுப்படுத்தும் படியாகவும் ஆசிரியரது உணர்வை வெளிப் படுத்துவதாகவும் இரட்டைச் செயலைச் செய்ய வல்லது புதுமைப்பித்தனின் மொழிநடை எனலாம். எழுத்தாளர் ரகுநாதன் தொகுத்த இத்தொகுப்பில் காணும் சில சொற்கள் மேற்சொன்னதை மெய்ப்பிக்கும்.

பைரவி, வட்டமுலை, நீலமணி மாடம், எட்டி எடுத்து - வாய்ப்பந்தல் நொள்ளைக்கதை, வான்கனவு வக்கணை, புளுகு, வீராப்பு தார்க்குச்சி, பொரும் வானத்து அமரன், பசியாற, ஓய், காலேஜ் வாசல் அலவன்ஸ் பாங்க், காளான்கடை, ஆலாலமுண்டவன், கார்மண்ட் மிராண்டா, கண்ணக்குழி காலேஜ் கன்னி போன்ற சில சொற்களைக் குறிப்பிடலாம்.

முடிவுரை

இதுவரை புதுமைப்பித்தனின் கவிதைகளில் மேலோங்கி நின்ற வெளிப்பாட்டு உத்தி முறைகளில் அங்கதமே பெரியதொரு இடத்தைப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. அங்கதச் சுவை சுவைஞனுக்குப் படிப்பதற்கு இன்பத்தைத் தரலாம். அவனை மேலும் அக்கவிதையில் திளைக்கச் செய்யலாம். ஆயின் கவிஞர் என்ற நிலையில் சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகளைச் சுட்டும் கவிஞன் அதற்கான தீர்வையும் தருதலே சிறப்புடையது. சமூகத்தில் காணும் சிறுமைகளைக் கண்டு வருந்தும், மனம் குமையும், சினந்து சீறும் குணம் அவருக்கு (புதுமைப்பித்தன்) என்றும் இருந்தது. ஆனால் அந்த உணர்வு பெரும்பாலும் மனப்புழுக்கத்துடனேயே நின்று விட்டது என்ற ரகுநாதனின் இக்குறிப்பு படைப்பாளியாகிய புதுமைப்பித்தன் கருத்தைச் சொல்லத் துணிந்த அளவிற்கு மாற்றுத் தீர்வைச் சொல்ல முற்படவில்லை என்பதை உறுதி செய்கிறது. ஆகையின் அவரது கவிதை பூரணத்துவம் பெறவில்லை எனலாம்.

புதுமைப்பித்தன் பாட்டு எழுதுவதில் ஒரு புதிய முறையை, வெற்றிக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய முறையைத் தொடங்கி வைத்தார் என்பதைத் தவிர அதில் அவர் பரிபூரண

வெற்றியும் தன்னிகரில்லாத் தன்மையும் அடையவில்லை என்ற கருத்தே புதுமைப்பித்தன் கவிதை உலகில் பின்தங்கி விட்டதற்குக் காரணம் எனலாம்.

நாடகம், குறு நாவல், சிறுகதை எனப் பலதுறைச் சிந்தனையாளராக, எழுத்தாளராக விளங்கிய புதுமைப்பித்தன் எழுதிய கவிதைகள் புதுமையானது புரட்சி மிளிர்ந்தது என்ற அளவில் வாழ்ந்து வருகிறது எனலாம்.

முதன்மைத்தரவு நூல்

புதுமைப்பித்தன் வரலாறு, ரகுநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு - 1951.

மூல நூல்

புதுமைப்பித்தன் கவிதைகள், தொகுத்தவர்: ரகுநாதன், முதற்பதிப்பு - 1954.

மீனாட்சி

இரா. மீனாட்சி, நாற்பது ஆண்டுகளாக எழுதிய சுமார் 190 கவிதைகள், **மீனாட்சி கவிதைகள்** எனத் தொகுக்கப் பெற்றுள்ளன.[1] இவை, ஏற்கெனவே, **நெருஞ்சி** (1970), **சுடுபூக்கள்** (1978), **தீபாவளிப் பகல்** (அன்னம், சிவகங்கை, 1983), **மறுபயணம்** (1998) என நான்கு தொகுதிகளாக வந்தவையாகும். **மறுபயணம்** தமிழ் ஆங்கிலக் கவிதை நூலாக வந்துள்ளது எனவும், இவரது இரண்டு கவிதைத் தொகுதிகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிகிறது.[2] "நான் ஏன் எழுதுகிறேன். . ." எனக் **கணையாழி** அக்டோபர் 2002 இதழுக்கு அளித்த முதல் பேட்டி (203-215)[3] வழியாக, கவிஞரைப் பற்றிய சில தகவல்கள் கிடைக்கின்றன.

வாழ்வியல்

சொந்த ஊர் விருதுநகர். ஆரம்பக் கல்வி அளித்த தாத்தா, மொழியறிவுக்கும் எண்ண வெளிப்படுத்தலுக்கும் காரணமானார். நெருங்கிய மற்றொரு தாத்தா 'கவியோகி' சுத்தானந்த பாரதியும், பள்ளித் தமிழாசிரியை மீனாட்சியும், கற்பனையையும் இரசனையையும் ஊக்கப்படுத்தி மெருகேற்றினர். தன் தாயாருடன் இணைந்து கேட்ட கி.வா.ஜ., குன்றக்குடி அடிகள், ராய.சொக்கலிங்கம், அ. சீனிவாசராகவன், அ.ச.ஞா. ஆகியோரின் சொற்பொழிவுகள் இவருக்கு விழிப்புணர்வுண்டாக்கின.

தந்தை, இராமச்சந்திரன், தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபர். தாய், மதுரம், படைப்பாளி. அம்மாவின் தந்தை இரயில்வே அதிகாரியாக இருந்ததால், பல ஊர்களுக்கும் மாற்றலாகி, அங்குள்ள மனிதரின் மொழியையும் வாழ்நிலையையும் நன்கு அறிந்திருந்தார். அதனால் கவிஞருக்கும் வலுவான பின்புலம் கிடைத்தது. வறுமைச் சூழலிலும் இன்முகத்துடனிருக்க அம்மா கற்றுக் கொடுத்தார். இல்லச் சூழல் தேசம் பற்றிய

சிந்தனைக்குக் களமாக இருந்தது. விடிந்தால், வீட்டுத் திண்ணையில் தேசம், சுதந்திரம், தியாகிகள் என்பதுதான் பேச்சாக இருக்கும். பொதுக்கவலைகள் பற்றிய விவாதங்களில் வீட்டில் எல்லோரும் ஈடுபட்டனர்.

கல்லூரிக் கல்வி, கோவை மனையியல் கல்லூரியில். காந்தியத் தாக்கம் அப்போது ஏற்பட்டது. மு.அறம் தலைமை யிலமைந்த இளைஞரணியில் இரா. மீனாட்சியும் இணைந்தார். இந்திய நாட்டின் சுதந்திர உணர்வு, பொருளாதார மேம்பாடு ஆகியன பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிராமல் கல்லூரி அளவிலும் தாய்மொழி வழிக் கல்வியை ஆதரிப்பதிலும் தீவிரமாக இருந்தார். எமர்ஜென்சி காலத்தில், பீகாரில், ஜெயப்பிரகாஷ் நாராயணன் நடத்திய மாணவர் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

மாணவரணித் தலைவராக இருந்ததால், இரா. மீனாட்சிக்குப் பல கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். 'பிரச்சார'ப் பாடல்களுக்காக இசை வரிகள் எழுதினார். மரபு வடிவை மட்டும் விரும்பிய கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் இவரது புதுக்கவிதைக்கு ஆதரவு தராத போதும் தொடர்ந்து எழுதினார். தற்செயலாக இவரது எழுத்துகளைக் கண்ட கனகசபாபதி, அவற்றைப் பாராட்டிய துடன், தன் நண்பரான எழுத்து சி.சு. செல்லப்பாவிற்கு அனுப்பச் சொன்னார். அப்பொழுது, புதுக்கவிதை உலகில் முதன்மை யானவராக இருந்த ந. பிச்சமூர்த்தியும், 'நவீன கவிதைக்கான உருவமும் உள்ளடக்கமும்' இவரது கவிதைகளில் உள்ளமை கண்டு எழுத்து இதழில் வெளியிட்டார்.

இலக்கியச் சூழலில், மு. அறம், அர்த்தநாரி, அ. தேவராஜன், சி. கனகசபாபதி, சி.சு. செல்லப்பா ஆகியோரால் கவிஞர் ஊக்கம் பெற்றார். பெண் என்பதால் அதிகம் பாதிப்பு எதுவும் உறவில்லை. அச்சமின்மை, சுதந்திரம், எந்த இலக்கிய இயக்கத்தின் வண்ணமும் பூசப்படாது தனித்து நிற்றல் என்பன இவரிடம் அமைந்தன. வானம்பாடிக் குழுவில் கூட இவர் இணையவில்லை. எழுத்து, கண்ணதாசன், கணையாழி, சர்வோதயம், சாரல், சோதனை, தீபம், நாணல் போன்ற இதழ்களில் எழுதி வந்தார். ரோஹிணி, தேவமகள் போன்றோர் இவரது சமகாலக் கவிஞர். இயற்கை

விரும்பியானதால் செயற்கைத் தன்மையையும், அணுகுண்டு சோதனை போன்ற அழிவுச் சூழல்களையும் எதிர்த்தார். (74, அணுகுண்டும் நாய்க்குடையும்).[4]

இவரது கவிதைகள் சுவைப்புக்கும், திறனாய்வுக்கும், ஆய்வுக்கும் உட்பட்டுள்ளன. எம்ஃபில், பிஎச்டி பட்டங்களுக்காக ஆய்வு செய்தவர்களும் கவிஞரைத் தொடர்பு கொண்டமை தெரிய வருகிறது. கவிஞர், கடந்த 25 ஆண்டுகளாக, புதுச்சேரியிலுள்ள ஆரோவில்லில் வாழ்கிறார். கணவர், ஹாலந்து தேசத்து த்வான் வான்மேகனும் உடனுள்ளார். ஆரோவில்லில் அன்று கவிஞர் ஆரம்பித்த மரத்தடிப் பள்ளிக்கூடம் இப்போது வளர்ந்து 5000 இளைஞர்களை வாழ்க்கைக் கல்வியில் பட்டதாரிகளாக்கியுள்ளது. பன்முகப் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

படைப்பியல்

இவரது படைப்புப்பற்றி, பரவலான விரிந்த ஆழ் ஆய்வுகள் வேறு எவ்வளவு அமைந்தன என்பது தேடப்பட வேண்டியதாகும். பெண் கவிஞர் பற்றிய ஆய்வேடு இவரைக் குறிப்பிடுகிறது; அத்துடன் **'வடிவக் கவிஞர்'** வரிசையில் இவரை அமைக்கிறது; கிருஷாங்கினி தொகுத்த 'பறத்தல் அதன் சுதந்திரம்' என்ற நூலிலும், ராஜமார்த்தாண்டன் எழுதிய **'நவீன தமிழில் பெண் கவிஞர்கள்'** எனும் கட்டுரையிலும், இக்கவிஞரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன என்பது இவ் ஆய்வேடு தரும் தகவலாகும்.[5]

உலகளாவிய நிலையில் இவர் படைப்பியல் அறியப்பட்டமையால், பல ஆங்கிலக் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. தம் படைப்பியலைத் தாமே 'விமர்சிக்கும்' போது, நான்கு தொகுப்புக் கவிதைகளும் கவிஞரின் வளர்ச்சிப் பரிமாணத்தின் சில நிலைகளைத் தருவது தெரியவருகிறது. நூலின் பதிப்புரையில் மேற்கோளாகத் தரப்படும் விமரிசனமும் இவரது படைப்பியலின் பான்மையை விளக்கி நிற்கின்றது. இவரது படைப்பியலின் பல்பரிமாணம், இவ்விமரிசனங்கள் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றன.

முதல் கவிதையும் மலர் நாட்டமும்

பிரசுரமான இவரது முதல் கவிதை 'பன்னீர்ப்பூ'. உதிர்ந்த, விழுந்த மலரைக் காட்டுகின்றது. உணர்த்தப்படுவது, நிலையாமையாகலாம். அழிவு, ஏமாற்றம், தோல்வி எனும் கருத்துத் தெறிப்பும் புலப்படும்.

மழைக் கனம்
உதிர்ந்தது பன்னீர்ப்பூ
மண்ணுக்குத்தான்,
மேனியெல்லாம் நீர்க்கோவை,
வழுக்கியது பன்னீர்ப்பூ
விண்ணுக்குப் பறந்திருந்தால்
மீனோடு சிரித்திருக்கும்
வால்முளைத்த விண்மீனாய்த்
தெரிந்திருக்கும்

காலத்தின் கோளாறோ?
காற்றோடு கண்ணேறோ?
மண்ணுக்கு வந்ததாலே
வழுக்கியது பன்னீர்ப்பூ (1, பன்னீர்ப்பூ)

இது, வெறும் மலராக, இயற்கை நியதியைக் காட்டியது என்றோ, குறியீடாக மனிதரை உணர்த்தியது என்றோ கருதலாம். மலரில் மனிதரைப் பார்க்கும் தன் இயல்பைக் கவிஞரே உரைக்கிறார்.

> அழகின் உபாசனைதான் மனித மனத்தின் உயர்ந்த இயல்பு. ஒரு கட்டத்தில் நான் எல்லா மனிதர்களையும் பூக்களாகவே பார்க்கத்தொடங்கி விட்டேன். சிலருக்குள் பூக்களும் சிலருக்குள் வண்ணத்துப் பூச்சிகளும். எல்லாருக்குள்ளும் ஒரு வாசனை (207).

மலர், பூ என்பன கவிஞர் அடிக்கடி எடுத்தாளும் பொருளாகும்.

பன்னீர்ப்பூவின்
சுகந்தானுபவ மயக்கத்தில்

மெள்ள
நடந்தேன் (95, மேய்ப்பனின் காதறுந்த செருப்பும்
கொம்பு முளைத்த ஆட்டுக்குட்டியும்)

புயலுக்குப் பின் மிஞ்சிய
பன்னீர்பூ மரங்கள்
பூப்பதை நிறுத்தவில்லை. (201, நந்தவனத்திலேயும்)

என்பது போல் பன்னீர்(ப்)பூ மீளவும் ஆளுகை பெறுகின்றது. உனக்கொருபூ (64), பூக்களைத் தேடி (84), சுடுபூக்கள் வீதிக்கு வந்தால் (106), வாசனை ரோஜா பூக்கிறது (143) எனக் கவிதைத் தலைப்புகளும் பூக்களை மையமிட்டுள்ளன. 'மரமல்லிகை சரமல்லிகை / ராஜமல்லிகை பூஜை மல்லிகை / பவள மல்லிகை பன்னீர் மல்லிகை / வேனில் மல்லிகை வாடா மல்லிகை' (189, பக்தி) எனப் பூப்பட்டியல் உண்டு. சேவையில் ஈடுபடும் மனிதன் 'குருதிப்பூ' (116, மனிதப்பிறவி) ஆகிறான். 'இளஞ்சிவப்பு ரோஜாக் கொத்தே' (150, மேற்கு ஜெர்மனியில் முதல் ஞாயிறு) என முன்னிலைப்படுத்தல் உண்டு. மந்தாரையின் கூட்டம் காட்டப்படுகிறது.

இளைய வேம்பின் வேரில்
விளைந்திருந்தன நூறு பூக்கள்
கூட்டமாய் மந்தாரைகள்
சாயங்காலத் தரைத்தாமரைகள் (202, நேரம் தாண்டி...)

இது, வேட்ஸ்வொர்த்தின் டாஃபடில் மலர்க்கூட்டத்தை நினைக்கச் செய்கிறது.

தற்சார்பு

இவரது கவிதைப் பொருள் பன்முகப்பட்டதாகும். உறவு வளையத்துள் உட்படுவனவாக அமையும் தலைப்புகளும், தன்வயமான - தன்னை மையமிட்ட படைப்புகளும் காணப் படுவது தற்சார்பு நிலையாகும். இல்லமும் உறவும் இவரைப் பாதித்ததன் கவிதைப் பதிவுகள், அம்மா (48), அப்பா (163), சகோதரி (16), குட்டி மருமகன் (140-141) என விரியும் உறவு வட்டம் சுட்டும் சொல்லோவியங்களாகி அமையும். சான்றாக,

"அம்மா
அம்மம்மா!"
யாரொருத்தி உனக்கு அம்மாவோ
அவள் எண்ணுகிறாள் அம்மாவை

பிறப்பித்த அவளுக்கு எந்த உருவம்
என்ன உருவகம்?
வெண்ணொளிச் சுடர்
இனிய மென்மை
கனிவுச் சுகம் . . .
அம்மா என்ன செய்வாள்?
பிஞ்சுமுகம் படிப்பாள்
கவிதைகள் உதட்டில் எழுதுவாள்
காவியம் கண்ணில் பேசுவாள்
கைக்குள் உலகம் சேர்ப்பாள்
நெஞ்சுக்குள் உயிர் வைப்பாள் *(48, அம்மா)*

தனிமை, தவிப்பு, ஏமாற்றம், தோல்வி என உணர்வுத் தீயின் பொறிச் சிதறல்களாக, அந்தரங்கவெளி (78-80), ஞானபூமியில் ஒரு ஐந்தரை அடி நீளப் புழு முனகுகிறது (88) எனும் கவிதைகள் அமைகின்றன. தன்னனுபவப் பிரதிபலிப்புகளாக, இறுதிப் பள்ளியில் தனி மரம் ஒன்று (195), மற்றுமொரு நான் (198) என்பன அமைகின்றன. இவற்றுள், முன்னதில் முதிர்ச்சியும் பின்னதில் பிள்ளைமை அனுபவமும் வெளிப்பட்டுக் கவிஞரின் இருமுனை மனப்பாங்கைக் காட்டுகின்றன.

ஊருறங்கும் இருட்டுக் காலத்திலும்
விழித்தபடி
கண்ணிமைகளிலும் ஒளியேந்தியபடி
இந்தத் தனிமரம்
கற்றுக்கொண்டேயிருக்கிறது

என்பது முன்னதன் முடிப்பு.

எனக்குள் சிரித்த பள்ளிச்சிறுமி
துள்ளி எழுந்தாள்

என்பது பின்னதன் இடையடிகள். இவர் கவிதையில், 'குன்றா இளமை' என்று இத்தகைய புலப்பாடுகளை விமர்சித்திருக்கலாம்.

அழகியலும் யதார்த்தமும்

கவிஞர் அழகுபாசகர். முருகியல் நாட்டம் உடையவர். காட்சியகத்துக்கு உள்ளேயுள்ள பொருட்களை விட, 'காட்சியகத்திற்கு வெளியே . . .' (138) வாத்து மிதக்கும் ஏரியையும் மரம் குடை பிடிக்கும் அழகையும் பார்க்க, பாட விரும்புபவர். மலர்களைச் சொற்சித்திரமாக வடிக்கிறார்.

பூக்கள் உலகில்
அழகின் உபாசனை தீவிரம்
ஆம் . . . நான் மயக்கப்படுகிறேன் . . .

மலர்களே! நீங்களெல்லாம்
இலைத்துணியில் நூலழகு வேலைகள்
பூஞ்சிட்டு சுகித்துறங்கும் பல்லக்குகள்
தென்றல் காற்றுக்கு விளையாட்டரங்கம்
பூமித்தாய் கூந்தலிலே தலை அலங்காரம்
சகுந்தலை மேனியர்க்கு ஆபரணங்கள்
கந்தர்வ மணங்களுக்கு மௌன சாட்சியங்கள்
பரமனுக்கு மகுடங்கள்
பரம பக்தனுக்குப் பக்குவப் பிரசாதங்கள்
நாளின் காலை மாலை காட்டுகின்ற
தரைக் கொட்டகைத் திரைக்காட்சிகள்
(84, பூக்களைத் தேடி)

என இது தொடர்கிறது. இவ்வாறு அழகியலுணர்வுடன் கவிஞரின் மனம் கற்பனை வானில் பறந்தாலும் கால்கள் யதார்த்த பூமியில் வேரூன்றி நிற்கின்றன. இதனால் வேறுபட்ட சிந்தனையும் விளைகிறது. குமுத மலர் சிரங்காகிறது; பிறை மதி தொழுநோயால் வெட்டிய நகமாகிறது.

பொழுதின் வலிப்பு
வண்டின் முனகல்
வயிற்று நோவில்
துடிக்கும் தவளை
சொத்தைப் பல்லால்
பாம்பின் அவதி
நிலத்தின் முகத்தில்

குமுதச் சிரங்கு
தொழுநோய்க் கொடுமை
வெட்டிய நகமாய்த்
தேய்ந்தது நிலவு *(6, வெட்டிய நகம்)*

இதனை, இயல்பு (யதார்த்தம்) என ஏற்பதா, அல்லது விமர்சகர் குரலில் 'உக்ரமொழி' எனக் கருதுவதா என்பது ஐயம். தொழுநோய் *(16, உடன் பிறந்தாள்; 130, இந்தப் பணம் நாறுகிறது)*, ஊனம் *(24, துணை அன்றும் இன்றும்; 30-31, ஊமைக்குருவி; 76, உங்களுக்கோர் எச்சரிக்கை; 97, போராட்டம்)* ஆகியன பற்றிய குறிப்புகள் கவிதையில் அங்கங்கு அமைவது இவ் எண்ணம் தரும். அதிர்ச்சி தருதல், அதிர வைத்தல் என்ற முடிப்பு நோக்கம் இத்தகு கவிதைகளிலமைகிறது எனலாம்.

அவநம்பிக்கை – நம்பிக்கை

விரக்தி, கசப்பு, அவநம்பிக்கை என்பன தொனிக்கும் கவிதைகள் ஒரு பாலமைகின்றனவென்றால், எதிர்மாறாக, நம்பிக்கையூட்டும் பாங்கும் இன்ப உணர்வும் மறுபாலமைவது கவிஞரின் சமன்மையைக் காட்டுகின்றது. 'காதலாவது கத்தரிக்காயாவது' *(129, சத்தான காதல்)* எனச் சலிப்போடு முடிக்கிறார் ஒரு கவிதையை. மற்றொரு பாடலில் காதலின் தேன் இனிமையைத் தருவது கவிஞரின் நேர்நிலைப் பார்வையையும் நம்பிக்கை மனப்பான்மையையும் வெளிப்படுத்தும்.

துளித்தேன் கண்களில்
விழிகள் துடிப்பு
கரிப்பு
சுத்திகரிப்பு
கசிவு
கண்மை கரைய
மடை உடைப்பு
அவன்
என் கண்ணில் விழுந்ததேன்?
உள்ளுக்குள் இனிப்பு. *(193, கண்ணில் விழுந்த தேன்)*

தோல்வியால் துவண்டுவிடுதலும் தொய்ந்துபோதலும் உண்டெனும் உண்மையையும் கவிதையாக்குவார். விரக்தி, கிழிந்த போர்வையாக உருவகிக்கப்படுகிறது.

தோற்றோய்ந்த நேரத்தில்
தோற்கப் பிடிக்காத முனைப்புகளில்
தோற்றாக வேண்டியதே
தொழிலாக ஏற்றுவிட்ட
வாழ்க்கைப் பொழுதுகளில்
கிடைத்த
கிழிசல் போர்வை
விரக்தி (126, விரக்தி)

இதற்கு நேர்மாறாக, புழுவின் சலனத்திலும் வெற்றிப் பயணத்தைக் காணுதல், தோல்வியை மிதித்து மேலேறும் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

. . . தம்பீ! இதோ பார்
சன்னல் விளிம்பில்
எலும்பற்ற பச்சைப்புழு
உடல் தூக்கி
வழுக்கி விழுந்து
ஏறி எழுந்து
தலை நிமிர்த்தி
கம்பீர ஊர்வலம் (58, ஒரு புழுக்கமான பகலில்)

கவிதை

படைப்பாளியான கவிஞர், தன் கவிதைப் படைப்பைப் பற்றி நினைத்தல் என்பது ஒரு நிலை. எது கவிதை, கவிதை எவ்வாறு உருவாகிறது, கவிதைப் பொருள் எது, கவிதைப்பயன் எது, கவிஞன் (நான்) யார் என்பன போன்ற அகவயப் புறவயச் சிந்தனைகள் கவிதை பற்றிய கோட்பாட்டை உள்முக நோக்கில் அணுகுகின்றன.

கண்களை உழுது, எண்ணத்தை உரமாக்கி, கனவுகளை வேலியிட்டு, கவனத்தில் நட்ட பூவாகக் கவிதை தொனிக்கிறது (64, உனக்கொரு பூ). சோகமும் துன்பமும் கவிதைக்குக் களமாகின்றன. 'சாவின் துடிப்புகளைச் / சாகாத கீதமாக்கினான் கவிஞன்' (65, நிச்சயிக்கப்பட்ட வாழ்க்கை). சாவை வெல்லக் கவிதை துணையாக அமைகிறது.

கொஞ்ச காலமாகவே
நெஞ்சமெல்லாம் மரக்கூட்டம்
மரங்களைப் பாடி
மரங்களுடன் பேசி
மரணத்தை வென்று வருகிறேன்
(187, உங்களிடம் இதைச்சொல்ல ஆசைப்படுகிறேன்)

கவிதை, இராத்தங்காத ரிஷி கர்ப்பம் (119, மற்றொரு குழந்தை); கருப்பையில் தூங்கும் விதை (118, ஒரு விதை முளைக்கு முன்னே); அவ்விதை, புரட்சி செய்யும், மருந்தும் ஆகும்.

நானே பாரதி
என் காலத்தின் கவிச்சக்கரவர்த்தினி
முன் எப்போதும் போலவே பேசுகிறேன்
என் கவிதை சோதிமிக்க நவகவிதை
இந்த விதை களர் நிலங்களிலும்
கிளர்ச்சி செய்யும்
மண்கீறும்
ஊற்றடைப்புகளை
வெடியெனத் தகர்க்கும் . . .
என் ஆவேசக்கவிதைகளே!
ஆகாயங்களில் இசைக்காமல்
ஆத்மாவின் காயங்களுக்கு மருந்தாவீர் (109, நவகவிதை)

விழிப்புணர்வூட்டும் வெளிச்ச வழிகாட்டியாகவும் கவிதையை மற்றொரு சூழலில் தருகிறார் கவிஞர்.

உன் பிரபஞ்சக் கவிதையை நீ வாசிக்க
நான் கேட்டபடியிருந்தேன் . . .
உன் கவிதையின் கைகள்
இந்தியப் பட்டுத்துணியின் இழைகள்
உன் வெள்ளிக்குரலின் இதயவெம்மையில்
என் நானும், நம் நானும் முழுதாய் விழித்தோம். . .
உன் பாடலைத் தொடர்ந்து செல்கிறோம்
செல்கிறோம் ஒளியின் உச்சிக்குச்
செல்கிறோம்.
(199, அமெரிக்கப் பெண் கவிஞர் சிரிலுக்காக...)

பாரதியின் செல்வாக்கு

இவரது கவிதையில் பாரதியின் செல்வாக்கு அமைவதை மேலே சுட்டிய 'நவகவிதை' போல, பிற சிலவும் காட்டும். 'தத்திரிகிட தத்திரிகிட தித்தாம்' (124, பிரமிட் அசைகிறது) எனக் கவிதை ஒன்றை முடிக்கும் போது பாரதியின் சந்தத் தாக்கம் வெளிப்படுகிறது. 'ஊமைக்குருவி' (30-31) பாரதி சுட்டிய 'விடு விடு விடு' என்ற குருவிப் பேச்சுக்குப் புதுவிமரிசனமாய் அமைகின்றது. வரலாற்றின் பொற்காலங்களூடே மிதந்த சுகமான பயணம், பாரதி கவிதை காட்டிய உண்மை நிலையால் யதார்த்தத்திற்கு வருகிறது.

> . . . ஆமாம் ஆமாம்
> தாண்டிக் குதித்தது சின்னக் கம்பளம்
> தெற்கு மூலையில் திரு. பாரதி பாட்டு
> 'கரும்புத் தோட்டத்திலே! ஆ . . .'
> கம்பளம் கிழிந்தது
> *(172, எனக்குக் கிடைத்த ரத்னக் கம்பளம்)*

புதுமைச் சொல்லாடல்

புதிய சொல்லாளுகை, புதுக்கவிதைப் பண்புகளுள் குறிப்பிடத்தக்கதொன்று. சொல்லைப் பொருள் தரும் வெறும் ஊடகமாகக் கையாளாமல் பரிமாணமுடைய பருவுருவைக் காட்டும் படிமப்பாங்கினதாகக் கொள்ளல் இங்கமைகிறது. இதனால் புதுவிதமான சொல்லாடல்கள் எழுந்து, புதுக்கவிதையின் 'புதுமை' எனும் சிறப்படைக்கு விளக்கமாகின்றன. ஞாபக நாளங்கள் (168), சோகமோஹினி (145), பனித்துளி வியர்க்கும் ரோஜா (183), பிள்ளைத் தழை நுனி (192), யுத்த ராகம் (145), பேச்சில் லாஸர் கற்றை (125) எனச் சிதறும் சிறுபொறிகள் பல. உடற்காம்பில் துடித்து மலர்ந்தது ஆத்மப்பூ (166), ஒரு குட்டி ஓடை— கரைக் கண்களும் நாணல் மொழியும் நாட்டிய மரங்களும்— (200), பச்சை வியாழனாய் மரகதக் கதிரில் தழைத்திடும் நிழல் புல் வட்டம் (202) என நீள நீளமாய்ச் செல்வனவும் உள.

> பெட்டிக்குள் உறங்கும்
> தீக்குச்சி கூட
> பிள்ளை எரிமலைதானே!
> *(153, கூட்டுப்புழுவாயிருக்கும் போதும் . .)*

ஓரமாய்
இரத்தச் சிவப்பில் தபால்பெட்டி
வாய்மூடி, ஒரு இமை தாழ்த்தி
அஞ்சலி செய்கிறது
(154, முற்றுப் பெறாத துடிப்புகள்)

என்பன போல, புதுவிதமாகச் சிந்திக்கும் முனைப்பும் கவிஞரிடம் உண்டு.

இயற்கையும் அங்கதமும்

இயற்கையை ஆழமாக நேசிக்கும் கவிஞர் அதன் அழகில் ஈடுபடுவதை வேம்பு (192), பொன் வண்டே (197) போன்ற பல கவிதைகள் காட்டும். ஏமாற்றும் மனிதரை அங்கதப்படுத்தவும் இயற்கை அவருக்குக் கைகொடுக்கிறது.

முகங்கள் குறிஞ்சி
முல்லைக் கைகள்
மருதமே கால்கள்
அவர்களுக்கு
நெய்தல் வயிறுகள்
நெஞ்சுதான்
பாலை
மக்கள் திணை
தனி (97. எங்களூர்த் தலைவர்கள்)

பிற

கவிஞர் பல்பரிமாணமுடையவர் என்பதை அவரது படைப்புகள் காட்டும். சமூக நோக்கும்[6] பெண் பற்றிய சிந்தனையும்,[7] கவிதை வெறும் சுவைப்புக்காக அல்ல - செய்தி பரிமாற்றத்திற்கும் - செயல்பாட்டிற்குமாகும் என்பதை விளக்கும். வடமொழி மேற்கோள் ஆடுதல் (165), ஆங்கில வங்கக் கவிதைப் பெயர்ப்புகள் (55, 70, 203) என்பன, இருப்பு தென்னகத்திலாயினும் பார்வைப் பரப்பு விரிவானது என்பதைப் புலப்படுத்தும். இவரது உணர்ச்சிப் பிரவாகத்தின் வேகம் காரணமாகப் போலும், பன்முறை அணுகினும் எளிதில் பிடிபடாக் குறியீட்டுக் கவிதைகள் இவரிடம் உள.

கஞ்சிராவின் தோல்கிழிய
விரல்கள் பேசும்பொழுது
ஞானமுதிர்வுகள் உங்களுக்குள்
கஞ்சிரா
என்றைக்கும்
செவிட்டூமை (57, தேவகானங்களே)

அடிக்குறிப்புகள்

1. **மீனாட்சி கவிதைகள்**, இரா. மீனாட்சி, காவ்யா, சென்னை, 2002. (191 கவிதை எனக் குறிக்கப்பட்டாலும் ஒரு சில கவிதைகள் இருமுறை வருதல் காணப்படுகிறது. சான்று: புதியவன் (40, 182), அவள் துணை வேண்டா (5, 183), மறுபயணம் (3, 181).)
2. **கவிதைப் படைப்பில் பெண்களின் பங்களிப்பு - ஓர் ஆய்வு**, இரா. நாகவேணி, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை. (வெளியிடப்படாத எம்ஃபில் ஆய்வேடு, 2003, ப. 48. (நன்றி. ஆய்வேட்டுப்படி உதவி - செல்வி க. ஜெயந்தி, ஆய்வாளர்).
3. அடைப்புக்குறி எண்கள் '**மீனாட்சி கவிதைகள்**' நூலின் பக்க எண்கள்.
4. எண்ணைத் தொடர்ந்து அமைவது கவிதைத் தலைப்பு.
5. **கவிதைப் படைப்பில் பெண்களின் பங்களிப்பு - ஓர் ஆய்வு**, முன் சுட்டியது, பக். 48-49; 62-63; 69.

   அ) கிருஷாங்கினி, **பறத்தல் அதன் சுதந்திரம்**, காவ்யா, சென்னை, 2001.

   ஆ) ராஜமார்த்தாண்டன், "நவீன தமிழில் பெண் கவிஞர்கள்", **காலச்சுவடு**, 47, மே-ஜூன் 2003.
6. மனிதனுக்குப் பாடுவேன் (53-54), தோட்டக்காரனும் வீட்டுக்காரியும் (68-69), யுத்த கீதம் (72-73), ஒரு கிராமம் சாகிறது (86-87), கலசமும் கருவறையும் (92), மண்ணின் மைந்தர்கள் (110)
7. வேகத்தீ (43-44), மதுரை நாயகியே (83), உன் நாமமே இனிக்கிறது ராமராம சீதாராமா . . . (89-100), புதுதேவி (111), இவர்களுக்கா (112-113) . . . .

வெ.நா. திருமூர்த்தி

மார்க்சியப் படைப்பாளிகள் இலக்கியப் பாடுபொருளாகப் பாமரனையும், பாட்டாளி வர்க்கத்தினரையும் முதன்மைப் படுத்தினர். இலக்கியத்தை இவர்கள் சமுதாய மாற்றத்திற்கான போராட்டக் கருவியாகக் கொண்டார்கள். அவ்வகையில் கவிஞர் வெ.நா. திருமூர்த்தியின் பாடல்கள் மார்க்சியத்தோடு உயிரோட்டமாகக் கலந்துள்ள பாங்கினை இக்கட்டுரை ஆய்கிறது.

கவிஞரின் வாழ்க்கை வரலாறு

கவிஞர் வெ.நா. திருமூர்த்தி 1904ஆம் ஆண்டு ஈரோட்டுக்கு அருகே வெள்ளோட்டம் பரப்பு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது தந்தையார் நாராயணநாயுடு. தாயார் வெங்கடம்மா. தமிழில் நான்காம் வகுப்புவரை படித்தவர். வறுமையின் கொடுமைகள் அனைத்தையும் அனுபவித்தவர்.

சிறுவயதில் ஆடு மேய்த்தார். நாமக்கல் நகரில் பலசரக்குக் கடை ஒன்றில் பணியாற்றினார். ஜேடர்பாளையம் சென்று நெசவுத்தொழில் செய்தார். திருச்சியில் தென்னிந்திய இரயில்வேயில் சில காலம் வில்லை முடுக்கும் வேலையில் (Point man) அமர்ந்தார். அப்பணியை விடுத்துப் பின்னர் மாட்டுக்கு லாடம் கட்டிப் பிழைத்தார். அதனை அடுத்து உறையூர் பஜனை மடத்தில் பூசாரி ஆனார். அதன்பின் பாத்திர வியாபாரம் செய்தார். இறுதியாகத் திண்ணைப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியரானார்.

உறையூரிலிருந்தபொழுது 1942 ஆகஸ்ட் போராட்டக் காலத்தில் தேசியவாதியாகவும் சமாதானப்படைத் தொண்டராகவும் செயலாற்றினார். அதன்பின் உறையூர் தோழர் இராமைய்யாவின் தூண்டுதலால் அறிவியல் கலா மன்றத்தைத் தொடங்கினார். அதுமுதல் இயக்கத்துடன் தொடர்புகொண்டு கட்சியின் இலட்சியத்திற்கான கலைப்பணியில் ஈடுபட்டார். சக்கிமுக்கிப் புலவர், தொண்டை மண்டலக்கிழார் போன்ற

புனைப்பெயர்களும் இவருக்கு உண்டு. சிறந்த கவிஞராகவும், பாடகராகவும், நடிகராகவும் விளங்கிய இவர் சுய முயற்சியில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் பயின்றுள்ளார்.

கவிஞரின் நூல் பதிப்பும் வரலாறும்

கவிஞர் பல்வேறு காலக்கட்டத்தில் பாடிய பாடல்கள் ஆங்காங்கே சிதறுண்டு கிடந்தன. தோழர் சங்கைவேலவனின் பெருமுயற்சியால் அவை தொகுக்கப்பட்டு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாரால் **கவிஞர் வெ.நா. திருமூர்த்தி பாடல்கள்** என்ற தலைப்பில் 1986 ஆம் ஆண்டு முதற் பதிப்பைக் கண்டன. ஆனால், **கவிஞர் திருமூர்த்தி பாடல்களின்** முதல் வெளியீடு 1946இல் அறிஞர் வா.ரா.வின் சிறப்பு முன்னுரையோடு வெளிவந்ததாக ஒரு குறிப்பு உள்ளது.

நூல் அமைப்பு

1986இல் சங்கைவேலவன் தொகுத்த வெ.நா. திருமூர்த்தி பாடல்கள் என்ற இந்நூலில் 13 தலைப்புப் பகுதிகள் இடம்பெற்றுள்ளன. முதலாவதாக, செந்தமிழ் என்ற தலைப்பில் தமிழ்மொழி பற்றிய இரு பாடல்கள் அமைகின்றன. செங்கொடி என்ற தலைப்பில் ஆறு பாடல்களும், விடுதலைக் களம் என்ற பிரிவில் பதினொரு பாடல்களும் உள்ளன. நான்காவது பகுதியில் ஐயோ சுதந்திரமே என்ற நெடும் பாடல் அமைந்துள்ளது. ஐந்தாம் பகுதி 'இயக்கம்' என்ற தலைப்பு பதினொரு பாடல்களைப் பெற்றுள்ளது. ஆறாம் பகுதி மனித சக்தி என்ற பொருண்மையில் இரண்டுபாடல்களைக் கொண்டுள்ளது. ஏழாம் பகுதியில் 'மக்கள் சமூகம்' என்ற தலைப்பில் நான்கு பாடல்கள் உள்ளன. எட்டாம் பகுதி 'அரசியல் களம்' என்ற தலைப்பில் பதிமூன்று பாடல்களைப் பெற்றுள்ளது. ஒன்பதாம் பகுதி 'தியாக தீபங்கள்' என்ற பெயரில் அமைய, அதில் ஏழு பாடல்கள் உள்ளன. பத்தாம் பகுதியில் படிப்பாளிகள், பாட்டாளிகள் என்ற தலைப்பில் இருபது பாடல்கள் உள்ளன. பதினோராம்பகுதி நாட்டைக் காப்போம் என்ற தலைப்பில் அமைய, அதில் மூன்று பாடல்கள் உள்ளன. பன்னிரண்டாம் பகுதி 'பொதுவுடமை பொன்னுலகம்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இதில் ஆறு பாடல்கள் அமைந்துள்ளன. பதின்மூன்றாம் பகுதி பல்சுவைப் பகுதியாக அமைகிறது. இதில் நான்கு பாடல்கள் உள்ளன.

மேற்கண்ட அமைப்பில் அமைந்த பாடல்களில் காணும் சிறப்புறு பொருண்மைகளின்வழிக் கவிஞரின் இயக்கப் பற்று, சமூக நோக்கு, சமகாலத்து நிகழ்வுகளை உள்ளடக்கிய வரலாற்றுப் பதிவு, வர்க்க முரண்பாடுகளின் வெளிப்பாடு, தேசிய இயக்கத்தில் கவிஞர் கொண்ட பற்று முதலியன வெளிப்படுகின்றன. அவற்றை ஈண்டுக் கவிஞர் கவிதைவழிக் காண்போம்.

இயக்கப்பற்று

மார்க்சியக் கவிஞராக விளங்கும் திருமூர்த்தி செங் கொடியின்பால் கொண்ட பற்று அளப்பரியது. பொதுவுடைமைக் கட்சியின் குறியீடாக விளங்கும் செங்கொடியின் வரலாற்றை ஒரு சில வரிகளில் அறிய வேண்டும் எனில் அதற்கு விடை கீழ்வரும் பாடல் எனலாம்.

செங்கொடியே நீ வாழ்க! – நின்
செவ்வொளி நிரந்தரம் வாழ்க!
மங்காப் புகழுடன் வாழ்க! – நின்
மார்க்கமும் நன்னெறி வாழ்க (செங்)

சிக்காகோ நகரின் புரட்சியில் உதித்தாய்;
தியோன் ஜாரின் பொன்முடி கவிழ்த்தாய்;
மக்களைச் சுரண்டும் வர்க்கத்தை ஒழிக்கும்
மணிக்கொடியே நீ வாழ்க!

மன்னுயிர்க் கெனவோர் கொள்கையைத் தந்தாய்;
மாண்புற மக்கள் ஆட்சியில் அமர்ந்தாய்
புன்மையும் இன்மை போக்கிட வந்த
போர்க் கொடியே நீ வாழ்க!

நின்னொளி பரவா நாடுகள் இல்லை!
நின்செயல் அன்றி வாழ்வெமக் கில்லை
புன்னகை தவழும் சாந்தியைக் காக்கும்
புவிக் கொடியே நீ வாழ்க! (ப.49)

என்ற கவிதையின் மூலமாக இயக்க வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டுவதைக் காணலாம்.

வர்க்க முரண்பாடுகள்

காலனி அடிமைத்தனம் என்ற நோய்க்கு மருந்து கொடுக்கும் வைத்தியனைப் போன்றவன் எழுத்தாளன். அதே

சமயத்தில் தேச விடுதலையில் அவன் ஒரு போர் வீரனும் ஆவான் என்றார் பெஞ்சமின் மாதிப். மனிதனை மனிதன் சுரண்டும் இழிநிலையை முழு உருவில் ஒழித்து, முற்றிலும் புதிய சோசலிச சமுதாயத்தை அமைப்பதற்கான கடமையை நிறைவேற்றுவதுதான் இன்று கலை இலக்கியத் துறையின் அடிப்படையாக இருக்க வேண்டும். அதற்கு வர்க்க முரண்பாடு பற்றிய சிந்தனைக் கனல் ஒவ்வொருவர் மனத்திலும் கனன்று கொண்டு இருக்கவேண்டும்.

கங்கை காவிரி பாயும் தேசத்திலே – உயர்
கலைகள் சிறந்த நாகரீகத்திலே
பொங்கும் வளநாடு; – நல்ல
தங்கம் உள்ள நாடு
எங்கும் புகழ்நாடு; நம்
இந்திய நன்னாடு! – இதில்
எல்லோரும் ஓரினம் போல் – அன்று
இன்பமுடன் வாழ்ந்திருந்தோம் – இப்போ
காலம் மாறிப் போச்சு;
கலைகள் மாறிப் போச்சு;
கஷ்டப்படும் மக்கள்
கவலைப் படலாச்சு!
அடிக்கும் வெயில் உழைப்பவர்க்கு
குடிக்கக் கஞ்சியும் இல்லையே
உடுக்கத் துணியும் இல்லையே; – குடி
இருக்க வீடும் இல்லையே!
படுக்கப் பாயும் இல்லையே; – இன்னும்
பல விதத்திலும் தொல்லையே!
பாட்டாளிக் கிடமில்லையே; – இந்தப்
பாழாப் போன சீமையிலே
பாடுபடும் மக்களுக்கே – நாளும்
பட்டினி கொடுஞ்சிறையோ! (பக்.54-55)

என இச்சமூகத்தில் காணும் அவலத்தைச் சுட்டிக்காட்டுவதைக் காணலாம். இத்தொகுப்பில் இதுபோன்ற பல பாடல்கள் உள்ளன. பிறிதொரு இடத்தில் இவ்வருக்க முரண்பாட்டால் சமூகத்தில் காணும் அவலத்தைச் சுட்டிக்காட்டும் போது,

பாதாங்கீர்களுக்கும் பால்கோவா வுக்கும்
பசும்பாலெல்லாம் போகுது;

பச்சைக் குழந்தை குடிக்கக் கூட
பாலில்லாமே சாகுது!
குதிரைப் பந்தயம் சூதாட்டத்திலும்
போகும் பணமோ கணக்கில்லை;
மதியை வளர்க்கும் கல்வி நிதிக்கு
உதவி யளிக்க மனமில்லை!
ஒருவன் உழைப்பை ஒருவன் பறிக்கும்
சுரண்டல் முறையை ஒழிக்கணும்
உலக மெங்கும் மனித வர்க்கம்
ஒரு சமமாய்ப் பிழைக்கணும் – இந்த
கடமை யுணர்ந்து – விடுதலை பெற
கட்சி வர்க்க பேதமின்றி
இடர்கள் எத்தனை வந்திட்டாலும்
எதிர்த்து நின்று போர்புரிந்து நம்
அடிமைத் தளத்தை உடைத்தெறிந்திட வாருங்கள்
– இன்றே
அகில உலகத் தொழிலாளர்களே
அனைவரும் ஒன்று சேருங்கள்![11]

என வர்க்க முரண்பாட்டிற்கு எதிராகக் கவிஞர் தூக்கும் உரத்த குரலோடு கூடிய பாடல் படித்து அறியத்தக்கது.

சமூகநோக்கு

கவிஞர் என்றாலே சமூகத்தின் சீர்கேடுகளைப் பார்த்தும் பார்க்காததுபோலச் சுயநலத்துடன் செல்லும் போக்கைக் கொண்டவர்களாகக் காணமுடியாது. இச் சமூகச் சீர்கேட்டையும், இதைக் கண்டும் எழுச்சியுறாத மக்களின் அக்கறையின்மையையும், இத்தகைய கவிஞர்களால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க இயலாது. ஆகவே அவற்றைத் தங்கள் எழுத்து மூலமாகச் சொல்லி விடுவர். திருமூர்த்தியும் மக்கள் துன்பத்திற்குக் காரணமாக அமைந்த வர்க்க முரண்பாட்டை மறந்துவிட்டு வாழும் தன்மையை,

மண்ணுக்காய் பாரதத்தின்
சண்டை யென்றும்
வானவர்க்காய் அசுரர்களின்
சண்டை யென்றும்
பெண்ணுக்காய் ராமாயணச்
சண்டை யென்றும்

பேர்போன பழங்கதைகள்
கேட்டி ருப்பீர்!
கண்ணுக்கும் முன்னாலே
எங்கள் வீட்டில்
கஞ்சிக்கும் கந்தைக்கும்
பெரிய சண்டை (பக்.17)

எனப் பாடுகிறார். குடும்பம் வறுமையின் காரணமாகச் சண்டையிட்டுக் கொள்ளக் காரணம் உழைப்புச் சுரண்டலே என்பதை மறந்து பழங்கதை பேசித்திரியும் மக்களை நயமாகக் கவிஞர் சாடுவதைக் காணலாம்.

'உழைப்பவன் உரிமைக்குப் போராடினால்' என்ற தலைப்பில் அமைந்த பாடல் பாட்டாளி மக்களின் அவலத்தையும் அன்றைக்கு நாடிருந்த நடப்பையும் எடுத்துக்காட்டும்.

சோறு கேட்டாலே ஏழைகள் மேலே
துப்பாக்கி வெடி டமீர் டமீர்!
கோரிக்கைக் காக ஊர்வலம் வந்தால்
குண்டாந்தடி அடி படீர் படீர்!
அடடா இந்தக் கொடுமையைப் போலே
அறியோமே எந்த நாளும்
ஐய்யய்யோ இதையே எடுத்துச் சொன்னாலே
மெய்யாக நூத்தி நாற்பத்து நாலே
பாமரர் வாழ்வில் கோரத்தைக் கண்ணால்
பார்த்தாலே மனம் பகீர்! பகீர்! . . . (பக்.111)

சமகாலத்து வரலாற்றுப் பதிவு

தலைமுறைக்குத் தலைமுறை இடைவெளி உண்டு என்பது மறுக்க முடியாத ஒன்று. பண்பாடு, நாகரிகம், அறிவின் வீச்சு இவற்றில் இவ்விடைவெளி அதிகம் தெரிவதுபோல ஒரு காலக்கட்டத்து வரலாற்று நிகழ்வு பதிவு செய்யப்படாவிட்டால், அடுத்த தலைமுறையினர்க்கு அச்செய்தி சென்று அடையாது. அப்படிச் சென்று அடையாவிட்டால் வரலாறு மறைந்து போகக் கூடும். இதை அறிந்துதானோ என்னவோ கவிஞர் தனது பாடல்களில் அதனைப் பதிவு செய்துள்ளார். அவற்றில் மிக முக்கியமானது, தஞ்சை மண்ணை உலுக்கிய 'வெண்மணிக்

கொடுமை' என்ற தலைப்பில் அமைந்த பாடல். கூலி உயர்த்திக் கேட்ட மக்களை எந்த அளவிற்குக் கொடுமை செய்தனர் என்பதை,

> கொடுமையிலும் கொடுமை யம்மா!
> குடிசை எல்லாம் எரிந்த தம்மா!
> உடல்துள்ள உயிர் துள்ள
> நாற்பத்து நால்வரை
> உயிரோடு எரித்தார்கள் அம்மா!
> ஒருபாவ மறியாத
> தாய்களும் சேய்களும்
> உயிரோடே எரிந்தார்கள் அம்மா! (ப.200)

என வேதனையோடு கீழ வெண்மணி நிகழ்வைக் காட்டுகின்றார்.

பஞ்சத்தின்போது மக்கள் பட்ட தொல்லைகளைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்:

> பதினாறு அவுன்ஸ் அரிசி பத்தவுன்சா மாறிப்போச்சு
> எட்டவுன்ஸ் ஆச்சதுவுங் கிடைக்கலே - மக்கள்
> குத்துயிராத் தவிக்கிறாங்க சகிக்கலே — ரேஷன்
> எத்தனையோ ஊரில் இன்னுங் கொடுக்கலே!
> உளுத்த சோளங், கம்பு, ராகி புழுத்தமாவு வேர்க்கடலை
> உதவாக்கரை கோதுமைதான் கிடைக்குது; — தின்றால்
> உடம்புக் கொத்துக் காமே வயித்தே கெடுக்குது குடும்ப
> உபத்திரவங் குரல் வளையைப் பிடிக்குது! (பக். 161-162)

என்று அன்று வந்த பஞ்சத்தைப் பதிவு செய்துள்ளார்.

கவிஞர் கவிதையும் உத்தி முறையும்

ஒவ்வொரு கவிஞருக்கும் அவரவர்களுக்கென ஒரு நடையுண்டு. எளிய சொற்கள்! சந்தச் சொற்கள்! வித்தகச் சொற்கள் என, அவர்கள் நடையில் ஏதேனும் சிறப்புற்று நிற்கும். கவிஞர் கவிதையில் இசைநயம் கலந்து அது பாடலாக உருவெடுத்திருக்கும். கர்நாடக இசை, சினிமா பாடல் மெட்டுகள் இவர் தன் கவிதைகளை மக்களிடத்துக் கொண்டு செல்லப் பயன்பட்ட ஊடகங்களாகும். செங்கொடியின் கீழ் (ப.45) என்ற பாடல் செங்கொடியின் கீழே சேருங்கள் (ப.47) போன்ற

பாடல்கள் பல்லவி சரணங்கள் கொண்ட பாடல்களாகும். அந்த அந்தக் காலக்கட்டத்தில் சிறப்பாக மக்களால் போற்றப் பட்ட திரைப்படப் பாடல் மெட்டுக்களைக் கொண்டு, பல பாடல்களை அமைத்துள்ளார். தமிழ் அமுது என்ற பாடல் அம்சத்வனி, ஆதி தாளம் கூடிய கருநாடக இசையில் அமைந்தது. மேலும் புவிக்கொடியே நீ வாழ்க என்ற பாடல் 'எங்கிருந்தாலும் வாழ்க என்ற மெட்டிலும், வாழ்க சமாதானக் கொடி என்ற பாடல் 'பெண்ணொன்று கண்டேன்' என்ற மெட்டிலும், கந்தன் திருநீறணிந்தால் என்ற மெட்டில்,

செந்தமிழைக் கூர்ந்து கற்றால்
சிந்தை வளங் கூடி வரும்
விந்தை மிகு ஞானந் தரும்
வெற்றி உனைத் தேடிவரும் (பக். 39)

'யாரை நம்பி நான் பிறந்தேன்' என்ற திரை மெட்டில் அமைந்த பாட்டாளி படிப்பாளி ஒண்ணுபட்டா. . . என்ற பாடல். இதில் ஓரிரு எடுத்துக்காட்டு வரிகள்

ஏட்டைப் படிச்சா படிப்பாளி
ஏரைப் புடிச்சா பாட்டாளி
ஏட்டுக்கு மட்டும் மதிப்பம்மா
ஏருக்கு மதிப்பே ஏதம்மா? (ப. 226)

'எண்ணி எண்ணிப் பார்க்க மனம்' என்ற மெட்டில் அமைந்த, அமைதி காப்போம் என்ற பாடல் 'டடடா' என்ற மெட்டில் அமைந்த இன்ப உலகை உண்டாக்குவோம் என்ற பாடல் (ப.113), 'சங்கடமான சமையலை விட்டு' என்ற மெட்டில் அமைந்த பஞ்சத்திற்குக் காரணம் யார்? (ப.115) என்ற பாடல், 'அமுதைப் பொழியும் நிலவே' என்ற மெட்டில் அமைந்த புதுவாழ்வே வருக என்ற பாடல் (ப.123) 'கண்ணுக்குள் எத்தனை வெள்ளமோ' என்ற மெட்டில் அமைந்த தியாக பரம்பரை நாம் என்ற பாடல், 'நல்ல பெண்மணி' என்ற மெட்டில் அமைந்த சிறையில் தள்ளணும் என்ற பாடல் அதில் ஓரிரு எடுத்துக்காட்டு வரிகள்:

சிறையில் தள்ளணும் – கொடுஞ்
சிறையில் தள்ளணும் – நாட்டை
முறையில்லாமே சீர்குலைக்கும்
மூர்க்கனும் எவனோ அவனை

என அமையும் பாடல் (பக்.150), 'ஏரு பூட்டிப் போவாயே அண்ணே' என்ற மெட்டில் அமைந்த சட்ட சபையில் சாதித்த தென்ன என்ற பாடல் (ப. 165)

ஒட்டு வாங்கிப் போனீங்க
அண்ணே. . . ஓ . . . அண்ணே – என்ன
உருப்படியா செய்தீங்க
அண்ணே – சொல்லண்ணே (ப.165)

'மாமா மாமா மாமா' என்ற மெட்டில் அமைந்த கைகழுவி ஓடலாமா என்ற பாடல் (ப.167),

வாங்க! வாங்க வாங்க – இது
ஏங்க! ஏங்க ஏங்க!
பாங்குடனே திராவிடத்தை
நாங்களே அடைவோ மென்று
பாசறையில் வெத்து வேட்டுப்
போடலாமா? – இப்ப
காங்கிரசார் கொண்டு வந்த
சட்டங்கண்டு திராவிடத்தை
கைகழுவி விட்டுப் பூட்டு
ஓடலாமா!

(ப.167)

'சொல்லட்டுமா சொல்லட்டுமா' என்ற மெட்டில் அமைந்த கேள்வியும் பதிலும் என்ற பாடல் (ப.183) ஜீவானந்தம் குறித்துக் கவிஞர் 'ஜீவாக்குயில்' என்றொரு கவிதையை எழுதினார். அதற்குப் 'பாட்டுப்பாட' என்ற மெட்டினைப் பொருத்தியுள்ளார்.

கன்னித் தமிழ்ச் சோலையிலே ஏலேலோ – ஒரு
கவிக் குயிலின் பாடல்கேட்டபின் ஏலேலோ
என்னவென்று சொல்லிடுவேன் ஏலேலோ – அதை
எடுத்துரைக்கத் தோணலியே ஏலேலோ[27] (ப.202)

'வேட்டையாடு' என்ற மெட்டில் அமைந்த 'தீர்த்துக் கட்டு' என்ற பாடல்:

ஊக்க மோடு உணர்வோடு
ஒன்று சேர்ந்தே போராடு
உடைமை வர்க்க அமைப்பைச் சாடு – வெற்றி
உறுதி யென்றே பரணி பாடு (ஊக்) (ப.213)

'புதுசா கட்டிக்கிட்ட' என்ற மெட்டில் அமைந்த புதிய குறவன் குறத்தி பாட்டு:

நாட்டில்
வெகுசா ஏழைபடும் பாடு தானுங்க – இதை
வெளியே சொன்னா வெக்கக் கேடுதானுங்க (ப.215)

'எட்டடுக்கு மாளிகையில்' என்ற மெட்டில் அமைந்த பகைவனுக்கு இடங்கொடோம் என்ற பாடல் இதில்,

திட்டமிட்டு ஆக்ர மித்துச்
சீனத்துப் போர் வெறியன்
சுட்டுச் சுட்டுக் கொன்றானடா – ரத்தம்
சோர விட்டுச் சென்றானடா (ப.255)

கவிஞர் காலக்கட்டத்தில் பொது மேடைகளில் அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று விமர்சித்துக் கொள்ளும். பொது வுடைமைக் கழகத்தில் பட்டதாரிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர் எனப் பிற அரசியல் கட்சியினர் பேசியிருப்பர் போலும். அவர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் ஓரடிச் சந்தம் என்ற இசையில் கவிஞர் "எங்கள் கட்சியில்" என்ற தலைப்பில் நீண்ட பாடல் ஒன்று பாடுகிறார். இதில் தன் கட்சியில் உள்ள பட்டதாரிகளைப் பட்டியல் இடுகிறார்.

எங்கணும் போற்றும் தங்கமணி அவர்
எம்.ஏ. பார் தானண்ணே!
பட்டங்கள் பெற்றவர் நாங்கள் தானெனப்
பகட்டித் திரிகிற தம்பிகளே! – எங்கள்
பார்வதி கிருஷ்ணன் இருவரும் எம்.ஏ
பட்டதாரிகளே கேளுங்களே – இன்னும்
நெல்லை சண்முகம் பி.ஏ.பி.எல்
நேசர் சேக்கிழார் எம்.ஏ.பி.எல்
வல்லவர் ஏ.கே. தண்டபாணியாம்
வழக்கறிஞரும் எம்.ஏ.பி.எல்
சேலம் சாமுவேல் அவரும் எம்.ஏ
சிவகாம சுந்தரி அவரும் எம்.ஏ
தோழர் ஏ.எஸ்.கே. இவரும் எம்.ஏ.
துடிப்பாய்ப் பேசும் பாண்டியன் எம்.ஏ

வீரராகவன் பி.ஏ.பி.எல்
வெங்கட் ராமன் பி.ஏ.பி.எல்
ஈரோடு கிருஷ்ணன் பி.ஏ.பி.எல்
இளைஞர் சங்கரன் பி.ஏ.பி.எல்
திருச்சி உமாநாத் அவரும் பி.ஏ
திரைப்படக் கலைஞர் முகவையும் பி.ஏ
கருத்தொரு மித்துச் சிறைக்களம் புகுந்த
கமலா ராமசாமி இருவரும் பி.ஏ
கண்ணபிரான் எல்.எம்.பி. டாக்டர்
அண்ணாஜி எல்.எம்.பி.
இன்னும் எத்தனை பட்டதாரிகள்
எடுத்துச் சொன்னால் பட்டியல் நீளும்

(பக்.127-128)

என்ற இப்பாடல்வழி நையாண்டி, ஏளனம், அங்கதம், நகைச்சுவை எனப் பலவிதமான உணர்வுகளை உள்ளடக்கி உள்ளதைக் காணலாம். இத்தகு சுவைகளைத் தருவதோடு பொதுவுடைமை இயக்கத்தில் போர்வாளாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்கள் பற்றி நாம் அறிய வாய்ப்பாக அமைவதையும் காணலாம்.

முடிவுரை

தேசிய இயக்கத்தில் பங்கேற்றுத் தன்னை ஒரு சிறந்த இந்தியன் எனப் பலரும் பாராட்டும்படித் தனது பயணத்தைத் தொடங்கிய கவிஞர் திருமூர்த்தி மார்க்சியத்தில் கொண்ட ஈடுபாடு, வர்க்க முரணை அகற்ற அவர் எழுத்து மூலம் ஆற்றிய அருந்தொண்டு ஆகியன அவரை மார்க்சியக் கவிஞராக, மனிதநேயம் மிக்க கவிஞராக உயர்த்துகின்றன.

இத்தகைய கவிஞன் இலை மறைத்த கனியாய், குன்று மறைத்த நிலவாய் இருந்திடக் காரணம் அவர் மேற்கொண்ட கட்சியின் கட்டுப்பாடுகளே எனலாம். அன்றைய காலக் கட்டத்தில் திரைப்படம் எல்லாராலும் போற்றப்பட்டது. ஆனால், மார்க்சியும் அவ்வூடகத்தை அவ்வளவாக மதிக்கவில்லை. தோழர்களுக்குத் தொண்டு செய்வதையே முக்கியப் பணியாகக் கொண்ட கவிஞர், வர்க்க முரணை அகற்றப் பாட்டாளி மக்களை ஒருங்கிணைப்பதிலேயே பெருங்கவனம் செலுத்தியதால்

தன்புகழை ஊர் அறியச் செய்ய அவர் அக்கறை காட்டவில்லை. அதற்கு இயக்கமும் முயலவில்லை. கால வெள்ளத்தின் ஆற்றல் கூட இதற்கொரு காரணமாக அமைந்திருக்கக் கூடும் எனலாம்.

எனினும் இம்மக்கள் கவிஞன் செங்கொடி பட்டொளி வீசிப் பறப்பதுபோல, மார்க்சியம் என்ற தத்துவம் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்பதுபோல, இவர் புகழும் நீடு நிலைத்திருக்கும் என்றால் அது மிகையாகாது. இக்கருத்திற்குத் துணைசேர்க்கும் வகையில் இந்நூலின்கண் அமைந்துள்ள மார்க்சியக் கட்சித் தலைவர் ஆர். நல்லக் கண்ணுவின் அணிந்துரை, தோழர் ஆர். பார்த்தசாரதியின் முன்னுரை, மற்றும் கே.வி. ராமசாமியின் “பாமரக் கவிஞர் திருமூர்த்தி என்ற வாழ்த்துரை" ஆகியன துணைசெய்வன என்றால் மிகையாகாது.

மூல நூல்

சங்கை வேலவன் (தொகுப்பாசிரியர்) **கவிஞர் வெ.நா. திருமூர்த்தி பாடல்கள்**, என்.சி.பி.எச்., சென்னை, 1986

க.நா.சு.

நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், நாடக ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், இலக்கியத் திறனாய்வாளர், விமர்சகர் என்ற பன்முகத்தோடு அறியப்பட்ட க.நா.சு. என்னும் தமிழறிஞரை, ‘கவிஞர்’ என்ற முகத்தோடு காண்பதாக அமைவதே இக்கட்டுரை.

க.நா.சு.

கந்தாடை நாராயணசுவாமி சுப்ரமண்யம் என்னும் க.நா.சு. நாராயணசாமியின் மகனாக 1912ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி பிறந்தார். இவர் சுவாமிமலையில் பிறந்தார் என்றும் வலங்கைமானில் பிறந்தார் என்றும் இரண்டு விதமான கருத்துகள் இருப்பதாகக் குறிக்கின்றனர் (ப.6). கந்தாடை என்பது இவரின் குடும்பச் சிறப்புப் பெயர்.

இலக்கிய விமர்சகரான இவர் பலரின் விமர்சனத்திற்கும் ஆளானவர்.

> க.நா.சு.வைப் பற்றிக் காய்தல், உவத்தல் இன்றி ஒரு கருத்தை யாராலும் சொல்ல இயலாது. காரணம், க.நா.சு. புகழ்ந்து கொண்டே இருப்பவரும் அல்ல. இகழ்ந்து கொண்டே இருப்பவரும் அல்ல[1]

என்கிறார் தஞ்சை பிரகாஷ். அன்றைய நிலையில் க.நா.சு.விற்கு இலக்கிய உலகில் வழங்கப்பட்ட இடம் பற்றி அவரே கீழ்க்கண்டவாறு கவிதை புனைகிறார்.

பிறருக்கு உகக்காததைச்
சொன்னவருக் கென்று
ஒரு தனி நரகம் உண்டானால்
அங்குதான் நான்
போவேன். (ப.71)

க.நா.சு.வின் படைப்புகளாகச் சுமார் இருபது நாவல்களும், நான்கு சிறுகதைத் தொகுப்புகளும், பதினான்கு மொழிபெயர்ப்பு நாவல்களும், ஐந்து மொழிபெயர்ப்புச் சிறுகதைகளும், மூன்று விமர்சன நூல்களும், நான்கு நாடகங்களும், ஒரு கவிதை நாடகமும் மற்றும் 'மயன் கவிதைகள்' என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளன. இவற்றில், க.நா.சு. கவிதைகள் என்ற முதல் கவிதைத் தொகுப்பு 1986ம் ஆண்டு மார்ச் 16ம் தேதி சிட்டாடல் வெளியீடாக வெளிவந்துள்ளது. இது பதினான்கு கவிதைகள் அடங்கிய சிறு தொகுப்பு. சந்தியா பதிப்பகத்தாரால் 2002இல் வெளியிடப்பட்ட 'கநா.சு. கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பு இக்கட்டுரைக்குக் களமாக அமைகிறது. இத்தொகுப்பில் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்ட, பல்வேறு இதழ்களில் வெளியான சுமார் 93 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

முதல் கவிதையும் இடைவெளியும்

க.நா.சு.வின் முதல் கவிதை 'மணப்பெண்' என்பது. இக்கவிதை 14-05-1939ஆம் ஆண்டு சூறாவளியில் வெளியாயிற்று. இக்கவிதை மணவறைக்குப் போகும் தம்பதியரை வாழ்த்துவதாக அமைந்தது. மணப்பெண் கவிதை வெளியாகிச் சுமார் இருபது ஆண்டுகள் க.நா.சு.வின் கவிதை எதுவும் வெளிவரவில்லை. இதற்குக் காரணம், புதுக்கவிதைக்கும் மரபுக்கவிதைக்குமான வேறுபாட்டை அவரால் வரையறுத்துக் கொள்ள முடியாமையே என்பதை அறிய முடிகிறது. மேலும், புதுக்கவிதையில் இலக்கணக் கூறுகளை ஏற்பதா விலக்குவதா என்பதில் அவருக்கிருந்த குழப்பமும் இந்த நீண்ட இடைவெளிக்குக் காரணமாக அமைந்தது எனலாம். இந்தக் குழப்பத்திற்கு விடைகாணப் பாலபாரதி ச.து. சுப்பிரமணிய யோகியாரைச் சந்தித்து விவாதிக்கிறார்.

> எப்படி என்ன எழுதினாலும் அதை யாப்பிலக்கணப்படி தரம் சொல்லிப் பார்த்துக் கொள்ள முடியும் என்றும், கவிதைக்கு மொழி என்பது ஒரு வாகனந்தான் என்றும், யாப்பைக் கண்டு கவிதை பயந்த காலம் போய்விட்டது. இனி, யாப்புதான் பயப்பட்டாக வேண்டும் (ப. 30)

என்றும் ச.து.சு. யோகியார் விளக்கமளிக்கிறார். அன்றிலிருந்து க.நா.சு. புதுப்புதுக் கவிதை புனையலானார். ஆனால், நாவல் எழுதுவதிலும், மொழிபெயர்ப்பதிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதே கவிதையில் நீண்ட இடைவெளிக்கான காரணம் என்கிறார் க.நா.சு.

ஆரம்பக் காலத்தில் புதுக்கவிதையை ஏற்பார் எவரு மில்லை. இலக்கணமில்லாதவை எவையும் கவிதையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காலப்போக்கில் இத்தன்மை சிறிது சிறிதாக மாறியது. பின்னர்ப் புற்றீசல் போலப் புதுக்கவிஞர்கள் தோன்றலாயினர். அதற்கு ஆரம்பக் காலப் புதுக்கவிஞர்களின் விடாமுயற்சியே காரணம் எனலாம். எண்பதுகளில் புதுக்கவிதையின் தன்மை குறித்து க.நா.சு. குறிப்பிடுகையில்,

> *1985இல் கவிதை எழுத நினைப்பவன் ஒரு விதத்தில் அசட்டுப் பட்டம் கட்டிக்கொள்ளத் தயாராக இருப்பவன்தான். கவிதை பத்திரிகைத் துணுக்குகளாகவும், அரசியல் கமெண்ட்களாகவும், சினிமா ரெட்டை அர்த்தங்களாகவும் உருப்பெற்றபின் கவிதை எழுத நினைப்பது ஒரு விதத்தில் தவறு என்றுதான் சொல்ல வேண்டும் (ப.21)*

என்ற ஆதங்கத்தினை வெளிப்படுத்துகிறார்.

> *1958இல் சரஸ்வதியில் 'மின்னல் கீற்று' என்ற கவிதையை அவர் எழுதியிருக்கிறார். இதைத் தொடர்ந்து 1959இல் எழுத்து-விலும், 1972இல் கசடதபற-விலும் எழுதினார். இடையில் அவர் நடத்தி வந்த இலக்கிய வட்டத்தில் சில கவிதைகளை வெளியிட்டார். 1974இல் நாற்றங்கால் என்ற தொகுப்புக்கு இரண்டு கவிதைகள் தந்தார். இதற்குப் பிறகு அவரது கவிதைகளைக் கால அடிப்படையில் வரிசைப் படுத்த வாய்ப்பில்லாமல் போய்விட்டது (ப.9)*

என்கிறார் ஞானக்கூத்தன். இவ்வாறு இதழ்களில் வெளிவந்த, வெளிவராத கவிதைகளின் தொகுப்பாக விளங்குகிறது 'க.நா.சு. கவிதைகள்' என்ற இந்நூல்.

கவிதையில் தனித்தன்மை

மேலைநாட்டுக் கவிதைகளையும் கவிஞர்களையும் க.நா.சு. தனக்கு நன்கு அறிமுகப்படுத்தி வைத்திருந்தார் என்றாலும்

அவர்களை மேற்கோள் காட்டவோ, பாரதியைப்போல மேலைநாட்டுக் கவிஞர்களின் தாசனாகத் (ஷெல்லி தாசன்) தன்னை அடையாளம் காட்டவோ முனையவில்லை. இது பற்றிக் க.நா.சு. குறிப்பிடுகையில்,

> ஆங்கிலத்தில் free verse என்று சொல்லப்பட்டதற்குச் சரியான பதம் வசன கவிதை என்றுதான் நாங்கள் எல்லோரும் எண்ணியிருந்த ஒரு காரியம். பிச்சமூர்த்தி, கு.ப.ரா., புதுமைப்பித்தன் எல்லோருமே வசனகவிதை என்றுதான் அப்போது அதைக் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஓரளவுக்கு முன்மாதிரியாகத் தமிழில் பாரதியாரின் காட்சிகளும் ஆங்கிலத்தில் Walt Whitman கவிதைகளும் பயன்பட்டன. T.S. Eliot பற்றிய விமர்சனப் போக்கிலும் ஈடுபாடு உண்டுதான். ஆனால் T.S. Eliot செய்து கொண்டிருந்த முயற்சிகளை ஒட்டித் தமிழில் ஏதாவது செய்யவேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டதில்லை. இதற்குக் காரணம் பல சொல்லலாம். இந்த நால்வரும் (என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்) தனித்துவம் உடையவர்கள்(ப. 30).

என்று குறிப்பிடுகிறார். அவரின் இந்தத் தன்விளக்கத்தை மெய்ப்பிக்கும் வகையில் கவிதையில் புதுப்புது உத்திமுறைகளைத் தானே சோதனை முயற்சி செய்து பார்த்துள்ளதை அவர் கவிதைகள் உணர்த்துகின்றன.

> **தெருவிலே**
> **மு**
> **ப்**
> **ப**
> **து**
> **வ**
> **ரி**
> **சை**
> **க்யூவும்**
> **கூடி**
> **விட்டது**
> **காண்!**

(ப. 76)

என்று ஒரே வார்த்தையில் தனித்தனி எழுத்துகளை வரிசைப் படுத்திக் கவிதையின் அமைப்பில் காட்சியைப் புகுத்தி, புது உத்தியைக் கையாளுகிறார். மேலும், 'பிரச்னோத்ரம்' என்ற கவிதையை,

சே எங்கே போனாய்?
என்ன கண்டாய்?

ப. சென்றவிடமெல்லாம்
சொல்லி மாளுமோ!
கண்டதை எல்லாம்
விண்டு சொல்லவோ! (ப. 96)

என்று கேள்வி - பதில் வடிவில் அமைத்துப் புதுவகையான கவிதை முயற்சியை வெளிப்படுத்துகிறார். இவ்வகையான முயற்சிகள் ஆரம்பக் காலத்தில் பல்வகையான விமர்சனத்துக்கு ஆளானதை அறிய முடிகிறது. விமர்சனங்கள் பல வந்தாலும், அவற்றைப் புறந்தள்ளி, நவீன இலக்கியக் கொள்கையில் சிறிதும் மாறாமல் இவர் படைப்புகளை வெளியிட்டு வந்துள்ளார். பல இதழ்கள் இவரின் படைப்புகளை வெளியிடத் தயக்கம் காட்டியும், சரஸ்வதி, காலச்சுவடு, கசடதபற, நாற்றங்கால், எழுத்து, சூறாவளி, இலக்கிய வட்டம் போன்ற சில இதழ்கள் அவ்வப்போது இவர் படைப்புகளுக்கு இடமளித்தும் ஊக்கப்படுத்தியும் வந்துள்ளன.

புதுக்கவிதை பெயர்த்தோற்றம்

தமிழ் இலக்கிய உலகுக்கு, 'புதுக்கவிதை' என்ற பதத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கநா.சு.. வசனகவிதை என்று வழங்கிவந்ததை மாற்றிப் புதுக்கவிதை என்று அறிமுகப்படுத்தி அவ்வண்ணமே எழுதியும் வந்தார். இப்பெயர்த்தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில்,

> நான் நினைத்துப் பார்ப்பதில் புதுக்கவிதை என்கிற வார்த்தைச் சேர்க்கைக்கு ஏதோ மேதை, மேதாவித்தனம், அல்லது Special மரியாதை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வசனகவிதை என்கிற வார்த்தை போதுமானதாக இல்லை என்பதனால் 'புதுக்கவிதை' என்று 1930களில் கம்யூனிஸ்டு களிடையே வழக்கிலிருந்த New Verse என்கிற பதத்தை மொழிபெயர்த்துச் சொன்னேன் அவ்வளவுதான். பெயரில்

ஒன்றும் பிரமாதமான பாதிப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை (ப.32)

என்கிறார் க.நா.சு.. மிக அடக்கமாக இதனைக் குறிப்பிட்டாலும், மற்றப் பெயர்களெல்லாம் மறைந்து புதுக்கவிதை என்ற பெயர் மட்டும் இன்று பெருவழக்காக இருப்பது க.நா.சு.வின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று கூறலாம்.

கவிதைத் தன்மை

> *திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க, ஒருதரம் படிப்பவருக்கும் ஒரு வேகம், ஒரு எதிரொலிக்கும் தன்மை, விடாப்பிடியாக உள்ளத்தைப் பிடித்துக் கொள்ளும் ஒரு குணம் இருக்க வேண்டும் இந்தப் புதுக்கவிதையிலே என்றுதான் எண்ணுகிறேன் (ப. 27)*

என்பது க.நா.சு. அவரின் கவிதைக்கென்று வகுத்துக் கொண்ட விதியாக அமைகிறது. மேலும், கவிதை என்ற பெயரில் வருவதெல்லாம் கவிதையாகிவிடுமா? வரிகளை மடக்கிப் போட்டு, வார்த்தைகளை அடுக்கி வைத்தால் அதுதான் கவிதையா? ஒரு நல்ல கவிதை எப்போது வெளிவரும்? என்பதற்குத் தன் கவிதையில் விளக்கமளிக்கிறார் க.நா.சு.

> **கவிதை வேண்டுமானால்**
> **சொற்களைக் கூறாக்கு**
> **இசையை ஒதுக்கிவிடு**
> **உருவங்களை உயிராக்கு**
> **சிந்தனைகளை நேராக்கு** *(ப. 128)*

என்பது அவரின் கவிதை குறித்த கவிதையாக அமைகிறது.

சிறுகதை, நாவல் முதலிய இலக்கிய வடிவங்களில் உலகம் எப்படி வெளிப்படுகிறதோ அப்படி, கவிதையிலும் வெளிப்பட வேண்டும் என்பது க.நா.சு.வின் கருத்தாக இருப்பதை அறியமுடிகிறது. தனது கவிதைகளில் இத்தன்மையைப் புகுத்திக்காட்ட முயன்றிருக்கிறார். பாண்டு வாத்தியம், சினிமா வண்டி இட்லி, பால் பற்றிய குறிப்புகள், டேப்ரிகார்டர், ஏரோப்ளேன், எக்ஸ்பிரஸ் ரெயில், ஜட்கா வண்டி, கம்ப்யூட்டர் என்று காட்சிப் பொருள்களைக் கவிதையில் வார்த்தைகளாக்கி, சமகாலச் சூழலை வெளிப்படுத்துகிறார்.

எனக்கு நான் புதுக்கவிதை என்று எண்ணுவதில் அபார நம்பிக்கை. அது நிஜமாகவே கவிதையாக இருப்பதுடன் வசனத்தின் பல அம்சங்களையும் கொண்டதாக, அடைமொழிகளையும் படிமங்களையும் தேடி ஓடாததாக இருக்க வேண்டும். உணர்ச்சி என்கிற தூக்கக் கலப்பில்லாத ஒரு தாக்கத்துடன் அறிவுத் தாக்கமும் பெற்றிருந்தால்தான் கவிதை புதுக்கவிதையாகிறது என்று எண்ணுபவன் நான் (ப.21)

என்கிறார் க.நா.சு. இதில் புதுக்கவிதை குறித்த அவரின் வரையறையைத் தெளிவுபடுத்துகிறார். இத்தெளிவிற்கு அவர் ஏறக்குறைய இருபதாண்டுக் காலம் எடுத்துக்கொண்டார் என்பது இங்கு நோக்கத்தக்கது.

தாம் வாழும் சூழலைக் காட்சியாக்குவதும் அதன்வழி நிகழ்காலச் சமூகத்தைப் படம் பிடிப்பதும், அதற்கெனப் பயன்பாட்டுச் சொற்களை இட்டு நிரப்புவதும் இவர்தம் கவிதைகளில் காணமுடிகிறது.

பக்கத்து வீட்டில் ஏதோ
அல்ப சந்தோஷம்
பேரக் குழந்தை பிறந்ததோ
லாட்டரியில் பரிசு விழுந்ததோ
மூத்தமகனுக்கு வேலைதான் கிடைத்ததோ
எனக்கு எதுவும் நிச்சயமாகத் தெரியாது
ஆனால் அந்த ஆனந்தம்
என் கண்களைக் குளமாக
நிரப்புவதும் அதிசயம்தான் (ப. 137)

என்பதில் இவரின் சூழல் நோக்கும், பிறரின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும் நேயமும் அவற்றை எதார்த்த வரிகளில் வெளிப்படுத்தும் பாங்கும் காணப்படுகின்றன.

மிகவும் புழுக்கமான ஒரு நடுப்பகலில்
சடச்சட சடச்சட வென்று
நாலு தூற்றல் வீழ்ந்தவுடன் ஆஹா
ஆனந்தம், புழுக்கம் தீர்ந்தது என்று

சொல்லிக் கொண்டிருக்கும் போதே
தூற்றல் நிற்க புழுக்கம் அதிகரிக்க
ஏமாற்றமடைந்த மனசு உலகில் உள்ள
ஏமாளிகளைக் கணக்கெடுக்கிறது (ப. 54)

என்பதில் சூழலைக் காட்சியாக்கும் பாங்கும், சொற்களில் காட்சிகளைப் புகுத்தும் தன்மையும் புலப்படுகின்றன. சூழலை விளக்கியவர் இறுதி வரியைக் கவிதைத் தன்மையோடு முடிக்கிறார். இத்தன்மை இன்றைய புதுக்கவிதைகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது.

> இன்றைய என் அனுபவத்தை வார்த்தைகளால், பேச்சு வழக்கு வார்த்தைகளால் பேசும் சத்தத்தில் இலக்கியமாக்க, கவிதையாக்க முயலுகிறேன்(ப. 27)

என்ற க.நா.சு.வின் கருத்தை மெய்ப்பிப்பதாக மேற்கூறிய கவிதை அமைவதைக் காணமுடிகிறது.

வனத்திலே எங்கேயோ உள்ள
சூரியனுடன் மத்து–மத்து ஆடுகிறது
என் நிழல்
வேரடியில் தேங்கிக் கிடக்கும்
சாக்கடை நீரில் என் பிம்பத்தைக் கண்டு
வெறுப்புறுகிறேன் நான்
. . . .
என்னோடு
என் நிழலையும் சாய்க்க
உன்னால் முடியும்–

முடியுமா
என் நிழலைமட்டும்
அப்புறப் படுத்திவிட? (ப. 100)

என்பதில் தன்னை அறிந்து கொண்ட தன்மையையும், தன் சூழலைப் புரிந்து கொண்ட பாங்கையும், விமர்சனத்தை எதிர்கொள்ளும் துணிவையும் காட்டுகிறார். இக்கவிதையில் வரும் பிம்பம் என்ற குறியீடு அவரைப் பற்றிய விமர்சனமோ என்றெண்ண ஏதுவாகிறது.

கவிதையில் க.நா.சு.

நாவலோ, சிறுகதையோ, கவிதையோ அதை எழுதும் ஆசிரியரின் 'தான்' ஏதாவதொரு இடத்தில் தலைகாட்டுவது இயற்கை. அது பாத்திரத்தின் வழியாகட்டும், ஆசிரியர் வாய்மொழியாகட்டும் ஏதோ ஒன்றின் வழி இத்தன்மை வெளிப்பட்டு நிற்கிறது. க.நா.சு.வின் கவிதையைப் பொருத்த மட்டில் சில கவிதைகள் அவரின் நிலையை நேர்முகமாக வெளிக்காட்டி நிற்கின்றன. 'நான்' என்ற கவிதையில் தன் துன்பத்திற்கான காரணமாக,

காற்று வீசி வீசி கஷ்டப்படுகிறது
கடல் நீர் நிறைந்து அவதியுறுகிறது
நெருப்போ எரிந்து எரிந்து கஷ்டப்படுகிறது
நான் கஷ்டப்படுவதோ – எனக்கு ஒரு தனிப்பெயர் ஏற்பட்டு
விட்டதனாலே தான் (ப. 124)

என்பதைக் குறிப்பிடுகிறார். மேலும், 'நீதிக்கிளி', 'கூஃபி', 'உயில்', 'நினைவுச் சுவடு', 'பரம்பரை', 'ஒருதலைப்பட்சம்' போன்ற கவிதைகளில் கவிஞரின் தன்முனைப்பு வெளிப்பட்டு நிற்கிறது.

பல்வேறு தன்மைகள்

க.நா.சு.வின் பல கவிதைகள் நகைச்சுவை உணர்வோடும், அதே வேளையில் சமூகச் சூழலை, சிக்கலைச் சுட்டுவதாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும், சித்தர் பாடல்களைப் போன்று தத்துவார்த்தம் நிறைந்ததாகவும், மூடநம்பிக்கைகளைச் சுட்டுவதாகவும், இயற்கை அழகிற்கு இடமளிப்பதாவும் அமைகின்றன.

ஓ! ஓ! ஓ! ஓ!
இவனுக்குத் தேச பக்தி
நிறைய உண்டு. தேசத்தை
விற்கும்போது
நல்லவிலை போகும்படிப்
பார்த்துக் கொள்வான்
இவனுக்குத் தேசபக்தி
நி–றை–ய வுண்டு
ஓ! ஓ! ஓ! ஓ! (ப.41)

என்ற கவிதையில் நகைச்சுவை உணர்வு இழையோடுவதையும், சமூகச் சீர்கேடு சுட்டப்படுவதையும் அறியலாம்.

அரசமரம் சுற்றி வந்து
அடிவயிற்றைத் தொட்டும் பார்க்கும்
பாவனையாய் (ப. 131)

என்பதில் மூடநம்பிக்கையை நகைச்சுவையோடு சுட்டுகிறார்.

மரங்கள் துளிர்க்கும் ஓசை, பூக்கள்
பூக்கும் ஓசை, புழுக்கள் காலை உணவு
அருந்தும் ஓசை – இப்பேரிரைச்சலில்
என் சிந்தனைத் தேர் ஓட மறுத்துக்
கிறீச்சிட்டு அசைந்தாடி நின்று அதிர்
வேட்டும் உலுக்குமரமும் கேட்கிறது (ப. 60)

என்பதில், இயற்கையை எதார்த்தத்திற்கு அப்பாற்பட்டுக் கற்பனை செய்து பார்க்கும் கவித்துவத்தைக் காண முடிகிறது.

பக்திப்
பொய்யை
மெய்
என்று
நம்பி–
எத்தித்
திரிந்து
எடுத்
தோதி
ஓதியவர்
பெரியவர்
காண் *(ப. 79)*

எனவரும் 'ஆ' என்று முடியும் கவிதையில், கவிதை, கருத்தில் சித்தர் பாடல்களைப் போன்றுள்ளது. இதில், காயகல்பம், அருவம், உருவம், மோனம், அலை, ஜலம், பாம்பு, பழுது எனப் பலவகைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கவிதையும் க.நா.சு.வும்

> இருபதாம் நூற்றாண்டுப் படைப்பாளிகளில் கவிதைக்கு நிகழ்ந்து கொண்டிருந்த சிக்கல்களை அறிந்தவர்களில் பாரதி, பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், க.நா.சு. இவர்கள்தான் முக்கியமானவர்கள். அடுத்த நூற்றாண்டின் இரட்டைக் கதவு மூடிக்கிடந்ததை அறிந்தவர் பாரதி. அதைத் திறக்க முயன்றதில் அது சற்றுத் திறந்து கொண்டு இடைவெளி காட்டியது. பிச்சமூர்த்தி முயன்றதில் அது திறந்து கொண்டது. ஆனால் முழுமையாகத் திறந்து கொண்டு விடவில்லை. அவரே கூட அது முன்போல மூட வருகிறதா என்று பார்த்தார். ஆனால் க.நா.சு. வோ கதவை நன்றாகத் திறந்ததோடல்லாமல் கதவின் இரண்டு பக்கங்களையும் பெயர்த்து அப்புறப்படுத்திவிட்டார். (ப.11)

என்ற ஞானக்கூத்தனின் கருத்தை, 'க.நா.சு.வின் கவிதைகள்' மெய்ப்பிக்கின்றன. புதுக்கவிதை என்ற ஒரு பதத்தினைத் தானே உருவாக்கியதோடு, அதனை நிலைபெறச் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சிகளின் தடங்களாக அவரின் கவிதைகள் அமைந்துள்ளன.

க.நா.சு.வின் ஆரம்பக் காலக் கவிதைக்கும் பிற்காலக் கவிதைக்குமான வேறுபாட்டினைக் கவிதைகள் நன்கு வெளிக்காட்டுகின்றன. ஆரம்பக் காலக் கவிதைகளை வசனமாக அமைத்திருப்பதையும், பிற்காலக் கவிதைகளில் புதுப்புது உத்தி முறைகளைப் புகுத்தியிருப்பதையும் உணரமுடிகிறது. அதே வேளையில் 'வைகுண்டம்' 'பட்டிமன்றம்' போன்ற கவிதைகளில் ஒரே சொல்லைப் பிரித்து, எழுத்துகள் ஒன்றன்கீழ் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தன்மை புதுவகை முயற்சி என்றாலும், கவிதையைப் படிப்பதில், புரிந்து கொள்வதில் சிக்கலைக் கொடுப்பதை மறுப்பதற்கில்லை.

> வாழ்க்கை, சிக்கல் நிறைந்ததாக இருப்பது போலவே என் கவிதையும் சிக்கலும் சிடுக்கும் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. தெளிவு தொனிக்க வேண்டும். ஆனால் சிக்கல் விடுவிக்கக் கூடாததாகவும் இருக்க வேண்டும். கவிதை நயம் எது என்று எடுத்துச்

சொல்லக் கூடாததாக இருக்க வேண்டும். புரியவில்லை போல இருக்க வேண்டும். அதே சமயம் பூராவும் புரியாமலும் இருந்துவிடக்கூடாது (ப. 27)

என்ற க.நா.சு.வின் கருத்து மேற்கூறிய புதுவகை முயற்சியின் விளைவே எனலாம். மேலும், நவீன இலக்கியவாதி என்ற பெயரைத் தக்கவைத்துக்கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சியாகவும் இதை எண்ணத் தோன்றுகிறது.

பரம்பரை பரம்பரையாக வந்த தொழிலில்
தலைமுறை தலைமுறையாக வளர்த்த கலை
அற்புதமான நெசவு என்று
பட்டாடைகளைச் சுமந்து
இங்கு வந்தாயே முட்டாள்!
இங்கு ஒருவரும்
கோவணம் கூடக் கட்டுவதில்லை
என்று தெரியவில்லையா
உனக்கு? (ப. 151)

என்ற க.நா.சு.வின் கவிதை பட்டாடையைப் பற்றியது என்றாலும், அவர் காலத்தில் அவரின் இலக்கியத்திற்குக் கொடுக்கப்பட்ட மதிப்பையே உணர்த்தி நிற்பதாகத் தோன்றுகிறது. விமர்சனங் களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில், க.நா.சு.வின் கவிதைகள் இன்றைய புதுக்கவிஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டலாகவும், புதுக்கவிதைக்கான பாதையை வகுத்துக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளதை மறுப்பதற்கில்லை.

அடிக்குறிப்புகள்

1. க.நா. சுப்ரமண்யம், ப. 36.

மூலநூல்

க.நா.சு. கவிதைகள், சந்தியா பதிப்பகம், சென்னை, 2002.

துணை நூல்கள்

1. க.நா. சுப்ரமண்யம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 2001.
2. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம், கும்பகோணம், 1999.

பூரணி

அறிமுகம்

சம்பூர்ணம் அம்மாள் என்னும் பூரணி, 15 வயது முதல் 90 வயது வரை எழுதிய சுமார் 65 பாடல்களின் தொகுப்பாகக் காலச்சுவடு பதிப்பகம் 2003இல் வெளியிட்ட நூல் 'பூரணி கவிதைகள்'. நூலின் தலைப்புப் பக்கம் 1929 முதல் 2003 வரை என இக்காலக்கட்டத்தைச் சுட்டியமையால் பெரும்பான்மையான காலம் 20ஆம் நூற்றாண்டில் அமைந்தமை தெரிகிறது. நூலின் உள்ளடக்கம், கவிதைகளை ஆண்டு வாரியாக வரிசைப்படுத்தி, 60 பக்கங்களில் முன் நூற்றாண்டுக் கவிதையாக்கங்களையும், 30 பக்கங்களில் 21ஆம் நூற்றாண்டின் ஆக்கங்களையும் அமைத்துள்ளது. இப்படைப்புக் கவிதைகளுடன், கபீர் கவிதைகளின் மொழிபெயர்ப்பும் சுமார் எட்டுப் பக்கங்களில் அமைந்து, முன் நூற்றாண்டுப் பகுதிக்கு உரியதாகின்றது. 'நூற்றுக்கணக்கான கவிதைகள், கதைகள், வாழ்க்கைக் குறிப்பு, சந்தித்த மனிதர்கள் பற்றிய கருத்துகள் என்று இன்றுவரை தொடர்ந்து பதிவு செய்து வருவதில்' (15), இது ஒரு பகுதி மட்டுமே எனத் தெரிகிறது.

வாழ்வும் கவியாக்கமும்

ஆசிரியரைப் பற்றி அறிய, இந்நூலின் 'முன்னுரையே' களமாக அமைகின்றது. 'நன்றி'(4) 'நானும் என் எழுத்தும்' (7-12) என ஆசிரியர் அமைத்துள்ளனவும், 'அன்னையைப் பற்றி' (13-17) என மகளும் கவிஞருமான கிருஷாங்கினி எழுதியனவும், தொடர்ந்து அம்பை கூறுவனவுமாக (17-21) இக்களம் விரிகின்றது. தமிழிலக்கிய வரலாறு/ இருபதாம் நூற்றாண்டுக் கவிதை வரலாறு என்ற பார்வையில் இவர் இதுவரை உட்பட்டதாகத் தெரியவில்லை.

இவர் வாழ்வியலும் கவிதைச் சூழலும் ஒன்றையொன்று சார்ந்து அமைந்துள்ளன.

பழனியில் பிறந்தார். தந்தை தமிழ் வித்துவான். பழனி ஹைஸ்கூலில் பெரிய வகுப்புகளுக்குப் பாடம் நடத்துவார் (சிறிய வகுப்புக்குப் பாடம் நடத்த மற்றொருவர் இருந்தார்). நடுத்தரக் குடும்பம். 'சரஸ்வதி கடாக்ஷம்' நிறைந்தது. தாயார் தமிழ்ப் பாடல்களுக்குப் 'பதம் பிரித்து அர்த்தம் சொல்லும்' அளவு திறன் படைத்தவர். பூரணி, ஐந்தாம் வகுப்பு வரை கற்றார். புத்தகம் படிக்கும் ஆர்வமுடையவராதலால் பல நூல்களை வாசித்தார். பதின்மூன்று வயதில் திருமணமாகிப் பதினைந்து வயதில் தாராபுரத்தில் கணவன் இல்லத்தில் வாழ ஆரம்பித்தார். ஐந்து சகோதரருடைய அக்குடும்பத்தினர் உணவகம் நடத்தி வந்தனர். கூட்டுக் குடும்பம். இரு மூத்த சகோதரரின் மனைவியர் இருந்தனர். மாமனார் மாமியார் இல்லை. புகுந்த வீட்டில் படிக்க எந்த நூலும் கிடைக்காததால் ஏற்பட்ட மன அழுத்த வடிகாலாகப் பாடல் எழுத ஆரம்பித்தார். கவிஞர் கூறுகிறார்:

> அன்று தான் நான் கவிஞராகப் பிறப்பெடுத்தேன் என்று எண்ணுகிறேன். நான் என் மன உளைச்சலையும் வேதனையையும் பாட்டின் மூலம் வெளிப்படுத்த விரும்பவில்லை. பக்திப் பாடல்களும் எழுத முயலவில்லை. என் மனத்தை ஈர்த்த ஏதேதோ விஷயங்களைப் பாட்டாக்கினேன் (8).

எனினும், புத்தகம் படிக்கும் ஆர்வம் தொடர்ந்ததால், கணவனிடம் தெரிவிக்க, 'தமிழ்நாடு' நாளிதழ் வாங்கப்பட்டதோடு, மாத வாரப் பத்திரிகைக்குச் சந்தா கட்டப்பட்டது; வாசக சாலைக்குப் பணம் கட்டிப் புத்தகங்கள் எடுத்துவரப்பெற்றன. படித்தார். அவற்றை மனத்தில் நிரந்தரமாகப் பதியவிட்டார்.

இவர் நோட்டுப் புத்தகத்தில் எழுதிய கவிதைகளுக்கு முதல் வாசகராய் அமைந்தது, (பழனிக்குச் சென்ற போது) சிறு வயதுத் தோழி கௌரி. அவள் தந்தையும், பூரணியின் தந்தை மறைவுக்குப் பின் பழனிப் பள்ளியில் பெரிய வகுப்புகட்குத் தமிழாசிரியருமாக அமைந்த சுந்தரேச ஐயர், அக்கவிதைகளைத் தானும் படித்ததுடன் அவற்றைப் பாராட்டியும் பேசினார். பழனிப் பள்ளியில் வரலாற்று ஆசிரியராகவிருந்த பூரணியின்

தமையனார் இதனைக் கேள்வியுற்று, கவிதைகளைப் படித்ததுடன் அவற்றின் சிறப்பைப் புரிந்து, பாராட்டி, தான், மாணவர்களை வைத்து நடத்தும் நாடகத்துக்குப் பாட்டெழுதித் தரவும் பூரணியைக் கேட்டுக்கொண்டார். இவ்வாறு, தன்னிறைவுக்காகக் கவிதையெழுதுதல் எனும் காலக்கட்டத்தைத் தொடர்ந்து பிறர் வேண்டுகோளுக்கும் எழுதும் புதிய பரிமாணம் ஏற்பட்டது.

அக்காலத்தில், ஐந்து நாட்கள் நடக்கும் திருமணங்களில் பெண்கள் பலப் பாடல்களைப் பாடும் வழக்கம் இருந்ததால், அவற்றில் புதுமை செய்ய விரும்பிய கவிஞர் நலங்கு, ஊஞ்சல் பாடல்களை எழுதி, பாடும் பெண்களுக்குக் கற்பித்துப் பாடச் செய்தார். அப்பாடல்கள் தமிழகமெங்கும் பரவலான வழக்குப் பெற்றன. பள்ளி ஆசிரியர் பலருடைய கோரிக்கைக்கு ஏற்ப, ஆண்டு விழாக்களுக்குக் கும்மி, கோலாட்டப் பாடல்கள், வில்லுப்பாட்டுகள் எழுதி அளித்தார். 1954இல் இவரும் பிற மகளிருமாகத் தோற்றுவித்த 'பாரத மாதா மாதர் சங்க' சுதந்தரத் தின விழாவுக்குக் கொடி வணக்கம், கும்மி ஆகியனவும் 'இந்திய சுதந்திர வரலாறு' எனும் வில்லுப்பாட்டும் இயற்றி மேடையேற்றச் செய்தார். தேசியப் பாடல்களியற்றும் காலக்கட்டமாக இது அமைந்தது.

இவருக்கு ஒன்பது குழந்தைகள். எட்டாவது கிருஷாங்கினி. குழந்தை கவனிப்பு, இல்லப்பணி என்பனவற்றுக்கிடையிலும் கவிதை புனையவும் நூல்கள் படிக்கவும் நேரம் ஒதுக்கிக் கொண்டார். இந்தி மொழி கற்றதுடன், 1938 முதல் இலவசமாகப் பெண்களுக்கு அம்மொழி பயிற்றி, இந்திப் பிரசார் சபாவின் தேர்வுகட்கும் அனுப்பி, நல்ல முடிவுகளைப் பெற்றார். கபீர் பாடல்களை மொழிபெயர்க்க, இங்கு அடித்தளம் அமைகின்றது.

கணவரின் வணிகத்தில் ஏற்பட்ட சரிவு, தொடர்ந்த வறுமை போன்ற சூழல்கள் இவரைத் தளரவிடவில்லை. 1967க்குப் பின் சென்னை வந்து வாழ்ந்த காலக்கட்டத்தில் கவி அரங்குகளில் கலந்து கொள்ளல் - பரிசு பெறல், பத்திரிகையில் கவிதை வெளியிடல் என்பன அமைந்தன. இருபதாம் நூற்றாண்டின் இவ் இறுதிக் காலப்பகுதியில், பெண்ணியச் சிந்தனை இவர் கவிதைகளில் இடம்பெறுகின்றது.

இந்நூற்றாண்டுக் கவிதைகள் (21-ஆம் நூற்றாண்டு) உடன் காலச் சிக்கல்களை, சிந்தனைகளை முன்னிறுத்துகின்றன. கண்பார்வை மங்கி, முதுமை ஏற்பட்டுள்ளபோதும் நினைவாற்றலும் எழுதும் திறனும் கொண்டமைகிறார்.

கவிதைப் பாகுபாடு

கவிஞரின் கூற்றுப்படி, அவர் மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் ஆக்குகின்றார். நீண்ட காலப்பகுதிக்குரிய படைப்புகளாகையால் அவை ஒரே வகைப்பாட்டில் அடங்குவன அல்ல:

> நான் சின்ன வயசிலே இருந்தே பாட்டெழுதறேன். அப்போ எல்லாம் மரபோடே தான் எழுதற வழக்கம். இப்போ புதுக்கவிதை. மரபு தேவையில்லை. நான் ரெண்டு விதமும் எழுதி இருக்கேன். மனசுலே ஒரு உத்வேகமும் கையிலே பேப்பரும் பேனாவும் இருந்தால் பாட்டெழுதி விடலாம்... இந்தப் புத்தகத்திலே என்னோட 15 வயசுலேருந்து இப்போ தொண்ணூறு வயசு வரையுமான கவிதைகள் எடம் பெற்றிருக்கும். அதனாலே இது கொஞ்சம் வித்தியாசமான புத்தகமாக அமஞ்சிருக்கும் என நெனைக்கறேன். (4 - 'நன்றி')

மரபுடன் எழுதியதாகக் கூறுவதால் பா, பாவகை, பாஇனம் என இவர் படைப்புகளை அணுகலாம் எனக் கருதின், அது முழுமையாகப் பொருந்தி வருமெனக் கூறவியலாது. சில விருத்த வடிவங்கள், தாழிசை, நாட்டுப்புறப் பாடல் வடிவம் (மெட்டு), இசை / கீர்த்தனைப் பாடல்களின் வடிவம் (மெட்டு), எதுகை, மோனை வருகை, கவிஞர் வாழ்வின் தொடக்க காலங்களில் பரவலாகப் பாடப்பட்டு வந்த பாரதி பாடல்களின் வடிவ அமைப்பு என்பன செல்வாக்குக் கொண்டமை வெளிப்படுகின்றன.

மரபு யாப்புடன் கவிதையெழுதும்போது பெரும்பாலும் எதுகை, மோனை, இயைபு போன்ற தொடையமைப்புகளுடன் ஆக்குவது காணப்படுகிறது. மாலை முரசில் (29-4-72) வெளியான ஐந்து விருத்தங்களுடைய 'நதி' சான்றாகும்.

அதன் முதல் கவி,

மலைமகளே குளிர் உடலால்
உலகம் உய்ய வேண்டி

நிலை இறங்கிக் கலகலத்து
தரை அடைந்து ஓடி
கிளை பலவாய் உருவெடுத்து
காடு வனம் தேடி
அலைவது ஏன் பயம் உனையே
அண்ட வில்லை யோடி (76)

1965-67 காலக்கட்டத்திற்குரிய பாடலுளொன்றாக அமையும் 'ஆற்றுவழி' 13 கண்ணிகளுடையது. இறுதியிரு கண்ணிகள்,

ஆடிப்பெருக்கெடுத்து அழகு நதி பாய்ந்து வரும்
ஓடிவரும் செங்குழம்பில் உருண்டு வரும் பெருமரங்கள்
ஆடிப் பெருக்கினிலே ஆற்றுவழிக் காட்சியிலே
மோடிக்குப் பாம்பெனவே மனம் நிறைந்து தனை மறக்கும்
(53)

என அமைகின்றன.

தொடக்க காலத்தில் எழுதிய கவிதைகளில் யாப்பமைப்புக்கல்ல, பாடலமைப்புக்கே முதன்மை தெரிகின்றது. கும்மி, ஓடம், முடுகு, நொண்டிச் சிந்து என வருவன நாட்டுப்புறப் பாடல் தாக்கம் கொள்கின்றன. கதை கூறல், வருணித்தல் அல்லது விவரித்தல் என்பன இவ்வமைப்பின் புலப்பாடுகளாகும். 1929இல் இயற்றிய, நொண்டிச் சிந்து வடிவில் அமையும் தமயந்தி ஸ்வயம்வரக் கும்மி (23-32), நள தமயந்தி காதல், அன்னத்தூது, மணம் என அமைந்து தனிவகை கொள்கின்றது. 15 பகுதிகளாக அமையும் இதன் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு பாடப்பட வேண்டுமென்ற 'மெட்டு'க் குறிப்பையும் கொண்டமைகிறது. 'தந்தனமடி' மெட்டு, 'ரத்ன ஊஞ்சல் ஆடினார்' மெட்டு என்பன போல் இவை அமையும்.

நாகரீக ஓடம், மகளிர் உடை, நகை, ஒப்பனை, வாழ்வியல் ஆகியவற்றை முன்காலம், இக்காலம் (அந்தக்காலம் இந்தக்காலம்) என்ற பார்வையில் விவரித்துரைக்கிறது (லாவணி என்ற அமைப்பினது போலும் இது).

பசு மஞ்சள் பூசுவது பழமையாய் போச்சு
பவுடர் முகம் தன்னில் பூசிடவும் ஆச்சு . . .

காப்புடன் கொலுசுகளும் கனத்த நகை போச்சு
கையிலே கடிகாரம் சன்ன வளை யாச்சு . . .

பெரிய கரைப் புடவைகள் பழமையாய் போச்சு
பார்டரில் பூ புதுச்சேரி சில்காச்சு ...

தண்ணீர் குடம் தூக்கும் தருணியர்கள் இப்போ
டென்னிஸ் விளையாட கிளப்புகள் உண்டாச்சு (37-38)

'போஜனப் பாட்டு' என்பதிலும் விவரித்தல் அமைகின்றது. பல வகையான உணவு வகைகளின் பட்டியல் இது. கவிதைத்தன்மை என்பது இவற்றில் முன்னிற்கவில்லை. வேடிக்கைப் பாடல் எனக் கூறத்தக்கதாக அமையினும், பல 'மாநில'ங்களையும் சுட்டி, தேசிய ஒருமைப்பாட்டு அடிநாதம் கொண்டதாகக் கருதத்தக்கது. ஒரு காலக்கட்டத்தில் கவிதை வடிவம் எத்தகைய உள்ளீட்டிற்கெல்லாம் பயன்பட்டது என்று தெரிவதற்கும் இது ஒரு பதிவாகும். பிறமொழிக் கலப்பும் பேச்சு மொழிச் சொற்களும் விலக்கப்படாமையும் கவனத்தில் கொள்ளத்தக்கன.

... பாதாம் கீர் பால்பாயாசம்
பிரமாதம் கேரளப் பிரதமன் ...
எரிசேரியுடன் புளிசேரி
எத்தனை கேரள வகைகள்
கர்னாடகா பிஸி பேளா பாத் ...
ஆந்திர அயிட்டம் பல் கண்டீர் ...
குலாப் ஜாமூன் ஹல்வா
தில்லி பாதுஷா சுருள் பூரி
தித்திக்கும் மைசூர் பாகு ......
நைசாய் உண்டிட வாரும்
கைகளைக் கழுவவும் வென்னீர்
ஹாங்கரில் கலர் கலர் டவல்கள்
காஷ்மீர் கம்பள விரிப்பு அதில்
சுவையாய் பீடா ட்ரே இருக்கு (39-40)

எனக் கேரளம் முதல் காஷ்மீர் வரை அமைகின்றன.

பாடலமைப்பில் இசை இடம் பெறுதல் என்பது இவரது தொடக்க காலக் கவிதைகளனைத்தின் இன்றியமையா இயல்பாகும். 1965க்குப் பின்புதான் பாடல் என்ற தளத்திலிருந்து கவிதை என்ற தளத்திற்கு மாறியிருக்கின்றார் எனக் கருத

முடிகிறது. இராகம், தாளம் போன்றன சுட்டப்படாவிட்டாலும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற குறிப்புகள் இல்லாவிடினும் அவ் அமைப்புப் போன்று காணப்படும் பாடல்கள் இவரிடம் அமைவதைக் கீர்த்தனை என அணுகலாம். இவற்றிலும் முன்சுட்டிய தமயந்தி ஸ்வயம் வரக் கும்மிப் பகுதிகள் போல 'மெட்டு' சுட்டப்படுதல் அங்கங்கு உண்டு. நலங்குப் பாட்டுகள் இவ்வாறமைகின்றன (33-35). தேசிய உணர்வுடனமைந்த பாடல் சிலவும் இப்பாங்குடையனவாகப் பொருந்துகின்றன. 'ஸ்ரீகண்டேசனை' மெட்டு என்ற குறிப்புகள் அமைந்த பாடல், பல்லவி, அனுபல்லவி, மூன்று சரணங்களுடன் அமைக்கப்பட்ட தோற்றமுடையது. இது,

கண்ண பிரானும் காந்தி மஹானும்
கருதிடில் ஒன்றாகும்
சிறையில் பிறந்தார் அவர்
சிறையில் இருந்தார் இவர்
சீர்தூக்கிப் பார்த்திட்டால்
பார்தனில் ஒன்றாகும் (க)

பாண்டவர் தங்கள் ராஜ்ஜியம்
பரிவுடன் அடைந்திடப்
பண்புள்ள கண்ணனவர்
இன்பமாய் உழைத்தார்
வேண்டிடும் சுயராஜ்யம்
ஆண்டிடும் இந்தியர்கள்
வீரமுடன் உழைத்த
தீரனாம் காந்தி மஹான் (க)

எனத் தொடங்கித் தொடர்கின்றது.

இந்திய விடுதலைப் போராட்ட காலமும், பாரதி கவிதைகளும் இவர் படைப்பின்மீது கொண்ட செல்வாக்கையும் கவிதை வடிவில் பார்க்க முடிகிறது. 'சங்கத் திறப்பு விழாவிற்கு முதல் மந்திரி காமராஜர் வந்திருந்தபோது பாடியது' என்ற தலைப்புக் குறிப்புடனமைந்த கவிதை, இரு மகளிர் உரையாடல் போன்றமைந்து, பாரதியின் 'இளைய பாரதத்தினாய் வா' என்ற பாடலை நினைவூட்டுகிறது. ஆசிரியரின் தன் உரையும், பாடல் சூழலைச் சுட்டுகிறது.

அது 1954ம் வருடம் என நினைக்கிறேன். அச்சமயத்தில் சென்னையில் திரு. காமராஜர் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தார். நாங்கள் பெண்கள் தாராபுரத்தில் ஒரு மாதர் சங்கம் ஏற்படுத்தினோம். அதற்கு 'பாரத மாதா மாதர் சங்கம்' என்று பெயர் சூட்டினோம். அந்தச் சங்கத்தின் திறப்பு விழாவை திரு காமராஜர் அவர்களே நேரில் வந்திருந்து நடத்தி வைத்தார் (9).

அன்புமிக்களன் ஆருயிர் தோழி வா வா வா
அனைவரும் சேர்ந்து சங்கம் வளர்ப்போம் வா வா வா
இன்பமாகவே ராட்டையில் நூற்போம் வா வா வா
இனிய தொழில் பலவே புரிந்திட வா வா வா

பெரியவர் நாளில் சங்கங்கள் உண்டோ போ போ போ
பெண்களும் வெளியே வருவதும் உண்டோ போ போ போ
சரியல்லாததைச் செய்திட மாட்டேன் என் தோழி
சமையலறையே நமது இடமே வருகிலேன் போ போ போ
(49)

எனத் தொடங்கித் தொடர்கிறது பாடல்.

மரபுப்படி எழுதியதாக அமையும் மேற்கண்ட வகைப்பாடுகள் ஒருபாலாக, புதுக்கவிதை என்ற முயற்சியில் வெளிப்படுவன பெரும்பாலும் புதிய நூற்றாண்டைச் சேர்ந்தனவாகும். அருகி ஒரு சில 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் காணப்படுகின்றன. 'கலி நீதி' அவற்றுள் ஒன்று.

அவைகள் மனிதர்கள்
அல்ல, அதனால்
இணையைப் பிரித்து
இஞ்சக்ஷன் செய்து
இனத்தைப் பெருக்கி
இலாபமடை;
நீயோ மனிதன் ஆகையால்
கருத்தடை மூலம்
குழந்தைகள் ஒழித்து
கட்டற்று
கலவியில் திளை **(82)**

கவிஞர், காலத்துக்கேற்றவாறு கவிதை வடிவப் பாகுபாட்டைக் கொள்கின்றார் எனவும், உடன் கால வடிவப் போக்கு இவரைப் பாதிக்கின்றது எனவும், புதிய முயற்சிகளுக்கு அவருடைய சிந்தனை முட்டுக்கட்டை போடுவதில்லை எனவும் இவற்றிலிருந்து தெரிகிறது.

நோக்கும் போக்கும்

பொழுதுபோக்கு, தேசியம், தன்னுணர்வு, உடன்காலச் சார்பு எனப் பொதுவாக இவர் கவிதைகளை வகுத்து அணுகலாம். இவை ஒன்றிலொன்று மயங்கியும் கலந்தும் வரக்கூடும் என்பதால் வரையறுக்கப்பட்ட பாகுபாடுகளாக அமையாமையும் உண்டு.

கும்மி, நலங்கு, ஓடம் என முன் கண்டன சில பொழுது போக்கு அம்சமுடையன. தனிப்பாடல் (போஜனப்பாட்டு), இசைப்பாடல் (நலங்குப் பாட்டு), கதை (தமயந்தி ஸ்வயம்வரம்) என்ற மூன்று வகையாக இவை புலப்படுகின்றன.

தேசியம் என்பதில் நாட்டுப்புற மெட்டு, கீர்த்தனை, கும்மி, ஓடம், தாழிசை என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. பாரதியும், காந்தியும் கவிஞரைக் கவர்ந்துள்ளனர். பாரதியின் தாக்கம் மூன்று வகையாகப் புலப்படுகின்றது. ஒன்று, 1963இல் பாரதி பற்றி எழுதிய கவிதை.

தேனை ஒத்த தமிழ் மணக்கும்
தென்னகத்திலே பிறந்து
தீங்குரலிலே கவிதை
தந்த தெங்கள் பாரதியே (51)

என அக்கவிதை தொடங்குகின்றது. மற்றொன்று, பாரதி பாடல்களின் மெட்டின் தாக்கம். தமயந்தி ஸ்வயம்வரக் கும்மியில் 4ஆம் பகுதி, 'வாழ்க திலகர் நாமம்' மெட்டு (25) என்ற குறிப்புடையது. முன்னுரைப் பகுதியிலமையும் 'கொடி வணக்கப் பாட்டு' (10), 'விடுதலை விடுதலை' என்ற பாரதியார் பாட்டு மெட்டு என்று அடைப்புக்குள் குறிப்புப் பெறுகின்றது. மூன்றாவது ஏற்கெனவே சுட்டிய வா வா வா - போ போ போ என்ற அமைப்பின் பாடல். காந்தியைப் பற்றியும் அவரது அஹிம்சை நெறி பற்றியும் 'தேசீய ஓடம்' என்பதில் பேசுகிறார் கவிஞர்.

கத்தி கோடாலி வாள், ஆயுதங்கள் இன்றி
சத்தியாகிரகம் என்ற, போரைத் தொடங்கி

சாத்வீக மாகின்ற வழிதனில் நின்று
சாந்தமாய் மறியலைச் செய்திடுவீர் என்றார் (41)

என்பன அதன் சில அடிகள். முன்சுட்டிய 'கண்ண பிரானும் காந்தி மகானும் கருதிடில் ஒன்றாகும்' எனத் தொடங்கும் இசைப் பாடலும்,

அருள் உருவாம் காந்தி
அண்ணல் நம் குருவே
ஆனந்தமுடன் அவர்
பாதமலர் பணிவோம் (44)

எனத் தொடங்கும் மற்றொரு பாடலும் காந்தி வழிபாடாகவே அமைந்து விடுகின்றன.

நாட்டுப் பற்று, விடுதலை வேட்கை என்ற பாங்கில், பாரத மாதாவையும் (48) தியாகிகளையும் நினைவுகூரும் பாடல்கள் (42, 43, 50), கொடி வணக்கம் என்பன குறிப்பிடத் தக்கன.

உலக மெங்கும் இந்தியாவின்
உயர்வு காட்டும் கொடியிது
உரிமைக்காக உயிரும் கொடுத்து
உறுதியாக வணங்குவோம் (10)

என்பது கொடிவணக்கப் பாட்டின் இறுதிக் கண்ணி

இயற்கை, புலக்காட்சிகள், அனுபவம் என்பன தன்னுணர்வாக வெளிப்படும் கவிதைகளில் குறிப்பிடத்தக்க உள்ளீடாகும். ஆற்று வழி (52), மதியம் (கோடையிலே) (55), மின்னல் (57), அலைக்குழந்தை (59), மலை (60), மாலை (73), நதி (76-77) என இயற்கையின் சொற்சித்திரங்கள் பலவாகும். உவமை, உருவகம், உருவாக்கம், முன்னிலைப்படுத்தல், தற்குறிப்பேற்றம், குறியீடு போன்ற பல வெளியீட்டுக் கூறுகள் பொருந்துவதால் இவை வெறும் வருணிக்கும் நோக்கின அல்ல எனக் கருதலாம்.

உதிர்ந்த பூவாய் மழை தூறும்
ஓசையின் கீதம் பதம் பாடும்
அதிர்ந்து தாளம் முகில் போடும்
அதிலே உன் எழில் நடமாடும் (57)

என 'மின்னல்' தெளிந்த கவிதையாவதும்;

வெறுவெளியின் சூனியத்தில்
கரிய இருள் உருவெடுக்கும்
வேய்ங்குழலின் புதர் அதனை
விசிலடித்துப் பரிகசிக்கும் (73)

என 'மாலை' 'இருண்மை'யாவதும், சான்றாகச் சுட்டத்தக்கன.

கிராமம் (54), கோலம் (56), நாதம் (72), காலை ஒலிகள் (79) எனக் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் சார்பு புலப்படுத்தி வடிக்கப்படும் புலக்காட்சிகளிலும் மேற்கண்ட கவிதை வெளியீட்டுத் தன்மைகட்கு இடனமைகின்றது. "சந்துகள்; சிறிய வீடு செந்நிற சீமை ஓடு . . ." எனத் தொடங்கி, 'எனக்கொரு பொழுது போக்காய் இவை சில நாள் இருக்கும்' (54) என முடியும் கிராமம் எனும் கவிதை.

பால் பொங்கும் பாத்திரத்தின் விசிலடிப்பு
பிரஷர் குக்கர் பதம் காட்டும் புசுபுசுப்பு
போரிங்பம்பு அடிப்பதனால் தடதடப்பு
பெண்கூட்டம் அதனடியில் சளசளப்பு (79)

எனப் பட்டியலிட்டு முடியும் 'காலை ஒலிகள்' - என்பன எந்த அளவு கவித்துவம் உடையன என்பதும், உட்பொருள் அல்லது தொனிப்பொருள் உடையனவா என்பதும் சிந்தித்தற்குரியது.

கவிஞரைப் பாதித்த சில உண்மைகளும் / அனுபவங்களும் கவிதையாக வெளிப்பட்டுள்ளன. தனிப்பாடலாக, சிறு கவிதையாக மட்டுமன்றி நீண்ட கவிதையாக, கதைக் கவிதையாகவும் வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தனிமை, அச்சம், இரக்கம், குழப்பம், எள்ளல், ஏமாற்றம், வருத்தம், கோபம் எனப் பல உணர்வுகளும் கொப்பளிப்பது முதற் பார்வையிலேயே தெரிகின்றது. கதையமைப்புடன் வரும் 'சாத்திரம் (க [தை] விதை)' (65-69) என்ற பகுதி, நதித்துறையில் நீராடும்போது கால் நழுவி மூழ்கி இறந்த முதிர் பெண்ணுக்கு, இன்னும் திருமணமாகவில்லையென்பதால், 'சாத்திரத்தில் உன்னத இடமும் இல்லை - ஆளுக்குக் கொஞ்சம் தருமக் காசு போட்டுக் கோவிந்தாக் கொள்ளியாகக் காரியம் முடிக்க வேண்டும்' எனக் கூறப்பட, 'கோமதி எந்தன் பாரி' எனக் கதைத்தலைவன் மஞ்சள் எடுத்துப் பிணத்தின் கழுத்தில் கட்டி எல்லாவற்றையும் சரிவர நடத்த ஒருப்படுவதாக்

முடிகிறது. ஆசிரியரின் கோபம் வெளிப்படினும், தெளிவான தீர்வு தரப்படவில்லை; சாத்திரத்தைப் போற்றலே அமைவதாகத் தோன்றுகிறது.

பெண்ணுக்கு விடுதலையின்மையை ஆதங்கமாகப் புலப்படுத்துகின்றார், 'பெண்' என்ற கவிதையில்.

காணியைப் போல் கால்நடைபோல்
கனக நவ ரத்தினம் போல்
ஆணினங்கள் பெண்ணினத்தை
அனுபவிக்கும் பொருளாக
எண்ணிச் செயல்படுநாள்
இருக்கு மட்டும் பெண்கள் நலன்
ஏட்டளவில் பாட்டளவில்
பேச்சளவில் தானிருக்கும் (64)

'சோகம்' எனும் கவிதை, (62) பெண்ணின் கண்ணீரைக் காவியமாக உருவகித்த போதும், பாரதி முன்மொழிந்த பெண் விடுதலை ஏற்படவில்லை.

மதம் பொருண்மயமாதலுக்குக் கவிஞர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார் (ஸத் காலட்சேபம், 83). கடன் வாங்கித் 'தீபாவளி' கொண்டாடப்படுவதைப் பதிவு செய்கிறார் (74).

உள் (தன்னுள்) நோக்கிய பார்வையாக, உள்ளம் (58), பயம் (நடு இரவில்) (70), நாதம் (72), நாகம் உறையும் (75), கானல் நீர் (78) எனும் கவிதைகள் அமைவதாகத் தோன்றுகின்றன. மேலே மலர்ச்சியும் உள்ளே இருளுமாக அமையும் நெஞ்சத்தின் படிமக் காட்சி 'நாகம் உறையும்' எனும் கவிதையில் வருகின்றது.

நெஞ்சப் பந்தலிலே
நினைவு கொடியது
பந்தல் முழுவதும்
படர்ந்து வளர்ந்து
கொல்லென மலர்ந்த
உள்ளப் பதிவொடு
கொடியது பற்றிய
பிடியொடு படர்ந்து

ஒளிதரை எட்டா
இலைகள் நெருக்கிட
மண்டிய திருளும்
பந்தலின் அடியில்
இருளொடு சருகும்
விழுந்திடும் அங்கு
கரவுடை நாகம்
உறைதலும் கூடும் *(75)*

வாழ்க்கை (61), பயணம் (80, 81) என்ற இரு கவிதைகளும் வாழ்க்கையைப் பயணமாக, உலாவாகக் குறியீட்டு நிலையில் காட்டுகின்றன.

உடன் காலக் கருத்துகளின் தாக்கம் 21ஆம் நூற்றாண்டுப் பகுதிக்குரிய கவிதைகளில் மிகுதியும் அமையினும், முன்நூற்றாண்டுப் பகுதியிலும் உண்டு. பாரதி, காந்தி, தேசியம், பெண் நிலை போன்றவற்றைக் குறிப்பாகச் சுட்டலாம்.

மொழிபெயர்ப்பு

கபீர் கவிதைகள் சிலவற்றின் மொழிபெயர்ப்பு தரப்படுவது கவிஞரை அடையாளம் காண உதவுகிறது. புதுக்கவிதையாக இவை அமைகின்றன. தடங்கலில்லாத வாசிப்புக்கு ஏற்றதாக அமைவதால் படைப்புக் கவிதை போன்ற தோற்றமுடையன. தத்துவம் தொனிக்கும் சித்தர் பாடல் போலவும், ஆழங்காணப்பட வேண்டிய குறியீட்டுக் கவிதை போலவும் பல அமைகின்றன.

அற்புத மாயை மரமம்மா அதை
அழிக்க யாருக்குத் திறனம்மா
முன்புறம் பற்றி எரியுதம்மா அதன்
பின்புறம் பச்சை தழைக்குதம்மா
வேரை வெட்டி எறிந்த பின்னும்
வேண்டிய காய்கள் காய்க்குதம்மா *(117)*

ஜீவக் கொடிகள்
மாயைப் புதரில்
சிக்கித் தவிக்கிறது அதன்
முள்ளால் கொடிகள்

சல்லடை போலத்
துளைக்கப்படுகிறது (116)

எனச் சான்று தரலாம். இவை மொழிபெயர்க்கப்பட்ட காலம், பிந்தி அமைந்தாலும் சிந்தனை ஓட்டம் முந்தியே கவிஞரில் தொனிப்பதாகத் தெரிகிறது.

நிறைவாக

கவிதை எழுதுதலை ஓர் இயல்புச் செயலாகக் கொண்ட கவிஞர் பல தடங்கலுக்கிடையேயும் தடையுறாது தொடர்ந்து எழுதிக் கவிதையெழுதுதலை ஒரு வேள்வியாகவே தொடர்ந்தது 20ஆம் நூற்றாண்டுக் கவிதையுலகில் இவருக்குத் தனித்ததொரு இடம் பெற்றுத் தந்துள்ளது எனலாம்.

> 1967இல் சென்னைக்கு இடம் பெயர்ந்த பிறகு சில கவியரங்குகளில் பங்கு கொண்டு பரிசுகளும் பெற்றிருக்கிறார். ஒன்பது கஜம் புடவையுடன் பெரியவராக அம்மாவின் சனாதனத் தோற்றம் பலருக்கு ஏளனமாக இருந்திருக்கிறது. 'சும்மா வீட்டில் இருக்க இயலாமல் கவிதையெல்லாம் எழுதிக்கொண்டு வந்து விடுகிறார்கள்' என்ற தொனியில் பேசவும் செய்திருக்கிறார்கள். இவை எதுவும் அம்மாவின் படைப்பு இயக்கத்தைத் தடை செய்தது கிடையாது (16)

என்ற கிருஷாங்கினியின் கூற்று, எழும், இளம் கவிஞர்க்கு ஊன்றுகோல். அம்பை கூறுவது போல் இவர் கவிதைகளை ஒரே மூச்சில் படிக்காது, மெல்ல மெல்லச் சுவைத்து, காலந்தோறும் அமையும் பொருண்மையின் வகைமையை உணர்வது தேவையாகும்.

மூலநூல்

பூரணி, **பூரணி கவிதைகள்** (1929 முதல் 2003 வரை) காலச்சுவடு, நாகர்கோவில், டிசம்பர் 2003 [பக். 120; விலை ரூ.60].

(அடைப்புக்குறி எண்கள், பக்க எண்கள்).

தொ.மு. சிதம்பர ரகுநாதன்

வாழ்க்கைக் குறிப்பு

தொ.மு.சிதம்பர ரகுநாதனின் தந்தை பெயர் தொண்டைமான் முத்தையா; தாய் பெயர் முத்தம்மாள். இவர் கவிதை இயற்று வதற்காக வைத்துக் கொண்ட புனைப் பெயர் திருச்சிற்றம்பலக் கவிராயர்.

பிறந்த நாள்: 20-10-1923, ஊர்: திருநெல்வேலி. இண்டர் மீடியட் கல்வியை ம.தி.தா - இந்துக் கல்லூரியில் பயிலும்போது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். (1942- வெள்ளையனே வெளியேறு). இதன் காரணமாகத் தலைமறைவு வாழ்க்கை, சிறை வாழ்க்கை போன்றன வாழ நேரிட்டது. இதனால் கல்லூரிக் கல்வியை விட்டுவிட்டு இலக்கியம், அரசியல் போன்றவற்றில் ஈடுபட்டார்.

1941 முதல் அவரது இறக்கும் காலமாக அமைந்த 31-12-2001 வரை பல வகையான இலக்கிய ஆக்கப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டார். தினமணியில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். சொந்தமாக 'சாந்தி' எனும் ஓர் இதழைத் தொடங்கி நடத்தினார். முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் செயல் தலைவராகவும், அகில இந்திய அளவில் இலக்கிய அமைப்பின் பொறுப்பாளராகவும் செயல்பட்டுள்ளார்.

இலக்கியப் படைப்புகள்

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம், இலக்கிய ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு முதலியவற்றில் மிகத் திறத்துடன் செயலாற்றினார்.

* மூன்று நாவல்கள் படைத்துள்ளார். பஞ்சும் பசியும் என்னும் நாவல் இலக்கிய வரலாற்றில் திருப்பு முனையாகவும், இவ்வகையான நாவல்கள் தோன்றுவதற்கு அடித்தளமாகவும் அமைந்துவிட்டதொரு சாதனையாகக் கருதப்படுகிறது.

* புதுமைப் பித்தன் வரலாறு (1951) எழுதியுள்ளார்.

* ஆய்வு நூல்களில் **இளங்கோவடிகள் யார்?** (சிலப்பதிகாரம் பற்றிய சமூகவியல் ஆய்வு - 1984). **புதுமைப்பித்தன் கதைகள் - சில விமர்சனங்களும் விஷமத்தனங்களும்,** முக்கியமானதாக விளங்குகின்றன.

* ஒப்பிலக்கிய நூல்கள் பல இயற்றியுள்ளார். அதில் **பாரதியும் ஷெல்லியும் (1964), கங்கையும் காவிரியும் (1966)** என்பன புகழ் பெற்றவை.

* பாரதி ஆய்வுகளில் தனித்திறத்துடன் செயலாற்றினார். **பாரதி: சிலபார்வைகள்** (1982), **பாரதி - காலமும் கருத்தும்** (1982).

* சோசலிஸ இலக்கியத்தை உலகிற்கு அளித்த மாக்சிம் கார்க்கியின் படைப்புகளைத் தமிழில் நிறைய மொழி பெயர்த்துள்ளார். இவை, **தாய், மூன்று தலைமுறைகள் 'பிரம்மச்சாரியின் டைரி** போன்றனவாகும். மேலும் பிற சோவியத் படைப்புகளையும் மொழிபெயர்த்துள்ளார்.

* இவரது படைப்புகளைப் பல பல்கலைக்கழகங்களில் பாடப்புத்தகங்களாக வைத்துள்ளனர். பலர் இவரது படைப்புகளை ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர்.

* பலதிறப்பட்ட இவரது நூல்களின் எண்ணிக்கை நாற்பதுக்கும் மேற்பட்டன.

* இவரது மொழிபெயர்ப்புப் பணியினைப் பாராட்டி 1965, 1970 ஆகிய ஆண்டுகளில் சோவியத் நாடு நேரு நினைவுப் பரிசும் பாராட்டுப் பத்திரமும் மற்றும் நேரில் அழைத்துக் கௌரவப் படுத்தலும் செய்தனர்.

* பல நிறுவனங்கள் இவரது படைப்புகளையும் பணிகளையும் பாராட்டிப் பரிசுகள் பல வழங்கியுள்ளன.

மேற்குறிப்பிட்ட துறைகளில் சிறந்து விளங்கியதோடு சில துறைகளுக்கு முன்னோடியாகவும் அமைந்தார். எனினும் அவரது கவிதைகள், அவற்றில் அவரது திறன், பங்களிப்பு என்பனவற்றைக்

கூறுவதாய் இக்கட்டுரை அமைகிறது. இவரது கவிதைப் படைப்புகள்

1. ரகுநாதன் கவிதைகள் - 1957
2. கவியரங்கக் கவிதைகள் - 1963
3. காவியப் பரிசு - 1981
4. தமிழால் ஏலாதா? - 1987

இவற்றுள் 1957ல் வெளிவந்த ரகுநாதன் கவிதைகள் என்னும் நூலும், 1963ல் வெளிவந்த கவியரங்கக் கவிதைகள் என்னும் நூலும் இக் கட்டுரைக்கு முதல் தரவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

தொழிலாளர்

உழைக்கிற மக்களின் பிரதிநிதியாக நின்று கவிஞர் இலக்கிய ஆக்கங்களைப் படைத்தவர்; பல இயக்கங்கள் கண்டவர். அவரின் பாடல்களில் உழைக்கிற மக்களின் மேன்மை பல வழிகளிலும் மாறி உளப்பாட்டுத்தன்மைப் பன்மையில் பாடும் பாடல் கீழ்வருமாறு.

காடுகளாய் மலை மேடுகளாய் எங்கும்
காணக் கிடந்த இப்பூ வுலகை
மேடு திருத்தியே சன்னலும் செந்நெலும்
விம்மி விளைந்திடச் செய்தவர் நாம்

என்றும்,

மாலையிள வெயிற் கோலத்திலே மழை
வானவில்லின் ஏழு வண்ணத்திலே
நூலை திரித்ததும் சேலைகள் நெய்ததும்
நூற்றுக்கணக்கில் குவித்ததும் நாம்

என்றும்,

கல்லையும் நீரையும் காற்றையும் தீயையும்
கண்டவர் நாம்; வெற்றி கொண்டவர் நாம்;
கொல்லவரும் பஞ்சபூதமும் எம்முனே
கும்பிட்டு வாழ்ந்திடச் செய்தவர் நாம்

என்றும்,

வையம் தழைத்திடச் செய்தவர் நாம்; புவி
வாழ்வை ஒளிபெறச் செய்தவர் நாம்,
ஐயம் திரிபு சந்தேக மின்றி உல
காளப்பிறந்தவர் நாம், அவர் நாம்!

(ரகுநாதன் கவிதைகள்,
பக். 1-2)

என்றும் பாடுகிறார். உலகில் உருவாக்கப்பட்டுள்ள நாகரிகம், பண்பாடு அனைத்தும் உழைக்கிற மக்களின் சாதனையாகக் குறிப்பிடுகிறார். அத்துடன் நில்லாது, அத்தொழிலாளர் தாழ்ந்திருக்கும் அவல நிலையை ஒழிக்காது ஓயமாட்டோம் என்னும் பொருளில் பாடுகிறார்.

திரண்ட தோளின் வலியால் – பலர்
தினம் படைக்கும் பயனைச்
சுரண்டி வாழும் சில்லோர் – தின்று
சொர்க்க வாழ்வு வாழும்
இரண்டு பட்ட தன்மை – மாறி
இன்பம் காணுமட்டும்

மருண்டு நிற்க மாட்டோம் – கண்கள்
இருண்டு நிற்க மாட்டோம்! (மேற்படி, ப. 5)

தொழிலாளர்களின் திறன், அவர்களின் போராட்டம் என்பதை மேற்குறித்த கவிதைகள் பாடுகின்றனவாயினும் தொழிலாளரின் தற்காலத்து நிலைக்குறித்து வெளிப்படுத்துகின்ற பாடல் கீழ்வருமாறு:

பண்ணை வெளியிற் பயிர் செயினும் – எங்கள்
பட்டினி தீர்ந்து தொலைந்திடுமோ?
கண்ணைக் கொடுத்து நூற்றநல் லாடை எம்
கண்ணிகர் மானத்தைக் காத்திடுமோ?
மண்ணைக் குடைந்து வாரியதங்கம் எம்
மக்கள் உணவுக் குதவிடுமோ?
எண்ணத் தொலையாத் துன்ப விருள்
என்றைக்குத் தீர்ந்து ஒளிவருமோ?

(ரகுநாதன் கவிதைகள், ப. 7)

உழைப்பின் பெருமிதமும், உழைப்பவர்களின் வாழ்க்கை அடையும் இழிநிலையும் கூறுவதாகக் கவிதையின் பொருள் அமைகிறது. கவியரங்கக் கவிதைகள் என்னும் தொகுதியிலும் இப்பொருள் நிரம்பக் கவிதை யாத்துள்ளார்.

பூமிக் கதவுடைத்துப்
புகுந்துள்ளே ஒளிசிதறும்
காமர்மணியினத்தை,
அசைந்தை, வயிரத்தை,
வாரிக் கொணர்ந்திந்த
வையம் தனிற்குவிந்தும்,
இன்ன பிற
வீரியஞ்சேர் விந்தை பல
விளைத்திட்ட மானுடத்தின்
காரியங்கள் அத்தனையும்
களிப்பூட்டும் செய்திகள்தாம்!

என்றாலும்—
ஆகாரப் பொருள்பலவும்
ஆக்கிப் படைத்தமகன்
ஏகாதசிப்பசியில்
ஏங்கித் தவிப்பதுவும்,
விண்ணிடிக்கும் மாளிகையை
விளைத்திட்ட பஞ்சைமகன்
மண்ணிடிந்த குடிசையினுள்
வறுமையிலே வாடுவதும்,
காசினியின் செல்லமெலாம்
கைத்திறமை யாற் படைத்தோன்
காசினுக்கு விதியிழந்து
கலங்கியுர் வாழுவதும்,

வேறு சிலர்—
உண்டே உறங்குவதும்,
உழைப்பின்றிச் சுகயோகம்
கண்டு, குதூகலித்துக்
களியாட்டம் ஆடுவதும்,

ஊரானின் பேருழைப்பை,
உதிரத்தை, உரிமைகளைப்
பேராசை வெறிபிடித்துப்
பிய்த்துப் பிடுங்குவதும்
சீரான வாழ்க்கையெனச்
செப்பி விடத்தகுமோ?

எனவே தான்
கொள்வாரும் கொடுப்பாரும்
குடிவாழ நல்லுலகை
கள்வாரும் பேருலகை,
இல்லாரும் உடையாரும்
இல்லாத சீருலகை,
எல்லாரும் எல்லாமும்
எய்துகின்ற எழிலுகை,
வள்ளன்மைப் பெருமைகளும்
வறுமையின்புன் சிறுமைகளும்
எள்ளளவும் இல்லாத
இனியதொரு நல்லுலகைத்
தெள்ளு தமிழ்மொழியில்
தெரிந்துரைத்தான் *(பக். 5, 6, 7)*

இதுபோன்ற பொருண்மையில் பாரதியின் மக்கள் நலச் சிந்தனையைப் பாராட்டி, 'பாரதி', 'பிணி தீர்க்கும் மருத்துவன்' 'மாநிலம் பயனுற வாழ்வதற்கே!' ஆகிய தலைப்புகளிலும் கவிதை யாத்துள்ளார். இக்கவிதைகள் கவியரங்கக் கவிதைகள் என்னும் தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

கவியரங்கக் கவிதைகள்

நவீனக் காலத்தில் அரங்கங்கள்தோறும் கவிதைகள் பாடப்பட்டு வருகின்றன. அவற்றில், அதில் தொ.மு.சி. புதிய மரபைத் தோற்றுவித்துள்ளார் எனக் கூறலாம். கம்பன், பாரதி, தாகூர் போன்ற உலகப் பெருங்கவிஞர்கள், விஞ்ஞானி, தொழிலாளி போன்ற உலகச் சிற்பிகள் கவிதைப் பொருள்களாக விளங்குகின்றனர். அதனைப் பற்றிய கவிதை:

மன்னவர்கள்
இனிய மொழி பேசல்
ஈகைக் குணம் படைத்தல்,
வினையியற்றித் தூய்மையுடன்
விழுமிய நல் வெற்றி பெறல்,
நினையுமொழி நீதிநெறி
நின்றிடுதல் என்பவற்றைக்
கனவினிலும் மறவாது
கடமைதனை ஆற்றிவிட்டால்
அழிவில்லை! அன்னவர்க்கோர்
ஆபத்து இல்லை என்றேன்!
ஆரோடும் படைக்காத
அமைதியினைக் கைக்கொண்டால்
போரொடுங்கு மல்லாது
புகழொடுங்க மாட்டாது!
வேரோடு கெட்டழியும்
வினைவந்து மூளாது!
பாராளும் மன்னவர்க்கும்
பழிவந்து சூழாது!
என்றெல்லாம் –
நேருறவே நானவர்க்கு
நெறிமுறையைக் கூறிவிட்டேன்

(கவியரங்கக் கவிதைகள், ப. 105)

இக்கவிதை கம்பனது மொழியாக மொழியப்படுகிறது. அடுத்து, பாரதியின் சிறப்பைக் கீழ்வருமாறு பாடுகிறார்.

பாரதத்து மக்களது
பல்வேறு நோய்களையும்
வேரதிரக் களைந்தெறியும்
வேட்கையினால் பாரதத்தின்
நாடித் துடிப்பை ரத்த
நாளத்தைத் தொட்டறிந்து,
ஊடுருவி, உள்ளுருவி,
உயிருருவும் பிணிபலவும்
தேடி அறிந்தவற்றைத்
தீர்க்கும் மருந்தறிந்து

பாடிவைத்த மெய்ஞ்ஞான
பண்டிதனே பாரதியார்'

(கவியரங்கக் கவிதைகள், ப. 125)

தாகூர் பற்றிய சித்திரிப்புகள் கீழே:

சிறந்ததிந்தப் பூவுலகம்!
சிருஷ்டித் தொழில் புரியப்
பிறந்ததிந்த மானிடமாம்
பெருங்கூட்டம் என்பதனைத்
திறந்தெறிந்து செப்பியதோர்
செழுங்கவிஞர் அவர்! அதனால்
துறவுநிலை பூண்டாலும்,
தொட்டரிய வொண்ணாத
இறைநிலையின் திருவுருவம்
இங்குள்ள மானிடத்தில்
உறைகின்ற உண்மையையும்
உரைத்திட்டார். கவிஞரவர்
அறைந்திட்ட திருவாக்கை
அறியோமோ நாமெல்லாம்?

(கவியரங்கக் கவிதைகள், பக். 165–166)

என்று மனிதனைப் பாடிய கவிஞர் அவர் என்று முடிக்கிறார். இல்லாத தெய்வத்தைக் கருவறையில் தேடும் மனிதரை வாழும் தெய்வாக உள்ள உழைக்கும் மனிதரைப் பார்க்கும்படிப் பணித்தவர் என்று தொ.மு.சி. கூறுகிறார்.

வரலாற்று நிகழ்வுகள்

கவிதையில் பாடப்படவேண்டிய பொருளாக இருப்பது மனிதனைப் பற்றியாகும். அவ்வாறு உள்ள வரலாற்று நிகழ்வுகளை, அதனைப் படைத்த மக்களை, தலைவரை என்று பலத்திறத்துடன் பாடுகிறார்.

சுதந்திரம், குடியரசு தினம், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இந்திய - சீனப் போர் போன்றவற்றைப் பாடுகிறார். அத்துடன் கொரிய நாட்டின் வெற்றியைப் போற்றிப் பாடுகிறார். அப்பாடல் கீழ்வருமாறு.

விலகு நீ அமெரிக்காவே!
என்றெழுந் தெழுந்து விம்மி
உலகெலாம் பரந்த மக்கள்
குலமெலாம் ஒலிக்கும் ஒற்றைக்
குலவையால் காந்திக் கொள்கை
முழங்கியே நின்னைக் காப்போம்!
அலகு கண்டொதுங்கும் பேய்போல்
போர்வெறி அழியக் காண்போம்!

(ரகுநாதன் கவிதைகள், பக். 118–119)

இப்பாடல் மானுடத்தின் வெற்றி முழக்கமாக அமைந்துள்ளது. மகாத்மாவைப் பற்றிக் கீழ் அமையும் பாடல் 'யோனி நோகுச்சி' என்னும் ஜப்பானியக் கவிஞர் பாடியது. அதை, தொ.மு.சி. மொழிபெயர்த்துள்ளார்.

பலமிலா யாக்கை: ரத்தப்
பசையிலா உடலம்; என்னில்
உலைவுறா மலையின் நெஞ்சம்
உருக்கெனக் கொண்டோன்; என்றும்
நிலைபெறும் உள்ள வன்மை
நெறியதால் உலகை யெல்லாம்
குலைவுறச் செய்யும் ஆற்றல்
கொண்டவன் காந்தி யெம்மான்

(ரகுநாதன் கவிதைகள், ப. 145)

என்று பாடுகிறார். இதில் காந்தியின் புறத்தோற்ற எளிமையும், அகத்தோற்ற வலிமையும் சிறப்புறப் பாடப்பட்டுள்ளன.

கவிதையாக்கம்

* தொ.மு.சியின் காலம் வரையிலும் உள்ள வளர்ச்சியின் அனைத்துப் பண்பாட்டையும் பாடும் வல்லமை கொண்டவராக விளங்குகிறார்.

மக்கள் எப் பண்பாட்டு மரபைக் கைக்கொள்ள வேண்டும் என்பதைச் சான்று காட்டி விளக்கப் பாடும் ஆற்றல் உள்ளவர்.

* நிகழ்காலத்து உலகச் சம்பவங்களைக் கூர்ந்து நோக்கி நிகழ்வின் சிறப்புகளைக் கவிதையாக்குகிறார்.

* தமிழ்ச் சமூகத்தின் புதிய வாழ்க்கை ஆண்மை மிக்கதாக, மாட்சிமை பொருந்தியதாக அமைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டு உழைத்துள்ளார்.

* புராணம் என்பதற்கு இலக்கணமாக "உலகின் தோற்றமும் ஊழி இறுதியும்" கூறுவது என இலக்கணப் புலவர் கூறுகின்றனர். அதுபோல நவீன உலகின் புராணத்தை மிகத் திறமுடன் பாடும் பேரிலக்கியவாதியாக உள்ளார்.

* தற்காலத்துச் சொற்களை மிக இலாவகமாகவும் பொருளாழத்துடனும் ஓசைநயத்துடனும் கூறுவதில் கைத்தேர்ந்தவராக உள்ளார்.

முருகு சுந்தரம்

முருகு சுந்தரம்

26-12-1930இல் திருச்செங்கோட்டில் முருகேச முதலியாருக்கும் பாவாய் அம்மையாருக்கும் பிறந்தவர் முருகு சுந்தரம். வீட்டின் முதற்பிள்ளையான இவருக்கு மதுரைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் முருகரத்தினமும், மருத்துவர் இளங்கோவும் உடன்பிறப்புகளாவர். தமிழாசிரியராகவும், சேலம், ஈரோடு அரசினர் மேனிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள இவர் தமிழ்ப்பணியில் தொய்வின்றித் தொடர்கிறார். இவரது மகளார் முனைவர் வனிதாமணி, செல்லம்மாள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை என்பதும் குறிப்பிடற்பாலது.

கவிதை படைத்தல், கட்டுரை வரைதல், ஆய்வு நூலாக்கல், இதழ்களில் எழுதுதல், கவியரங்குகளில் பங்கேற்றல், வானொலியில் உரையாற்றல் எனப் பலவாக விரியும் இவரது தமிழ்ப்பணி பேராசிரியர் பலராலும் பாராட்டப்படுவதாகும்.[1] மறத்தகை மகளிர் (1956) வழி இவரது எழுத்துப்பணி தொடக்கம் பெற்றுள்ளது. கடைதிறப்பு (1969) இவரின் முதல் கவிதைத் தொகுப்பாகும். தொடர்ந்து பனித்துளிகள் (1974), சந்தனப் பேழை (1975), தீர்த்தக் கரையினிலே (1983), எரிநட்சத்திரம் (1993), வெள்ளையானை (1998) எனும் கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவை தவிர இளைஞர் இலக்கியமாகப் பாட்டும் கதையும் (1965), அண்ணல் இயேசு (1985), பாரதி பிறந்தார் (1993) என்பனவற்றையும் படைத்துள்ளார். வள்ளுவர் வழியில் காந்தியம் (1960), தமிழகத்தில் குறிஞ்சிவளம் (1964), அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (1981), குயில்களும் இளவேனில்களும் (1989), பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம் (1990), புகழ் பெற்ற புதுக்கவிஞர்கள் (1993), சுரதா ஓர் ஒப்பாய்வு (1999) முதலான 18 உரைநடை நூல்களையும்

தந்துள்ளார். இவரது கவிதைப் படைப்புகளில் தேர்ந்தவற்றைத் தொகுத்துக் காவ்யா (2003) வெளியிட்டுள்ளது. அந்நூலே இக்கட்டுரைக்கு அடித்தளமாகும்.

பெருமைமிகு விருதுகள் பலவற்றைப் பெற்றுள்ள இவர்[2] தற்பொழுது 'அருவ ஓவியம்' எனும் நாடக உருவாக்கத்திலும், சாகித்திய அக்காதெமிக்காகப் பாரதிதாசன் வாழ்க்கை வரலாற்றை வரைவதிலும் முனைந்துள்ளார் (தகவல் உதவி - முனைவர் வனிதாமணி). இவர் தம் படைப்புப் பற்றி,

பாரதிதாசனைப் போல்
எழுதுவது தான் என் முதற் குறிக்கோள்
சுரதாவின் புதிய உத்திகள்
இளங்கவிஞனாகிய என்னைப்
பெரிதும் வசீகரித்ததுண்டு
இன்று –
நான் நானாக எழுதுகிறேன்

என்று கூறியிருப்பதை அவையும் உறுதிப்படுத்துகின்றன. 'வெள்ளை யானை' காப்பியத்தின் இறுதியில், இக்காவியம் வெற்றி பெற்றிருந்தால், அதற்கு டாக்டர் பாலாவின் 'வழிகாட்டலும் ஒரு காரணம்' என்று கூறியிருப்பது அவரின் நன்றியுணர்வினைக் காட்டுவதாகும்.

'கவிஞனாக இருப்பதில் எனக்கும் பெருமிதம் உண்டு' எனக் கூறும் கவிஞர் (முருகு. 4), மிகவும் வெளிப்படையாகப் பேசக் கூடியவர் என்பதை,

ஆங்கில நாளேடுகள்
விரும்பித் தலையங்கம் எழுதும் அளவுக்குக்
கவியரங்கம் விளம்பரம் பெற்றது.
கவிஞர்களாகிய எங்களுக்குப்
புகழ் மயக்கம் தரும்
போதையாகவே இது மாறிவிட்டது.
ஆனால் . .
தரமான கவிஞர்களின்
உண்மையான வளர்ச்சி தடைபட்டது.
கட்டுப்பாட்டுக்கும் கட்டாயத்துக்கும்

உட்பட்டுப் பாடியதால்
தரமில்லாத படைப்புகள் தோன்றின
கவிதை சொற்சிலம்பமாகியது (முருகு. ப. 3-4)

எனும் பகுதி வெளிப்படுத்துகிறது. கட்டுப்பாடும் கட்டாயமுமற்ற விடுதலை உணர்வே சிறந்த கவிதைகளைத் தரும் எனும் கவிஞர் கருத்தும் இங்குக் கருதத்தக்கது.

பாரதிதாசனுக்கு ஒரு பாஸ்வெல் எனப்பாராட்டப்படும் இவர்[3] பாரதிதாசன் பரம்பரை என்ற முத்திரையிலிருந்து விடுபட்டுள்ளார். பாரதியார், வள்ளுவர், காந்தியடிகள், கம்பர் எனப் பரந்து விரிந்த பார்வையையும், இந்திய நாட்டுணர்வையும் இவரது கவிதைகளில் காணமுடிகிறது. இதனை இவரின் தனித்துவமாகவும் கொள்ளலாம். பரந்துபட்ட உலக இலக்கிய அறிவும், உலக நிகழ்வுகளின் அறிவும் கொண்டவராகவும் அதனைக் கவிதையாக்குவதில் பெருவிருப்புடையவராகவும் காணப்படுகிறார்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் தன் திறம் காட்டும் இவர் கதைப்பாடல்களைப் படைப்பதில் பெருவிருப்புடையவராகக் காணப்படுகிறார். ஆங்கிலமும் இந்தியும் இவரறிந்த பிறமொழிகள் என்பதோடன்றி அவற்றில் வல்லுநர் என்பதையும் படைப்புகள் காட்டுகின்றன. தம் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, குயில் ஏட்டில் வெளியிட்டமையைப் பாராட்டிப் பாரதிதாசன்,

நான் செய்தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான் செய்தளிக்கும் தகுதியிலே – வான் போன்றான்
வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மை
யெல்லாம் சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து

என்று பாடியுள்ளமை (முருகு. 322) நவிலற்பாலது.

கவிதைக் கொள்கை

கவிதை பற்றிய மிகத் தெளிவான கண்ணோட்டம் இவருக்கிருப்பதை 'நானும் என் கவிதையும்' என்பதில் வெளிப்படுத்தியுள்ளார். அதனைக் கவிதை (இலக்கியம்) பற்றிய இவரின் கொள்கையாகக் கொள்ளலாம்.

கவிதையின் கருப்பொருள்
உயர்வானதாக இருக்க வேண்டும்
கவிதையின் கருப்பொருள்
மட்டமானதாக இருந்தாலும்
அதன் பயனும்
அது வெளிப்படுத்தும் உணர்வுகளும்
மக்களினத்தை
உயர்த்துவனவாக இருக்க வேண்டும்
பெருமைக்குரிய கவிதையை
விளையாட்டுத் தனமாகப் பயன்படுத்துவதை
நான் வெறுக்கிறேன்
கருத்தாழமும்
உணர்ச்சிப் பெருக்கும்
கவிதையின் இருகண்கள் (முருகு 4)

என்பதில் பாடற்பொருள் உயர்வானதாய், கற்பாருக்குப் பயன்படுவதாய், அது உணர்த்தும் உணர்ச்சியை - மெய்ப்பாட்டை நன்கு வெளிப்படுத்துவதாய் நிற்பதை வேண்டுகிறார். இலக்கியம் கண்டிப்பாகப் பயனுடையதாக இருக்க வேண்டும் என்பதை,

ஒரு கவிஞனின் படைப்பு
இந்தச் சமுதாயத்துக்கு
எந்த அளவு பயன்படுகிறது
என்பதை வைத்துத்தான்
அவன் சிறப்பும்
அவன் படைப்பின் தரமும்
எதிர்காலத்தில்
நிர்ணயம் செய்யப்படும் (முருகு. ப. 6)

என்பதில் வலியுறுத்துகிறார். 'மெல்லிய மனிதாபிமான உணர்வுகள் இன்றைய கவிதையின் இதய நாதமாகி மக்களினத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும்' என்று விரும்பும் இவர், வாசகர் கவிதையோடு ஒன்றி நிற்கும் படியான வெளியீட்டுத் திறனையும் எதிர்நோக்குகிறார். எனவே எளிமையே கவிதையின் உயிர்நாடியாக விளங்க வேண்டுவதை 'இருண்மை (Obscurity) நனவோடை உத்தி (Stream of Consciousness) மௌன மொழி என்று இன்றைய

கவிதையில் அதிகமாகப் பேசப்பட்டாலும், அதற்குச் சரியான திறவுகோல் இல்லாமலே பலரும் எழுதுகின்றனர்' என்ற தம் வேதனை வழி உணர்த்துகிறார் (முருகு ப. 6-7).

படிக்கும்வாசகனின்
பக்குவத்திற்கேற்ப
நுண்பொருளாகவும்
பருப்பொருளாகவும்
விசாலப்படும்
வாமனத்தன்மை
இன்றைய கவிதையின்
தனிச்சிறப்பு (முருகு. ப. 144)

என்பது இன்றைய கவிதை பற்றிய இவரின் மதிப்பீடாகும். கவிஞரின் இச்சிந்தனைகள் அவரது படைப்புகளிலும் எதிரொலித்து அவரது வெற்றியின் பின்புலத்தைப் பறைசாற்றுகின்றன.

படைப்பு இயல்புகள்

இவர் படைத்துள்ள கவிதைகளின் பொதுத்தன்மை இங்கு எண்ணப்படுகிறது. மரபுக் கவிதை (பனித்துளிகள்), புதுக்கவிதை (வெள்ளையானை) என இரண்டிலும் தம் தடம் பதித்து வெற்றி கண்டுள்ள கவிஞரின் படைப்புகள் நெடுங்கதை (கண்ணீர்த்தவம்), சிறு காப்பியம் (வெள்ளை யானை), கவிதை நாடகம் (எரி நட்சத்திரம்), தனிப்பாடல், எனும் வடிவங்களை மேற் கொண்டுள்ளன.

தொன்மங்களைத் தன்னோக்கில் மீட்டுருவாக்கம் செய்வதில் ஈடுபாடுடையவர் என்பதை **வெள்ளையானை, அரேராம அரேகிருஷ்ண, போர்வை** போல்வன தெரிவிக்கின்றன. நடப்பியலுக்கும் பாடுபொருளில் சிறப்பளிப்பதை, சமயப் போராட்டத்தைச் சாடும் **ஏனென்றால்,** இலங்கை விடுதலைப் போரை முதன்மைப்படுத்திய **எரிநட்சத்திரம்,** காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்ட பத்மினியின் போராட்டத்தைப் போற்றும் **சிலம்பின் இரண்டாவது வெற்றி** போல்வன உணர்த்துகின்றன. பிறநாட்டுக் கவிஞரை; அவர் தம் படைப்பை, தமிழ் இலக்கியத்தை விமர்சிக்கும் கவிதைகளையும் இவரிடம் காணலாம். மாதவியைப் பருவ மழையாகவும், கண்ணகியைப்

பெய்யெனப் பெய்யும் மழையாகவும் குறியீடாக்கிக் கவிதைகள் படைத்திருப்பது சிறப்பான சான்றுகளாகும்.

> **கடற்கானலில்**
> **கோவலன் மீது பொழிந்த**
> **இந்த யாழ்மழை**
> **புயலோடு**
> **புரண்டடித்த காரணத்தால்**
> **கோவலன் மாளிகை சரிந்தது**

என மாதவியையும், (வெள்ளை. ப. 90)

> **இந்த மழைக்கு**
> **வலியச் சென்று**
> **கோவலனை நனைக்கத் தெரியாது**
> **கணவனுக்குத் தன்னை**
> **அபிஷேகம் செய்யத் தெரியுமே தவிர**
> **ஆரவாரத்தோடு**
> **இறங்கி வரத் தெரியாது**
> **பன்னீர் தூறலைப்**
> **பக்குவமாகத் தெளிக்கத் தெரியாது**

எனக் கண்ணகியையும் (வெள்ளை. ப. 94) காட்சிப்படுத்தும் விதம் பாராட்டிற்குரியது.

முழுமையாகக் குறியீட்டுக் கவிதைகளைத் தருவதிலும் முயன்று சிறந்துள்ளார். அரசியல்வாதிகளிடமிருந்து மீள வழி தேடும் **ஏதேன் தோட்டத்துப் பாம்பு** (முருகு. ப.44-46), அரசியல்வாதிகளையும் உயரதிகாரிகளையும் சாடும் **அரண்மனை அலிகள்** (முருகு. ப.49-51), தாழ்த்தப்பட்டோரின் குரலாய்ப் பொங்கியெழும் **ஏகலைவர் அறிக்கை** (முருகு. ப.46-48) என்பனவற்றைச் சான்றாக்கலாம். வாழ்வியல் மெய்ம்மையை விளக்குதற்கும் இவர் கவிதையைப் பயன்கொண்டுள்ளதைப் **போதியும் புத்தனும், அந்தப்படகு, சலிப்பு** போன்ற கவிதைகளில் காணலாம் (வெள்ளை, ப75, 82-83, 96). பலவற்றை இழந்துதான் ஒரு வெற்றியை அடையமுடியும் என்பதைப் 'போதியும் புத்தனும்' கவிதை,

போதி மரம்
பெருமூச்சு விட்டது
புத்தன்
நிமிர்ந்து பார்த்தான்
'ஆயிரக்கணக்கான
தாவரங்கள்
என்னடியில்
மக்கி எருவாகி
நான் மரமானேன்'
என்று புலம்பியது
'இருபத்து நாலு புத்தர்கள்
என்னுள் மரித்திருக்கின்றனர்
நான்
இருபத்தைந்தாவது புத்தன்!'
என்று கூறிப் பெருமூச்சு விட்டான் கௌதமன்

என நயம்பட உரைக்கிறது. இவரது படைப்புகளில் பனித்துளிகள், வெள்ளை யானை, எரிநட்சத்திரம் என்பன கவிதையுலகில் இவருக்கெனத் தனியிருக்கையை உறுதிப்படுத்தியுள்ளன.

படைப்புத்திறன்

கவிதை வெளியீட்டில் இவர் தரும் உவமை வகைமைகள் பல கற்பார் கவனத்தை ஈர்க்கும் சிறப்புடையதாகி இவருக்குப் புகழ் சேர்க்கின்றன. காலத்திற்கு ஏற்பவும், சூழலுக்கு ஏற்பவும் உவமைகளைக் கையாளுந்திறன் பாராட்டத்தக்கதாய் அமைகிறது. அகலிகை வரலாறு பேசும் புராணக் காலத்தை நினைவூட்டும் படியாகவும் சூழலுக்கு ஏற்பவும் நிலவானது 'தர்ப்பை அறுக்கும் சின்ன அரிவாளாக மூன்றாம் பிறை' (வெள்ளை. 17) எனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உடைந்த குழலில் வரும் வண்ணான் நாகனை அறிமுகப்படுத்தும் பொழுது 'இரவில் கூலியோடு திரும்பும் நாகன் பட்டைச் சாராய நெடியுடன் பழுத்த நெருப்புத் துண்டக் கண்களுடன் சூடேறிய சலவைப் பெட்டியாய் வீட்டுக்குத் திரும்புவான்' (தீர்த்த. ப. 13) என்பது மற்றொரு சான்றாகும்.

அறிவியல் செய்திகளும் உவமைகளாக இடம்பெறுவதை, அகலிகையின் நிலையாக, 'காற்று மண்டலத்தைக் கடந்தவர்

கனமிழந்து தவிப்பது போல் அவளுக்குத் தன்னையிழந்து தவிப்பு' (வெள்ளை. ப. 30-31) எனக் கூறுவது; எரிநட்சத்திரத்தில் தன்னிடம் அடைக்கலம் புகுந்த பெண்ணை நெடுமுடி, 'தொலைக்காட்சிப் பெட்டியில் தடங்கலுக்கு வருந்துகிறோம் என்ற அறிவிப்புக்கு முன் திரையில் தெரியும் தாறுமாறான காட்சிகளைப் போல் உன் உள்ளம் தெளிவற்றிருக்கிறது' (முருகு. ப. 87) என மொழிவது போல்வன சான்றுகளாம்.

சங்கத் தமிழிலக்கியத்தையும் உவமையாக்கித் தருவதில் பெருவிருப்புக் காண்கிறார். அமராவதியை அம்பிகாபதி, 'பழந்தமிழ்ச் சங்கப்பாட்டுத் தொகை'யாகப் பார்க்கிறான் (முருகு. ப. 250); ஆறுறுப்புப் பெற்றுவரும் கலிப்பா போல ஆறு சுவையூண் எமக்களித்தான் எனச் சங்கப்புலவர் பெரும்பரணர் பேகனைப் போற்றுகிறார் (முருகு. ப. 255) இங்குக் குழந்தையை வருணிக்கும் பாடலில்

ஆடிவரும் வெண்ணிலவே
அசைந்துவரும் வானவில்லே
சங்க காலப்
பாடினியும் பாணர்களும்
பரிவோடும் பதைப்போடும்
பக்கம் சேர்த்த
கோடினிய நல்யாழே
கோவலன்வாய் வரிப்பாட்டே
தாயும் நானும்
பாடமைந்த படுக்கையிலே
பரிவோடு தொகுத்த தொகை
நூலே பாலே!
சேலத்து மாம்பழமே
செவ்வேரில் பழத்தபலாப்
பழமே! உன்றன்
கோலத்தில் குறுந்தொகையும்
குறுநகையில் குறளமுதும்
கொண்ட ணைக்கும்
காலத்தில் கலித்தொகையும்
கனிமொழியில் இசையமுதும்
காணு கின்றேன்;

வேலொத்த விழிகளிலே
விளையாடும் போர்ப் பரணி
காணு கின்றேன் (பனித். ப. 87)

எனப் பாடியிருப்பதும் சுட்டத்தக்கது.

புதுப்புது உவமைகளும் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. சிலம்போசையை, 'கண்ணகியின் கால்நடையில் நீ ஒரு சிம்ஃபனியே நடத்திக் காட்டினாய்' (முருகு ப. 51) 'பண்டார வண்டுகளின் பாட்டுச்சாவி பட்டவுடன் திறக்கின்ற பூட்டுப் பூக்கள்' (முருகு. ப. 253), 'விளம்பரப்பூ இல்லாமல் பழங் கொடுக்கும் வேர்ப்பலா வள்ள லிந்தப் பேகன்' (முருகு. 256), 'காவிரி நீர் சித்திரையில் இளைத்தல் போலக் கண்ணகியே உன்னுடம்பு தேய்ந்து விட்டாய்' (பனி. ப. 110) என்பனவற்றைச் சான்றாக்கலாம். உவமைகளை அடுக்கிச் செல்வதிலும் பெருவிருப்பினராகக் காணப்படுகிறார்.

பொங்கிவரும் உணர்ச்சிக்குக் கரையிடாமல்
புரண்டுவரும் காட்டாற்று வாழ்க்கை வாழ்வோன்
அங்குச மில்லாப் பாகன் யானை ஏறி
அழிவதைப் போல் கட்டாயம் அழிவான் என்று
கங்கை கொண்ட தமிழ்நாட்டில் வாழுகின்ற
கட்டறுந்த காளைகளுக் குணர்த்த வேண்டித்
தங்கமலை சாய்வதைப் போல், இலக்கியத்தில்
தமிழ் வணிகன் கோவலனும் சாய்ந்து பட்டான்
(பனி. ப. 110)

எனும் பகுதி எடுத்துக்காட்டாகும். இங்குச் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் அறிவுரையமைந்திருப்பதையும் சுட்டலாம்.

குறியீட்டுக் கவிதைகள் மட்டுமின்றிப் பிறகவிதைகளின் வெளியீட்டிலும் குறியீடுகளைக் கவிஞர் பெய்து வைத்துள்ளார். படகினை அலைத்தேர் (வெள்ளை. ப. 82), எட்டயபுரத்துப் புதியமலை - பாரதி (தீர்த்த. ப. 71) இலக்கியத் தேர், இலக்கியப் பேரங்காடி - பாரதிதாசன் (தீர்த்த. ப. 72) முதலானவற்றைச் சான்றாக்கலாம்.

கவிஞரின் கவித்திறனைப் பெருமைப்படுத்தும் மற்றொரு சிறப்புக் கூறாகக் கற்பனையமைகிறது. மழை அவருக்கு,

விண்வெளியில்
ஓடிக்களைத்த மேகங்கள்
விழித்தெறிந்த வியர்வை
பரந்த கடலும்
விரிந்த வானும்
செய்து கொண்டிருக்கும்
பண்டமாற்று வாணிபம் *(வெள்ளை. 90)*

ஆகிறது. பனித்துளியானது,

இரவில் ஓடிக்களைத்த
நிலவுக் குதிரையின்
கடைவாயில் வழியும்
நுரைச் சிதறல் *(தீர்த்த. 68)*

ஆகிறது. இரவு,

விட்டு விட்டு விண்மலர்கள்
புறவிதழை அவிழ்த்து
விளையாடி ஒளிமணத்தை
விருந்து வைக்கும் நேரம் *(முருகு. 228)*

ஆகிறது.

எள்ளற் சுவையும் இவர் கவிதைத்திறனுக்கு ஆங்காங்கே மெருகூட்டுகின்றன. காணிநிலம் வேண்டாம் எனும் கவிதையில்,

பராசக்தி
எனக்கு
அதிக ஆசையில்லை
இருப்பது போதும்
காணிநிலம் வேண்டாம்
உழவே தெரியாத எனக்குக்
காணிநிலம் எதற்கு?
பத்துப் பதினைந்து
தென்னைக்கு உரம் வைத்துப்
பாதுகாக்க
என்னால் ஆகாது
வேண்டும் போது
இளநீரை

வீதியில் வாங்கிக் கொள்கிறேன்
தூணிலழகிய மாளிகையைத்
துடைத்துப் பெருக்க
வேலைக்காரர் வேண்டுமே
அவர்களோடு மல்லுக்கட்ட
என்னால் ஆகாது
இவையெல்லாம்
எனக்கு வேண்டாம்
பாரதிக்கே கொடுத்துவிடு

என்று எள்ளலுடன் தொடங்கி இறுதியில்,

ஆனால் . . .
அவன் சொன்னானே . . .
பாதகம் செய்பவரைக் கண்டால்
மோதி மிதித்து
அவர் முகத்தில் உமிழும்
நெஞ்சுரத்தை மட்டும்
எனக்குக் கொடு!
அது போதும்!

என (முருகு. ப. 48) மனவலிமை வேண்டித் திடீர்த் தாக்குதல் நடத்துகிறார். இதனால் முதல் வாசிப்பில் முன்பகுதி பாரதியை எள்ளுவதாகத் தோன்றிடினும் இறுதிப்பகுதியைப் படித்தவுடனேயே அது இதற்கோர் அழுத்தமான அடித்தளம் என்பதை உணர வைக்கின்றன. இக்கவிதையில் எள்ளல் இலக்கிய உத்தியாக நின்று தனிச்சிறப்பளித்துள்ளது. இதற்கு மாறாக இளிவரலோடு துவங்கி எள்ளலில் முடியும், சென்னைக் கோட்டையின் அறிமுகமும் சுட்டற்பாலது.

காகித மனிதர்கள்
நடமாடும்
தமிழகத்தின்
கருங்கல் இதயம்
இங்கு –
கொடிகள் படர்வதில்லை

ஏற்றி
இறக்கப்படுகின்றன
கோட்டையில்
சண்டையைத் தவிர
வேறு என்ன நடக்கும்?

என்பது அது. இங்குக் கவிஞரின் ஆற்றாமை கலந்தொலிப்பதுடன் நம்பிக்கை வறட்சியும் வெளிப்படுகிறது.

'மெய்யுருக்கும் வாசகமோ! மூவர் பாட்டோ? மிதக்குமிசை மேக வண்ணக் கண்ணன் நெஞ்சைக் கொய்வதற்குக் கசிந்துருகி ஆழ்வாரெல்லாம் கொட்டிய கண்ணீரருவிப் பாட்டோ' என அம்பிகாபதி, சோழன் கட்டளைக்கிணங்கப் பாடிய பக்திப் பாடல்களைக் கவிஞர் சுட்டுகிறார். இங்ஙனம் இயன்றவழித் தமிழ்ப்புலவரைப் பாராட்டும் பாங்கும் இவரிடம் மிகுந்திருக்கிறது.

நீதிநூல்
நம்மைக் கோழைப்படுத்தும்
மெதுவான நஞ்சு
அறத்தைப் பேசியே
கெட்டுப் போனவர்கள் தமிழர்கள் ***(முருகு. ப. 96)***

என்பது கவிஞர் கருத்தாயினும் திருக்குறளை, 'தொடுந்தோறும் புதிய பொருள் தொடருகின்ற தூய தமிழ்க் குறள்' (பனி. ப. 107) எனப் பாராட்டியுள்ளார். தமது கருத்திற்கேற்பத் தமது படைப்புகளில் நேரடியாக அறங்கூறுதலையும் தவிர்த்துள்ளார்.

கவிஞரின் சிறப்புகள்

பாரதி, பாரதிதாசன் வழியில் இவர் பெண்ணுரிமைக்குப் பெருங்குரல் கொடுக்கிறார். இவர் மீளாக்கம் செய்துள்ள தொன்மங்களான அகலிகை (வெள்ளையானை), சீதை எரிமூழ்கல் (அரே ராம அரே கிருஷ்ண) போல்வன இதனை உணர்த்துகின்றன. எரிநட்சத்திரம் நாடகத்திலும் மேகலை என்னும் கதைமாந்தரைப் பெண்ணுரிமை பேணுநராகக் காட்டுவதும் சுட்டத்தக்கது. வெள்ளை யானையில் வரும் அகலிகை, சாப விமோசனம் கிட்டியவுடன்

நான் என் வாழ்நாளில்
ஒரே ஒரு ஆடவனைத்தான்
உள்ளத்தால் வரித்து
ஆராதனை செய்கிறேன்
என் கற்பின் மீது
களங்கம் படிவது
எப்படி சுவாமி என்று
அமைதியாக
ஆனால் . . .
உறுதியாகக்
கேட்டாள் அகலிகை . . .
உண்மையில் கற்புக் கெட்டவர்
கௌதமரும்
முன்னின்று எனக்குத் திருமணத்தை
முடித்து வைத்த
முனிசிரேஷ்டர்களுந்தான்
ஒரு பெண்
யாரை விரும்புகிறாள் என்பதைப்
புரிந்து கொள்ளாமல்
வற்புறுத்தித் திருமணம் செய்வது
ஒரு விதத்தில்
கற்பழிப்புத் தானே? . . .
சுவாமி, நீங்கள்
சர்வ வல்லமை படைத்தவர்
என்னை ஒரு பெண் யானையாக்கி
அமராபதியின்
கற்பகச் சோலையில்
விட்டு விடுங்கள்! (வெள்ளை. ப. 45)

என்ற விசுவாமித்திரரிடம் கேட்கிறாள். பாலகாண்டம், சுயம்வர காண்டம், ஆரண்யகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என்று ஐந்து பிரிவுகளில் அமையும் இக்காப்பிய ஆக்கம் குறித்துக் கவிஞர்,

> நான் அகல்யாவை மீமெய்ம்மைப் பாத்திரமாகச் (Surrealistic Character) சித்திரித்துள்ளேன். இளமையில் அகல்யாவின் அடிமனத்தில் ஏற்பட்ட ஏக்கங்களும், ஏமாற்றங்களுமே

> அவள் வாழ்க்கையின் பின்விளைவுகளாக உருப்பெற்றன என்பது இக்காப்பியத்தின் அடிப்படை. நசுக்கப்பட்ட பெண்ணியம் தன் விலங்கொடித்துக் குமுறியெழும் சீற்றத்தை இக்காப்பியத்தில் காணலாம்

என்று கூறியுள்ளார். காப்பியத்தைக் கற்கும் பொழுதும் இதே உணர்வு வெளிப்படுகிறது.

அரே ராம, அரே கிருஷ்ண சீதையும் இவ்வாறே துணிந்து,

பாம்பும் மீனும்
பசியெடுத்தால்
தன் குஞ்சுகளையே
தின்றுவிடும்
அரசியல் வாதிகளுக்குப்
பதவிப் பசியெடுத்தால்
மனைவி மக்களையும்
அவர்கள்
இழக்கத் தயங்கமாட்டார்கள்
நீர் விரும்புவது
பதவி விளம்பரம்
இராச சூயம் அசுவமேதம்
இவைகள் நீங்கள்
எட்டிப் பிடிக்கத் துடிக்கும்
பதவியின் படிக்கட்டுகள்
நான் உங்கள்
அரசியல் விளம்பரத்துக்காக
வெட்டப்பட்ட
பலி ஆடு **(தீர்த்த. ப. 94–95)**

எனக் கண்டனக் கணைகளை இராமன் மீது எறிகிறார். உண்மையைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

அரசியல் தொடர்பான தனிக்கவிதைகளைப் படைத்தளித்துள்ள இவர் இயன்றவிடந்தோறும் பிற கவிதைகளிலும் அரசியல் பேசுகிறார். இவரது அரசியல் கவிதைகள் மிகுதியும் குறியீட்டுக் கவிதைகளாக அமைவதும் கூறத்தக்கது. 'மீண்டும் அந்தக் காந்த இசை' எனும் பாடலைச் சான்றாக்கலாம்.

அந்த இசைக் காந்தத்துக்குக்
கட்டுப்பட்டு
வாமனர்கள்
வானளாவி
வளர முடிந்தது
சுட்டுவிரலால்
ஆதிக்க கிரியைத்
தூக்கி
நிறுத்த முடிந்தது
இந்த நாடு
மறுமலர்ச்சி பெற
அந்தக் காந்த இசை
மீண்டும் வேண்டுமாம்! (வெள்ளை. ப. 70)

என்று காந்தீயத்தின் இன்றைய தேவையை அதனுள் வலியுறுத்துகிறார். பாரதிதாசன் பாடல்களில் மயங்கினாலும் 'காந்தியடிகள் கூறிய தர்மகர்த்தா கொள்கைதான் இச் சமுதாயத்துக்கு ஏற்ற மருந்து' (முருகு. ப. 158) என்பது இவர் கருத்தாகப் புலப்படுகிறது.

ஆங்காங்கே பொருத்தமான செய்திகளை இணைத்து, எரிநட்சத்திரம் நாடகக்கவிதைக்குத் தகவல் களஞ்சிய மதிப்பினையும் ஏற்றுகிறார்.

மருத்துவன் தாமோதரன்
சங்கப்புலவன் ஆகவில்லையா?
ஆங்கிலக் கவிஞன் கீட்சும்
சிறுகதை மன்னன் செகாவும்
சாதனை எழுத்தாளன்
சாமர் செட்மாமும்
மருத்துவப் பட்டம் பெற்ற
உலக இலக்கிய மேதைகள் (முருகு. ப. 160)

சுரபுன்னை இங்கும்
ஆஸ்திரேலியாவிலும் மட்டுமே
உள்ள அபூர்வமான தாவரம் (முருகு. ப. 202)

உருசியக் கவிஞன் (மாய கோவ்ஸ்கி)
பகலவனையும்

ஒரு பாட்டாளியாகக் கருதி
அவனது பயணக் களைப்பைப்
போக்கிக் கொள்ளத்
தன்னோடு தேநீர் அருந்தக்
கூப்பிடுகிறான்
மனிதநேயம் கலந்த
அவன் கற்பனை
என் உள்ளத்தைத்
தொடுகிறது *(முருகு. ப. 151)*

போல்வன சான்றுகள். இவை இவரின் பரந்துபட்ட அறிவிற்குச் சான்றாகவும் அமைகின்றன. இக்கவிதை நாடகத்துள் சகுந்தலை நாடகத்தை இணைத்துப் பெண்களிடையே விழிப்புணர்வு தோன்றியுள்ளதை, 'முதிர்ச்சி எனக்குத் துணிச்சலையும் அனுபவத்தையும் கொடுத்திருக்கிறது. உங்களை நான் கணவராக ஏற்றுக் கொள்கிறேன். மீண்டும் நீங்கள் என்னைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டால்- அதுவும் இங்கிருக்கும் முனிவர்கள் முன்னிலையில்' (முருகு. ப. 139). என்ற சகுந்தலை கூற்றால் காட்டுகிறார்.

24 காட்சிகளாக அமையும் இந்நாடகத்துள் 'விட்டில்' (முருகு. ப. 142-146) எனும் குறியீட்டுக் கவிதையைப் படைத்து அதன் கதை மாந்தர்வழிக் கவிதை ஆய்வும், பொருளாய்வும் நிகழ்த்தியிருக்கும் பாங்குச் சிறப்பாகச் சுட்டப்பட வேண்டிய தாகும். இக்கவிதை அதை எழுதியதாகக் கூறப்படும் கதைத் தலைவி வீணாவைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காகப் பின்னிகழ்வை முன்னுணர்த்துதற்காக; வாசகரிடையே கதை பற்றியதோர் எதிர் பார்ப்புணர்வைத் தூண்டுதற்காக என மூன்று நிலைகளுக் கேற்றதோர் உத்தியாக அமைந்து கவிஞரின் கவித்துவத்துக்கோர் இனிய சான்றாகவும் நிற்கிறது. தாம் கூறவரும் கருத்தை, தமது விருப்பத்தை நேரடியாகக் கூறாது தமது கவிதைகளைப் படிப்பதன் வாயிலாகவே தெளிவாகப் புரிந்து கொள்ளும்படிப் பாடியுள்ளார். பெண்ணுரிமை, அரசியல் சீர்திருத்தம் இவற்றில் வேணவா கொண்டுள்ள கவிஞர் அவற்றைத் தம் படைப்புகளில் பொதிந்து வைத்துள்ளார். எனினும் கற்பார் மிக எளிதாக அவற்றைப் புரிந்துகொள்வதுடன் அவ்வுணர்ச்சிக்கு இடனாதலும்

இவர் படைப்பின் வெற்றியாகும். அறிந்தது கொண்டு அறியாததை விளக்கும் உவமை போல, தமிழருக்கு நன்கு அறிமுகமான தொன்மைக் கதை மாந்தரைக் கொண்டே (அகலிகை, சீதை, சகுந்தலை, கண்ணகி) பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக்கும் உத்தியையும் இவண் கருதலாம். அம்பிகாவதி அமராவதி கதை பேசும் பனித்துளிகள், உடைந்த குழல் போன்ற கதைப்பாடல்களும் இதன்பாற்படுவனவே.

அரசியல், சமுதாயச் சீர்திருத்தத்தை வேண்டி, கற்பாரைத் தூண்டுவதற்கு ஏதேன் தோட்டத்துப் பாம்பின்,

கொத்தும் உன்
கொடுமை யறிந்தும்
மோசக்கார
மோடி மஸ்தான்கள்
தங்கள் சட்டைப்பையில்
உன்னைத்
தாலாட்டி வளர்க்கிறார்கள்
விழாக் காலங்களில்
உன்னை
வெளியில் விட்டு
வேடிக்கை காட்டுகிறார்கள்
ஏமாளி இந்தியன்
தன்னையே கொடுத்துவிட்டுத்
தாயத்துப் பெற்றுத்
திரும்புகிறான்
நீ சங்கராபரணமாக
இருந்தாலும் சரி
பாராளுமன்றப் பரந்தாமர்களுக்குப்
படுக்கையாக
இருந்தாலும் சரி
உனக்கு
மரண அடி கொடுப்பதற்குச்
சரியான ஆயுதத்தை
எப்பாடு பட்டேனும்
தேர்ந்தெடுத்தாக வேண்டும்
இல்லாவிட்டால்

நீ எங்களை
நிர்மூலமாக்கி விடுவாய்! (முருகு. ப. 45-46)

எனும் பகுதியில் வாக்காளருக்கு எச்சரிக்கையும், கடமையுணர்வும் வலியுறுத்தப்பட்டிருக்கக் காணலாம்.

உலகின் எப்பகுதியில் நிகழ்ந்தாலும் நல்லனவற்றைப் போற்ற வேண்டும் (ஓர் இரங்கற்பா, முருகு. 64-69); அல்லனவற்றை எதிர்த்துரைக்க வேண்டும் (கழுவ முடியாத களங்கம், தீர்த்த. ப. 48), உலக (தெய்வீகப் பெருஞ்சுமை - முருகு ப.304, எச்சிலை நாகரிகம் - முருகு. ப.274), இந்திய (இறுதி முறி - முருகு ப.309) தமிழகப் (கூடல் நகர் பெற்ற பாடல் முருகு. ப.279) பெரியோர்களின் கருத்துகளை அனைவரும் அறிய வேண்டும்; மேலை இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் (கற்புச் சிறை, மாற்றான் தோட்டத்து மல்லிகை, முருகு. ப.290, ப.299) என்பனவும் இவர்தம் உள்ளக் கிடக்கையாக அறிய வருகின்றன. இத்தன்மையில் பாரதியைப் பின்பற்றும் இவர் கவிதையானது 'உலகப் பொதுமை' வாய்ந்தது என்பதையும் உணர்த்துகிறார்.

நிறைவுரை

படித்துச் சுவைத்த உடனேயே மறந்து விடக் கூடிய கவிதைகளாக அன்றி மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் கவிதைகளை, படிக்கப் படிக்கப் புதுநயம் தரும் கவிதைகளைப் படைத்து, கற்பார் நெஞ்சில் உலாவுகிறார் கவிஞர் முருகு சுந்தரம். இக்காலத் தமிழ்க் கவிஞரிடையே தனியிடம் பெற்றுள்ள இவரின் படைப்புகளில் பெண்ணியம், அரசியல், குறியீடு என்பன தனியாய்வு பெறும் சிறப்புடையனவாகின்றன.

முதன்மை நூல்கள்

தீர்த்தக் கரையினிலே, முருகு சுந்தரம், அன்னம், சிவகங்கை, மு.ப. செப். 1983.

பனித்துளிகள், முருகு சுந்தரம், அரிமாப்பதிப்பகம், அம்மாப்பேட்டை, மு.ப. டிச. 1974.

முருகு சுந்தரம் கவிதைகள், காவ்யா, சென்னை, மு.ப. டிச. 2003.

வெள்ளையானை, முருகு சுந்தரம், அன்னம், சிவகங்கை, மு.ப. அக். 1998.

அடிக்குறிப்புகள்

1. இன்றைய தமிழ்க் கவிதைச் சூழலில் நம் முருகுவின் இடம் எங்கே? பாருங்கள் அங்கே -

நிலவில் முருகுவின் கால்
சூரியனில் அவர்து கை

– தாமரை சூன் 2002, தமிழ்நாடன்.

கடை திறப்பு ஒருவகையில் உணர்ச்சியின் மடைதிறப்பாக இருக்கிறது. முற்றிலும் புதிய நோக்கில் அமைந்த அக்கவிதைகளைப் படித்துப்படித்து மகிழ்ந்தேன். சொல்லாட்சிச் சிறப்பு, உவமைநலம், கூறும் முறை அனைத்தும் புதுமையே. அண்மைக் காலத்தில் வெளிவந்துலாவும் கவிதை நூல்களில் நான் படித்தவரை கடைதிறப்பு தனியிடத்தைப் பெறுகிறது. - எழில் முதல்வன். முருகு சுந்தரம் கவிதைகள், காவ்யா, சென்னை, டிச. 2003.

2. 1976 தமிழக அரசின் நல்லாசிரியர் விருது.

1982 பனித்துளிகள் - கவிதைத் தொகுப்பிற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற் பரிசு.

1982 பாட்டுச் சிற்பி - ஈரோடு திருக்குறள் பேரவை.

1990 பாரதிதாசன் விருது - தமிழக அரசு.

1994 இருபதாம் நூற்றாண்டில் வெளியான சிறந்த தமிழ்க் காப்பியங்கள் பத்தில் 'பனித்துளிகள்' உம் ஒன்று - கோவில்பட்டி திருக்குறள் பேரவை பாராட்டும் பரிசும்.

1994 எரி நட்சத்திரம் - பரிசும், பாவேந்தர் விருதும் - கோவை இலக்கியப் பாசறை.

1999 பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர், சென்னைப் பாவேந்தர் பாசறை, முன் சுட்டிய நூல், ப. 330.

மேற்படி, ப. 330.

2004 தமிழ் வாகை விருது, சேலம் தமிழ்ச் சங்கம் கவிதாலயா விருது, சேலம்.

- தகவலாளர் முனைவர் வனிதாமணி.

நா. புகழேந்தி

கவிஞரைப் பற்றி

கவிஞர் நா. புகழேந்தி தூத்துக்குடி நகர்க்கு அருகிலுள்ள குளத்தூரில் 1930 ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தை பெயர் நாராயணன். தாயார் பெயர் பெத்தம்மாள். இவரது இளம் வயதில் இவரது பெற்றோர்கள் தூத்துக்குடியில் குடியேறினார்கள். அதன் காரணமாகக் கவிஞர் குளத்தூரிலும், தூத்துக்குடியிலுமாகப் பள்ளிக் கல்வியைக் கற்றார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் வந்த இவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் எளிய தொண்டராக விளங்கியவர். இவரும், இவரது நண்பர் பெ. இராமலிங்கமும் இணைந்து நம் நாடு தமிழின்பம் (1952) எனும் கையெழுத்து ஏடு நடத்திப் பலரின் பாராட்டைப் பெற்றனர். அதுமட்டுமல்லாது கலைஞர், கி.ஆ.பெ. விசுவநாதம், விருதை வே.வ. இராமசாமி ஆகியோர் நடத்திய வார, மாத ஏடுகளில் சிறுகதைகளும், கவிதைகளும் எழுதிப் புகழேந்தி, கவிஞர் புகழேந்தியாக அறிமுகமானார். தொடர்ந்து தமிழகத்தின் புகழ்மிக்க ஏடுகளில் கவிதைகள் எழுதித் தன்னை வளர்த்துக் கொண்டார். தூத்துக்குடித் தமிழ்க்கலைக் கழகம் 29-5-53இல் நடத்திய கலை விழாவிற்கு வருகை தந்த புரட்சிக்கவிஞரின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் தன் கன்னித் தமிழ்க் கவிதையை முதல் முதலாக அரங்கேற்றினார்.

1954இல் த.நா. இலட்சுமிபதி எழுதிய "ரூபவாணி" நாடகத்தில் கவிஞர் புகழேந்தியின் பாடல்கள் இடம்பெற்றன. தூத்துக்குடித் தமிழ் இலக்கியக் கழகம் 14-1-55இல் நடத்திய தமிழ்த் திருநாள் விழாவில் தமிழறிஞர் ஏ.சி. பால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிதைபாடி அறிஞர் பெருமக்களின் பாராட்டுகளைப் பெற்றார். இளங்கோ நாடக மன்றம் 24-6-84இல் நடத்திய வெள்ளி விழாக் கவியரங்கத்துக்குத்

தலைமை தாங்கிச் சிறப்பாகக் கவிதை பாடியமைக்காக, **கவிதாமணி** என்ற பட்டத்தைப் பெற்றார். திருச்சி, திருநெல்வேலி வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். **என் கவிதை** வரிசையில் இவரது கவிதைகள் தொடர்ந்து ஒலிபரப்பப் பட்டுள்ளன. முப்பதுக்கு மேற்பட்ட நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். பரிசுகளும் பெற்றுள்ளார். 1970ஆம் ஆண்டில் **இல்லறமே நல்லறம்** என்ற இவரது திருமணப்பரிசு நூல் வெளியாகியுள்ளது. இத்தகைய கவிஞரின் படைப்புகளில் ஒன்றாகிய **நெஞ்சைத் தொடும் நிலவு** என்ற கவிதைத் தொகுப்பின் சிறப்பை ஆய்ந்து அதன் வழியாகக் கவிஞரின் புலமைத் திறத்தை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நூல் பற்றி

கவிஞர் புகழேந்தி தம் கவிதைத் தொகுப்புக்கு **நெஞ்சைத்தொடும் நிலவு** எனப் பெயர் சூட்டியிருப்பது உள்ளபடியே நெஞ்சைத் தொடுவதாக அமைந்துள்ளது. இது இக்கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பு. இதில் கைம்மை நிலை, வரதட்சணை, தமிழ்மொழிச் சிந்தனை, இயற்கை, காதல், வாழ்வியல் கருத்துகள், குடும்பக்கட்டுப்பாடு, அரசியல் தலைவர்கள் போன்ற பல பொருண்மைகள் அமைந்துள்ளன. என்ன தமிழோ? கண்ணுக்குள் மண்ணா? என்னுயிர் தமிழே! உயிருள்ள இலக்கியம், வேதனை உள்ளம், விழித்தெழுக, பாட்டுப் பறவைகளே, நெஞ்சைத் தொடும் நிலவு எனும் கவிதைகள் இங்கே எடுத்தாளப்படுகின்றன. **என்ன தமிழோ?** என்ற தலைப்பில்,

> **பிஞ்சுக்கால் தவழ்கின்ற**
> **மழலைவாய்ச் சொற்களிலே**
> **பிறக்கின்றதென்ன தமிழோ? முதல்**
> **பேச்சாகும் கிள்ளைத் தமிழே!**
>
> **பெற்றெடுத்த அன்னையவள்**
> **பெருமையுடன் பாராட்டிப்**
> **போற்றுவது என்ன தமிழோ? – பெரும்**
> **பேரின்பப் பிள்ளைத் தமிழே!** (ப.29)

என்று தமிழை, கிள்ளைத் தமிழ், பிள்ளைத்தமிழ், தாலாட்டுத் தமிழ், இனிமைத் தமிழ், கொஞ்சு தமிழ், கன்னித்தமிழ் என்று கூறுவதன் மூலம் தமிழ் மீது கவிஞர் கொண்டுள்ள பற்றினை

அறியமுடிகிறது. கண்ணுக்குள் மண்ணா? என்ற தலைப்பில் வேற்றுமொழிக் கலப்புப் பற்றி,

எண்ணெயிலே கலப்படமா
குற்றம் என்பார்!
எழுத்தினிலே கலப்படத்தைக்
குறையோ சொல்லார்;
உண்ணுகின்ற சோற்றினிலே
கல்லா. . . ? அடடா,
உதவாது என வெறுத்தே
ஒதுக்கி விடுவார்,
ஒண்டமிழில் பிறமொழியின்
கலப்புக் கண்டு
உரைத்திடுவார் புதுமையென
ஒப்ப லாமா?
கண்ணுக்குள் மண் விழுந்தால்
பொறுப்போ மோநாம்?
கன்னித்தமிழில் வேற்றுமொழிக்
கலப்பா? ஒப்போம்! (ப.41)

என்று மொழியில் ஏற்படும் கலப்பைப் பற்றி முனைப்பாகச் சாடுகின்றார். என் உயிர்த் தோழி! என்ற தலைப்பில்,

பிறப்பதும் இறப்பதும் இயற்கைதான் – புவி
போற்ற வாழ்பவன் கவிஞன்தான்!
இறப்பதில் எனக்கேன் தயக்கந்தான்? – நான்
இறந்தபின் வாழ்வேன் மெய்யேதான்! (ப.19)

என்று கவிஞர் புகழேந்தி பாடியிருப்பது,

நான் நிரந்தரமானவன் அழிவதில்லை – எந்த
நிலையிலும் எனக்கு மரணமில்லை

என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளை நினைவுகூர்வதாக அமைகிறது. உயிருள்ள இலக்கியம் என்ற தலைப்பில்,

இளங்கோவும் கம்பனுமே
பாடிவைத்த
இலக்கியமே போதுமென்று
இருந்துவிட்டால்

களங்கண்ட கலிங்கத்துப்
பரணி நூலும்
கவிவேந்தன் பாரதியின்
கவித் தொகுப்பும்
உளம்பொங்கக் கிடைத்திடுமா?
புதுமைத் தமிழ்தான்
உருக்கொள்ள முடிந்திடுமா?
பாவேந்தர் தந்த
வளமான மொழியுணர்வும்
புரட்சிப் பாட்டும்
வளர்ந்தோங்க முடிந்திடுமா
சிந்திப்பீரே! (ப.27)

என்ற கவிதையின் வழியாகக் காலந்தோறும் இலக்கியங்கள் எழுவது இயல்பு. அப்படி எழுகின்ற இலக்கியங்கள் கால வெள்ளத்தை நீந்திப் பெட்டகமாக அமைவன. அந்த இறுமாப்பிலே இருந்துவிட்டால் புதிய படைப்புகள் தோன்றாமல் போய்விடும். ஆகவே, தமிழ்மொழி வளம்பெற, புதுப்புதுக் கவிஞர்கள் தேவை. புதிய சிந்தனைகள் தேவை. புதிய படைப்புகள் தேவை. கம்பனை அடுத்து ஜெயங்கொண்டானும், பாரதியை அடுத்துப் பாரதி தாசனும் அவ்வக் காலக்கட்டங்களில் சிறந்து விளங்கினாற்போல எதிர்காலத்தில் கவிஞர்கள் உருவாக வேண்டும் என்பதோடு, அப்படி வருகின்றவர்கள் முன்னோரை விஞ்சி நிற்பார்களா? என்ற வினாவோடு தன் ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

எட்டயபுரத்துக் கவிஞனின் சிந்தனை ஒரு புதுமரபைத் தோற்றுவித்து, புதிய படைப்புகளுக்கு வழிகாட்டியது போல எந்திரமயமாகிவிட்ட இக்காலக்கட்டத்தில் இயந்திரத்தின் வேகத்தோடு போட்டியிடும் படியான விவேகத்தை வளர்த்துக் கொண்டு ஏற்றமுற இலக்கியங்கள் பல படைக்க இளைஞர்களை அறைகூவி அழைப்பதைப் பின்வரும் கவிதையில் காணலாம்.

எந்திரத்தோ டெண்ணங்கள் போட்டிபோட்டு
ஏற்றமுற இலக்கியங்கள் படைப்போம் நாமே (ப.28)

கோழை உள்ளதைக் குப்பையிலே தள்ளிவிட்டுக்
காளைகாள் வருகவெனக் காலம் நம்மை அழைக்கிறது
(ப.22)

என்ற பாடல் வரிகள் மூலம் சிலர் வாழ்ந்தும் பிணம் போலத் தெரிவதற்கும், சிலர் இறந்த பின்னும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கும் அவர்களுடைய உள்ளம்தான் உரைகல்லாக உள்ளது. உற்சாக உள்ளத்தைக் கொண்டவர்கள் இறந்தபின்பும் உயிர்வாழும் செயல்களைச் செய்கிறார்கள். கோழை உள்ளத்தைக் கொண்டவர்கள் குப்பையைப்போல் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள் என்பதை நன்கு உணரலாம். வேதனை உள்ளம் என்ற தலைப்பில் கைம்பெண் நிலை பற்றி,

பூக்காரி தினம் வருவாள்; பூக்கொடுப்பாள்
பெண்களெல்லாம் வாங்கித் தம் குழல் முடிப்பார்!
சாக்காடு போக எண்ணும் கிழங்கள் கூட
சந்தனம் போல் நரைத்திட்ட கூந்தல் தன்னில்
பூக்கடை கவிழ்த்திடுவார்; மகிழ்ச்சி கொள்வார்!
பூக்களுக்கே உவமையாகும் பூவை; வாழ்வை
நோக்கும் என்னிரு விழிகள் நீரைக் கொட்டும்
நொந்தமனத் தோடுமூலை சென்ற மர்வேன்!
திரைப்படத்தைப் பார்க்கப் பெரும் கூட்டம் போகும்
திறந்த சன்னல் வழியாகப் பார்த்து நிற்பேன்!
வரைந்த உயி ரோவியம்போல் பெண்கள் கூட்டம்
வரிவரியாய்ப் போவார்தம் கணவ ரோடு!
உறைந்த நெஞ்ச உணர்வெல்லாம் மேல் எழும்பும்!
உயிரோடு என்கணவர் இருக்கும்போது
நிறைந்த இன்பக் காட்சியெலாம் தோன்றும்! இன்றோ
நெடுமூச்சு விடுகின்றேன் கைம்பெண் நானே! (ப77)

என்று அவலச் சுவையின் ஆழத்தைத் தன்கவிதையில் சுட்டுகின்றார் கவிஞர். 'விழித்தெழுக' என்ற தலைப்பில் வரதட்சணைக் கொடுமையைப் பற்றி

கன்னியின் கண்களில்
திருமண ஏக்கம்
காளையின் நெஞ்சினில்
காதலின் ஏக்கம்
அன்னையின் மனத்தினில்
தட்சணை நோக்கம்
அதனால் பெண்ணவள்
வாழ்க்கையோ தேக்கம் (ப78)

என்ற பாடல் வாயிலாக அன்பின் சின்னம் அன்னை. அந்த அன்னையும் வரதட்சணை என்னும் பிடியுள் சிக்கிக்கொண்டால் குடும்பச்சூழலே சிதைவுற்று ஒரு பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிவிடும். சமூக நிலையை இவ்வரிகளின் வாயிலாக ஆசிரியர் கூறியிருப்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. பாட்டுப்பறவைகளே என்ற தலைப்பில்,

சோம்பல் வாழ்க்கையைச்
சுட்டுப் பொசுக்கி விட்டு
நாம், நம் உழைப்பினிலே
நம்பிக்கை கொண்டிடுவோம் . . . .
நாட்டை வளப்படுத்தும்
நற்பணிகள் ஆற்றிடவே
பாட்டுப் பறவைகளே
பறந்தோடி வாருங்கள் (ப.22)

என அவர் கவிஞர்களைப் **பாட்டுப் பறவைகள்** என அழைப்பது உவமை நயத்தோடு மட்டுமல்ல கவிஞர்களுக்கு உரிய கடமையை உணர்த்துவதாகவும் உள்ளது.

நூலின் இறுதிக் கவிதை 'நெஞ்சைத் தொடும் நிலவு' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது.

கொத்து முல்லை மலர் தொடுத்துக்
குழல் முடித்தாளாம் - அன்னை
குழல் முடித்தாளாம்!
கோபம் கொண்டே எடுத்து விண்ணில்
எறிந்து விட்டாளாம் - தங்கை
எறிந்து விட்டாளாம்!
தொத்திக் கொண்ட கொத்து முல்லை
நிலவாய் மாறிற்றாம் - வெண்
நிலவாய் மாறிற்றாம்!
சிதறி விழுந்த உதிரிப் பூக்கள்
உடுக்களாயிற்றாம் - மின்னும்
உடுக்க ளாயிற்றாம்! (ப.143)

அன்னை தன் மகளுக்கு ஆசையுடன் தொடுத்த முல்லைச் சரத்தைச் சூட்டுகிறாள். அந்தச் சின்னப் பெண்ணோ அதை

எடுத்து விண்ணில் வீசி விடுகிறாளாம். அப்படி வீசிய கொத்து முல்லையே நிலவாகவும், சிதறிய உதிரிப்பூக்களே நட்சத்திரங்களாகவும் தெரிகின்றனவாம். இப்படி ஒரு கற்பனையைப் படைத்திருப்பது புதுமையாக உள்ளது.

நிறைவுரை

கவிஞர் நா. புகழேந்தி கற்பனை வளத்திலும், கருத்து நயத்திலும், கவிதைத் திறத்திலும் பழைய 'நளவெண்பா' புகழேந்திப் புலவரை நினைவுக்குக் கொண்டு வருகிறார். நூலின் இறுதிக் கவிதைத் தலைப்பிற்கேற்றவாறு பொருத்தமாக அமைந்துள்ளது. இவரது சில கவிதைகள் சாரலைப் போல் இதமாக இதயத்தைத் தீண்டுகின்றன. சில கவிதைகள் சமுதாயச் சிக்கல் குறித்த சிந்தனைக் கனலைத் தூண்டுகின்றன. இவரது கவிதைகள் படிப்பவர்க்கு இன்பத்தை ஊட்டுவதாக உள்ளன. தமிழ்நெறிக்கு மாறுபடாமல் - நமது பழம் மரபுக்கேற்பப் புதுமைக் கருத்துகளைத் தெள்ளத் தெளிந்த நல்ல தமிழில் கவிதைகளைத் தந்துள்ளார். இவர் கவிதைக்கு அணிந்துரை தந்த டாக்டர் சிலம்பொலி செல்லப்பனார் (முன்னாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர்) புகழேந்தியின் கவிதைகள் மரபுக்கவிதை மட்டுமன்று, மறக்க முடியாத கவிதைகள் என்று பாராட்டுகிறார். பேராசிரியை முனைவர் சரளா ராஜகோபாலன், இந்த மரபுநிலைக் கவிஞருடைய பாடல் தொடர் வண்டியின் செந்தமிழ்ச் சொல் சக்கரங்கள், எளிமை, இனிமை என்ற இணை இருப்புப் பாதைகளின்மேல் இயங்குகின்றன என அணிந்துரையில் பாராட்டுகிறார். புகழேந்திக்குப் புகழ் சேர்ப்பதாக அமைய வல்லது **நெஞ்சைத் தொடும்** நிலவு எனும் இக்கவிதைத் தொகுப்பு என வியந்து போற்றுகிறார். தமிழ்நெறிக் காவலர் பி.எஸ்.எஸ். கிருட்டினமூர்த்தி தூத்துக்குடிக் கடலில் கண்டெடுத்த கவிமுத்து புகழேந்தி நெஞ்சைத் தொடும் நிலவாக நம் உள்ளத்தில் நீடு விளங்குவார் என்றால் மிகையாகாது என்கிறார்.

மூலநூல்

நெஞ்சைத் தொடும் நிலவு, கவிஞர் நா. புகழேந்தி, முதற் பதிப்பு, 1989, புகழ்மலர் பதிப்பகம், தூத்துக்குடி.

பசுவய்யா

கவிஞர் அறிமுகம்

சுந்தர ராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட பசுவய்யா, 1931ஆம் ஆண்டு மேத் திங்கள் 30ஆம் நாளில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் வடசேரியில் தழுவிய மகாதேவர் கோவில் எனும் கிராமத்தில் சுந்தர ஐயர், தங்கம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது தந்தையின் சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைணவம் ஆகும். இவருடன் பிறந்தோர், மூன்று சகோதரிகள்.

1939ஆம் ஆண்டு வரையிலும் இக்குடும்பம் இவர் தந்தையின் பணி காரணமாகக் கோட்டையத்தில் இருந்தது. இவர் கற்ற முதல் மொழி மலையாளம். 1939இல் இக்குடும்பம் நாகர்கோவிலுக்குத் திரும்பியதும் இவர் கற்ற மொழிகள் ஆங்கிலமும் சமஸ்கிருதமும் ஆகும்.

> படிப்பில் சிறிதும் கவனம் குவியவில்லை. கடைசி மாணவர்களில் ஒருவனாகவோ, பல சமயம் அவர்களில் முதல்வனாகவோ இருந்தேன்' (சுந்தர ராமசாமி, காற்றில் கலந்த பேரோசை, காலச்சுவடு பதிப்பகம், மு.ப. 1998, ப. 301)

என்று அவரே குறிப்பிடுகிறார். பத்து வயதளவில் இளம்பிள்ளை நோயினால் தாக்கப்பட்டு, அதன்பின் ஐந்தாறு ஆண்டுகள் அவதியுற்றதனால் எஸ்.எஸ்.எல்.சி.க்கு மேல் இவர் படிப்பைத் தொடரவில்லை. மணிக்கொடி எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் படித்திருந்த தாயின்வழி, பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், ந. சிதம்பர சுப்ரமணியன் போன்றவர்களை அறிந்தார். பதினாறு வயதில் தமிழை வாசிக்கவும் பதினெட்டு வயதில் எழுதவும் கற்றுக்கொண்டார். 1952இல் புதுமைப்பித்தன் நினைவு மலரை வெளியிட்டார். அதில் இடம்பெற்றுள்ள 'முதலும் முடிவும்' என்பதே இவர் எழுதிய முதல் கதை.

புதுமைப்பித்தனின் 'மகாமசானம்' இவரை ஈர்த்த சிறுகதைகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவுடைமைத் தத்துவத்தால் உருவாகும் சமூக அமைப்பில் மட்டுமே ஏற்றத்தாழ்வுகள் அற்றதும், சமூகப் பாதுகாப்புக் கொண்டதுமான வாழ்க்கை தோன்றும் என்று நம்பினார். கவிமணியைச் சிலமுறை சந்தித்தபேறும் இவருக்குண்டு.

கிருஷ்ணன் நம்பி, தொ.மு.சி. ரகுநாதன், ப. மாணிக்கம், ஜி. நாகராஜன், பாலதண்டாயுதம், தி.க.சி., அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, நா. வானமாமலை, என்டி வானமாமலை, முருகானந்தம், நெல்லை எஸ். வேலாயுதம், க.நா.சு., நா. பார்த்தசாரதி, கு. அழகிரிசாமி போன்றோரை நண்பர்களாகப் பெற்றவர். மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ் முதலான பல அயல்நாடுகளுக்குச் சென்ற சிறப்பு இவருக்குண்டு.

1954இல் இவருக்குக் கமலா என்பவருடன் திருமணம் நடந்தது. இரு பெண்களும் ஒரு ஆணும் இவரது பிள்ளைச் செல்வங்களாவர்.

> இந்த மண்ணில் உன்னதம் எதுவும் முளைக்காது என்று ஒரு விமர்சனப் பார்வை உண்டு. சகல உன்னதங்களையும் இந்த மண்ணில் முளைக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டவன் நான். காலங்காலமாகத் தாழ்வுற்றுக் கிடந்த சமூகங்கள் மிகக்குறுகிய காலப்பொழுதில் அறிவின் கூர்மைகளோடும், கலைகளின் வீச்சுகளோடும் சிலிர்த்துக்கொண்டு எழுந்து வந்திருக்கின்றன. இதுபோன்ற கலை எழுச்சிகளையும், அறிவுப் புரட்சிகளையும் சரித்திரங்கள் துல்லியமாகப் பதிவு செய்திருக்கின்றன. அங்குப் பள்ளங்கள் நிரம்பி அவற்றின்மீது கோபுரங்கள் எழுந்திருக்கின்றன. உலகில் ஏதாவது ஒரு மூலையில் ஒரு உன்னதம் சாத்தியம் என்றால் அதே உன்னதத்தை இங்கும் எழுப்பிக் காட்ட முடியும். நமக்குக் கனவுகள் வேண்டும். அந்தக் கனவுகளை மண்ணில் இறக்க அசுர உழைப்பு வேண்டும். பரஸ்பரம் தொடை தட்டிக் கொள்வதைவிட்டு, ஆக்கத்தை நோக்கி நகரும் மனவிகாசம் வேண்டும். பொது எதிரிகளைக் கிழிக்கும் நெஞ்சுரம் வேண்டும். சவால் வேண்டும். தீர்க்கதரிசனம் வேண்டும். அப்போது இங்கும் பள்ளங்களை நிரப்ப முடியும். கலைக்கோபுரங்களை எழுப்ப முடியும் (விரிவும் ஆழமும் தேடி, காலச்சுவடு பதிப்பகம், மு.ப. 1998, பின்னட்டை)

என்ற கவிஞரின் வாக்கு அனைத்துப் படைப்பாளிகளின் மனத்திலும் பொருந்தி அமைய வேண்டிய ஒன்று.

> *மறைவுக்குமுன் படித்து முடிக்க ஆசைப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போவது அமைதி யின்மையைத் தருகிறது (காற்றில் கலந்த பேரோசை, ப. 304)*

என்னும் இவரது கூற்று இவரது இலக்கிய தாகத்தினை உணர்த்துகின்றது.

படைப்புகளும் பாராட்டுகளும்

தமிழிலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தடம்பதித்த சுந்தர ராமசாமியின் இலக்கியப்பணி **தோட்டியின் மகன்** என்ற நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து துவங்குகிறது. **ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள்** ஆகிய நாவல்களும், அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் **(காகங்கள்)**, பல திறனாய்வுக் கட்டுரைகளும், இரு மொழிபெயர்ப்பு நூல்களும், மூன்று நாடகங்களும் இவரது படைப்புகள். **107 கவிதைகள்** என்ற தொகுப்பு இவரது கவிதைப் படைப்பு. பிச்சமூர்த்தி பற்றிய இவரது ஆய்வு நூல் **ந. பிச்சமூர்த்தியின் கலை - மரபும் மனிதநேயமும்** என்றும், கல்வியாளர் வசந்திதேவியுடன் இவர் நிகழ்த்திய உரையாடல் **கல்வி: வே. வசந்திதேவியுடன் ஓர் உரையாடல்** என்றும் நூலாக்கம் பெற்றுள்ளன. இவரது **ஜே.ஜே. சில குறிப்புகள்** மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **ஒரு புளியமரத்தின் கதை** மலையாளம், இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றில் மொழிபெயர்க்கப் பட்ட சிறப்பினைப் பெற்றுள்ளது. 1988ஆம் ஆண்டு **காலச்சுவடு** இதழ் இவரால் தொடங்கப்பட்டது. டொரான்டா (கனடா) பல்கலைக்கழகம் **வாழ்நாள் இலக்கியச் சாதனைக்கான இயல்விருதை** 2001ஆம் ஆண்டு இவருக்கு வழங்கியுள்ளது. இவர்தம் வாழ்நாள் இலக்கியப் பணிக்காக, **கதா சூடாமணி** விருது 2003இல் வழங்கப்பட்டது.

தனிப்பட்ட சில காரணங்களுக்காக 1970 முதல் 1977 வரை இவர் எதுவும் எழுதாமல் இருந்திருக்கிறார். 'மோனத்தவம்' என்றெல்லாம் ஒரு சிலரால் இவ்விடைவெளி வருணிக்கப் பட்டதாக அரவிந்தன் (அழைப்பு, காலச்சுவடு பதிப்பகம், மு.ப. 2003, ப. 11, அணிந்துரை) குறிப்பிடுகின்றார்.

> எந்தக் கலைஞனும் தன் மொழியில் இல்லாததைத் தேடி அளிக்கவோ, இடைவெளிகளை நிரப்பவோ, இலக்கிய வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கவோ, மொழிக்குச் செழுமை யூட்டவோ எழுதுவதில்லை. நவநவமாய் ஆபரணங்களைச் செய்து அன்னையின் கழுத்தில் சூட்டுவது அல்ல, தன் கழுத்திலேயே சூட்டிக்கொண்டு அழகு பார்க்கவே அவனுக்கு ஆசை. கலைஞனின் சமூகப் பொறுப்புகளும் பொதுநல உணர்ச்சிகளும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டுவிட்ட காலம் இது. அடுக்கிலும், தேர்விலும், அழுத்தத்திலும், முடிப்பிலும் அவனுடைய ரத்த நம்பிக்கைகள் துளிர்க்கின்றன (சுந்தர ராமசாமி, ஒரு **புளியமரத்தின் கதை**, காலச்சுவடு பதிப்பகம், மு.ப. 1996, முதற்பதிப்பின் முன்னுரை)

என்று இன்றைய கலைஞர்களைப் பற்றிய தம் கருத்தினைச் சுட்டுகிறார்.

சுந்தர ராமசாமி **படைப்புலகம்** என்ற தலைப்பில் ராஜமார்த்தாண்டன் என்பவர் நூலொன்றினை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. **இந்தியன் எக்ஸ்பிரஸ், அகில இந்திய வானொலி, தினமலர், தினமணி, சுபமங்களா, மாத்ருபூமி, தினமணிசுடர்** முதலான ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்த சிறப்பும் இவருக்குண்டு.

கவிதை பற்றிய கவிஞரின் கருதுகோள்கள்

பிறதுறைகளோடு ஒப்பிடுமிடத்து, கவிதைக்கு இவர் ஆற்றிய பணியின் எல்லை குறைவாயினும், கவிதை பற்றி இவர் பல்வேறு கருத்துகள் கொண்டுள்ளமை சுட்டத்தக்கது. இந்தியன் எக்ஸ்பிரஸிற்கு அளித்த நேர்காணலில் கவிதை பற்றி இவர் கூறுமிடத்து,

> கவிதையை எனக்கு அனுபவிக்கத் தெரிகிறதே தவிர அது என்ன என்று என்னால் கண்டு சொல்லத் தெரியவில்லை. மேலான கவிதையைப் படிக்கும்போது என்னிடம் எனக்குத் தெரியாமல் உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு பகுதி விழித்துக் கொள்வதை உணருகிறேன் (விரிவும் ஆழமும் தேடி, ப. 17-18)

என்கிறார். புதுக்கவிதையின் வரையறை பற்றிக் கூறுமிடத்து,

> *காலத்தோடு கவிதை பொருந்தி நிற்கிறதா என்பதுதான் எனக்கு முக்கியம். கலாச்சாரச் சிந்தனைத் தொடர்பு கொண்ட இந்தக் காலத்தைக் கவிதை பிரதிபலிக்க வேண்டும். அதுதான் என் முக்கிய எதிர்பார்ப்பு (விரிவும் ஆழமும் தேடி, ப. 34)*

என்கிறார். கவிதையின் மேலான தன்மை பற்றிக் கூறுமிடத்து,

> *சிறுகதைகள், நாவல்கள் ஆகியவை செயல்படும் தளங்களுக்கு அப்பால் சில மேல்நிலைத் தளங்கள் இருக்கின்றன. இந்தத் தளங்களில் கவிதை செயல்படுகிறது. இது மிகவும் சூஷ்மமான தளம். அதிக அதிர்வுகள் கொண்ட தளம். படைப்பின் அளவிற்குச் சம்பந்தமில்லாத விரிவை மனதில் உருவாக்கும் தளம் (விரிவும் ஆழமும் தேடி, ப.33)*

என்று கூறி, கவிதையின் உன்னத நிலையையும், மற்ற இலக்கியங்களினின்று மாறுபட்டு விளங்கும் பான்மையையும் பறைசாற்றுகிறார். மேலும்,

> *நேரடியான கருத்துகளைக் கவிதையில் சொல்லி அந்தக் கருத்துகளின் வலுவினால் கவிதைகள் உயர்வானவை என்று நினைக்கக் கூடிய போக்கில் எனக்கு உடன்பாடில்லை (விரிவும் ஆழமும் தேடி, ப55)*

என்றும் கூறுகிறார். அகில இந்திய வானொலிக்கு அளித்த நேர்காணலில்,

> ***நமக்கு இருக்கும் வாய்ப்பு கவிதை சார்ந்த மிகப்பெரிய கோட்பாடு ஒன்றை உருவாக்குவது தான். இரண்டாயிரம் வருடத்திய கவிதைச் செல்வம் நமக்கு இருப்பதால். ஆனால் கவிதைக் கோட்பாடுகளை உருவாக்குவதில் ஆர்வம் இல்லாமல் கவிதை பற்றிய மேல்நாட்டுச் சிந்தனைகளை அப்படியே எடுத்துக் கொள்கிறோம். கவிதைகளும் கவிதை சார்ந்த கோட்பாடுகளும் நமக்கு உலகத்துக்கு அளிக்க இருக்கின்றன (விரிவும் ஆழமும் தேடி, ப. 29)***

என்று விழிப்பின் தேவையையும் இலக்கியச் செழுமையையும் உணர்த்துகிறார். புதுக்கவிதைகளின் நெரிசல் பற்றிக் கூறுமிடத்து,

நெரிசல் பயங்கரமாக இருக்கிறது. ஆனால் அதிகக் கவலை கொள்ள ஒன்றும் இல்லை. இந்தப் புற்றீசல்களைக் காலம் சுலபமாகப் பெருக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. பிரபல வார இதழ்கள் இந்த வாரம் வெளியிடும் கவிதைகள் மறுவார இதழ்கள் வெளிவருவதற்குமுன் மரித்து விடுகின்றன. சிறுகதையைக் குட்டிக் கதையாகவும் நாவலைத் தொடர்கதையாகவும் கட்டுரையைக் கிசுகிசு ஆகவும் சீரழித்த பல பத்திரிகைகள் புதுக்கவிதையைத் துணுக்குகளாகச் சீரழித்திருக்கின்றன.

துணுக்கு கவிதை அல்ல. அரசியல் சுலோகங்கள், கருத்துப் பிண்டங்கள் கவிதைகள் அல்ல. கவிதை ஆழமான அனுபவ அலைகளை எழுப்பக் கூடியது. சொற்சிக்கனம் கொண்டது. தொனி கொண்டது. நுட்பமும் கூர்மையும் கூட்டி மொழிக்குப் புதிய பரிமாணங்களை அளிக்கக்கூடியது (விரிவும் ஆழமும் தேடி, ப. 81)

என்று இக்கால இலக்கியப் போக்கினையும் அவற்றுள் கவிதை பெறும் இடத்தினையும் நுவல்கிறார்.

கவிதையையோ கலைகளையோ தத்துவங்களையோ நான் புனித வஸ்துவாகக் கருதுவதில்லை. ஒவ்வொன்றின் மீதும் ஏற்றப்பட்டிருக்கும் புனிதத்தை அழித்துச் சாரத்தை வெளிப்படுத்துவது படைப்பு நோக்கின் மிக முக்கியமான சவால் என்றே கருதுகிறேன்' (விரிவும் ஆழமும் தேடி, ப. 125)

என்ற இவரது கூற்றின் மூலம், கவிதை உயர்வானது என்று பொய் வேடம் போடாமல் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே கூறும் இவரது தன்மை வெளிப்படுகின்றது.

107 கவிதைகள்

107 கவிதைகள் எனும் தொகுப்பில் கவிஞரின் *நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக* ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றிருந்த கவிதைகளும் அதன்பின்னர் (1995 வரை) அவர் எழுதிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைத் தொகுப்பே இக்கட்டுரைக்கு முதன்மைக்களமாக அமைகின்றது.

இயற்கை, வாழ்வியல் சிந்தனை, சங்க இலக்கியத் தாக்கம், அறிவுரை, வெளியீட்டு முறை ஆகிய உட்தலைப்புகளைக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. இவைவழிக் கவிஞரின் ஆளுமைத்திறனை வெளிப்படுத்தலே இவண் நோக்கம்.

இவர்தம் கவிதைகள் பற்றி ராஜமார்த்தாண்டன் (*சுந்தர ராமசாமி படைப்புலகம்*, கலைஞன் பதிப்பகம், மு.ப. 2000, ப. 11) கூறும் பொழுது,

> சுந்தர ராமசாமியின் கவிதைகளில் உத்வேகம், விரிவு, நுட்பம் ஆகிய குணாம்சங்களுடன் அறிவும், விலாசமான இதய உணர்வுகளும் சமன்படும் வெளிப்பாட்டை முதன்மையாகக் காணலாம்

என்று கூறுதல் குறிப்பிடத்தக்கது.

இயற்கை

சங்கம் தொட்டு இக்கால இலக்கியவகையான ஹைகூ வரை இயற்கையைப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். இக் கவிஞரும் இயற்கையை வியந்தும் போற்றியும் வருணித்தும் கவிதைகள் புனைந்துள்ளார். இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளில் கடலில் ஒரு கலைஞன் (ப. 38), காற்று (ப. 47), கடல் சிரித்தது (ப. 59), மீண்டும் மீண்டும் (ப. 68), விருட்ச மனிதர்கள் (ப. 75), கடலுக்குத் தெரியாது (ப. 81), இந்த உலகம் (ப. 93), பிறப்பின் முதற்கணம் (ப. 113), காற்றில் எழுதப்படும் கவிதை (ப. 116), விம்மச் செய்யும் உயிரின் ஒளி (ப. 127), பசிஃபிக் கடலோரம் (ப. 132) ஆகியவை இயற்கையின் இயல்பை விளக்குவனவாய் உள்ளன. கவிஞர் கவிபுனைய எடுத்துக்கொண்ட கூறுகளுள் இயற்கையே மிகுதியாக இடம்பெற்றுள்ளது. அவற்றிலும் 'கடல்' பற்றிய கவிதைகளே மிகுதியாகப் பாடப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இயற்கையை வியத்தலாகவே இவை அமைகின்றன. 'கடலில் ஒரு கலைஞன்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

கடலலையோ
அன்று போல்
இன்றும்

நான் நான் என
அகங்கரித்து
நான் நான் என
ஓயாது அரற்றி
நிமிர்ந்தெழுந்து. . .
பொசுக்கென வீசும் காற்றின்
முதுகுபிடித் தெப்படியோ ஏறி
குடைந்தெழுந்து
உருண்டு திரண்டு உருவங்கொண்டு
துன்முகங் காட்டத்
துடிதுடித்து
வாழத் துடிதுடிக்கும்
அலையே
நீயும் நீரே (ப. 39)

என்ற வரிகளில், கடலின் அற்புதச் செயல்வழித் தன்னம்பிக்கை எனும் சீரிய விதையை மனித மனத்தில் விதைக்கிறார் கவிஞர். கடலின் ஆற்றலையும் முனைப்பையும் வியந்து போற்றுகிறார்.

அலைகள் பாதம் முளைத்துக்
கரையேற வந்தன (ப. 59)

எனினும் சூல்கொண்ட போது
களி நடனங்கள்
சாகசங்கள்
அதிசாமர்த்தியங்கள்
கரையில்
இப்படித் தாண்டித் தெறிக்கும் என்பது
அவளுக்குத் தெரியாது
இப்போது அலை உறுமலின் எச்சரிக்கைக் காலம்
கரையைக் கடலாக்குவது அவளுக்கு ஒரு பொருட்டல்ல
(ப. 81)

என்ற வரிகளில், நாம் அண்மையில் கண்ட சுனாமியைக் கவிஞர் முன்பே படம்பிடித்துக் காட்டியுள்ளமையைக் காண்கிறோம். 'இந்த உலகம்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

வானம் வந்திறங்கும் போது இளைப்பாற
மேகத்தால் ஒரு கட்டில் செய்தேன்

காலை இளங்கதிர்களைக் கூட்டி
அவற்றின் ஒளியால் இசை செய்து
கட்டிலின் அருகே வைத்தேன்
விண்மீன்களை அள்ளியெடுத்து
தெருவெங்கும் இறைத்து வைத்தேன்
கடுந்தவத்தின் முடிவில்
வானம் வந்திறங்கிற்று
சயனிக்க வேணும் என்றேன்
கழிப்பறை எங்கே
என்று கேட்டது வானம் *(ப. 93)*

என்ற இறுதி வரிகள் கவிஞரின் எள்ளல் திறனையும், மற்ற வரிகள் கற்பனை ஆற்றலையும் காட்டுகின்றன.

நடுநிசி நாய்கள் (ப. 48), நான் கண்ட நாய்கள் (ப. 56), நாய்க்குரைப்பின் காலங்கள் (ப. 74) ஆகிய தலைப்புகளிலமைந்த கவிதைகளில் நாய் பற்றி நுவல்கிறார். நாய்களின் ஒவ்வொரு அசைவையும் செயலையும் ஆழ்ந்து நோக்கியுள்ள கவிஞர், 'நடுநிசி நாய்கள்' என்ற கவிதையில்,

இந்த நடுநிசி நாய்கள்
இருள் விழுங்குகையில்
தொண்டையில் சிக்கிக்
கத்திச் சாகின்றன *(ப. 48)*

என்று இரவில் உறங்கவிடாமல் குரைக்கும் நாய்களைச் சாடுகிறார். இக்கவிதை முழுவதுமே நாயின் மீது கவிஞர் கொண்ட வெறுப்பு வெளிப்படுகின்றது.

'நான் கண்ட நாய்கள்', 'நாய்க் குரைப்பின் காலங்கள்' ஆகிய கவிதைகளிலும், மேற்சுட்டிய கவிதையின் தோரணையிலேயே நாய்களைச் சாடுகிறார்.

சில நாய்கள்
வேளைகெட்ட வேளைகளில் உறங்கும்
சில நாய்கள்
ப்ளுக்கெனக் கக்கி
அக் கக்கலை

அதி சுவாரஸ்யமாய் நக்கித் தின்னும் . . .
சில நாய்கள்
இருந்த இருப்பில்
கத்தத் தொடங்கி
நிறுத்தத் தெரியாமல்
அக்கத்தலில் மாட்டிக் கொண்டு சுழலும் (ப. 56)

நாய்க் குரைப்பின் பொருள்பற்றி நான்
யோசிப்பது ஏனெனில்
வேறெங்கும் பொருளற்ற தீவிரம் இப்படிப்
பீறிடுவதை நான் கண்டதில்லை

தன் உடலிலுள்ள ஒவ்வொரு அணுவையும் குவித்து
அடி வயிற்றை எக்கி
சூன்யத்தில் தலை தூக்கி
நாய்கள் குரைப்பதை நீங்களும் கவனித்திருப்பீர்கள் (ப.74)

பூனைகளைப் பற்றி இரு இடங்களில் கவிஞர் சுட்டுகிறார். 'பூனை பற்றி ஒரு குறிப்பு (ப. 48)', 'வித்தியாசமான மியாவ் (ப. 157)' ஆகிய கவிதைகளில் இதனைக் காணலாம். பூனை பற்றி ஒரு குறிப்பு என்பதைக் கவிதை வடிவில் அமைக்காமல் பத்தி வடிவில் பூனை பற்றிய செய்திகளைத் தருகிறார். 'வித்தியாசமான மியாவ்' என்ற கவிதையில்,

எனக்குத் தெரிந்த பூனை ஒன்று
நேற்று இறந்தது
சவ அடக்கத்துக்கு
நாங்கள் போயிருந்தோம் . . .
நான் பேசத் தொடங்கினேன்:
'இந்தப் பூனையின் மியாவ் மியாவ்
வேறு பூனைகளின் மியாவ் மியாவிலிருந்து
வித்தியாசமானது
மேலும் (ப. 157)

என்ற வரிகளில், கவிஞரின் நகையுணர்வு வெளிப்படுவதாக முதலில் தோன்றினும், ஏதேனும் குறிப்புப் பொருளைப் பொதிந்து வைத்துள்ளாரோ என்ற ஐயம் பின்னர் எழுகிறது.

வாழ்வியல் சிந்தனை

வாழ்க்கை பற்றிய கவிஞரின் சிந்தனையோட்டம், இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகளில் தென்படுகின்றது. 'விருட்ச மனிதர்கள்', 'அலைச்சல்', 'கொஞ்சம் விச்ராந்தியாய் இரு', 'உன் கவிதையை நீ எழுது', 'காலம்', 'நடு வழியில் மறித்த வயோதிகம்', 'பந்தின் கதை', முதலான கவிதைகளில் இதனைக் காணலாம். 'விருட்ச மனிதர்கள்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

மரங்கள் உன்னதமானவை
கம்பீரமான எளிமை
நிர்மலமான இதயம்
மேலே மேலே என்று செல்லும் அவா
சூரியக் கிரணங்களில் குளிப்பதில் மோகம்
மண்ணை எப்போதும் மறக்காத தன்மை
மௌனம்
மனிதர்கள் மரங்கள் போல் வாழும் காலம் வரும் (ப. 75)

என்ற வரிகளில், மரத்தின் மாண்பினையும் மனிதரிலிருந்து அது வேறுபட்டுள்ள பாங்கினையும் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் எனும் முறைமையினையும் உணர்த்துகிறார் கவிஞர். 'அலைச்சல்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

'நாளை வாழ்வின் துவக்கம்' என
மீண்டும் குறித்தென்ன பயன்
குறித்த பொழுதெல்லாம்
துவங்காத வாழ்வு
மீண்டும் குறிக்கத் துவங்குமென
மதிமயங்கி
மீண்டும் நாளையெனத் தவணையிட்டுப் பயனென்ன
(ப. 36)

என்ற வரிகள், நாளை நாளை என்றெண்ணி நாளைக் கழிப்போர்க்கு நாளை என்பது இன்றே இப்பொழுதே வரவேண்டுமென அறிவுரை கூறும் விதமாய் அமைந்துள்ளன.

'காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது' என்பது அறிஞர் வாக்கு. 'காலமும் அலையும் எவருக்கும் காத்திராது', 'ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா'

முதலான பழமொழிகள் காலத்தின் அருமையை உணர்த்துவன. கவிஞர் காலத்தின் அருமை பற்றி 'காலம் (ப. 19)', 'அலைச்சல் (ப. 36)' 'நடுவழியில் மறித்த மரணம் (ப. 99)' ஆகிய கவிதைகளில் நுவல்கிறார். 'காலம்' என்ற கவிதையில்,

வயோதிகம் மறித்தது நடுவழியில்
நான் காதலைத் தேடிச்சென்று கொண்டிருந்த போது
'விடு என்னை
இப்போதுதான் உணர்ந்து கொண்டேன் காதலின் அருமையை
என்று அதன் காலில் விழுந்து கெஞ்சினேன்
'சற்றுமுன்தான் நான் வயோதிகம்
இப்போது மரணம்' என்று
என்னை இறுகத் தழுவிக் கொண்டது (ப. 99)

என்ற வரிகளில், எள்ளற் குறிப்போடு காலத்தின் அருமையை உணர்த்தியுள்ளார். காதல் எனும் அரக்கனிடம் இறுதி வரை சிக்கிக் கொள்ளாதவரை வையத்தில் காணல் அரிது. காதலைத் தொடாத கவிஞரைக் காணல் அதனினும் அரிது. இக்காலக் கவிஞருள் பலரும் காதலையே மையப்பொருளாகக் கொண்டு கவிதைகள் இயற்றுகின்றனர். இக்கவிஞர் ஒரேயொரு கவிதையில் ('பூர்த்தி செய்யாத இடம்' - ப.85) மட்டும் காதலைப் (ஒருதலைக் காதலைப்) புனைந்துள்ளார். மேற்கண்ட சான்றுகள் வழி வாழ்வியல் பற்றிய கவிஞரது சிந்தனைகளை அறியலாம்.

அறிவுறுத்தல்

கவிஞர் பல இடங்களில் அறிவுரை கூறும் முறையில் கவிதைகளைப் படைத்துள்ளார். உன் கை நகம் (ப. 13), கதவைத்திற (ப. 15), அலைச்சல் (ப. 36), கொஞ்சம் விச்ராந்தியாய் இரு (ப. 60), சாத்திக்கிடக்கும் கதவுகள் (ப. 67), உன் கவிதையை நீ எழுது (ப. 97) ஆகிய கவிதைகள் இவ்வகையின.

'ஒன்றை அறிவிப்பதன்று கவிஞனின் நோக்கம்; ஒன்றை உணர்த்தி வைப்பதே கவிஞனின் தொழிலாகும்' என்பார் கைலாசபதி (கவிதைக்கலை, ப. 127). அவ்வழி அறிவித்தலோடு நின்று விடாமல், அறிவுரை கூறி உணர்த்துதலை இவர் கவிதைகளில் காணமுடிகின்றது. 'சாத்திக்கிடக்கும் கதவுகள்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

சாத்திக்கிடக்கும் சன்னல் கதவுகள் சிக்கிக்கொள்ளும்
அவ்வப்போது திறக்காத தப்பு
இப்போது குத்து உள்ளங்கையில் பலம்கொண்ட மட்டும்
மணிக்கட்டு நரம்புகள் விர்ரென்று தெறிக்கும்
குத்து
தெறிக்கும்
விடாதே
ஒரு உபகரணம் தேடியேனும் அதைத்திறந்து விடு
வானத்தைப் பார்க்க உனக்குப் பல இடங்களுண்டு
வானம் உன் அறையைப் பார்க்க வேறுவழி எதுவுமில்லை
சிக்கும் கதவுகளைத் திறந்து விடு (ப.67)

என்ற வரிகளில், செயலில் ஈடுபடாமல் முடங்கிக் கிடப்போரைத் திருத்த சாளரத்தைக் கருவியாகக் கொள்கிறார். நம் முன்னேற்றம் நம் கையில் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார் கவிஞர். 'உன் கவிதையை நீ எழுது' என்ற கவிதையில்

உன் கவிதையை நீ எழுது
எழுது உன் காதல்கள் பற்றி கோபங்கள் பற்றி . . .
எழுது உன் கவிதையை நீ எழுது
அதற்கு உனக்கு வக்கில்லை என்றால்
ஒன்று செய்
உன் கவிதையை நான் ஏன் எழுதவில்லை என்று
என்னைக் கேட்காமலேனும் இரு (ப. 94)

என்ற வரிகளில், கவிதையை எழுதத் தூண்டுவதோடு நின்றுவிடாமல் எழுதாதவரை வழக்குச் சொல்லால் (வக்கில்லை) சாடவும் செய்கிறார். 'கவிதை' என்று இங்குக் கவிஞர் குறிப்பதை 'வாழ்க்கை' என்பதன் குறியீடாகக் கொள்ளல் பொருத்தமாய் அமையும். அவரவர் வாழ்வை அவரவரே அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இங்குக் குறிப்பாகக் கூறியுள்ளதாகக் கொள்ளலாம். மேலும் உயிர்ப்பலியைத் தவிர்க்கக் கூறி அறிவுறுத்தியும் இரு கவிதைகளைப் (ப. 62, 72) படைத்துள்ளார்.

சங்க இலக்கியத் தாக்கம்

தலைவன் போர்மேற்சென்று மாற்றாரை வென்று விலங்குகள் உறையும் கானகம் வழி, தேர்ப்பாகனைத் துரிதப்

படுத்தி வர, தலைவி தலைவனின் தேர்ப்புரவியின் குளம்போசையைக் கேட்கக் காத்துக்கிடக்கும் சங்க அக இலக்கியக் கவிதை நிலையை இக்காலக்கவிதை வடிவில் புனைந்துள்ளார் கவிஞர்; நூற்று முப்பத்து மூன்று வரிகளில் இக்கவிதை 'மூடுபல்லக்கு' என்ற தலைப்பிலமைந்துள்ளது.

ஒற்றைக் குதிரை வீரன்
வாளுருவி முன்னேக
பதின்மர் தோள்சரிய
ஈரக்கருமை
முதுகு படர்ந்து ஓடிவழிய (ப. 31)

என்ற வரிகளில் தலைவனின் போர்த்திறனையும்,

மான் கூட்டம்
மருண்டு மதியிழந்து நிற்க
இமைகள் விரிந்து
விழியோரம் கிழிய
நிமிர்ந்த நீள்செவிகள்
திசைதிசையாய் சுழன்று வர
பாய்ந்தொன்று ஆரம்பம்கூட்ட
பதினாயிரம் பின்தொடர்ந்து ஓட (ப.31-32)

என்ற வரிகளில் தலைவன் மீண்டு வரும் வனத்தின் எழிலையும்,

கால்பாவா நிலைநின்று
நிலைகொள்ளக் கதியின்றி
சரசம் மீதூற
குருதி அழுத்த
நாளங்கள் புடைக்க
கலவிக் களியாம்
நாடகத்தின் ஒத்திகைகள்
மனத்திரையில் விரிந்துவர
ஊதுவத்தி
குறுகிவர
பொழுதும் தேய
பூக்கள் கட்டவிழ்த்து புன்னகைக்க
பஞ்சணையில்
கவிழ்ந்து கண்புதைத்து

குளம்போசைக்குக்
குதித்தெழுத்து நின்று
தெரு பார்க்க நிலை குத்தி
நிலை குலையும் நிலை நிற்கும்
பீதாம்பரப் பெட்டகந்தான்
நின்று படபடக்க (ப.33)

என்ற வரிகளில், தலைவியின் நிலையையும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் கவிஞர். மேற்கண்ட வரிகள் கவிஞர் சங்க அக இலக்கியங்களைக் கற்றவர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

வெளியீட்டு முறை

கவிஞர், புதுக்கவிதை வடிவினைத் தம் கருத்தை வெளியிடக் கருவியாகக் கொள்கிறார். விச்ராந்தி, உபகரணம், அபோதம், அஸ்தமனம், ஜீவத்துடிப்பு, சரசம் முதலான சமஸ்கிருதச் சார்பு கொண்ட சொற்களை இவர் கையாளுதற்கு இவரது ஆரம்பகாலச் சமஸ்கிருதக் கல்வி ஒரு காரணம் எனக் கருதலாம். பெரும்பாலான கவிதைகளைக் குறியீட்டு உத்தி கொண்டே அமைத்துள்ளார்.

உயிர்ப்பலியை அரசாங்கமே தடை செய்தாலும், பின்னர் அச்சட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது. முன்னர் நடைமுறையில் இருந்த சட்டமும் கோயில்களில் பலியையே தடுத்தது. மனித வயிறுகளை நிரப்பும் பலிகள் தடுக்கப்படவும் இல்லை; தவிர்க்கப்படவும் இல்லை. 'கன்னியாகுமரி' என்ற கவிதையில்,

எங்கிருந்தோ வந்து
சூரியாஸ்தமனத்தை மறைக்கிறது
இந்த ஆட்டுக்குட்டி
அசடு
அபோதம்
தன்னிலை அறியாதது
இடம் பெயர்வதா
நின்ற நிலையில் நிற்பதா?
மூளையில் தர்க்கம்
அறுபட்டு விழித்ததும்
நகர்ந்தோடியிருந்தது ஆட்டுக்குட்டி (ப. 62)

என்ற வரிகளில், மேலோட்டமாகக் காணும்போது உயிர்ப் பலியைக் கண்டிப்பதாகத் தோன்றினும் சற்று ஆழ்ந்து நோக்குமிடத்து இறுதி மூன்று வரிகளில் 'கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் தேவையா' என்ற குறியீட்டினைப் பொதிந்து வைத்துள்ளமை விளங்கும். அறுபட்டபின் நகர்ந்தோடிய ஆட்டின் வழி, செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் பின்செய்யும் செயலின் தீமையைக் குறிப்பாக்குகிறார் கவிஞர்.

'அது தான், ஆனாலும்' என்ற கவிதையில்,

இறகுகள் அறுந்த பறவைக்கு
ஜீவத்துடிப்பே இறகுகளாய்
உடல்கிழித்து வெளிப்பட்டது போல்
அப்போதும் பறக்கத் துடிக்கும்
அது
இது கண்டு
என்னையே நான்சபித்து
நாணிக் குறுகுவேன் *(ப. 70)*

என்ற வரிகளில், உயிரின் வேதனையைக் கண்முன்னே கண்டாலும் மனத்தை நா வென்றுவிடுவதைக் காட்டியுள்ளார். அத்தோடு இறகுகள் அறுக்கப்பட்ட பின்னரும் பறக்கத்துடிக்கும் பறவையின்வழி முயற்சியின் மேன்மையைக் குறியீடாக்கியுள்ளார் கவிஞர். 'பந்தின் கதை' என்ற தலைப்பிலமைந்த கவிதையில்,

பலர் துரத்திப் பிடிக்க
சிலர் விரட்டிச் செல்ல
ஒருவன் வெட்டி எடுத்துப்
பக்கவாட்டில் தட்டிக் கொடுக்க
அனைவரும் விரைந்தோட
விரைந்தோடியவரில் ஒருவன்
விழுந்து உருள
ஒருவன் தூக்கி விட
விசிலடிக்க
சிதறியோட *(ப. 29)*

என்ற வரிகளில், பந்தின் கதைவழி வெற்றி, பதவி ஆகியவை எவரொருவருக்கும் நிலையான ஒன்றன்று என்பதையும் வெற்றி, இலக்கு எனும் மலையுச்சிகளைத் தொட ஒவ்வொருவரும்

பந்தாட்டத்தில் பந்தை விரட்டுவதைப் போல முயலவேண்டும் என்பதையும் குறிப்பாகக் கூறியுள்ளார் கவிஞர்.

நிறைவுரை

கவிஞர் பசுவய்யா, கவிதையை அறிவுரை கூறுதற்கும் மக்களைச் சிந்திக்கச் செய்தலுக்கும் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார். சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், விமர்சகர் போன்ற பல்வேறு நிலைகளில் வெற்றி பெற்றுள்ள சுந்தர ராமசாமி, கவிதைப் படைப்பில் அவ்வளவிற்குப் புகழ் பெற வில்லையெனினும், இவரது கவிதைகள் காலத்தால் பாதுகாக்கப் பட வேண்டியவை. கவிதையைத் தெள்ளத் தெளிவாகக் கூறுவதில் இவருக்கு உடன்பாடில்லை. குறியீட்டு உத்தியையே இவர் பெரும்பாலான கவிதைகளில் பயன்படுத்தும் திறன் குறிப்பிடத்தக்கது. வாழ்வியல் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். ஜனரஞ்சக பத்திரிகைகளிலிருந்து தம் படைப்புகள் விலகி, மாறுபட்டு அமைய வேண்டும் என்பதில் இவர் உறுதியாக உள்ளமை பாராட்டத்தக்கது.

முதன்மை நூல்

பசுவய்யா (சுந்தர ராமசாமி), *107 கவிதைகள்*, காலச்சுவடு பதிப்பகம், 1996.

சிவனடியான்

பெரி. சிவனடியான் வாழ்க்கைச் சுருக்கம்

காரைக்குடி அருகேயுள்ள புதுவயல் என்ற சிற்றூரில் 7-9-1932ஆம் ஆண்டு பெரியண்ணன் என்பார்க்கும் விசாலாட்சி என்பார்க்கும் சிவனடியான் மைந்தராகத் தோன்றினார். பள்ளிக் கல்வியைப் புதுவயல் மற்றும் காரைக்குடியிலும், பட்டக் கல்வியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், முதுகலைப் பட்டக் கல்வியையும் ஆசிரியப் பயிற்சிக் கல்வியையும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் முடித்து எம்.ஏ., பிடி. யாக விளங்கியவர்.

முருகாஞ்சலி, சக்தி சரணங்கள், சக்தியும் மைந்தனும் போன்ற வழிபாட்டுப் பாடல்களின் தொகுப்புகளை எழுதியவர்.

எழில், குமரன், பொன்னி, அருவி, அழகு, வாழ்க்கை, கலை, கலைமன்றம், தென்றல், தென்றல்திசை, மாதவி, இனமுழக்கம், தமிழ்ச்செய்தி, கண்ணதாசன், முல்லைச்சரம், திராவிடநாடு போன்ற அன்றைய இதழ்களில் பல கவிதைப் படைப்புகளைத் தந்துள்ளார்.

1. உலராத மலர்கள் (கவிதை)
2. அவளுக்காக (நாடகம்)
3. வான்மதி (குறுங்காவியம்)
4. அன்பு (கட்டுரைகள்)

போன்ற படைப்புகளையும் தந்துள்ளார்.

திருப்பனந்தாள் பாவலர் மன்றம் **'சிந்தனைக் கவிஞன்'** என்ற பட்டத்தை நல்கியது. திருக்குறள் பீடம் என்ற அமைப்பு, **'கவிஞர் ஏறு'** எனப் பாராட்டியது. 1985ஆம் ஆண்டு தமிழக அரசு **'திருக்குறள் நெறி தோன்றல்'** என்ற விருதினை நல்கியது. 1991ஆம் ஆண்டு தமிழக அரசு **'பாவேந்தர்'** விருதினை நல்கிச்

சிவனடியானைச் சிறப்புச் செய்தது. 1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும், 1995இல் தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் இவர் கலந்து கொண்டார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இவர் தம் படைப்புகளைப் பற்றிக் கூறும் போது,

> என் கவிதைகளுள் எவற்றையும் நான் மறைக்க நினைக்கவில்லை, அவற்றை மறக்கவும் முடியவில்லை. அதனால்தான் இளமையில் இறைவனை நிந்தித்துப்பாடிய பாடல்களையும் பின்னர் வந்தித்துப் பாடிய பாடல்களையும் இப்பகுதியில் இணைத்துள்ளேன். இரண்டிற்கும் என்னுள் எழுந்துள்ள உள்ளுணர்வுகளே காரணங்கள்

என்று தனது கருத்தைச் **சிவனடியான் கவிதைகள்** என்ற இப்புத்தகத்தினில் பதிவு செய்கிறார். இக்கவிஞரின் கவியரங்கக் கவிதைகளில் காணும் அழகியல் உணர்வு, ஆன்மிக உணர்வு, சமூக உணர்வு போன்ற நிலைகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவனடியான் கவியரங்கக் கவிதைகள் என்ற இந்நூல் செல்விப் பதிப்பகம், 1984இல் வெளியிட்டதாகும். இதனைத் தொகுத்தளித்தவர் செல்வமணி சிவனடியான் ஆவார். இது ஏழுபகுதிகளை உள்ளடக்கியது.

பகுதி ஒன்று - தமிழ்த் தெய்வம் என்ற அமைப்பில் சிங்காரவேலன், **'பன்னிருகரங்கள்'** என்ற தலைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியாகிய **'புகழ்ச்செல்வர்'** என்ற அமைப்பில் வள்ளுவர் ஓர் தத்துவத் தந்தை, இளங்கோ, வள்ளுவர் வாக்கில் பாரதி, அகிம்சை ஆழி, டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், ஜீவகாவியம், புயல்காற்று, அமர வாழ்க்கை ஆகிய கவிதைகள் அமைந்துள்ளன.

மூன்றாம் பகுதியாகிய ஒளி வட்டம் திங்கள், பலர் காணத் தோன்றல் மதி என்றும் கவிதைகளைக் கொண்டுள்ளது.

நான்காம் பகுதி **'மனைவிளக்கு'** என்ற பெயரில் மகள், பெண்மை, தமிழ்க்கற்பு, கண்ணகி மாதரி வீட்டில், பாரதி கண்ட

பெண் உரிமை போன்றன மகளிர் தொடர்பான கவிதைகளாக அமைந்துள்ளன.

ஐந்தாம் பகுதியாகிய 'இன்பக்கடல்' இதனில் வள்ளுவர் வாக்கில் காதல், காதலர், கவிஞன் கண்ட காதல், திருமுறையில் காதல், வாழ்வியலில் காதல் என்பன காதல் உணர்வு தொடர்பான கவிதைகளாக அமைந்துள்ளன.

ஆறாம் பகுதி 'நாடும் மொழியும்' என்ற தலைப்பில் பழங்காலத் தமிழகம், கனகவிசயர், வள்ளுவர் கண்ட குடி, ஒற்று, வீரன், நண்பர், வர்த்தகர், மொழித்துணையுடன் மறுமலர்ச்சி ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இறுதிப் பகுதியான ஏழாம் பகுதியில் **உதிர்ந்த மலர்கள்** என்ற தலைப்பில் 'தெற்கு', 'புகழ்', 'இன்சொல்' 'புறங்கூறாமை', புளிப்பு, எழுதுகோல், 'அறமும் மறமும்', 'வெள்ளை', 'இன்பம்' ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன.

ஒவ்வொன்றுக்கும் ஒரு பாடல் வீதம் ஏழு பாடல்கள் ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கவியரங்கம்

'கவியரங்கக் கவிதை ஒவ்வொன்றிலும் பொதுவாக மூன்று பகுதிகள் இருக்கும். முதற்பகுதி தமிழ் வாழ்த்து அல்லது இறைவாழ்த்தாக இருக்கும். இரண்டாம் பகுதி கவியரங்கத் தலைவர், கவியரங்க அமைப்பாளர், உடன்பாடுவோர் ஆகியோரைப் பாராட்டும் பகுதியாக இருக்கும். மூன்றாம் பகுதி பாடுபொருள் பற்றியதாக அமையும்'.

இந்நூலில் உள்ள கவிதைகளில் முதற்பகுதி தென்படவில்லை.

நூல் வடிவில் இருக்கும் கவிதையை வாசகர் படிப்பதற்கு அவருக்கு வேண்டிய அந்நூல் சொல்லும் கருத்தை வாசகர் உள்வாங்கிச் சுவைக்க இயலும். ஆனால் கவியரங்கத்தில் பாடும் கவிஞரின் பாடலை வாசகர் உடனே உணர்ந்தாக வேண்டும். எனவே கவியரங்கம் கவிதை காதில் கேட்ட அளவிலேயே பொருள்புரிந்து சுவைக்கத் தக்கதாக அமைதல் வேண்டும்.

கடினமான நடையும் யமகம், திரிபு போன்ற யாப்பு அமைப்புகளும் இவ்வகைக் கவிதைகளுக்கு உற்ற துணையாக அமையா.

கவியரங்கக் கவிதைகளின் பாடுபொருள் சமகாலத்து நிகழ்ச்சியாகவும் அல்லது பெரும்பாலான மக்களினால் அறிந்த ஒன்றாகவும் அமையும். சொற்கள் எளிமையானதாகவும் எதுகை, மோனை போன்ற கட்டுகள் பெற்று அடிகள் சந்த நடையில் அமையும். எள்ளல் அங்கதம் போற்றுதல் போன்றன இவ்வகைக் கவிதைகளின் வெளிப்பாடு உத்திகளாக அமையும். இவ்வாறு அமையும் கவிதைகளே மக்கள் மன்றத்தில் சுவைக்கப்பட்டுக் கவிஞனுக்குப் பெருமையைத் தேடித்தரும்.

அவ்வகையில் சிவனடியான் கவிதைகள் ஆரவாரமில்லாத எளிமையான யாவருக்கும் புரியும்படியான கவிதைகள் என்றால் மிகையாகா.

இவரின் கவிதையைப் பற்றி அணிந்துரையில் அறிஞர்கள் கூறுவது:

> நீரோட்டம் போன்ற நல்ல உயிரோட்டமுள்ள கவிதை பாடல்களில் அவர் தந்த பல்வேறு சந்தங்கள் பாரதிதாசனின் பாடல்களை நினைவுபடுத்தின

எனப் போற்றுகிறார் குன்றக்குடி அடிகளார்.

> முறையோடும் அழகோடும் கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர். அமுதுக்குச் சுவையூட்டும் அடியான பாடல்

என்கிறார் கவிஞர் கோ. முடியரசன்.

> கம்பன் விருத்தம் பாடுவதில் வல்லவன். அம்மரபு இக்காலத்திலும் அழியவில்லை என்பதற்கு இவர் (சிவனடியான்) இங்கே பாடிய பாடல்கள் சான்று பகர்கின்றன

என்கிறார் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்.

> சிவனடியான் அழகாக ஆழமான கருத்துக்களுடன் கவிபுனைந்திருந்தார். நகைச்சுவையோடு எவ்வளவு

கம்பீரமாகப் படித்துக் காட்டினார். கவியுலகம் மறையவில்லை வளர்கிறது என்பதையல்லவா இதுகாட்டுகிறது

என்கிறார் ச.து.சு. யோகியார்.

காலத்திற்கு ஏற்ற நடையில் பாடியிருக்கிறார் எனக் களிப்புடன் கூறுகிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம்.

இவர் கவிதைகளின் தனிச்சிறப்பு இனிமையும் எளிமையுமாகும் என ஏற்றம் தருகிறார் திருக்குறளார்.

கவியரங்கக் கவிதைகள் காட்டும் சுவைதனை விரித்துக் காணலாம். சென்னைக் கபாலீஸ்வரர் கோயிலில் நடைபெற்ற கந்த சஷ்டி விழாவில் **சிங்காரவேலன் என் தோழன்** என்ற தலைப்பில் 24-10-1971 அன்று கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் சிவனடியான் ஆன்மிக உணர்வு பொங்க ஒரு கவிதை நல்கினார். இக்கவிதையில் ஆன்மிக உணர்வைச் சுட்டும் பொழுதே இறைவன் எந்தெந்த நிலைகளிலெல்லாம் துணையாக வருகிறான் என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

என்னுள் நடக்கின்ற எதற்கும் துணையாகப்
பின்னிக் கிடக்கின்றாய் பேச்சுக் கினிப்பானாய்.
கெடுக்க வரும்பகையைக் கெடுக்கத் துணிந்திடுவாய்
அடுத்துப் பணிந்தாலோ அருள்சுரந்து மன்னிப்பாய்
படுத்துறங்கும் போதும் பக்கத்தி லேபடுப்பாய்
கெடுக்கும் கனவினையும் கிள்ளி எடுத்தெறிவாய்.

அடுத்து முயன்றும் ஆகாச் செயல்களையும்
தொடுத்து முடித்துத் துலங்க வழிசெய்வாய்

குடும்பப் பிணக்கறுப்பாய் குமுறி அழுதாலே
உடும்புப்பிடியாக உண்மை எடுத்துரைப்பாய்.

நட்புரிமை மாற்ற நாலைந்து பேர் முனைந்தால்
துட்டத் தனத்தையோர் சொல்லால் அடக்கிடுவாய்.

வைதாரைக்கூட வாழ்த்தி மகிழ்பவனே
கையோச்சு வோனைக் காலில் விழச் செய்பவனே.

என்னருமைத் தோழா! எனக்குமட்டுமா தோழன்
ஒ[illegible]க்கும் உயிர்கட்கெல் லாம் தோழன்.

எங்கும் நிறைந்த எல்லோர்க்கும் நீ தோழன்
மங்கையர்க்கும் தோழன் மாற்றார்க்கும் நீ தோழன்.

குடிகெடுக்க வந்த கொடுஞ்சூர பத்மனுக்கும்
கொடியில் இடந்தந்து குழையும் அருள் தோழன்.

அன்புக் கொருதோழன் அருளுக் கொரு தோழன்
என்றுந் தோழன் எனக்கு.

கருத்தாழமிக்க இக்கவிதையின் வாயிலாகச் சிவனடியான் தனது ஆன்மிக உணர்வினை வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது. இறைவனையே தோழனாக ஏற்றுக் கொள்ளும் பொழுது மனமானது அவனைச் சுற்றி வருகின்ற காரணத்தினால் அது மாசுபடுவதில்லை. இறைவனின் அரவணைப்பால் அது சுகமே காண்கிறது. வழிக்குத் துணையாகி மாபாபம் சூழும் இருளில் விழிக்குத் துணையாகி விடிவெள்ளியாய் இறைவன் இருப்பான் என்ற கவிஞரின் வாக்கு ஈண்டு எண்ணற்பாலது. இறையருள் ஒருவருக்குக் கூடுமேயானால் அங்கே வறுமை குறைகிறது. வளமே நிறைகிறது. சிறுமை மறைகிறது; சீர்வந்து சேர்கிறது.

சொல் விளையாட்டு

ஒரு மயிலை விட்டிறங்கி ஓடிவந்தால் ஆகாதோ
திருமயிலைச் சிங்காரா! சிவனடியான் பாடுகிறேன்
இருமயிலை விட்டுவர இல்லை மனமுனக்குப்
பொறுமையிலை என்றனுக்குப் புறப்பட்டு வாதோழா.

மயிலென்ற ஒரு சொல்லை வைத்துக்கொண்டு திரு மயிலை எனும் போது திருமயிலாப்பூரையும், ஒரு மயிலை விட்டிறங்கி ஓடிவந்தால் ஆகாதோ எனும் போது அவரது ஊர்தியான புள்ளி மயிலையும் அதுபோல "இரு மயிலை விட்டுவர இல்லை மனம் உனக்கு" எனும் போது அங்கே வள்ளி தெய்வானையை இருமயில்களாக உவமித்தும் அழகு செய்கிறார். ஒரு மயிலை என்றவனுக்கு எனும் போது அங்கே பொறுமையில்லை என்பதைப் பொறுமயிலை எனச் சொல்வதின் வாயிலாக அவர் காட்டியிருக்கும் சொல் விளையாட்டு இன்புறத்தக்கது. சிக்கலிலே பாடிய என் சிக்கல் தவிர்த்திட்டேன்

என்று சொல்லும் பொழுது முருகன் எழுந்தருளியுள்ள தலங்களில் ஒன்றான சிக்கலையும், கவிதை புனைவதிலே ஏற்படும் சிக்கலையும் இணைத்துச் சிக்கலிலே என்ற சொல் மூலம் சொல் விளையாட்டுச் செய்துள்ளது அவரது வித்தகத்துக்குச் சான்று.

'வள்ளுவர் ஓர் தத்துவத் தந்தை' என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை அரங்கிற்குக் கண்ணதாசன் தலைமை தாங்கியுள்ளார். காரைக்குடியில் 26-7-1960 அன்று நடைபெற்ற குறள் விழாவில் இக்கவிதை அரங்கேறியுள்ளது.

தத்துவ அறிஞர்கள் உலகில் தோன்றவில்லை என்றால் இவ்வுலகம் என்றோ மடிந்திருக்கும் என்றும் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ரஷியநாட்டில் லெனின், ஸ்டாலின் ஆகிய அறிஞர்களின் தத்துவங்கள் இன்றளவும் உலகிற்குப் பயன்படுவதாகக் கூறுகிறார். தத்துவங்களின் பயன்பாடு யாதெனின் இறைவனை உணர்தலே என்பது சிவனடியானின் கருத்து. இறைவன் என்பவன் அன்பின் பிடி உறைபவன். அன்பு உணர்வில் கனிந்து பரிபாலிப்பவன். வள்ளுவரின் தத்துவமும் இதைத்தான் கூறுகிறது எனச்சொல்லும் சிவனடியான் கவிதை வருமாறு:

அன்பென்ற பொருளிருக்கும் உயர்வுள் ளத்தை
ஆர்வமுளார் கண்ணீரால் அறிகின் றோம் நாம்
அன்புடையார் நமக்காக அழுதல் கண்டால்
அகிலத்தில் பிறந்தபயன் காணுகின்றோம்
தன்னுணர்வுக் களஞ்சியத்தில் எடுத்துத் தந்தான்
தாழில்லை அன்புமைக்(கு) என்ற சொல்லை
ஒன்னாரைக் கூறுங்கால் அழுதநீரை
உறுப்படியாய்க் கொள்ளென்றாள் உயர்ந்த ஞானி (ப.37)

15-2-1960இல் சரபோஜி கல்லூரி ஆண்டு விழா நிறைவில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் சிலப்பதிகாரத்தை மையமாக வைத்து 'வாழையடி வாழையில் இளங்கோ' என்ற தலைப்பில் ஒரு கவிதை வழங்கினார். அது:

சிலம்பிலமை முத்தெல்லாம் விளைந்த முத்து
தேர்ந்தெடுத்துக் கோத்திட்ட கருத்து முத்து
குல விளக்குக் கோற்றொடியர் கொள்ளும் முத்து

குன்றிலுயர் விளக்காக ஒளிரும் முத்து
நலம் கொழித்த மூவேந்தர் பூண்ட முத்து
நடனமயில் மாதவியாள் அணிந்த முத்து
உலகு புகழ் கண்ணகிபேர் உரைக்கும் முத்து
உயர்மானப் பாண்டியனைக் காட்டும் முத்து (ப. 42)

பாரதியின் பாடல் வரிகளையே தன் பாட்டிற்கு விதானமாக அமைத்துக் கொள்ளும் விதமாய் அமைந்த பாடல் கீழ்வருமாறு:

கண்ணனைக் காதலனாய்ப் – பாரதி
கண்டு மயங்குகிறான்
கண்ணம்மா காதலியாய் – வந்து
கண்ணைச் சிமிட்டுகிறாள்
கண்ணம்மா போய்விட்டலோ – பெற்ற
கண்களே போகுதென்றான்
உண்ணமுடியாமல் – கிறுக்காய்
ஓடுதென் உள்ளமென்றான்.
காணி நிலத்தினிலே – மாளிகை
கட்டி முடித்து விட்டுப்
பேணியோர் பத்தினியைக் – கொள்ளப்
பித்துப் பிடித்தலைந்தான்
காதல் வளர்த்திடுவீர் – ஆண் பெண்
கண்டு மயங்கிடுவீர்
சாதல் வருமுன்றே – காதல்
சாகாம் மூழ்கிடுவீர் (பக்: 52, 52)

புதுக்கோட்டைக் கவிஞர் கலைவாணன் தலைமையில் 5-10-1969இல் நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாக் கவி அரங்கில் 'அகிம்சை ஆழி' என்ற தலைப்பில் சிவனடியான் தந்த கவிதை என்றைக்கும் வாழ்வாங்கு வாழ வல்லது. காந்தியடிகளின் அகிம்சைக்கும் சிவனடியான் தரும் விளக்கம் போற்றுதற்குரியது.

முண்டுகட்டும் பக்கிரியென் றழைத்த போதும்
முடியுமட்டும் ஆப்கானியர் அடித்த போதும்
மண்டென்று மற்றவர்கள் சிரித்த போதும்
மலர்ந்த முகம் காட்டியதே அஹிம்சை யாகும் (ப.56)

கொல்லாமை மட்டும் அவர்க் கஹிம்சை இல்லை
கொன்றன்ன செய்யாமை அஹிம்சை என்றார்.

சொல்லாலே சுடுவதுவும் பிறர்தம் சொத்தைச்
சுருட்டுவதும் முடக்குவதும் ஹிம்சை என்றார்
பொல்லாங்கு தாவரத்திற் கிழைத்தல் கூடப்
பூவுலகில் நாம் செய்யும் ஹிம்சை என்றார்
கல்லாத கயவர்க்கும் கருணை காட்டிக்
காத்தமகான் காந்திமகான் அஹிம்சைஆழி
(ப.57)

காரைக்குடி சொற் பயிற்சி மன்றம் 15-1-1960இல் நடத்திய டாக்டர் உ.வே.சா. ஐயர் என்ற தலைப்பில் நடத்திய கவியரங்கத்தில் சிவனடியான் உ.வே.சா.வின் அருமை பெருமைகளை யெல்லாம் தொகுத்துச் சொன்ன கவிதை கீழ்வருமாறு:

உ.வே.சா. அய்யர் தமிழ் உயிராம் என்பேன்
ஒழிந்திருக்கும் அவரிலையேல் தமிழ் இந்நாட்டில்
பாவேது? தமிழர் பழம் நூல்கள் ஏது?
பட்டிமன்றம் தானேது இவ் அரங்கம் ஏது?
நாவேது? நல்ல தமிழ் உளர்கள் ஏது?
பூவேது? தமிழன்னைக்(கு) அணிகள் ஏது?
பொலிவேது? பொட்டேது! புகல்வீர் கொஞ்சம் (ப.60)

எடுத்து இயம்பிவிட்டு அவர் பண்ணின் சிறப்புப் பற்றிக் கூறும்போது:

ஆய்வோடு கூடியமுன் னுரையைக் கற்றால்
அரியதமிழ் இலக்கியங்கள் அனைத்தும் கற்ற
தோய்வுவரும் பொருளுரையில் ஒப்புக் காட்டித்
துலக்குகிற சொற்களைநாம் தொகுத்தோம் ஆனால்
தாய்த்தமிழின் சாதனைகள் தனித்துத் தோன்றும்
தரும்பாட பேதங்கள் நிறுவும் உள்ளம்
ஓய்வின்றி அவர்கற்ற உண்மை கூறும்
உழைத்ததமிழ் உழைப்பையவர் நூல்கள் கூறும்
(ப.62)

அய்யரென ஆயிரம்பேர் புகழ்பெற் றாலும்
அய்யரெனில் தமிழுலகில் உ.வே.சா.தான் (ப.63)

30-1-1966இல் நடைபெற்ற பா. ஜீவானந்தம் சிலை திறப்பு விழா நிகழ்வில் கவியரசு கண்ணதாசன் தலைமையில் 'ஜீவாகாவியம்' என்ற தலைப்பில் சிவனடியான் ஜீவாவைச் சொற்சித்திரத்தில் வரைந்தெடுத்த கவிதை கீழ்வருமாறு:

வாழ்ந்திருந்த காலத்து வாழ்வறியாம் பாரதியை
ஆழ்ந்து படித்து அணுவணுவாய் உள் நுழைந்து
சூழ்ந்து வந்த மக்கள்முன் சொல்லியவர் நம் ஜீவா
தாழ்வாய் மதித்தவரின் தருக்கொழிக்கச் சவுக்கெடுத்தார்
புரட்சியுகப் பாடல்களைப் போராட்ட வாளாக்கி
கரங்கொண்டு முன்னேறிக் கயமைகளைக் கொன்றொழித்தார்
பாரதியின் பாடல்களைப் பறைசாற்றச் செந்தமிழ்த்தாய்
சூரனவன் போதுமெனத் தூண்டி விட்டாள் ஜீவாவை
ஜீவா இருக்கும் வரை ஜீவகவி சாகவில்லை
ஜீவா இறந்தவுடன் சிறப்புரைக்க ஆளில்லை
ஜீவாவும் பாரதியும் ஜீவகாவிய மானார் *(ப.69)*

தன் ஆசான் பாரதிதாசனைப் பாராட்டும்போது தான் எடுத்துக்கொண்ட தலைப்புச் சொல்லை வரிக்குவரி பின்னிணைத்துக் காட்டியுள்ளது சிறப்பாக அமைந்துள்ளது. கவிதை கீழ்வருமாறு:

தென்னகத்துக் கவிவானத் திங்களாக
சீர்திருத்தப் புத்துலகத் திங்களாக
பொன்னான புலவர் குழுத் திங்களாக
புரட்சி மனப் பாசறையின் திங்களாக
மன்னரெனக் கவியரங்கத் திங்களாக
மலர்ந்திருக்கும் புதுச்சேரி இரத்தினத்தை
என்சொல்லி வணங்கிடுவேன் இங்கே! என்றார்
எழுத்திறைவா! கவித்தலைவா! வணக்கம், வாழி
(ப.85)

பகுதி நான்கு பெண்மையைச் சிறப்பிக்கும் பகுதியாகும். இப்பகுதியில் திருச்செங்கோட்டில் 24-5-1964 அன்று நடைபெற்ற கவியரங்க விழாவில் கி.வா. ஜகந்நாதன் தலைமையேற்க முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் வரவேற்புரை நல்க, 'கண்ணகி மாதரியின் வீட்டில்' என்ற தலைப்பில் கவியரங்கம் தொடங்கியது.

இதில் சிவனடியான் மாதரியின் விருந்தோம்பல் சிறப்பை எளிய நடையில் எடுத்துக் கூறியுள்ளார். சிலம்பில் காணும் அடைக்கலக்காதையின் ஒட்டு மொத்தப் பிழிவாகக் கவிதை வரிகள் அமைகின்றன.

இடைக்குலத்துப் பெருமாட்டி அடைக்கலத்தை
ஏற்றவகை எடுத்துரைப்பின் இளகும் நெஞ்சம்
கடைக்குவந்த விருந்தினர்போல் நடத்த வில்லை
கடன்தீர்க்கும் உறவினர்போல் கருத வில்லை
இடையர்குலப் பெண்கள்பலர் ஏவல் செய்தார்
இமையெனவே ஐயையவள் இணைந்து நின்றாள்
மடைதிறந்த வெள்ளம்போல் அன்பும் பண்பும்
மாதரியின் மனைமுழுதும் பெருகிற் றம்மா
ஆக்குதற்கோ அரிசியுடன் காய்கள் பெற்றாள்
அருங்கனிகள் ஆவின்பா லனைத்தும் பெற்றாள்

தேக்கிவைத்த அன்பெல்லாம் திரட்டிக் காயைச்
சிறுவிரல்கள் சிவக்கும்வகை அரியலானாள்
மூக்குமுகம் வியர்க்கும்வகை சமையல் செய்தாள்
மொழிபொழியும் விழிசிவக்க முழங்கி நின்றாள்
ஆக்கியதும் தடுக்கின்மேல் அமரச் செய்தாள்
அன்றரிந்த தலைவாழை இலைவி ரித்தாள்

குலக்கொடியாள் அமுதளிக்கக் கோவ லன்தான்
குளிர்முகத்தோ(டு) உண்டநிலை மாதரிக்கு
நலங்கொழிக்கத் தன்குலத்தில் உதித்த கண்ணன்
நப்பின்னை யோடமர்ந்த நினைவைத் தூண்ட
மலர்ந்தமுகம் பெற்றிட்டாள் மனத்(து) அடங்கா
மகிழ்ச்சிமிக வுற்றிட்டாள் ஐயையோடு
கலந்துமனம் பூரித்தாள் கண்ட காட்சி (பக்.120, 121)

காரைக்குடியில் 19-7-1959இல் நடைபெற்ற குறள் விழா நிகழ்விற்குக் கவியரசு கண்ணதாசன் தலைமையேறக் குறள்நெறி குடும்பத்தில்.....'நண்பர்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. இதனைச் சிவனடியான் தந்துள்ள கவிதை அவர் அனுபவத்தின் வெளிப்பாடாகத் தெரிகிறது. உரை வேண்டப்படாத இப்பாடல் வருமாறு:

கண்பார்த்த நொடியிற்பை கைக்கு மாறும்
கணப்பொழுதில் மறைந்திடுவார் அருமை நண்பர்
உண்டியலில் பணஞ்சேர்த்து வைத்தால் கூட
உடைத்தெடுக்கச் சின்னேரமாகு(ம்) இந்தச்
சண்டாள நண்பர்களோ இமைக்கு முன்னே
சரிக்கட்டி விடுவார்கள் ஆளைக் கூட
திண்டாட்டம் வரும்முன்னே தெரிந்து கொள்வீர்
தெருக்கழுகு நண்பரிவர் என்ற செய்தி
சுரண்டுதற்கே பலநண்பர் தோன்று கின்றார்
சுகங்கூட்டி உடனிருந்தே கழுத்த றுப்பார்
"பிரண்ட்" என்பார் ஆங்கிலத்தில் புரண்டெழுந்து
பெரும்பொருளைக் கனாத்திடுவார் இவர்களெல்லாம்
பெருச்சாளி நண்பரப்பா வீடிருக்கப்
பெரும்பொந்தாய் அடித்தளத்தைத் துளைத்துச்
சாய்ப்பார்
கடுமருந்துப் புகைமூட்டி அழித்தால் அன்றிக்
கரும்பெருச்சா ளிக்கூட்டம் ஒழியா திங்கே!
காப்பிக்குச் சிலர்வருவார் நாசி ஏற்றும்
கைச்சிமிட்டாப் பொடிக்கொருவர் வந்து சேர்வார்
'ஆராய்ந்து நண்பர்களைப் பெறுதல் வேண்டும்
அஃதின்றேல் சாக்காட்டுத் துயர் சேரும்
(பக்.216, 217)

என எச்சரிக்கிறார். நல்ல நண்பர்கள் அமைந்து விட்டால் ஒருவன் பெறும் சுகத்தைக் கீழ்வரும் கவிதை விளக்குகிறது.

துயரமெனும் பெருஞ்சுமையை இறக்கி வைக்கத்
தூயமன நண்பர்களே தக்க வீடு
மயங்கி விழும் காதலரும் மனம்திறந்து
வழியறிய நண்பர்களே தக்க ஏடு
கயமைவழி செல்பவரை உரிமை யோடு
கடிந்துரைக்க நண்பர்களே தக்க சூடு
வியத்தகுஇந் நட்புயர்வை உணர்ந்த மக்கள்
விளங்குவதே சிறப்பமையத் தக்க நாடு (ப.220)

முடிவுரை

இதுவரை சிவனடியான் கவிதைகளில் பதிவு செய்யப் பட்ட ஆன்மிக உணர்வு, சமூக உணர்வு, இலக்கியச் சுவை போன்றவை விரித்துக் காணப்பட்டன. சிவனடியான் தொடக்கக் காலத்தில் நாத்திகராக விளங்கினார். பின் ஆத்திகராகி ஆன்மிக நெறியில் உலகு உய்யச் சிந்தித்தற்கு அவர் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளே காரணமென்பதும் முன்னரே சுட்டப்பட்டது.

ஒரு படைப்பாளன் ஒரு கோட்பாட்டிலிருந்து பிறிதொரு கோட்பாட்டிற்கு மாறும்போது அவனது சிந்தனை முன்னதி லிருந்து முற்றிலும் விலகி அவன் ஏற்றுக்கொண்ட சிந்தனை யோடு இயைந்துவிடும் என்பது தவிர்க்க முடியாதது. இந்த மாறுபாடு முரணற்ற சில கவிஞர்களின் அடையாளங்களை மாற்றி அமைத்துவிடுகிறது. நாத்திகராக இருந்து ஆத்திகரான கண்ணதாசன் ஜனரஞ்சகக் கவிஞராக ஏற்றுக் கொள்ளப் பட்டதற்கு அவரது முரணற்ற உள்ளமே காரணம். சிவனடியானும் அதன் வழியில் எனலாம்.

முதன்மை நூல்

சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், தொகுப்பாசிரியர் செல்வமணி சிவனடியார், செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1984.

புஞ்சையரசன்

வாழ்க்கைக் குறிப்பு

காஞ்சிபுரத்திற்குத் தெற்கே பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள புஞ்சையரசன் தாங்கலில் 15-6-1933இல் கி.மாணிக்கம், இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக இக் கவிஞர் பிறந்தார். இவருடைய இயற்பெயர் பு.மா. செயராமன். பிறந்த ஊரின் மேல்கொண்ட பற்றின் காரணமாய்த் தன் பெயரைப் புஞ்சையரசன் என மாற்றிக் கொண்டார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அய்யங்கார் குளம் நடுநிலைப் பள்ளியில் கல்வி கற்றார். பின்பு, 1950-51இல் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

1954இல் தமிழ்ப் புலவர் பட்டம் பெறுவதற்காகப் புதுமுகத் தேர்வும், 1974இல் இடைநிலைத் தேர்வும், 1975இல் இறுதிநிலைத் தேர்வும் எழுதிப் புலவர் பட்டம் பெற்றார். இவர் 5-6-1956இல் செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் சரோசா அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர் தொடக்கப்பள்ளி ஆசிரியராக வள்ளுவப்பாக்கம், திருவொற்றியூர், நந்திவரம், பொத்தேரி, கூடுவாஞ்சேரி போன்ற நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரிந்துள்ளார்.

> அக்காலத்தில் ஒவ்வொரு திரையரங்குகளிலும் எந்தப் படம் புதியதாக வந்தாலும் திரைப்பாடல் ஏடுகள் மிகக்குறைந்த விலையில் விற்கப்படும். படம் பார்த்துத் திரும்புவோர் ஒவ்வொருவர் கையிலும் பாடல் நூலைக் காணலாம். அப்பாடல் நூல்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் நானும் ஒன்று வாங்கி மனப்பாடம் செய்து பாடுவேன். அந்த இனிய மரபுக்கவிதைகள் என்னுள் கவிதை எழுதும் ஆற்றலை வளர்த்தன (தமிழா! விழித்தெழு, 6)

எனக் கவிதை எழுதத் தூண்டிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார் கவிஞர். இன்று தமிழகத்தில் வாழ்ந்து வருகின்ற கவிஞர்களில் இவரும் ஒருவர். நாற்பது ஆண்டுகளுக்கும் மேல் ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பிறகும் தமிழ்த்தொண்டு புரிந்து வருபவர். தமிழ்த் தொண்டுடன் திருக்குறள் நெறிபரவவும் வீடுதோறும் திருவள்ளுவர் படமும், திருக்குறள் நூலும் ஒவ்வொரு தமிழன் வீட்டில் இருக்க வேண்டும் என்ற குறிக் கோளுடன் செயலாற்றி வருகிறார். இதுவரை 'ஐந்தாண்டுகளில் சுமார் 700 வீட்டிற்குத் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் சேர்ந்துள்ளன.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகிய பெருந் தலைவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுப் பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கம் ஆகியவற்றில் தொடர்ந்து பங்கு பெற்றதோடு இளைஞர்களையும் இத்தொண்டில் ஈர்த்து வருகிறார்.

இவரது முதல் கவிதை குழந்தைகளைப் பற்றிப் பாடியதாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். முதல் கவிதைத் தொகுப்பு **தமிழ் எழுச்சிப் பாடல்கள்** என்ற தலைப்பில் 14-04-1979இல் வெளியிடப்பட்டது. உரைநடையில் எழுதும் ஆற்றல் இருப்பினும், கதைகளைக் கவிதையிலே சொல்வது, காவியமாகப் படைப்பது என்ற வகையில் புதுமையைப் படைத்து வருகிறார். **கவிதை சொல்லும் கதைகள்** என்ற தலைப்பில் ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவ் ஐந்து நூல்களிலும் இருபத்திரண்டு கவிதைக் கதைகளைப் படைத்துள்ளார். இவருடைய கவிதைகள் எளிய சொற்களில், இனிய தமிழில், எளிய சந்த நடையில் இசைப் பாடல்களாக அமைந்த மரபுக் கவிதைகள். கவிஞர் பற்றிய குறிப்புகள் நேர்காணலிலும் (16.9.2005) தொலைபேசி வழியாகவும் கிடைத்தன.

படைப்புகள்

1. **தமிழ் எழுச்சிப் பாடல்கள்**, 1979.
2. **மறுமலர்ச்சிப் பாடல்கள்.**
3. **தமிழ்ச் சான்றோர் பேரவை தமிழ் எழுச்சிப் பாடல்கள்**, 2001.

4. திருக்குறள் அரங்கேற்றம், 2002.
5. தமிழா விழித்தெழு, 2002.
6. சிந்தையில் பூத்த செம்மலர்கள், 2001.
7. சமுதாய அரசியல் மறுமலர்ச்சிப் பாடல்கள், 2002.
8. எண்ணச்சோலையில் வண்ணமலர்கள், 2003.
9. எட்டாக்கனி, 2003.
10. காதலோவியம், 2002.
11. கண்வழிப் புகுந்த காதல், 2002.
12. உபகுப்தரும் தேவதாசியும், 2003.
13. சேற்றில் மலர்ந்த செந்தாமரை, 2002.

முதல் மூன்று நூல்களிலும் மொழி, இனம், நாடு, சமுதாயம், அரசியல் பற்றித் தமிழ் எழுச்சிப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

திருக்குறள் அரங்கேற்றம் என்ற நூல் வள்ளுவர் வரலாறு, உரைநடை, நாடகம், கவிதை நாடகம் போன்றவற்றைக் கொண்ட வரலாற்றுக் கவிதை நாடகமாக அமைகிறது. அடுத்த நான்கு நூல்களில் பகுத்தறிவு, பெண்ணியம், சமுதாயம், அரசியல், காதல், பொதுமை, பக்தி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் காணப்படுகின்றன. அடுத்த ஐந்து நூல்களில் கவிதை சொல்லும் கதைகள் என்ற தலைப்பில் சிறுகதைகளைக் கூறுகிறார். இவற்றில் பெண்களுக்குத் தன்னம்பிக்கை, வீரம், குடும்ப வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறுவதாக இக்கவிதை நூல்கள் அமைகின்றன.

இவை தவிர, மீண்டும் ஒரு மொழிப்போர் எனும் தலைப்பில் செம்மொழி அன்று முதல் இன்று வரையிலான முழுத் தகவல்களையும் தொகுத்து வெளியிட்டுள்ளார் (2005).

அச்சில் இருப்பவை

1. திருக்குறள் களஞ்சியம்
2. செந்தமிழ்ப் புதையல்
3. வான்புகழ் வள்ளுவம்

பட்டங்கள் பரிசுகள்

1. 5-6 ஜனவரி 2003இல் சேலத்தில் நடைபெற்ற **'துளி'** மாத இதழின் 14ஆவது ஆண்டு விழாவில் 'பொற்றமிழ் அறிஞர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

2. டெல்லியில் நடைபெற்ற செம்மொழிப் போராட்டத்தில் உண்ணாவிரதம் இருந்தவர்களுக்குத் தஞ்சையில் 2003 மே மாதத்தில் நடைபெற்ற விழாவில் **'செம்மொழிப் போராட்டச் செம்மல்'** என்ற பட்டமும் திருவள்ளுவர் உருவம் பதித்த கண்ணாடிப் பேழையும் வழங்கப் பெற்றன.

3. 2004இல் பாவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் **'செம்மொழிப் போராளி'** என்ற பட்டமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப் பெற்றன.

* இவை தவிர, 18-3-2003இல் மறைமலை நகரில் உள்ள வள்ளுவர் பேரவையின் பொன் விழா ஆண்டில் தருமபுர ஆதீனம் முத்துக்குமார சுவாமித் தம்பிரானிடம் பரிசு பெற்றார். அப்போது அவர், உமக்குப் பரிசு கொடுக்க யான் பேறு பெற்றேன்' எனக் கூறியதாகக் கவிஞர் உவகை கொள்கிறார்.

* 1-1-05 முதல் சென்னை ஜேப்பியார் ரெமிபாய் அறக்கட்டளைத் தமிழ் இலக்கியத் தொண்டிற்காகத் திங்கள் தோறும் ரூபாய் ஆயிரம் வழங்குகின்றனர் (வாழ்நாள் முழுதும்).

* 1973இல் **'ஆங்கில மோகம் விடுப்போம்'** என்ற தலைப்பில் எண்சீர் விருத்தப்பா பதினான்கு எழுதி அனுப்பியதை ம.பொ.சி. 'செங்கோல்' இதழில் வெளியிட்டார்.

* அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ள இவரது கவிதைத் தொகுப்புகள் அனைத்தும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அவரால் எழுதப்பட்டு, அண்மையில் நூலாகி வெளிவந்துள்ளன. வெளியாகியுள்ள நூல்கள் அனைத்தும் எழுதிய வரிசைப்படி வெளியிட்டதல்ல. பொருளாதார வசதிக்கு ஏற்றபடி வெளியிடப்பட்டு வருகின்றன.

இவருடைய கவிதை நூல்களில் சிந்தையில் பூத்த **செம்மலர்கள், தமிழா விழித்தெழு, சமுதாய அரசியல் மறுமலர்ச்சிப் பாடல்கள், திருக்குறள் அரங்கேற்றம்,**

கண்வழிப் புகுந்த காதல் ஆகிய தொகுப்புகள் மட்டும் இக் கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கவிதைத் தொகுப்புகளின் வழி அவரது நாட்டுப்பற்று, தமிழ் உணர்வு, சமூகத்தில் நிலவி வரும் சீர்கேடுகள் பற்றிய சிந்தனை, இலக்கியத்தாக்கம், உள்ளம் கவர்ந்த தலைவர்களின் மீது கொண்டுள்ள பற்று போன்றவை தெரிய வரும் விதத்தை ஆராயலாம்.

தமிழுணர்வு

கவிஞரின் கவிதைத் தொகுப்புகளில் பெரும்பான்மையும் தமிழ்த்தாய் வாழ்த்து காணப்படுகிறது. இலக்கியங்களில் கடவுள் வாழ்த்து இருப்பது போல இவருடைய கவிதை நூல்களில் முதல் கவிதையாக, தமிழ்த்தாய் வாழ்த்து, தாய்க்கு வணக்கம், என்ற தலைப்புகளின்கீழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். தமிழ்மொழியின் மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக, தமிழா விழித்தெழு, தமிழ் என் தாய், தமிழ்த் தாய் புலம்பல், தமிழ் மொழியே, தமிழ்ப் பெயரை வை, தமிழ் மாறாது இன்றும் வாழுதடா, தமிழ் என் குழந்தை, அன்புத் தமிழ்மொழி, அன்னைத் தமிழ் வாழ்க, அன்னைத் தமிழே என்ற தலைப்புகளின் வழி, தன்னுடைய தமிழ் உணர்வை வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

வாழ்த்தி வணங்கிடுவோம் – தமிழ்
வாழ நாம் வாழ்ந்திடுவோம்! – வாழ்த்தி
உலகினில் முதன்முதலே தோன்றிய மொழிகளில்
வாழ்வது தமிழ் ஒன்றே – இன்று
மாறின பிற வன்றோ! *(ச.அ. 1)*

எனத் தமிழ்த் தாயை வாழ்த்தி வணங்குகிறார். மேலும், தமிழ் மொழியானது, கனிந்த பழம், கருப்பஞ்சாறு, தேன் போன்ற வற்றையும் விட மிக இனிமையானது என்பதை,

நாள் கனிந்த பழத்தினிலும்
நற்கருப்பஞ் சாற்றினிலும்
நாட்டுத்தேன் சுவையினிலும்
நாவினிக்கும் நற்றமிழே **(த.வி. 5)**

என்ற கவிதைவழிக் குறிப்பிடுகிறார் கவிஞர். மேலும், உயிரெழுத்துகளின் வரிசையிலும், மெய்யெழுத்துகளின்

வரிசையிலும் உயிர்மெய்யெழுத்துகளின் வரிசையிலும் பாடல்களைப் பாடியுள்ளார். சான்றாக,

அன்புத் தமிழ் மொழி
ஆற்றல் மிகு மொழி
இன்பத் தமிழ் மொழி
ஈட்டும் புகழ் மொழி
உயர்வுத் தமிழ் மொழி
ஊக்கந் தரும் மொழி
என்றும் வாழ் மொழி
ஏற்றம் அருள் மொழி
ஐந்திலக் கண மொழி
ஒப்பிலாத் தமிழ் மொழி
ஓங்கி வளர் மொழி
ஔவைநன் னூல் மொழி
அஃது எம் தமிழ் மொழி (த.வி. 9)

என்ற கவிதையைக் குறிப்பிடலாம். இது போன்ற பல கவிதைகள் அவர் தொகுப்புகளில் காணப்படுகின்றன. அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் உள்ள பிறதுறைகளைத் தமிழ் வழியில் கற்க வேண்டும் என்ற ஆவலையும் இவரிடம் காணமுடிகிறது.

நலமிகு தமிழ்மொழி சிறப்பறியாது நாம்
இருப்பது மிக நன்றோ – இனி
இருந்திடில் தாழ்வன்றோ?

அறிவியல் பொறியியல் மருத்துவம் பிறஇயல்
தமிழ் வழி கற்போமே – கற்று
வாழ்வினில் உயர்வோமே! (ச.அ. 1)

நாட்டுப்பற்று

கவிஞர் மொழிப்பற்றுடன் நாட்டுப்பற்றுக் கொண்டவராகவும் விளங்கினார் என்பதை, 'பாரதநாடு' என்ற தலைப்பில் அமைந்த கவிதைவழிக் காணலாம்.

பாரதநாடே
நம் நாடே – நம்
பழம் பெருமைக் கெதிர்
இலை ஈடே

பாரதில் உண்மை பாரத நீதி
பரந்த இராமர் கதை யூடே . . .

பகையெனில் ஒன்றாய்க் கூடிடுவோம்
பயன் எதிர்பாரா செயல்படுவோம்
நகையுறப் பகையே புறமது காட்டி
நடுக்குற ஓட்டி விரட்டிடுவோம்! . . .

இந்திய ஒற்றுமை ஓங்கிடவே
இனமொழி வேற்றுமை நீங்கிடவே
இந்தியர் தேச மொழியதனாலே
இந்தியர் அன்புத் தேங்கிடவே (த.வி. 25)

என்றும், சாதி வேற்றுமைகளால் நாட்டில் அமைதியின்மை காணப்படுவதால் சாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். சாதி வேற்றுமை ஒழியக் கல்வி பெருக வேண்டும் என்றும், வறுமை ஒழிய வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார் கவிஞர்.

கல்விச் செல்வம் பெருக நாட்டில்
சாதி ஒழியுமே!
கலப்பு மணம் செய்வதனால்
பேதம் நீங்குமே!

வறுமைதனை ஒழித்து வளம்
சேர்ப்பதனாலே
வெறுமையுறும் சாதிபேதம்
போகும் தன்னாலே! (ச.அ. 18)

மேலும், கலப்பு மணம் செய்வதனால் சாதிப் பிரிவினைகளை ஒழிக்க முடியும் என்ற கவிஞரின் கூற்றை,

காதல் மலர்கள் பூத்திடவே – இடை
கலப்பு மணங்கள் நிகழ்ந்திடவே
மோதல் இன்றி மக்களெல்லாம் – பண்பில்
மேன்மையுடனே வாழ்ந்திடுவார்

சாதி அன்று ஒழியுமடா – ஊர்
சமத்துவபுரமாய் விளங்குமடா

நீதி எங்கும் நிலைத்திட்டவே – உண்மை
நெறியில் இன்பம் திளைத்திடுவார்! (சி.செ. 38)

இக்கவிதை அடிகளின் வழி அறிய முடிகிறது. மேலும், தொலைக்காட்சியின் வழிக் கல்வி கற்க வேண்டும் என்றும், தொலைபேசி வழியே குறைகளைக் கூறினால் உடனே அக்குறைகளைக் களைய முற்படும் நிலையைக் நம்நாட்டில் கொண்டு வரவேண்டும் என்றும் கவிஞர் விரும்புவதை,

தொலைக்காட்சியில் பாடமதைக்
கற்றிடுதல் வேண்டும்
தோன்றும் அய்யம் ஆசிரியர்
விளக்கிடுதல் வேண்டும்!

ஒலியும் ஒளி நாடாவினில்
பதிந்திடுதல் வேண்டும்
ஓதிடவே மீண்டும் பாடம்
படித்திடுதல் வேண்டும்!

அரசுத்துறை விரைந்து செயல்
படுத்திடுதல் வேண்டும்
அகம் மகிழ்ந்து மக்களெல்லாம்
போற்றிடுதல் வேண்டும்!

தொலைபேசியில் சொன்னால் போதும்
கேட்டு அடுத்த நொடியில்
தொடர்ந்து வந்து குறைமுடிக்கும்
செயல் முறைகள் வேண்டும்! (துவி. 35)

என்ற கவிதைவழிக் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.

சமூகப் பற்று

கவிஞர் சமூகத்தில் நிலவிவரும் சீர்கேடுகளைக் கண்டு வருத்தம் கொள்கிறார். இவருடைய கவிதைகளில் சமுதாய நிலை பற்றிய சிந்தனைகள் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. அரசு அலுவலகங்களில் வேலை செய்யும் அலுவலர்கள் அங்கு வரும் மக்களிடம் அன்பாக நடந்து கொள்ளாமல், தமது அதிகாரத்தையும், ஆணவத்தையும் காட்டுகின்றனர். இதைக்

கண்ட கவிஞர் அரசு அலுவலர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

அரசு அலுவலகத்திலே
வேலை செய்வோரே
அடுத்தொருவர் உதவிகோரின்
அன்புடன் நீரே!
அதிகாரமே காட்டி மறுப்
புரைத்திட வேண்டா
ஆகும் உதவி செய்து மனம்
களித்திட வேண்டும்
தாமதமே செய்து வேலை
இலஞ்சம் வாங்காதீர்
தனது மனச்சாட்சியின்றி
நடந்து கொள்ளாதீர் *(ச.அ. 29)*

இன்று காணப்படும் நாகரிக உலகத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சுமையாக இருப்பதாகக் கருதுவதால் பல முதியோர் இல்லங்கள் தோன்றுகின்றன. பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, கல்வி கொடுத்து, பின் திருமணம் செய்து வைத்த பெற்றோர்களை நாமும் குழந்தையைப் போலப் பாவித்து அவர்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர்.

கண்முன் காணும் தெய்வம் – நலம்
கருதுகின்ற தெய்வம் – தம்
கண்கள் எனப் போற்றி – நமைக்
காத்து வளர்க்கும் தெய்வம்
கல்வி கற்க வைத்து – இனிக்கும்
கரும்பைப் போல் வளர்த்து
செல்வம் சேர்க்க தொழிலும் – தேடிச்
செல்ல வைக்கும் தெய்வம்!
தந்தை தாயே தெய்வம் – இத்
தரணி போற்றும் தெய்வம்
சிந்தை எண்ணிப் பாராய் – மனம்
சிதைவுறாமல் காப்பாய்! . . .

அகவை முதிர்ந்த நாளில் – முதியோர்
அகத்தில் சேர்க்கலாமா
தகவுடைய செயலா – நன்றி
தனைமறந்த விழலா
கண்கள் எனக் காத்தார் – நாமும்
கண்கள் எனக் காப்போம் – மனம்
புண்கள் பட்டிடாமல் – பேணிப்
போற்றி அன்பாய் வாழ்வோம்! *(ச.அ. 19)*

மேலும், தற்கொலை செய்யக் கூடாது; புறங்கூறுதல் கூடாது; ஆங்கில மோகம் கூடாது; மூடநம்பிக்கை ஒழிய வேண்டும்; ஒன்றாக வாழ வேண்டும் என்பன போன்ற பொருண்மைகளிலும் சமுதாய நலன் குறித்த கவிதைகளை யாத்துள்ளார் கவிஞர்.

அரசியல்

ஆட்சிக்கு வரும் முன் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்போம் என்று கூறி, வெற்றி பெற்று, பிறகு தொகுதிப் பக்கம் வராமல் இருக்கும் அரசியல்வாதிகளைச் சாடுகிறார் கவிஞர்.

வென்றதன் பின்னே பதவிகள் பெற்று
வீதியில் வலம் வருவார்
நன்றுமே செய்ய தொகுதியின் பக்கம்
மறந்தும் போய் விடுவர்! *(ச.அ. 53)*

அரசியல் தலைவர்களின் இழிச் செயல்களையும் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்.

கடத்தலை ஒழிப்பேன் என்றவர்கள் – தம்
கடமை உள்ளம் அகற்றி விட்டு
கடத்தல் பொருளில் பங்கு பெற்று – நாளும்
காசும் பணமும் சேர்க்கின்றார்.

கொள்ளைக் கூட்டம் தமை ஒழிப்போம் – என்று
கொள்கை முழக்கம் செய்தவர்கள்
கொள்ளை அடித்த பணத்தினிலும் – பங்கு
கொண்டு கொழுத்து வாழ்கின்றார். . .

ஊழலை ஒழிப்போம் என்றவர்கள் – அந்த
ஊழலால் வரும் பெரும் பணம் பெற்று
ஊழலை மேலும் வளர்க்கின்றார் – மக்கள்
ஊழியர் எனப்பறை சாற்றுகின்றார். (சி.செ. 3)

கவிஞர் அரசியல் தலைவர்களைச் சாடினாலும் தன்னைக் கவர்ந்த தலைவர்களையும் பாடத்தவறவில்லை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றோரின் கொள்களைத் தனது கவிதைகளில் கூறுகிறார்.

காதல்

காதல் பற்றிப் பாடாத கவிஞர்கள் இல்லை என்று கூறும் அளவிற்குத் காதல் கவிதைகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. கவிஞரும் இதற்கு விதிவிலக்கல்ல. நாற்பது ஆண்டுகளுக்கு முன் கவிஞரின் வாலிப வயதில் காதல் தோல்வியினால் ஏற்பட்ட வேதனையின் வெளிப்பாடாகத் தோன்றியதே 'எட்டாக்கனி' எனும் கவிதைத் தொகுப்பு.

> நடைமுறையில் எத்தனையோ காதலன், காதலி உள்ளங்கள் கைகூடாமல் எட்டாக்கனியாகக் கருகிப்போயுள்ளன. நானும் இளமையில் அவ்வகையில் பாதிக்கப்பட்டதனால்தான் காதலர்களின் உள்ளத்தின் இயல்பை உவமைகள் மூலம் வெளிப்படுத்த முடிந்தது என நினைக்கிறேன் (எட். ப. 6)

என்று கவிஞர் குறிப்பிடுகிறார். **கண்வழிப் புகுந்த காதல்** என்ற கவிதைத் தொகுப்பு சாதிக்கலப்பு மணத்தையும், மதக்கலப்பு மணத்தையும் பற்றிப் பேசுகிறது. மேலும் காதல் கைகூடாமல் போயின் சாதல் என்ற நிலைமாறி வாழ வேண்டும் என்ற கருத்தை மையமாகக் கொண்டு **'காதல் போயின் சாதல் வேண்டா'** என்ற தலைப்பில் கவிதை சொல்லும் கதையாக அமைகிறது. இத்தொகுப்பில் அமைந்தவை நீண்ட பாடல்கள்.

பிற இலக்கியத் தாக்கம்

கவிஞர் திருக்குறள் பிரியர். திருக்குறளை முழுதும் மனனம் செய்து வைத்ததன் விளைவாகத் தோன்றியதே **திருக்குறள் அரங்கேற்றம்** என்ற கவிதைத் தொகுப்பு. திருக்குறளின் பெருமையை உணர்த்தும் பொருட்டு இந்நூலைப்

படைத்துள்ளார். இது இசைப் பாடலாகவும், வரலாறாகவும், கவிதையிலேயே நாடகமாகவும் அமைகிறது. இந்நூல் மூன்று பிரிவாக அமைகிறது. 1. திருக்குறள் இசைப்பாடல்கள் 2. வள்ளுவர் வாசுகி கதை, 3. திருக்குறள் அரங்கேற்றம்.

இத்தொகுப்பில் திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் வழங்கும் பல்வேறு சிறப்புப் பெயர்களை நெஞ்சில் நிலைக்கும் படிப் பாடியுள்ளார். திருவள்ளுவர் வாழ்க்கை வரலாற்றை, வாசுகியின் கற்பின் மாண்பினைச் சுவைபடக் கூறியுள்ளார். கற்பனைச் செறிவும், கருத்து வளமும் பொருந்த, சங்கப் புலவர்களை நாடகப் பாத்திரங்களாக்கிப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி மன்னன் அவையில் திருக்குறளைத் திருவள்ளுவர் பல இடர்ப்பாடுகளுக்கிடையில் அரங்கேற்றம் செய்வதாக அமைக்கப்பட்ட **திருக்குறள் அரங்கேற்றம்** என்ற நூல் நடிப்பதற்கு ஏற்றவாறு கவிதை நாடகமாக எழுதப்பட்டுள்ளது என்பது சிறப்புடையதாகும் (தி.அ.ப. 14).

சான்றாக, அரசவையில் சாத்தனார் புலவர்கள் முன்பு திருக்குறளின் பெருமையை எடுத்துக் கூறுதலின்போது திருவள்ளுவர் கூறுவதாக அமையும் பகுதி,

> **அறம் பொருள் இன்பம்**
> **முப்பாலாக**
> **திறம்பட வகுத்து**
> **நாற்பால் பொருளை**
> **ஒன்றே முக்கால்**
> **அடியில் உலகை**
> **நன்றே ஆய்ந்து**
> **நானுள்ளடக்கி**
> **பத்துப் பத்துக்**
> **குறளாய்ப் பகுத்து**
> **ஒத்ததிகாரம்**
> **ஓர் தலைப்பிட்டு**
> **முறையாய்த் தொகுத்து**
> **முழுதும் படிக்க**
> **இறைவன் வாழ்த்தில்**
> **தொடங்கிப் பாயிரம்**

இல்லறம் துறவறம்
ஊழ் வினையோடு
நல்லறம் நான்கியல்
தன்னில் முடித்தேன்
அறத்தொடு ஆட்சி
அமைதி நிலவ
திறத்தொடு அரசியல்
அங்க வியலும்
ஒழிபியல் மூவியல்
பொருட் பாலாக
மொழிந்தனம் களவியல்
கற்பியல் ஆக
இன்பப் பாலை
ஈரியலாய்ப் பேர்
இன்பம் அதனை
பால்து நெய்யாய்
இருப்பது போல
எங்ஙனம் சுட்டி
விருப்புடன் விரவ
விரைந்தனன் ஆங்கே (தி.அ.ப. 84-85)

எனத் திருக்குறள் பெருமையை யாவரும் கற்று இன்புறுமாறு கவிஞர் எழுதியுள்ளார்.

கவிஞர் மகாகவி பாரதியாரின் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதனால் அவருடைய பாடல்களின் தாக்கம் கவிஞரிடம் காணப்படுகிறது. பாரதியார் பாடலான ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு,

இளைய தலைமுறையினாய் வா வா வா
இன்பத் தமிழ் காக்கவே வா வா வா (ச.அ. 10)

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும்,

எழுச்சியில்லாத் தமிழனே போ போ போ
ஏன் பிறந்தாய் தமிழனாய் போ போ போ

விழுச்சி பெற்று எழுகிலாய் போ போ போ
வீரம் இல்லா நெஞ்சினாய் போ போ போ *(ச.அ.9)*

என்றும் பாடுகிறார் கவிஞர்.

நிறைவுரை

புலவர் புஞ்சையரசனின் கவிதைகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையும், இனிமையும், நிறைந்து காணப்படுகின்றன. இவரது பாடல்கள் அறிவுரை கூறும் நிலையில் அமைகின்றன. தமிழுணர்வு, உழைப்பு, ஒழுக்கம் போன்ற கருத்துகளை வலியுறுத்தும் கவிதைகள் அதிகமாய்க் காணப்படுகின்றன. இவருடைய கவிதைத் தொகுப்புகளில் ஆங்காங்கே பொன்மொழிகளும், சிந்தனைத் துளிகள் என்ற தலைப்பில் அறிவுரை கூறும் பொருட்டு இரண்டடிகளாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. இவரது கவிதைகள் உணர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்ட வல்லன.

திலகவதி

கவிஞரைப் பற்றி

இவரது பெற்றோர், ஊர், பிறந்ததேதி முதலியன பற்றி வரிவாக அறிய முடியவில்லை என்றாலும் அணிந்துரை, அறிமுகவுரை முதலியவற்றின் துணைக்கொண்டு ஒரு சில தகவல்கள் அறியலாம். அணிந்துரை நல்கிய பேராசிரியர் ந. மெய்ப்பொருள் (முதல்வர், அ.வீ.வா.நி.ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி) கூறும்போது,

> என் சகோதரி திலகவதி . . . விடுதலைக்கு முன், வீட்டிலோர் பொந்தில் பெண்கள் வாழ்ந்த காலத்தில் பிறந்த இவருக்குப் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிக் கல்வி கிட்டியது. ஆனால் வகுப்பறையின் சுவர்களுக்கு வெளியே, உலகப் பல்கலைக் கழகத்திலே, கார்க்கியைப் போல இவர் கற்றது கடல் அளவு

எனப் பாராட்டுகிறார். அறிமுகவுரை நல்கிய டாக்டர் G.அலங்காரம் (முன்னாள் மானாமதுரை ஊராட்சி மன்றத் தலைவர்) அவர்கள் கூறும்போது

> காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்கென முப்பது ஆண்டு களுக்கும், மேலாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தரமான பேச்சாளர். அச்சம் களைந்த அறிவு மிக்கவர். காங்கிரஸ் பிளவு பட்டபோது பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான ஸ்தாபன காங்கிரஸ், இதன்பின் ஜனதா எனத் தன் சேவையைத் தீவிரமாக்கியவர். உண்மைகளை நகைச்சுவை இழையோடத் தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்காமல் ஆணித்தரமாகத் தம் கருத்தை விளக்கும் திறமையாளர். மேலும், எமர்ஜென்ஸி அமலாக்கத்தின்போது தமிழகத்திலேயே (43-D.I.R.) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்ட ஒரே பெண்மணி இவர். திருச்சி, தூத்துக்குடி கொக்கிரகுளம்

ஆகிய சிறைகளில் மூன்று மாதங்கள் மிகு கொடுமைக்கு ஆளானவர்

எனப் பதிவு செய்துள்ள தகவல் கவிஞரின் அரசியல் ஈடுபாட்டைத் தெளிவுறக் காட்டும்.

இந்திரா கைது ஏன்? என்ற அரசியல் விளக்க நூல் அந்தக் காலக்கட்டத்தில் இவருக்குப் புகழையும் பெயரையும் நல்கிய தாகும். அந்நூல் **ஹிந்து, தினமலர்** போன்ற தமிழக முன்னணி ஏடுகளால் மிகுதியும் பாராட்டப்பட்டது என்ற குறிப்பு இவரது கருத்துத் திறத்திற்கு எடுத்துக்காட்டு.

> எனது கவிதைகளை ஆன்மீக உணர்வின் அனுபவம் தேசபக்திச் சிலிர்ப்பு, அரசியல் அவலம், சமூகக் கடமைகளின் சரிவு, விரக்தியுறும்போது ஏற்படும் தத்துவம், இவற்றுடன் இலக்கியமும் இணையுமாறு எழுதி உள்ளேன். அத்துடன் நாட்டு நடப்பின் நன்மை, தீமைகளைப் பகுத்து வெளிப்படுத்தும் துணிவான உணர்வுகளின் உந்துதலையும் வெளிப்படுத்தி உள்ளேன். எனவேதான் எனது இந்நூலுக்கு உள்ளக்கடலின் உணர்வலைகள் எனப் பெயரிட்டேன். (ப.13)

இவர் தனது கவிதைப்படைப்பான உள்ளக்கடலின் உணர்வலைகள் என்ற நூலைத் தன் அன்பிற்கும் பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய 'செல்லம்மா' என்ற தன் பாட்டிக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். இவர் தன் பாட்டியை உவகையோடு பாராட்டியுள்ளது அவரது பண்பிற்கு ஒரு நற்சான்று ஆகும்.

> பாசத்தின் உருவாம் பாட்டி; எனை வளர்த்து
> ஆசையைப் பொழிந்த அந்த மானுடம்!
> 'சளிப்பதே அறியா சாதனைப் பொக்கிஷம்!
> அனைத்து நீதியும் அருங்கதை மூலம்
> மனம்புக வைத்த மாபெரும் மேதை!
> உளத்தில் பதித்த உயர்ஞான இமயம்
> மன்பதை துன்புறும் செயலறியாதவர்
> என்னுடைய இதயம் தள்ளி முழுமையாய்
> பின்னிப் பிணைந்த தன்னேரில்லா. . . . .
> செல்லம்மா பாட்டி (ப. 4-5)

நூலமைப்பு

இக்கவிதை நூல் தெய்வ பக்தி, தேசபக்தி, அரசியல், சமூகம், இலக்கியம், தத்துவம் என ஆறு பகுதிகளாக அமைந்துள்ளது. **தெய்வபக்தி** என்ற பகுதியில் தாயிடத்துப் பிள்ளை, கயிலயங்கிரி, காவடிச் சிந்து, விவேகானந்தர், திருமந்திரம் தந்த தேவன், புனிதமே லோக குருவே, எழிலார் மயில், வாழ வைக்கும் பராசக்தி, எனக்காக நாம், பெயரிட்டால் போதுமா? ஜெயமென்று ஆடுமயிலே, நலம் தரவா கண்ணா, ஞானத்தீ, தாயான அமுதன், அகிலம் ஒரு நிகரோ! எது தெய்வம், எப்படி அழைப்பீர், போஷகன் தானா? நாளை நமதே, வேறு புதுமை உண்டோ? சிலையாகும் நிலை, சிங்கார வேலன் திருத் தசாங்கம், நான் சிரஞ்சீவி என்ற கவிதைகளும்,

தேசபக்தி என்ற பகுதியில் சுதந்திர நாள், புதுமுகங்கள் வந்தன, அவர்விட்ட கப்பல், ஆஸ்தான கவிஞர், பொன்னுலகில் மீண்டும், பந்தென ஆடிடுவோம், இன்று வாரீர் இளைஞரே, பண்பே நமது படைக்கலம், சுதந்திரம் காப்போம், நம்பணி தொடர்வோம், பாரதி ஒரு யுக புருஷன், வீழ்ந்ததோ தனிச்சிறப்பு, இந்தியனாடே, மயில் எங்கள் தேசியப் பறவை என்ற கவிதைகளும்,

அரசியல் என்ற பகுதியில் மாரி பொய்த்ததடா! நாகர் கோவில் தேர்தல், எலி வானில் பறக்கும், காமராஜர், சங்கினை ஊதுகின்றோம், கடமைப் பொங்கல், இந்திரா காந்தியே வருக, நேரு மறைந்த நேரம், நேரும் மறைந்தார், தொழிலை நீ விட்டு விடு, இதற்குத்தான், அசலும் நகலும், தகைமையாளன், அவர் வழி நிற்போம், நெஞ்சம் துடிக்கட்டும், காமராஜ் ஒரு கண்ணோட்டம், மக்கள் விழிப்பால்தான் மாற்றம், பொங்கலோ பொங்கல் ஆகிய கவிதைகளும்,

சமூகம் என்ற பகுதியில் பொன்னியின் குரல், ஜீவனப் பிரச்சினை, ஆறறிவு பெற்றவர், மகன் கேட்டால், Barஐப் புறக்கணிக்கப்பார்/ பட்டங்கள் பயன்தரா, தரலாமோ தாழ்வை! பாவம் பாருங்க, வணங்கப்படாத் தெய்வங்கள், இயற்கை அன்னை, சுயநலம், பேர் கெடுத்துக் கொள்கின்றாய், என்ற கவிதைகளும் **இலக்கியம்** என்ற பகுதியில் காதல் பைங்கிளி, தழுவல், ஓ! ஸ்வெட்டரே, வார்த்தைகளைத் தேடி, காதலிப்பீர்

மானுடரே, இருட்டில் நிழல், குழந்தை, காலை இன்பம், பாட்டிவைத்தியம், கெட்டா பெற? நட்பு பலவிதம், பொன்னியின் செல்வ! உள்ளத்தில் உள்ளது ஆகிய கவிதைகளும்,

தத்துவம் என்ற பகுதியில் குடும்பக் கடல், எது தத்துவம்? வினை செய வேண்டாவா? சிறு துரும்பு, ஆன்ம நேயக்கோல் ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சில ஈண்டு ஆய்வுக்குரியன.

ஆன்மிகம்

இது தெய்வ பக்தியில் அமைந்த பாடல். எளிய சொற்கள், சந்தம் கொண்ட நடை. ஆன்மிகம் கமழும் கருத்துப் பாடல் வருமாறு.

காவடி தூக்கியே ஆடு
குன்றம் நாடு –அந்தக்
கந்தன் கருணைக்கு ஈடு இல்லை
கழுகாசல மலையில் அமர்
எழிலோவியம் தொழுதே அவன்
சேவடி பற்றினால் வீடு–கிட்டும்
சொன்னேன் உனக்கில்லை ஈடு (ப. 17)

கவிஞரின் கற்பனைக்கும் நல்ல கருவிற்கும் ஊற்றாக விளங்குவது முருகப்பெருமானின் அருளிச் செயலும் அருள் பாலிப்புமே என்றும், மாறுபடு வினை மாய்த்து அன்பர்க்கு அவர் கோரும் வரம்தனை ஈந்திடும் ஆறுமுகன் எனப் பாராட்டுவர். கயிலயங்கிரி என்ற பாடலில் அதன் சிறப்பை வருணிக்கும் போது அவர் தரும் சொல்லடைகள் படித்து இன்புறத்தக்கன.

கண்ணும் கருத்தும் கண்டிலாப் புனிதம்!
பாரதம் செழிக்கப் பாய்ந்து வரும்பல!
நதிகளின் மூலம் நல்கிடும் புண்ணியம்!
செப்பிட இயலாச் சிகரம்! சிவனுரு!
. . . . விஸ்வலிங்கம் எனும்
மறைபுகழ் கெட்டா வடிவுடை என்சிவன்!
வெள்ளிச் சுடராய் விரியுநல் அற்புதம்!
வெணிநிற நன்மணல், பித்தனின் பேரெழில்
மாலயன் தேடிக் காணாப் பேரொளி!
மானல ரோவரின் மயக்குதெய் வீகம்! (ப. 16)

என அற்புத ஆன்மிகச் சொற்களால் பிறைசூடிய பிரான் உறையும் தெய்வத்திருமலையின் பெருமையைக் கவிஞர் இறைவுணர்வோடு பாராட்டியுள்ளது திலகவதியார் ஓர் இறைநேயச் செல்வர் என்பதை உணர்த்தும்.

ஆன்மிகச் செம்மல், பாரத மைந்தன், இளைய ஞானி எனப் பாராட்டப் பெறும் விவேகானந்தரின் மாண்பினை திலகவதியார் மனம் உவந்து பாராட்டியுள்ளது அவர் இறையாண்மையின்மீது கொண்ட நம்பிக்கையைக் காட்டும். விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றில் சிறப்புறு நிகழ்வு அவர் அமெரிக்கா சென்று ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்றியது. அதனை -

அமெரிக்கா சென்று அங்கு
ஆன்மிக ஒளிப ரப்பி
அருளுடை இராம கிருஷ்ணர்
அனுப்பிய தூத ராக
சமர்இன்றிப் பிறம தத்தின்
சாரத்தை இகழ்ந்திடாமல்
சகமெல்லாம் போற்ற வந்தன்
சமயத்தை ஏற்க வைத்தாய்
இமையதும் மூடி டாமல்
இரும்பினார் சதையும் நல்ல
எஃகினால் நரம்பும் கொண்ட
இந்திய இளைஞர் கூட்டம்
தமதுழைப் பதனை ஈந்தால்
தாய்நாடு உயரும் என்ற
தத்துவம் சொன்ன எங்கள்
தலைவனே ! போற்றி ! போற்றி ! (ப. 19-20)

மேற்கண்ட பாடலின்மூலம் விவேகானந்தர் அயலகப் பயணத்தின் போது ஆற்றிய ஆன்மிகப் பணியின் சிறப்பைத் திலகவதியார் தமது கவிதையில் பதிவு செய்துள்ள வகைமை பாராட்டிற்குரியது. தெய்வபக்தி என்பது தேசபக்தியும் உள்ளடக்கியது என்பதனைத் திலகவதியார் தேசபக்திக்கு முதலிடம் தந்த விவேகானந்தரைப் பாராட்டுவதில் இருந்து அறியலாம்.

சமூகச்சிந்தனை

சிறந்த கவிஞன் என்ற நிலை ஒரு கவிஞன் சமூகத்தின் அவலங்களை, தேவைகளை, அடிப்படை நியாயங்களை, சமூக ஒருமை நேயச் சிந்தனைகளை உள்வாங்கி எழுதும் கவிதையின் சிறப்பிலேதான் அமைகிறது எனலாம். அவ்வகையில் திலகவதியாரின் சிந்தனை காந்தீய வழிப்பட்டது என்றால் மிகையாகாது. காங்கிரஸ் மா இயக்கத்தில் தம்மை முழுமையாக இணைத்துக்கொண்ட காரணத்தால் சமூகச்சீர்கேட்டை ஏற்படுத்தும் குடியின்மீது அவருக்கு ஆறாச் சீற்றம் உள்ளது என்பது பின்வரும் கவிதைமூலம் அறியமுடிகிறது.

வேர்விட்டுச் சமுதாய வீழ்ச்சிக்கு வித்துஇடும்
பாரைப் புறக்கணிக்கப் பார்!
நீர் சொரிந்த கண்ணாள் நிலைகுலைந்த துணை எண்ணி
பாரைப் புறக்கணிக்கப் பார்!
பீர், ஒயின், விஸ்கி பிள்ளைகளைத் தான் அழிக்கும்
பாரைப் புறக்கணிக்கப் பார்!
போராடி நோய்களுடன் புகவைக்கும் நமன் உலகம்
பாரைப் புறக்கணிக்கப்பார்!
கோவையாய்க் குற்றம் புரிய உனைத் தூண்டும்
பாரைப் புறக்கணிக்கப் பார்!
ஊர் சிரிக்க வாழும் ஒவ்வாநிலை ஒழிக்க
பாரைப் புறக்கணிக்கப் பார் ! (ப. 127)

வெளிநாட்டுப் பண்பாட்டால் இந்திய மண் புகுந்த கூட்டுக்குடிப் பண்பாடு (Get together party) மக்களை எந்த அளவிற்குச் சீரழிக்கும் என்பதைப் படம் பிடித்துக்காட்டும் கவிதை. இந்தப் பாழும் பழக்கத்தை மறக்க,

மோர், இளநீர் அருந்தி முழுதும் உடல்காத்து
பாரைப் புறக்கணிக்கப் பார் (ப. 127)

என நல்ல ஒளடதமும் கூறுகிறார் கவிஞர். 'ஆறறிவு பெற்றவர்' என்ற கவிதையில் சுற்றுப்புறச் சூழலை மனிதன் சீரழித்து விட்டமையால் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேட்டை நகைச்சுவை ததும்ப மனிதனும் கொசுவும் பேசிக் கொள்வது போல

அமைத்துள்ள பாடல் மனிதனுக்குச் சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவுள்ள பாடலாகும்.

கொசுவலை கட்டினால் மசியாது இடைவெளியில்
குறுகிவந்து உள் நுழைந்தாய்
கோபமாய் அடித்து நான் துரத்திட முனைந்தாலும்
குறுநகைப் புரிந்து நின்றாய். பசியதொரு
வேப்பிலை, பூண்டுத்தோல், நொச்சி இலை
பரவலாய் அனலில்இட்டும்
பார்த்திட்டேன் !
புகைவராப் பகுதியில் ஒளிந்திருந்து
பசியுடன் நெருங்கி வந்தாய்
நித்தியம் மின்சார கொசு அழிப்பான் தானம்
நிலையாகச் செயல்மட்டமே
உருகிகண்டு என்குருதி உறிஞ்சிடத் துடித்திடும்
உன்னை நான் தப்பவிடவோ! (ப. 123)

என்று இரவுத் தூக்கத்தைக் கெடுக்கும் கொசுவின் தொல்லை பற்றி மனிதன் சொல்லுவதாக மேற்கண்ட பாடல் அமைகிறது. மனிதனின் ஆற்றாமைக்குக் கொசு தரும் விடையாகக் கவிஞர் சொல்லும் கவிதை அழகியலோடு நல்லறிவு புகட்டும் கருத்தாகவும் அமைகிறது.

சுற்றுப்புறச்சூழல் நரகமாய் ஆக்கிடும்
செயலையே செய்து வருவீர்
சுயநலம் மிகுந்ததால் குப்பையைப் பிறர் வீட்டுச்
சுவர் அருகில் கொட்டி மகிழ்வீர்
சற்றுமே அஞ்சாமல் கழிவுநீரை வழியைச்
சார்ந்துமே ஓடவைப்பீர்
சாக்கடையை மூடாமல் கழிவுகளை விட்டுமே
சத்துணவு தந்து வளர்ப்பீர் தொற்று நோய்
வருமென்று தெரிந்தாலும் நீரினைத்
தெரு நடுவில் தேங்கவைப்பீர் தொய்வின்றி
நாங்களும் பெருகிக் குவிந்திட
தோன்றும் வழி அனைத்தும் செய்வீர்
மற்றென்ன? ஆறறிவு உள்ளவர்கள் விதிமுறை
மதிக்காத தன்மையாலே

மண்டிடு வாய்ப்பதால் உம்குருதி குடிக்கிறோம்
மனிதரே ! புலம்பிடாதீர்!

வேலைவாய்ப்பின்மை

சமூகத்தில் படித்த இளைஞர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப வேலைகிடைத்திட வேண்டும். அத்தகைய நிலையை ஓர் அரசு உருவாக்கிட வேண்டும். இதில் தேக்க நிலை ஏற்பட்டால் இளைஞர்களின் உற்சாகம் தேங்கிவிடும். இளைஞர்களைக் கவலை சூழும்போது அவர்களின் சிந்திக்கும் திறன் மந்தமாகி விடும். இதுபற்றிப் பேரறிஞர் அண்ணா கூறும்போது 'அதோ' சாலை ஓரத்திலே வேலை அற்றதுகள், வேலை அற்றது நெஞ்சங்களிலே விபரீத சிந்தனைகள்! இந்தக் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது. கவிஞர் இதனை ஜீவனப் பிரச்சனை என்ற தலைப்பில் அமைத்துள்ள பாடல் வருமாறு:

தேவை விளம்பரம்பார்க்க வாங்கிய
தினசரி கள்தம் தொகை இருந்தால்
நாவல் வார இதழ்கள் வாங்கி
நகரும் நூலகம் வைத்திருப்பேன் !
அப்ளிகேஷன் அனுப்பிய காசில்
உப்பு புளிக்கடை வைத்திருந்தால்
எப்படி யாவது பிழைத்திருப்பேன்
ஏதோ ஒருவிதம் வாழ்ந்திருப்பேன்!
போஸ்டல் ஆர்டர் வாங்கிய தொகையில்
பூக்கடை ஒன்று வைத்திருந்தால்
சாக்கடை வாழ்வை உதறி எறிந்தே
சமூக கௌரவம் பெற்றிருப்பேன்
அலைந்து டைப்அடிக்கப் பயின்ற பணத்தில்
ஆர்வத் துடன் இசை கற்றிருந்தால்
கலைந்த என் கனவுகள் பலித்திருக் கும்பெரும்
காசும் புகழுடன் சேர்ந்திருக்கும்!
இன்டர் வீயூவிற்குப் போன பணத்தில்
எல்லா வகைக்கா லணி வாங்கி
சென்ட்ரல் ஸ்டேஷனுக் கெதிரில் விற்றால்
ஜீவனப் பிரச்சனை தீர்ந்திருக்கும்
எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம்

எனக்கு வேலை கிடைத்திடவே
கிம்பளம் கொடுத்தேன் ! வேலை கிடைத்து
சம்பளம் மட்டும் வாங்கவில்லை! (ப.122)

கவிஞர் திலகவதியார் இந்தப் பாடலில் வேலை தேடி அலையும் இளைஞர்களின் மனோ நிலையைக் கவிதைச் சித்திரமாகவே வடித்துள்ளார். திலகவதியார் பாவம் பாருங்க என்ற தலைப்பில் அமைந்த, பிறிதொரு பாடலில் பட்டம் பெற்ற இளைஞன் பெற்ற ஏட்டுக்கல்வியினால் என்ன பயனும் இன்றி மனம் குமுறும் காட்சியினை வடித்துக் காட்டுகிறார்.

பாடுபட்டு படிச்சுப்புட்டு பட்டம் வாங்கினேன்!
ஓடி அலைந்து வேலைதேடி உருமாறிப் போனேன்!
'இன்டர்வியூக்கள்' கணக்கில்லாம எல்லாம் முடிச்சிட்டேன்
சென்ட்ரல் முதல் ஸ்டேட் வரையில் செலக்ஷன் ஆகவே
அப்பாவிடும் பெருமூச்சோ ஆளைத்தூக்குது!
தப்பாமலே விரதம் இருந்து தவிக்கிறார் அம்மா
வேலையினிக் கிடைக்காதென விரக்தியுற்றதால்
சாலையோரம் பெட்டிக்கடையை சலிப்பில் வைத்திட்டேன்!
பட்டதாரி பெட்டிக்கடையைப் பார்த்து வாங்குங்க
பட்டமரம் துளிர்க்க கொஞ்சம்' பாவம் பாருங்க! (ப. 130)

தொழிலாளர் பற்றி

30-9-68 அன்று உடுமலைப் பேட்டைக் கவியரங்கில் வணங்கப்படாத் தெய்வங்கள் என்ற தலைப்பில் பல்வேறுபட்ட தொழிலாளர்களின் கடுமையான உழைப்பை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

நித்தியத் தேவைக்காக உழைக்கும் அப்பெருமக்கள் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள். அத்தகையோரை இச் சமூகம் மறந்து விட்டது எனச் சுட்டிக் காட்டுகிறார்.

1. **துடிக்கின்ற இதயத்தை நெய் தறியாய்த் தானாக்கி**
   துன்பம் இன்பம் இரண்டும் இடை ஊடும் பாவாக்கி
   கொடுக்கின்றாரே ஆடை! குலைவுறாமல் மானம்
   கொடுக்கின்ற நெசவாளர் வணங்கப்படாத் தெய்வம்

2. ஓடுஎன்னப் பசிப்பிணியை ஓடஓட விரட்டி
உயிர்காக்க உணவளித்து உறும்பஞ்சம் நீக்கி
நாடுயரப் பயிர் விளைக்கும் நல்லவரே நீங்கள்
நாள்தோறும் எங்களாலே வணங்கப்படாத் தெய்வம்....

(ப. 131)

எல்லையற்ற பேரிமய அடிவாரம் தன்னில்
எவ்வுயிரும் உறைத்திடும் வன்குளிரில் வாடி
தொல்லையற்று அச்சமின்றி நாட்டு மக்கள் நன்கு
துயில் கொள்ளும் சலனமற்ற நள்ளிரவு நேரம். . .
அள்ளுகின்ற ஆசைகளைப் பகைவர்தம்மின் கயமை
ஆணவத்தை அடக்குதற்கே அர்ப்பணித்து விட்டுத்
துள்ளுகின்ற வங்இளமை தோல் வலிமை தன்னை
தூய்மைமிகு அன்னைநிலம் காப்பதற்கே ஈந்து
....உள்ளமெல்லாம் நாடு காக்கும் உயர்பணியில் நன்கு
ஒன்றிவிட்ட கடமைவீரர் உமக்குநிகர் யாரோ?
எல்லை காக்கும் வீரர்களே ! நீவீரெல்லாம் நித்தம்
எங்களாலே வணங்கப்படாத் தெய்வம் ஆமா தெய்வம்

(ப: 132)

நெசவாளர்களையும் விவசாயத் தொழிலாளர்களையும், நாடு காக்கும் வீரர்களையும் இவர்கள் மட்டுமன்றி இரும்பை உருக்கி இயந்திரம் செய்யும் தொழிலாளர்களையும், உப்புத் தயாரிக்கும் உப்பளத் தொழிலாளர்களையும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களையும் கடவுளாகவே காணும் கவிஞரின் பாங்கு தொழில் செய்வோர் இடத்து அவர் வைத்துள்ள அன்பைக் காட்டும்.

பேர் கெடுத்துக் கொள்கிறாய் என்ற கவிதையில் தாய்மையின் சிறப்பை எடுத்துக் கூறுவதோடு பெண்ணே பெண்ணுக்கு எவ்வகையில் கேடு செய்து கொள்கிறாள் என்பதை:

மகவுக்கு வரும் நோய்க்கு மருந்து உண்டாய்
மணிக்கணக்கில் கண்விழித்து இதமளித்தாய்!
பகலென்ன இரவென்ன உறக்கம் இன்றிப்
பக்கத்தில் இருந்தவனைப் பார்த்துக் கொண்டாய்
அகந்தனிலே மண்டிவிட்ட கவலை யாலே

அவனுறு நோய் தீரும்வரை உணவும் அற்றாய்
முகம்பார்த்து நோய் தீர்த்த பிள்ளைக்காக
முழுவதுமே உனைத்தந்து உவகையுற்றாய்! (ப. 136)

குலம் விளங்கப் பிள்ளையவன் இளம்ம னத்தில்
கொப்பளிக்கும் தாபத்தைப் பூர்த்தி செய்யப்
பல இடத்துப் பெண்தேடி அலைந்து அலைந்து
பக்குவமாய் நல்லிடத்தைத் தேர்ந்தெ டுத்தும்
அலைபாயும் ஆசைக்கு அடிமையாகி
அது உனக்கு இழுக்கென்ப தறிந்தி ருந்தும்
விலைபேசப் பிள்ளையைத்தான் அழகோ! அந்தோ
வீண்பழியை ஏன்சுமக்க முந்து இன்றாய் (ப. 136)

உரம்போட்டு வளர்த்திட்ட கால்நூற் றாண்டு
உயரியதோர் பேரன்பைப் பின்னே தள்ளி
சரமாரிச் சீர்வரிசைப் பட்டி யல்கள்
சலிக்காமல் போட்டு அவற்றை வலியுறுத்தி
முறையாக இதுவரையில் மைந்த னுக்காய்
முழுதும்நீ செலவழித்த தொகைக் கீடாக
வரதட்சணை கேட்க முனைந்து விட்டாய்
வாழ்க்கையிலே கரும்புள்ளி குத்திக் கொண்டாய் (ப. 137)

தேசபக்தி

கவிஞர் திலகவதியார் தேசபக்தியற்ற அரசியலில் காணும் அவலங்களை வீழ்ந்தோர் தனிச்சிறப்பு என்ற கவிதைவழித் தெள்ளத் தெளிவாகவே படம்பிடித்துக் காட்டுகின்றார். இமயத்தின் உச்சியில் ஏறி நின்றுகொண்டு இந்நாட்டில் நிலவும் தேசபக்தி எந்த அளவிற்குத் தரம் இழந்து விட்டது என்பதனைப் பாரதி கூர்ந்து நோக்கிக் கூறுவதுபோலக் கவிதை யாத்துள்ளார்.

எப்படி இருந்த மக்கள் எப்படி ஆனார் – அந்தோ
இதயத்தை விற்றுவிட்டு எதையும் பெற்றார்
செப்பிய நற்கருத்தைத் தலைகீழாக்கி – இவர்
சிந்தனையைச் சுயநலத்தில் செலுத்திவிட்டார் (ப. 82)

என்றும்,

ஆயுதம் செய்வோம் என்றேன் பலம் பெருக்க–அது
அடுத்தவன் தலை கொய்ய உதவியாச்சு

ஓயுதல் அற்றுநான் உழைக்கச் சொன்னேன் –அது
ஓயாது பதவிதேடி அலைவதற்கோ! (ப. 82)

என்றும்,

காகிதம் செய்யச் சொன்னேன் தொழில்பெருக –அது
கட்சி விளம்பரத்தைக் காட்டு வதற்கா?
சாயுதல் செய்வோம் என்றேன்! உண்மையின் பக்கம்
சாயுதல் செய்யேன் எனச் சபதம் செய்தார் (ப. 82)

என்றும்,

மந்திரத்தைக் கற்கச் சொன்னேன்–பதவி என்னும்
மந்திரத்தில் மேதையாகிச் சுகிக்கக் கற்றார்
தந்திரம் கற்கச் சொன்னேன் கற்றுவிட்டார் – செய்யும்
தவறு களைத்திசை திருப்புதற்கே (ப.83)

என்றும், இறுதியாக,

பாரதி தான்யாத்த பாடலை எல்லாம்– இவர்
பார் அதி மலிவாகப் பண்ணியும் விட்டார்
வேரது சிதைந்திட்ட ஆலமரமாய்–இனி
விழாதோ பாரதத்தின் தனிச்சிறப்பு (ப. 83)

இக்கவிதை மூலம் நாட்டு நடப்பைப் பாரதி கூறுவது போல அமைத்துள்ள விதம் இன்றைக்குத் தேச பக்தியற்ற அரசியல்வாதிகள் பெருகிவிட்ட காரணத்தால் அரசியல் சுயநல விரும்பிகளின் கூடாரமாக விளங்குவதை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

அரசியல்

காந்தியின் காலக்கட்டத்தில் அரசியலில் நேர்மையும் நாணயமும் ஒருங்கிணைந்து இருந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் மிக வேகமாக சீர்கெட்டுப்போனது அரசியல் தான் எனலாம். சுயநலமும், தேசப்பற்றின்மையும் இணைந்து அரசியலாரை மிகவும் சீர்கேட்டிற்கு உள்ளாக்கிவிட்டன. இந்த நிலைமையைக் கவிஞர் திலகவதியார் மாரி பொய்த்ததடா என்ற தலைப்பில் 21.6.62இல் கல்கி பொன்விழாப் போட்டிக்கு அனுப்பி, மூன்றாம் பரிசினை வென்ற கவிதையின் மூலம் பதிவு செய்கிறார்.

நேற்றிருந்த நீதிநேர்மை நிலை குலைந்திட
நெஞ்சம் பொய்த்த வாழ்வினாலே நிலை குலைந்திட (ப. 86)

ஆற்றல் முற்றும் அதர்மம்சூழ அகம்குறுகிவிட
அதன்பயனாய் மனிதகுலம் தன்னைவிற்று விட
கூற்றம் எண்ணக் கோணல் வழி நேர்மை கொன்றுவிட
கொற்றம் கூடத்தகுதியற்றுச் சலனமற்று விட
இயற்கை அன்னை சீறிவிட்டால் என்ன ஆகுமடா
இன்று அல்ல என்றுமேதான், மாரிபொய்க்குமடா (ப.84)

அரசியலில் நேர்மையற்றால் அழிவு மிஞ்சுமடா
அழிந்திடாமல் நாட்டைக் காக்க தர்மம் கெஞ்சுதடா
பதவிக்காகப் பணத்திற்காக ஏதும் செய்வரடா
பண்பும் அன்பும் பறந்து விட்டால் எங்கே உய்வதடா
விதவிதமாய் மனிதகுலம் பிரிந்து விட்டதடா
விளைவு முற்றும் நேர்எதிராய்த் திரிந்து பட்டதடா!
எதையும் செய்ய மனிதகுலம் துணிந்த விட்டதடா
இதற்கு அஞ்சிச் சட்டம் கூடப் பணிந்து விட்டதடா. (ப. 87)

இலக்கியம்

கவிஞனின் கற்பனைச் சிறகு விரிந்து, புல்மெத்தையாக விளங்குவது இலக்கியம். அழகியல் உணர்வையும் கவிஞனின் ஆழ்மனதுக் கருத்துகளையும் கலைநயம் ஆக்கும் தன்மை இலக்கியத்திற்கு உண்டு.

ஏழை ஒருவன் குளிர்காலத்தை எண்ணி மனம் பதைக்கிறான். வாட்டும் குளிர் அவன் மேனியை உறைய வைத்து விடும். அந்தத் தொல்லையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள ஒரு ஸ்வெட்டர் வாங்க விழைகிறான். ஆனால் முடியவில்லை. இதனை ஓ! ஸ்வெட்டரே! என்ற நெடிய பாடல்வழி, திலகவதியார் கவிதையாகப் புனைந்துள்ளார்.

முன்பனிக் காலம் முழு இரவும் தான் வாட்ட
மூளை நரம்பு எல்லாம் செயலிழந்து நின்றுவிட
என்பெல்லாம் நடுங்கி இரத்தம் உறைவதுபோல
இதயம் மரப்பதனால் எல்லாம் வெறுப்பாக
உடல் இயக்கத்தையே நின்று விடச் செய்யும் குளிர்
(ப. 141)

கோடை கூட மனிதனை இத்தனை வருத்தாது. இதனைக்

கோடை வெப்பமெனில் குளுகுளுக்க ஃபேனுண்டு
குருத்தோலையில் செய்த குறுகிய விசிறி உண்டு
ஆனால் வாடைக்காற்றைத் தடுக்க எதுவும் இல்லையே
(ப. 141)

வாடைதான் அம்மம்மா!
வருத்திடுதே என்னுடலை
வாழ ஒருஸ்வெட்டர் வாங்கும்நாள் எந்நாளோ!
சொந்தமாய் ஒரு ஸ்வெட்டர் வாங்கி விட்டால்
சோகத்துக் கிடமில்லை சுகமும் உண்டு
அந்த ஒரு தவம்பலிக்கும் நாள்எந் நாளோ?
அப்பேறு கிட்டிடுமோ! கனவு தானோ? (ப. 142)

இல்லாமையும் இயலாமையுமே ஏழையின் சின்னமாக அமையும்போது அடிப்படைத் தேவைகள் கூட அவனுக்குக் கனவாகி விடுகிறது என்பது இலக்கிய நயம் செறிந்த இக் கவிதை தரும் கருத்தாகும்.

முடிவுரை

கவிஞர் திலகவதியார் தன்னை அரசியலில் ஈடுபடுத்திக் கொண்டு, அதற்கு ஊடே பண்பாடு பிறழாத வாழ்க்கையோடு அவர் தமிழையும் நேசித்து, அவர் படைத்த படைப்புகள் மிகுந்த பாராட்டுக்குள்ளாயின என்பது குறிப்பிடத்தக்கது.

திலகவதியாரின் கவிதைத் தொகுப்பு அவரது இரட்சண்ய யாத்திரிகமாக அமைகிறது. உயிர் வாழவேண்டும் என்னும் ஆசை, துன்பங்களைக் கண்டு கவலை, கடவுளின் கருணை பற்றிய ஐயம், சாவைக் கண்டும் அச்சம் என்னும் அலைகள் வீசும் கடலிலே தொடங்கும் அவரது கவிதைப் பயணம் மனிதநேயம் பொலியும் கிருதயுகம் என்னும் தொடுவானத்தை நோக்கிச் செல்கிறது. நம்பிக்கைத் தோணியிலே நம்மையும் அழைத்துச் செல்லும் இவரது கவிதையனுபவம் தொலைவானத்தையும் தொட்டுவிட உதவும் என்ற பேராசியர் நா. மெய்ப்பொருளின் புகழாரம் ஈண்டுக் கருதத்தக்கது (ப9).

முதன்மை நூல்

உள்ளக் கடலின் உணர்வலைகள், கவிஞர் ஆர். திலகவதி, மானஸரோவர் பதிப்பகம், சென்னை, 1994.

காரை மைந்தன்

அறிமுகமும் சிறப்பும்

கிறித்துவக் குடும்பத்தில் பிறந்தவர்; ஊர் காரைக்கால். தான் பிறந்த மண்ணின்மீது உள்ள பற்றினால் பெயருடன் ஊரையும் சேர்த்துக் 'காரை மைந்தன்' எனக் காரணப் பெயராக வைத்துக் கொண்டார். புதுச்சேரியில் 'பாரதி கல்வி மையம்' எனும் கல்வி நிறுவனத்தில் மாணவராக இருந்தபோதே கவிதை எழுது வதில் ஆர்வம் கொண்டுள்ளார். இவரை, உலகிற்குக் கவிஞராக அடையாளம் காட்டியவர்களில் முதன்மை இடம் வகிப்பவர் இவரின் தாய் என்பதை, முன்னுரைவழி அறியமுடிகிறது.

> முதலாவதாக என் தாய். நான் இவருள் தங்கிப் பிறந்ததுபோல இவருள் தங்கியவையே என்னுள் கவிதைகளாகப் பிறக்கின்றன. கருவோடு பண்பையும், பாலோடு தமிழையும் நான் அவரிடமிருந்து பெற்றவன் என்ற பெருமிதம் எனக்குள் எப்போதும் உண்டு. இவரது கவிதையானாலும் சரி, உரைநடையாயினும் சரி, இப்படி அல்லவா இருக்க வேண்டும். இப்படி அல்லவா நான் எழுத வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் தரும். என்னைக் கொஞ்சம் ஆழமாகவே பாதித்த இவர் கவிதை ஒன்றை இங்கே தருகின்றேன்.
>
> **ஏன் கண்ணா ஏன்**
> **மணல் வீடு கட்டி**
> **மஞ்சள் குளித்து**
> **விளையாடினேன்**
> **மன்னவன் நான்**
> **உன் மஞ்சள்**
> **எனது என்றாய்.** (முன்னுரை, ப. 10)
>
> என் 60 வருட வாழ்க்கை இங்கே இருபது வரிகளில், இதற்குமேல் என்ன நான் சொல்ல

என்று, தன் தாய் இயற்றிய நீண்ட கவிதையின்வழி, கவிஞர் தாய்ப் பற்று மிக்கவர் என்பதை அறியமுடிகிறது.

பகுதி நேரங்களுக்கு இடையில் கவிதைகளை இயற்றி யுள்ளார். பல்வேறு கவியரங்குகளில் தன் கவிதைகளை அரங்கேற்றி யுள்ளார். அவற்றில் ஒன்று இக்கவிதைத் தொகுப்பிலுள்ள **'விளக்கைத் தேடும் விட்டில்கள்'** எனும் தலைப்பில் அரங்கேறிய கவிதையாகும். மேலும் இளையராஜாவின் Nothing but wind எனும் பிரபலமான இசைநாடாவில் பாடல் ஒன்று புனைந்துள்ளார்.

1984ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையில் இயற்றப்பட்ட கவிதைகளை **விடியாமல் முடியாது** என்ற தலைப்புக் கொண்ட இந்நூலில், மூன்று பகுதிகள் இடம் பெற்றுள்ளன. முதலாவதாக, **மொழிஇனம்** எனும் பகுதியில் தமிழ்ப்பற்றையும், தமிழர்பற்றையும் உணர்த்தும் வகையில் பதினொரு கவிதைகள் அமைகின்றன. இரண்டாவதாக, **காதல்** எனும் பகுதியில் உள்ள பதினான்கு கவிதைகளில் கவிஞர்களின் விதிவிலக்கில் சற்றும் மாறாமல் காதல் உணர்வை இவரும் கூறிச்செல்லத் தவறவில்லை. இவற்றில், சில கவிதைகள் நாட்டுப்புற வடிவத்தைப் பின்பற்றியுள்ளன என்பதை அறிய முடிகிறது. மூன்றாவதாக, **மற்றவை** எனும் பகுதியில் நட்பின் உணர்வையும், சமுதாய விழிப்புணர்வையும் வாழ்க்கைத் தத்துவத்தையும், உளவியலையும் பன்முறைநோக்கில் தன் பார்வையை உலவவிட்டுச் சமுதாய முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார் என்பதை இப்பகுதியிலுள்ள முப்பத்தைந்து கவிதைகளும் உணர்த்துகின்றன.

கவிஞர், தன் கவிதை பிறந்த காலத்தை ஒவ்வொரு கவிதையின்கீழும் பதிவு செய்துள்ளார். தன் கவிதைகளில் பிறமொழிக் கலப்பு உள்ளது என்பதைக் கவிஞரே ஒத்துக்கொண்டுள்ளார். இக்கவிதைத் தொகுப்பே கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பாகும்.

தமிழ்ப்பற்று, காதல், நட்பு, சமுதாய விழிப்புணர்வு, தத்துவம், உளவியல் எனும் ஆறு தலைப்புகளை உட்பொருளாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

தமிழ்ப்பற்று

கவிஞர், தமிழையும், தமிழரையும் உலகில் உயர்த்த வேண்டும் என்ற முனைப்போடு பலகவிதைகள் இயற்றியுள்ளார். இக்கவிதைகள் அனைத்தும் வாசகர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலே அமைந்துள்ளன. அவற்றில்,

> **அழுதது போதும் தமிழா**
> **விழுதுகள் இன்னும்**
> **நிலம் சேரவில்லை**
> **எழுப்பப்படுவது**
> **ராஜமண்டபமல்ல**
> **நமக்கு**
> **நினைவு மண்டபம்** ***(ஒப்பந்தம், ப. 24)***

என ஒவ்வொரு தமிழனையும் தட்டி எழுப்புகிறார். ஈழத்தமிழர்கள் தம் சொந்த நாட்டிலே அகதிகளாக வாழ்கின்ற சூழ்நிலை மாறவேண்டுமென்றால், அகிம்சையினால் பெறமுடியாத சுதந்திரக் காற்றை வன்முறையிலாவது சுவாசித்து விடவேண்டும் என்ற தாக்கம் தமிழ்மீதும், தமிழ் இனத்தவர்மீதும் தமக்குள்ள பற்றினைக் கவிதையாகப் புனைந்துள்ளார் என்பதை,

> **ஒரு யுத்த களம்**
> **அங்கு**
> **பிறக்கட்டும்**
> **அது**
> **எதிரியின்**
> **குருதியால்**
> **சிவக்கட்டும்**
> **இதில்**
> **துப்பாக்கியால்தான்**
> **தீர்ப்பு**
> **சரி**
> **பிறக்கட்டும்** ***(ஈழம் பிறக்கட்டும், ப. 28)***

'நான் ஒரு தமிழ் மாணவன்' எனும் போப்பின் வாசகத்தை, தன் கவி மூலம் நினைக்க வைக்கின்றார். கவிஞர் தமிழ்ப் பற்றாளர்

மட்டுமல்ல, தமிழை உயிரெனக் கொண்டவர் என்று படிப்பவர் மனத்திலும் தமிழை மூச்சாக நிலைக்க வைக்கிறார். இவ்வுணர்வை,

கல்லறை மீது
    செதுக்கிய சொற்களும்
செந்தமிழில் என்றும்
    நிலைத்தல் வேண்டும்
ஏழு சென்மம்
    உண்மை என்றால்
அடுத்த சென்மங்களும்
    தமிழனாய்ப் பிறத்தல் வேண்டும்
(நிறைவேற்றி விடுங்கள், ப. 22)

என்ற இக்கவிதை காட்டுகிறது. இன்றைய படைப்பாளர்களிடம் 'ஆங்கில மோகம்' அதிகரித்து நிலைபெற்றுள்ளமையை,

நம் கவிஞர்சிலர்
போதாத அறிவோடு
கவிபாட வந்து
ஆங்கில மொழியிடம்
சொற்கள் கடன் வாங்கிக்
கவிபாடுகின்றார்கள். (கடன்காரக் கவிஞர்கள், ப. 26)

என்று கூறுகிறார்.

காதல்

மனித இனம் எதிர் பாலியல் பண்புகளைக் கொண்டு ஒன்றில் ஒன்று நிறைவு பெறுகிறது. இவ்வாறான எதிர்பாலர் களிடையே ஏற்படும் கருத்து ஒற்றுமையையும் அதன் வழித் தோன்றும் உணர்வு ஒற்றுமையையும் காதல் என்கிறோம். 'செம்புலப் பெயல்நீர் போல்' எனும் சங்ககாலப் பாடலைப் பாடிய புலவனின் வரிசையில் இக்கவிஞரும்,

எத்தனையோ பெண்கள்
என் கண்களுக்குள்
புகுந்த போதும்
இதயத்திற்கு

வழி புரியாமல்
புகுந்த வழியே
வெளியே வந்தனர்
இவள் மட்டும்
இதயத்துள்
எப்படியோ புகுந்து
கொண்டு
என்
குருதியோடு
அவளைக் கரைத்துக் கொண்டு
உடல் எங்கும்
உரசுவதோடு
என் சிந்தனையையும்
தன் வசப்படுத்திவிடுகிறாள். (என் காதல், ப. 43)

போன்ற கருத்துகள் அமைந்த கவிதைகள் பல இயற்றியுள்ளார்.

நட்பு

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, இன்பத்தில் பகர்பவர்கள் உற்றார் உறவினர் என்றால், துன்பத்தில் துணை நிற்பவனும் அணைந்துகொண்டிருக்கும் வாழ்க்கை விளக்கைத் தூண்டுபவனும் உண்மை நண்பன் மட்டுமே, என்ற கருத்து கவிஞர் வாயிலாகப் பின்வருமாறு வெளிப்படுகின்றது.

இருட்டில்நான்
இடம் தெரியாமல்
என்னை நான்
இழந்து கொண்டு
இருந்த நேரம்
சுடுவதையும்
சகித்துக்கொண்டு
ஒளியைத் தன்னோடு
சுமந்து கொண்டு

ஒளியாக
என் வழியெங்கும்
வந்தவன் இவன். (என் நண்பனைப் பாடுகின்றேன், ப. 64)

சமுதாய விழிப்புணர்வு

தன் நலனன்றி, பிறர் நலனையும் புதைக்கும் புகைப் பழக்கத்தினால் சீர்கெட்டுத் திரியும் இளைஞர்களின் நிலையைப் பொதுநலநோக்குடன் எடுத்துரைத்துள்ள விதம் 'புகை' எனும் கவிதை வழி உணர்த்தப்படுகிறது.

புகை
புதை
உன்
உடலை மட்டும்
பொதுவிடத்தில்
உன்
புகை
அடுத்தவர்
ஆயுளுக்கும்
பகை *(புகை, ப. 52)*

பாரதி வழிநின்று சாதியைச் சாடி, சிதைந்துகொண்டிருக்கும் சமுதாயத்தைச் சற்றுத் தட்டி அறைகூவல் விடுக்கிறார். சாதியால் பிரிந்திருக்கும் மனிதநேய நூலை இணைத்து ஒருமித்த உணர்வை ஊட்டும் வகையில் 'சாதிகள் இல்லையடி' எனும் தலைப்பிலான கவிதை அமைகிறது,

வாந்தி
எடுத்ததைப்
பன்றிகள்கூட
தின்பதில்லை
வந்தேறிகள்
கக்கிய
வஞ்சம்
சாதி
உண்டு

தறிப்போட்டு
நெய்த
துணியில்
கத்திரி
நுனிப்பட்டு
கிழிந்தது
போல்
பிரிந்தது
போனோம்
தாழ்ந்தாலும்
ஒருவன்
தூக்கிப்
பிடிப்பதல்லவா
தமிழா
வாழ்க்கை (சாதிகள் இல்லையடி, ப. 54)

கவிஞரின் இதயத்தைத் துளையிட்டுத் தூளாக்கிய சில நடைமுறைகளை, வாசகர்களின் இதயத்தையும் துளைக்கச் செய்து அவருடைய நினைவலைகளில் உலவவிட்டு இருக்கிறார்.

இங்கொரு கூட்டம்
கேட்டு நிற்குது
துணைக்கழைத்து தொல்லையிட்டு
எனைப் பார்த்துச் சிரிக்கும்
போதும் பாசம்
பொழிந்து அழிந்தது
பற்று வைத்தால்
பந்தாடி உதைப்பது
போதும் என் மனம்
பிழைப்பறியாது வாழ்ந்தது
பிறர் இன்புறவேண்டி
நான் துன்புற்றது (போதும் போதும், ப. 88)

அரசியல்வாதிகளையும், அறியாமை மக்களையும் சாடுவதில் சிறிதும் தயக்கம் காட்டவில்லை. தகுதியில்லாத அரசியல்வாதிகளைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதில் மக்கள்

இன்னும் விட்டில்பூச்சிகளாகத்தான் உள்ளார்கள் என்று இன்றைய சமூகச் சூழ்நிலையை நடைமுறை வாழ்க்கையோடு இயைந்த காட்சிகளாக நம் கண்முன் படம்பிடித்து உரைத் திருக்கும் திறன் சமூக நலனில் அவருக்கு உள்ள ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் உணர்த்துகிறது. இதனை,

இவர்கள்
சகதியில் நின்று கொண்டே
தலைவர்களின் சிலைகளுக்குச்
சந்தனம் பூசி வாழ்கின்றார்கள்
பன்றிகளோடு
ஒன்றி வாழும் போதும்
நடிகர்களுக்கு
மன்றங்கள் வைக்க
இவர்கள் மறப்பதில்லை *(சேரிவாசிகள், ப. 58)*

என்ற இக்கவிதை காட்டுகிறது. வரனுக்குத் தட்சணை எனும் பெயரில் பெண்ணைச் சிதையிலிட்டு எரிக்கும் வரதட்சணையை எரிக்கச் சரிநிகர் சமானம் எனும் பொறி கிளம்பிவிட்டது என்ற செய்தியை அறிவித்துள்ளார். 'எழுவீர் மகளிர்' என்ற கவிதையில்,

மண்ணெண்ணெய் பஞ்சத்தை
வளரவிட்டது போதும்
மலரே நீங்கள்
கருகிச் சாய்ந்ததும் போதும்
நீயும் பிறந்தாய்
தவழ்ந்தாய் வளர்ந்தாய்
அவனும் பிறந்தான்
தவழ்ந்தான் வளர்ந்தான்
உன்பிறப்பு மட்டும் என்ன
சாக்கடையோரம் நிகழ்ந்து
சோறில்லாமல்
நீ வளர்ந்து
செலவில்லாமல் முடிந்ததா
அவனுக்கு மட்டும்

அந்தத் திருமணப் பந்தலில்
ஏன்
வரதட்சணை *(எழுவீர் மகளிர், ப. 61)*

என்று தெளிவுறுத்துகிறார். 'கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்பது ஔவை வாக்கு. இங்கும் கவிஞர் காரைமைந்தன் இளமையில் கருகும் குழந்தைத் தொழிலாளர் மீது அக்கறைகொண்டு இந்நிலை குறித்து மனம் குமுறிச் சமூகத்தை நோக்கி வேண்டுகோள் விடுக்கிறார்.

இன்று
முதல் முறை
மிதித்தேன்
சிவகாசி
மண்ணை
சிலிர்த்தது
சரீரம்
முழுதும்
சிசுக்களின்
நிகழ்காலம்
எதிர்காலம்
சிதைவு
உலை
அல்லவா
சிவகாசி *(சிவகாசி, ப. 50)*

விழுந்துவிட்டோமே என்று மனமுடைந்து விடுவதை விட்டு எழுந்து நிற்க முடியும் என்ற மன உறுதியை ஊட்டி, சரிவுகள் யாவும், ஏணியாகும் எனும் தன்னம்பிக்கையைக் கீழ்க்காணும் வரிகளில் ஊட்டியுள்ளார்.

விழுதுகளைப்
பாம்பென்று நினைத்து
பாழாகிப் போன
காலங்கள் போகட்டும்

இனி
நாம்
உறவுச் சோலையில்
ஒரு
இழை கூடப்
பிழை இல்லை *(இனி வாழ்க்கை நமது, ப. 95)*

போன்ற கவிதைகளின்வழிச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

தத்துவம்

உலகத்தையும், சமூகத்தையும் முழுமையில் நோக்குவதைத் தத்துவம் என்கிறோம். அதுபோல், கீதையின் சாரத்தை இக்காலக்கட்டத்திற்கு ஏற்ற வார்த்தைகளால் அமைத்து ஞான வழியிலும் தன் கற்பனையைச் சுழலவிட்டிருக்கிறார் கவிஞர் என்பதை,

நித்தம் நித்தம்
சில இறப்பு
நித்தம் நித்தம்
பல பிறப்பு
சித்தம் உனக்கு
உலகத்தில் தான்
என்றும் இருப்பு
பித்தர் போல்
பிறர் பாசத்திற்கு
விருப்பு
பந்தம் என்ன
சொந்தம் என்ன
இங்கு நிலைப்பு
வந்தவர் பயணம்
முடிந்த பின் யாவும்
ஆறடி மண்ணுள்
புதைப்பு *(மனமும் உடலும், ப. 73)*

என்ற கவிதை புலப்படுத்துகிறது.

கருவறைக்கும்
கல்லறைக்கும்
இடையில்
எத்தனை
சிலுவை மரங்கள் (வாழ்க்கை, ப. 68)

என்ற இக்கவிதை, துன்பம் என்பது மனித வாழ்க்கையின் நியதிக்குட்பட்டது என்பதை, பொதிந்த கருத்துகளுடன் தெளிவாகக் காட்டுகிறது.

உளவியல்

கவிஞர், உளவியல் நோக்கிலும், கருத்துகளை இச்சமுதாயத்திற்கு முன்வைக்கிறார்,

முதல் நிலையில்
நம் மனம்
நம்மோடு கலந்து
மயங்கும்
அடுத்த நிலையில்
நம்மை
விடுத்துப் பாதி
நமக்குக்
கொடுத்து மீதி
எங்கோ
மயங்கிப் போகும்
மூன்றாம்
நிலையில்
நமக்கு
முழுதும் மறைத்து
எதற்கோ
மயங்கிப் போகும் (மனம் – மூன்று நிலை, ப. 85)

என்று மனித மனத்தின் நிலையை 'மனம் - மூன்று நிலைகள்' எனும் கவிதையில் புலப்படுத்துகிறார்.

நிறைவுரை

இக்கவிஞர், தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டுள்ளார். ஒவ்வொரு மனிதனும் மனிதநேயத்துடன் வாழவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். வாசகர்களுக்குப் பாரதியாரைத் தன் கவிதைகளில் நினைவுபடுத்தியுள்ளார். 'விடியாமல் முடியாது' எனும் இக்கவிதைத் தொகுப்பின்வழிக் கவிஞராக அடையாளம் காணப்பட்ட காரைமைந்தன், சமுதாய முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

முதன்மை நூல்

கவிஞர். காரை மைந்தன், *விடியாமல் முடியாது*, விழுதுகள் வெளியீடு, காரைக்கால், 1998.

அன்புநிலவன்

பாண்டிச்சேரி பாகூரில் 29-03-1937இல் பிறந்தார். தாய் சிவகாமி அம்மையார். தந்தை வெ. சின்னத்தம்பி. தந்தை, இந்திய இராணுவத்தில் உயர் பதவி வகித்தவர். பாவலர்கோ அன்புநிலவன் தன் பெற்றோர் மீது ஆழ்ந்த அன்பும், மதிப்பும் உடையவர். தனது முதல் மூன்று கவிதைத் தொகுதிகளைத் தன் பெற்றோர்க்குப் படையலாக அளித்துள்ளார். பாகூர் அரசு தொடக்கப் பள்ளியிலும் கடலூர் தூய வளவனார் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். எட்டாம் வகுப்பு படிக்கும்போது பாரதிதாசன் குறித்து ஒரு கவிதை இயற்றியுள்ளார். அந்தக் கவிதையே அவரது முதல் முயற்சியாகும்.

திருச்சி தூய வளவனார் கல்லூரியில் இளங்கலை (பொருளாதாரம்), சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை (சமூகவியல்) பயின்று பட்டம் பெற்றார். புதுவை அரசின் கல்வித் துறையில் ஆசிரியர் பணியேற்றுப் பல்வேறு பதவிகள் அடைந்து, தலைமையாசிரியராக உயர்ந்தார். மனைவி கே. சாந்தா. மகள் கலைச்செல்வி. மகன்கள் திருமாறன், வளவன். கேசவ பெருமாள் என்ற தன் இயற்பெயரைத் தமிழ்ப்பற்றுக் காரணமாக அன்புநிலவன் என்று புனைந்து கொண்டார். புதுச்சேரி தவத்திரு சங்கரதாஸ் சுவாமி இயலிசை நாடக மன்றம் அளித்த 'முத்தமிழ்ப்பாவலர்' பட்டத்தால் பாவலர்கோ அன்புநிலவன் என்று அழைக்கப்படலானார்.

பாவேந்தர், வாணிதாசன், செவ்வேள், சித்தன், அரிமதி தென்னகன், தெசிணி, நாரண துரைக்கண்ணன் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். இவரது கவிதைகள் **ஆனந்தபோதினி, கலைக்கோயில், கவிதை, குயில், சுதேச மித்திரன், தமிழ்நாடு, பாரதம், பிரசண்ட விகடன், முல்லைச்சரம்** ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

பணி ஓய்வு (1997) பெற்ற பின்னரே, தாம் முன்பு இயற்றிய கவிதைகளைத் தொகுத்து நூல்வடிவளிக்க முற்பட்டுள்ளார். எனவே, கலைநிலவு (1968) என்ற படைப்பு நீங்கலாக, ஏனைய படைப்புகள் இரண்டாயிரத்திற்குப் பின்னர்தான் அச்சில் வெளிவந்தவையாக இருக்கின்றன.

படைப்புகள்

I. கவிதைத்தொகுப்புகள்

1. **கலைநிலவு** (முதல் பதிப்பு 1968): தமிழ், இயற்கை, காதல், வாழ்வு என்ற நான்கு பிரிவுகளாகக் கவிதைகளைப் பகுத்து அளித்துள்ளார். இந்தக் கவிதைத் தொகுப்பிற்கு மு. வரதராசனார் அணிந்துரை அளித்துள்ளார்.

2. **காட்டு மல்லிகை** (2000): இக்கவிதைத் தொகுப்பில் வெளிவந்துள்ள கவிதைகள் பலவும் கலைக்கோயில், கவிதை, குயில், பாரதம், பிரசண்ட விகடன் முதலான இதழ்களில் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னரே வெளிவந்தவை என்று கவிஞர் சுட்டியுள்ளார் (கா.ம: என்னுரை).

3. **காலக்கண்ணாடி** (2002): இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளாகக் கவிதைகளைப் பகுத்து அளித்துள்ளார். இக்கவிதைத் தொகுப்பில் வெளிவந்துள்ள கவிதைகள் பலவும் முன்னரே பல இதழ்களில் வெளிவந்தவை என்று தெரிகிறது. (கா.க: என்னுரை).

4. **பைந்தமிழ்ச் சோலை** (2002): தமிழ், இயற்கை, எழுச்சி, குமுகாயம் என்ற நான்கு பிரிவுகளாகக் கவிதைகளைப் பகுத்து அளித்துள்ளார். இந்நூலின் 'என்னுரை'யையும் கவிதையாகவே வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

5. **பாட்டோ? அமுதோ?** (2004): பல்வேறு மேடைகளில் கவிஞர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல் (பா. அ: அணிந்துரை).

II தமிழாக்கம்

அமிழ்த மழை (2001): டென்னிசன் (Lord Tennyson) இயற்றிய 'ஈனக் ஆர்டன்' (Enoch Arden) என்ற சிறு காவியத்தையும்,

ஜான் கீட்சு (John Keats) இயற்றிய 'இசபெல்லா' என்ற சிறுகாவியத்தையும் 1963ஆம் ஆண்டில் பாவலர்கோ தமிழாக்கம் செய்துள்ளார். அதன் நூல்வடிவமே 'அமிழ்தமழை'.

பாவலர்கோவின் கவிதைகள் அனைத்தும் மரபுக்கவிதைகள். எளிய சொற்கள் கொண்டவை. கருத்துச் செறிவு மிக்கவை. பாரதிதாசன், வாணிதாசன், சுரதா போன்ற கவிஞர் பெருமக்களால் பாராட்டப் பெற்றவை.

அன்பு நிலவன் ஆக்கிய கவிதைகள்
இன்பந் தருவன ஆகும் அன்னவை
பிழையிலா வாக அமைந்தன பெரிதும்
அழகிய வாக அமைந்தன வாழ்க
அன்பு நிலவன்! யாண்டும்
தன்புகழ் ஓங்கித் தழைக நின்றே ***(க.நி: வாழ்த்துரை)***

எனப் பாரதிதாசனாரால் அவர் பெற்றுள்ள வாழ்த்து இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பெற்றுள்ள பட்டம் / விருதுகள்

1. புதுச்சேரி தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயலிசை நாடக மன்றம் 11-04-1999 அன்று 'முத்தமிழ்ப் பாவலர்' பட்டம் வழங்கியது.

2. புதுச்சேரி தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயலிசை நாடக மன்றம் சார்பில், புதுவை நகர மன்றத்தில் 6-12-2000 அன்று நடைபெற்ற 'காட்டு மல்லிகை' நூல்வெளியீட்டு விழாவில் 'சான்றோர் மாமணி' விருது வழங்கப்பட்டது.

3. புதுச்சேரி சங்கரதாஸ் நாடக மன்றம், கம்பன் கலையரங்கில் 30-06-2002 அன்று மனோன்மணீயம் சுந்தரனார் விருது வழங்கியது.

பரிசு

1960ஆம் ஆண்டு தமிழக அரசு நடத்திய ஐந்தாண்டுத் திட்டக் கவிதைப் போட்டியில் தீண்டாமை யொழிப்பு என்ற பாடலுக்கு ரூ. 30/- பரிசு பெற்றார்.

பாவலர்கோவின் கலை நிலவு, காட்டு மல்லிகை, காலக் கண்ணாடி, பைந்தமிழ்ச்சோலை ஆகிய கவிதைத் தொகுப்புகள் இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கவிதைத் தொகுதிகள் வழி அவரது தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, சமூக நலப்பற்று, இயற்கைப் பற்று, அவரது மனம் கவர்ந்தவர்கள் மீது கொண்ட பற்று ஆகியவை தெரியவருகின்றன.

தமிழ்மொழிப் பற்று

கலைநிலவு (7 கவிதைகள்), பைந்தமிழ்ச்சோலை (12 கவிதைகள்) ஆகிய தொகுதிகளில் 'தமிழ்' எனத் தனிப் பகுதியமைத்துத் தமிழ் மற்றும் தமிழர்தம் சிறப்புகளை எடுத்தியம்பியுள்ளார்.

பாவலர்கோ, தமிழரைத் தமிழ்த்தாயின் பிள்ளைகள் என்கிறார். தமிழின் ஏற்றம் குறித்த சிந்தனையுமின்றி, தமிழின் ஏற்றத்திற்காக உழைப்பவரை ஏளனமும் செய்யும் தமிழர் பலர். அத்தகையோரை நோக்கி,

தாயை இகழ்ந்தவன் நீ – நீயும்
    தமிழர் மகனோடா?
தாயை இகழ்வதினும் – உலகில்
    சாவது மேலாம்காண்! (பை.சோ: ப. 10)

என்று சாடுகிறார். தமிழ்ப்படைப்புகள் நாள்தொறும் வெளிவந்த வண்ணமுள்ளன. ஆயினும், உலகச் சிறப்புமிக்க 'நோபல்பரிசு' இன்றுவரை தமிழ்ப் படைப்பிற்குக் கிட்டவில்லையே என்ற தன் ஏக்கத்தை,

ஆயிரம் நூல்கள் ஆறுபோல் பெருகியும்
போயொரு தமிழன் புகழ்நோபல் பரிசை
இதுநாள் வரையும் எய்திய துண்டா?
இதனை யுளம்வைத் தெடைபோட்டுப் பார்ப்பாய்!
இந்த இருபதாம் நூற்றாண் டேகுமுன்
எந்தத் தமிழன் இக்குறை நீக்குவன்?
என்பதென் ஏக்கம்! (கா.ம: ப. 17)

என்று பதிவு செய்துள்ளார். தமிழரிடம் வேற்றுமை பாராட்டும் பிறமொழியினரை நோக்கி,

உம்மொழியால் எம்மொழியும் எம்மொழியால்
உம்மொழியும்
ஓங்குபுகழ் வானடையச் செய்தால் – அன்றே
ஓரொருமை மாமழையும் பெய்யும்! (கா.ம: ப. 84)

என்று வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையைப் போற்ற அழைக்கிறார்.

நாட்டுப்பற்று

மக்களிடையே காணப்படும் வேற்றுமைகள் மறைந்து, அவரிடையே அன்பு மலர வேண்டும்; ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிப் பாரத நாடு முன்னேற வேண்டும் என்ற தம் உட்கிடக்கையைப் பல கவிதைகள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

சாதிப்பிரிவுகளால் விளையும் சிக்கல்களால் நாட்டின் அமைதி பாதிக்கப்படுவதைக் கண்டு, அன்புவழிப்பட்ட வாழ்வு, சாதிப்பிரிவுகளைக் கடந்து மக்கள் ஒன்றுபட வழிவகுக்கும் என்று தீர்வு கூறுகிறார். கவிதை பின்வருமாறு:

யாவரும் ஓர்குல மக்கள்! – என்னும்
இன்மொழிக் குண்டுசொல் சிக்கல்?
மேவுக அன்புகொள் வாழ்வே! – அந்த
மேனிலை நாம்விடின் தாழ்வே! (பை.சோ: ப. 103)

மக்களிடையே அன்புப்பிணைப்பு தோன்ற, கலப்பு மணங்கள் மிகுதியாக நடைபெறவேண்டும் என்கிறார்.

சாதிமதம் நம்மையென்ன செய்யும்? – இயேசு
தந்தமதம் சேர்ந்தவளாம் நீயே!
ஆதிசைவன் என்றுரைப்பார் என்னை! – நாம்
அகங்கலந்து விட்டதுவோ தப்பு? (க.நி: ப. 34)

என்று பாவலர்கோ படைத்துள்ள தலைவன் கேள்வி கேட்கின்றான். மக்கள் பலவாறாக வேறுபட்டு நின்ற காரணத்தால்தான், பாரத நாடு அடிமைப்பட நேர்ந்தது. எதிர்காலத்தில் இத்தகு அவலநிலை ஏற்படாதிருக்க, மக்கள், தம்மிடையேயான ஒற்றுமையைப் பேணி, நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார்.

நம்முடைக் கோட்டைக ளெல்லாம் – அவர்
நாடிப் பிடித்தனர்! நம்மைத்

தம்முடை ஏவல ராக – நம்
தலைமிசை ஏறியே நின்றார்! . . .
ஒற்றுமை யேநம் உடலாம்! – அதில்
ஊறிடும் வீரம் உயிராம்!
வெற்றியே நாம்கொள் உணவாம்! – பெரு
மேன்மையே நாம்விளை பயிராம்! (பை.சோ: ப. 110)

பாரதநாடு பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள காரணத்தாலும் அதன் முன்னேற்றம் தடைபடுகிறது என்பதைக் கருத்திற் கொண்டு,

பொருளியல் பயில்வாய்! கெட்ட
இருளியல் களைவாய்!
வரவைப் பெருக்கிச் செலவைச் சுருக்கி
மகிழ்வை விளைத்துத் தலைநிமிர்த்திவிடும்! (கா.ம: ப.15)

என்று பொருளியல் பயிலுமாறு ஒவ்வொரு குடிமகனையும் அழைத்துக் கூறுகிறார். பாரதநாட்டின் தலையாய மற்றொரு சிக்கலாகிய மக்கட்தொகைப் பெருக்கம் கட்டுப்படுவதற்கு, அளவான குடும்பம் குறித்த சிந்தனை மக்களிடையே ஏற்பட வேண்டும் (பை.கோ. பக். 130, 132) என்கிறார்.

சமூகநலன் குறித்த சிந்தனைகள்

சமூகநல மேம்பாடு குறித்த சிந்தனைகள், பாவலர்கோவின் கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்வகைச் சிந்தனைகளுடைய கவிதைகளைப் 1. பெண்களுக்கானவை 2. இருபாலாருக்குமானவை என இரண்டு வகைகளாகப் பிரித்துக் காணமுடிகிறது.

1. பெண்களுக்கானவை

தீயமனம் படைத்த ஆண்களால், இளம் பெண்களுக்கு எவ்வகையிலெல்லாம் இன்னல்கள் வரக்கூடும் என்பதை

போதையென் பார்விழி வாதையென் பார்! உனைப்
பொன்னென் பாரன்புக் கண்ணென் பாரே!

எனப் பட்டியலிடும் கவிஞர்,

வாளினை இடையில் வைத்திடம் மாநீ
வரும்தறு தலையை நடுக்குறச் செயவே!
(பை. சோ: ப. 96)

என்று பெண்கள் அவ்வேளைகளில் அச்சமற்றுச் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

திரையுலக மாயையால் கவரப்பட்டு, வீட்டைவிட்டு வெளியேறி, நகரம் செல்லும் கிராமத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்கள், இறுதியில் எய்தும் இழிநிலையை 'ஏமாற்றம்' என்ற கவிதையில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

திரையில் நடிப்பவர் தீமையை மடுப்பவர்!
அரையினில் ஆடையை அழகுக்கே யுடுப்பவர்!
குறையுடைத் தொழிலிது! பெண்மையைக் கொல்வது!
கறைபல வுடையது! (கா.ம: ப. 80)

என்று அத்தகு பெண்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

2. இருபாலருக்குமானவை

சமூகநல மேம்பாட்டிற்கு மக்களிடையே இருக்க வேண்டியவை, விலக்க வேண்டியவை ஆகியவற்றைத் தம் கவிதைகளில் கூறியுள்ளார்.

'உழைப்பே உயர்வுதரும்' என்ற முதுமொழியை மனித இனம் பின்பற்றினால் ஏற்படும் மேம்பாடுகளை மனத்துட் கொண்டு,

உழைப்புழைப்பு ழைப்பையே!
உறுதியாகக் கொள்ளடா!
தழைப்பெ னும்பேர் செல்வந்தான்
சார்ந்து நிற்றல் பார்ப்பையே! (பை.சோ: ப. 62)

என்று முழங்குகிறார். கடமையைச் செய்யும்போது, எதிர்வரும் தடைகளைக் கண்டு தளராது உழைத்தல் வேண்டும் என்கிறார். இத்தகு தடைகளை,

முகில்மறைக்கக் கதிரொளிதான் முனைமழுக்கங்
கொண்டிடுமோ?
அகில்மணக்கும் தோப்பினிலே அடைசருகென்
செய்துவிடும்? (கா.ம: ப. 42)

என்று இகழ்ந்து, தொடர்ந்து அயராது உழைக்கவேண்டும் என்று அவர் அறிவுரை கூறுகிறார். குறிக்கோள் இல்லாதவர்தம் வாழ்வு

மாலுமியில்லாப் படகு போலச் சிதறிப்போகும். குறிக்கோள் உடையவர், அதை அடைய அயராது உழைப்பர். உயர்ந்தவராக அனைவராலும் போற்றப்படுவர் என்பதை,

உள்ளத் தேயோர் குறியிருந்தால் – அதை
உடனே யடைய வெறியிருந்தால்
வெள்ளம் எனவே நலம்விளையும்! – உனை
மேலோன் என்றே யுலகறையும்! (க.நி: ப. 54)

என்று சுட்டியுள்ளார். தாழ்வு மனப்பான்மையுடையவர் களால், தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவியலாது. இத்தகையோர், தங்கள் தாழ்வுமனப்பான்மையை ஒழித்து, கடுமையாக உழைத்தால் உயர்ந்த இடம் இவர்களைத் தானே நாடி வரும் என்கிறார்.

வாழ்வினிற் செம்மைகள் வாய்ந்தவர் யாவரும்
வானிற் பறந்திவண் வந்தவர் அல்லரே!
தாழா உழைப்பினால் தாழ்விலாத் தொண்டினால்
தங்கப் புகழ்நிலாத் தண்கதிர் உண்டனர் (க.நி.: ப. 58)

தாழ்வு மனப்பான்மையுடையோர் எதற்கும் அஞ்சும் இயல்பினைக் கொண்டிருப்பர். இவ்வாறு அஞ்சுதல் கடமையைச் சரிவரச் செய்ய இயலாத நிலைக்கு அவர்களைத் தள்ளிவிடும் என்பதை,

மலையைப் போன்ற மனத்தினையும் – அது
மடமைக் குழியில் தள்ளிவிடும்!
விலையில் லாத முன்னேற்றம் – தனை
வீழ்த்திச் சிதைத்துக் கிள்ளிவிடும் (பை.சோ: ப. 79)

என்று சுட்டியுள்ளார்.

ஒரு கடமையைச் செய்ய எண்ணுபவர், காலம் தாழ்த்தாது அக்கடமையைச் செய்யவேண்டும். "செய்தக்க செய்யாமை யானும் கெடும்' (குறள்: 466) என்பதற்கேற்பக் காலம் தாழ்த்துதல் கடமை தவறுதற்கும் வழிவகுக்கக்கூடும் என்பதைக் கருத்திற் கொண்டு,

இற்றைப் பொழுதும் நீங்கிடுமேல் – அந்த
இனிய பொழுதும் மீண்டிடுமோ?

கற்றை யலையும் காலமதும் என்றும்
கடிதில் ஓடும்! நில்லாவே! (கு.நி: ப. 54)

என்று காலத்தின் அருமையைப் பாடுகிறார். மனிதன், தன் கடமைகளைச் செய்யும் அதே வேளையில், மக்கள் நலப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுதல் வேண்டும். பொன், பொருள் தந்து பிறருக்கு உதவ இயலாதபோதும், உழைப்பை நல்கி உதவலாம் என்கிறார்.

வள்ளல் எனும்பெயர் வாய்க்காது போனாலும்
மாபே ரறிஞனாய் மாறாது போனாலும்
துள்ளும் இளமான்போல் யாவர்க்கும் தோழனாய்த்
துள்ளித் துணைபுரி! தொண்டேயுன் றன்குறி!
(கா.ம: ப. 14)

ஆக்கப்பணிகளைப் பேசுவதோடு நின்றுவிடாது. அதைச் செயல்படுத்தவும் வேண்டும். செயல்படுத்தும் நிலையிலும் பேச்சைக் குறைத்துக் கடுமையான உழைப்பை அளிக்க வேண்டும் என்கிறார்.

. . . . பேசுதல் குறைத்திடுவாய் – என்றும்
வறண்ட பாலை வயல்வெளி யாக
வளங்களை நிறைத்தடுவாய்! (கு.நி: ப. 53)

சுயநலச் சிந்தனையுடையவர்களால் மக்கள் முன்னேற்றத் திற்கான ஆக்கப்பணிகள் தடைபட்டுவிடும்; இதனால் நாட்டின் முன்னேற்றமும் தடைபட்டுவிடும்; எனவே, பொதுநலம் பேணி, நாட்டைப் பாதுகாப்பதற்கு இளைய சமுதாயத்தை நோக்கி,

எந்தப் பொழுதிலும் – தம்மையே
எண்ணிடும் தீயவரால்
நொந்தது தாயகந்தான் – நீயதன்
நோயினை நீக்கிடடா! (கா.ம: ப. 8)

என்று குரல் கொடுக்கிறார். மேலும், சுயநலமுள்ள அரசியல் தலைவர்களால் ஏற்படும் தீமைகளைக் கண்டு, மனம் நொந்து,

நாட்டுக் களஞ்சியந்தான் – வெறுமையை
நண்ணி நலிகையிலே
வீட்டுக் களஞ்சியத்தை – நிரப்பவே
மிக்க முயற்சி கொண்டாய்!

பாட்டுக்கள் பாடுகின்றாய் – மடவார்தம்
பக்கம் சுழலுகின்றாய்!
கேட்டுக்குள் தாயகந்தான் – மடித்திடக்
கெக்கலித் தாடுகின்றாய்!

என்று வருந்துகிறார். மனிதன் உயர்வு பெற, பல்துறையறிவு தேவை. பல்துறை அறிவுடைய மக்கள் உள்ள நாடு முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடும். அத்தகு பல்துறையறிவைப் பெற அனைவரும் கல்வி கற்றல் வேண்டும். கல்வியின் சிறப்பைக் கற்றோரின் சிறப்பைப் பின்வருமாறு போற்றுகிறார்.

மாண்புகொள் கல்வி கற்று
வகைப்படு பறவை யாகித்
தாண்டுதல் வேண்டும் யாவும்
நிலவையும் தழுவ வேண்டும்! (க.நி: ப. 57)

கற்கும் கல்வி, எத்துறையைச் சார்ந்ததாக இருந்தாலும், அதனை ஆழமாகக் கற்க வேண்டும் என்கிறார்.

அறிவிய லாயினும் கலைத்துறை யாயினும்
அழகுறப் பயின்றிடு! அதனில்நீ ஆழ்ந்திடு!
செறிந்திடு பெருமதி! திறத்தினைக் காட்டு!
(பை.சோ: ப. 124–125)

கல்வியைக் கற்பிப்பதில், ஆசிரியர் தாய்போல் செயல்பட வேண்டும் என்கிறார்.

காடுநிறை பூவிலுறை தேன்நுகர்ந்து வந்து – நல்ல
கவினடையின் சிற்றறையில் தேக்கிவைத்தே ஈயும்
பீடுநிறைத் தேனீப்போல் பெருங்கலைகள் தந்து – நமைப்
பெற்றவள்போல் பெரிதுவப்போன் ஆசிரியன் ஆகும்!
(பை.சோ: 116)

இளம் படைப்பாளர்களை ஊக்குவிக்கிறார் கவிஞர். இளம் எழுத்தாளர்கள், தங்களின் தனித்திறனை வெளிப்படுத்தும் விதமான படைப்புகளை உருவாக்கவேண்டும். முன்னோடிகளோடு, தங்களை ஒப்பிட்டு, தாழ்வு மனப்பான்மை கொள்ளக் கூடாது.

அவர்போல் வருமா? இவர்போல் வருமா?
இவண்யான் எழுதிடின் எள்ளுமே உலகம்!

என்னும் தாழ்மை யுணர்வை யெடுத்து
வன்மைத் தழலில் இட்டு மடிப்பாய்! (கா.ம: ப. 16)

கையூட்டுப் பெறுதல் கடுங்குற்றம் என்ற நிலையிலும் கையூட்டு வாங்குவோரைக் கண்டு,

கணக்குகள் அறிவியல் போடும்! அதில்
கடுகள வும்பொய் யிராதே!
இணக்கமாய் எவற்றையும் செய்யும்! தனக்(கு)
ஏதும் பெறவுமெண் ணாதே! (கா.ட: ப. 57)

என்று இகழ்ச்சியாகக் கூறுகிறார். குழவிப்பருவம் முதல், நாம் கற்ற பழக்கவழக்கங்கள், அடைந்த உயர்வுகள் அனைத்திற்கும் காரணமானவர்கள் முதியோர். இத்தகு முதியோரைப் புறக்கணிக்காது போற்ற வேண்டும் என்ற கருத்தை

தழுவி மகிழ்வோம் முதியவரை – அவர்
தந்த வாழ்வே நம்வாழ்வாம்! (க.நி: ப. 55)

என்று பதிவு செய்துள்ளார். இருக்கும் வாழ்நாட்களில் மனிதன் உண்மையைப் பேசி இனிய வாழ்வு வாழ வேண்டும் என்கிறார்.

நேற்றிருந்த நொடிப்பொழுதிங் கிந்நாள் இல்லை!
நேற்றிருந்த பெரியோரும் இந்நாள் இல்லை!
வீற்றிருந்த அரசுகளும் முடியும் என்றே
வெறுங்காட்சிப் பொருளாகப் போதல் கண்டோம்
காற்றடித்த சருகாக எல்லாம் போகக்
கனமலையாய் நிலைத்திருப்ப துண்மை யொன்றே!
(கா.ம: ப. 21)

என்று காலத்தின் நிலையாமை உணர்த்தி, களங்கமில்லா வாழ்வு வாழ மனிதர்களை அழைக்கிறார்.

சமூகவாழ்வு மேம்பாடு குறித்துப் பல கோணங்களில் பாவலர்கோ சிந்தித்துள்ளார் என்பதை மேற்படிக் கவிதைகள்வழி அறியமுடிகிறது. இக்கவிதைகளில் இவரது சிந்தனை வெளிப்பாடு மட்டுமன்றி மெய்ப்பாட்டுணர்வும் வெளிப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது.

இயற்கைப் பற்று

கலை நிலவு, பைந்தமிழ்ச் சோலை ஆகிய தொகுப்புகளில் 'இயற்கை'க்குத் தனிப்பிரிவு அமைத்தும், பிற தொகுப்புகளில் பரவலாகவும் கவிபாடி, இயற்கைமீது தான் கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய வருணனைத் திறனை இக்கவிதைகளில் காணமுடிகிறது. 'மூடுபனி' என்ற கவிதையில்,

மலர்கள் உடல்குளித்து
மஞ்சட் பொடிபூசி
இலையாம் உடைபூண்
இதழ்கள் நகைவீசக்
குலவும் கருவண்டுக்
கொண்கன் மனங்குளிர
நலஞ்செய் நறுந்தேனை
நல்கவைக்கும் மூடுபனி! *(க.நி: ப. 17–18)*

என்றுள்ள வருணனை இங்குச் சுட்டத்தக்கது.

மனம் கவர்ந்தவர்கள்மீது கொண்ட பற்று

பாவலர்கோ, பொதுவுடைமைக் கருத்தில் ஈடுபாடுடையவர். தோழர் ஜீவா, பெரியார் ஆகியோரை வாழ்த்திப் பாக்கள் புனைந்துள்ளார். மேலும் தன்னைக் கவர்ந்த காமராசர், அறிஞர் அண்ணா, உ.வே. சாமிநாதையர், பாரதியார், பாரதிதாசனார், வாணிதாசனார், நிலவில் முதன்முதலில் கால்பதித்த ஆர்ம்சுடிராங் ஆகியோரையும் வாழ்த்திப் பாக்கள் புனைந்துள்ளார்.

பாவலர்கோவின் பாடுபொருட் தேர்வு, அவரை நற்குணமுடையவர், நல்லாசிரியர் என்பதோடு நல்ல சிந்தனையாளர் என்பதையும் வெளிப்படுத்துவதாக இருப்பதைக் காணமுடிகிறது.

பாவலர்கோவிடம் பிற இலக்கியங்களின் தாக்கம்

பாலவர்கோவிடம் திருக்குறள், பாரதி கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவற்றின் தாக்கம் காணப்படுகிறது. குறட்கருத்துகள், கவிதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. சான்றாக,

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள்: 65)

என்ற குறளின் கருத்தமைய,

அப்பா'வென் கின்றாள் அந்த
அமிழ்துகு செஞ்சொல் லுக்கும்
இப்பாரில் இணைமற் றுண்டோ?
எனக்குற்ற இன்பப் பேழை!
இப்பக்கம் தென்றல் போல
என்கையில் தவழ வந்தாள்! (பை.சோ. ப. 49)

என்றுள்ள கவிதையடிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. பாரதியாரின் 'வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!' (பாரதியார் கவிதைகள்: ப. 537) என்ற பாடலடிகளின் சாயலில்,

வெற்றி முரசு கொட்டுவோம்! – வாரீர்
வெற்றி முரசு கொட்டுவோம்! (பை.சோ: ப. 86)

என்ற பாடலடிகள் இருப்பதைக் காணமுடிகிறது. பாவலர்கோ, பாவேந்தர் பாரதிதாசன்மீது பற்றுடையவர். பாரதிதாசன் போன்று, கருத்துள்ள பாடல்கள் இயற்ற வேண்டும் என்ற தன் ஆவலை,

வீரப்பா ரதிதா சன்போல்
விளங்கொளிப் பாடல் கோடி
நேரமெல் லாமும் செய்ய
நினைக்குமென் நெஞ்சம் ஆமாம்! (பை.சோ: ப. 6)

என்று வெளிப்படுத்தியுள்ளார். இவர் கவிதைகளில் பாரதிதாசன் கவிதைகளின் தாக்கம் காணப்படுகிறது. சான்றாக,

தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? (பாரதிதாசன் கவிதைகள்: ப. 133)

என்ற பாவேந்தரின் கவிதையடிகளுக்கு இணையாக,

தேனைத் துளித்துளியாய் – இசையில்
சிந்துதல் எங்ஙனமோ? (க.நி: ப. 27)

என்ற பாவலர்கோவின் கவிதையடிகளும் குரல் அழகை எடுத்தியம்புதல் இங்குச் சுட்டத்தக்கது.

நிறைவுரை

பாவலர்கோவின் கவிதைகள் மிகுதியும் அறிவுரைகளாக இருக்கின்றன. நாட்டுப்பற்று, நல்லொழுக்கம், அயராத உழைப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் கருத்துடையவையாக இருக்கின்றன. நாட்டுப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள மக்கள் உழைப்பை உயிர்மூச்சாகக் கொள்வர். இத்தகு மக்களால்தான் 'ஏழை நாடு' என்ற நிலை மாறி 'முன்னேற்றமடைந்த நாடு' என்ற உயர்வைப் பாரதம் எய்தும் என்ற பாவலர்கோவின் உட்கிடக்கையை வெளிப்படுத்துபவையாக அவர்தம் கவிதைத் தொகுப்புகள் இருப்பதைக் காணமுடிகிறது.

[பாவலர்கோவின் படைப்புகளில் இடம்பெற்றுள்ள வாழ்க்கைக் குறிப்பு, அணிந்துரைகள், வாழ்த்துரைகள், கவிதைகள், கவிஞரின் கடிதம், கவிஞருடனான தொலைபேசி உரையாடல்கள், (30, 31/08/2005) ஆகியவற்றின்வழிப் பெறப்பட்ட செய்திகளின் அடிப் படையில் இக்கட்டுரை எழுதப்பட்டது]

முதன்மை நூல்கள்

கலைநிலவு, பாவலர்கோ அன்புநிலவன், பாவலர்கோ அன்புநிலவன் பதிப்பகம், புதுச்சேரி-11, 2001.

காட்டு மல்லிகை, மேலது, 2000.

காலக்கண்ணாடி, மேலது, 2002.

பைந்தமிழ்ச் சோலை, மேலது, 2002.

காசி ஆனந்தன்

கவிஞர் வாழ்க்கை

இலங்கையில் தேனாடு என்று அழைக்கப்படும் மட்டக்களப்பில் நாவற்குடா என்னும் சிற்றூரில் கவிஞர் காசி ஆனந்தன் 4-4-1938ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் வைத்த பெயர் சிவானந்தன். அப்பா பெயர் காத்தமுத்து. அம்மா பெயர் அழகம்மா. அப்பா பெயரின் முதலெழுத்து 'கா'வையும் அம்மா பெயரின் கடைசி எழுத்து 'மா'வில் உள்ள (ம்+ஆ) 'ஆ'வையும் எடுத்தேன். அம்மா அப்பா எனக்கிட்ட சிவானந்தன் என்னும் பெயரில் உள்ள 'சிவா' வின் முதலெழுத்து 'சி'யை நடுவில் சேர்த்து ஆண்பால் தொனிக்க 'காசி ஆன்' எனும் தனித் தமிழ்ப்பெயரைப் புனைப்பெயராகக் கையெழுத்து ஏடு நடத்திய இளமைக் காலத்தில் பயன்படுத்தினேன். அழகுக்கு 'அந்தம்' என்பது இன்னொரு தூய தமிழ்ச்சொல். அழகன் என்னும் பொருள்பட 'அந்தன்' என்னும் புனைப்பெயரிலும் சில ஆக்கங்களை எழுதினேன். பிற்காலத்தில் இருபெயர்களும் இணைந்து, 'காசி ஆனந்தன்' ஆயிற்று ('இளைஞன்' - தை. 1995 - செருமனி) என ஒரு நேர்காணலில் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.[1]

சிறு வயதிலேயே அவர் தமிழ்ப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது தமது முதல் கவிதையை வழங்கியுள்ளார் என்பதே இதற்குச் சான்று. பெரியார், அண்ணா, கலைஞர் கருணாநிதி, பாரதி, பாவேந்தர் ஆகியோரின் சிந்தனைகளும், எழுத்துகளும் கவிஞர் காசி ஆனந்தனைச் சிறுவயதிலேயே சமூக அக்கறை கொண்ட சிந்தனையாளராக உருவாக்கின.

1957ஆம் ஆண்டு இலங்கையின் வெறி பிடித்த சிங்கள ஆட்சியாளர் வண்டிகளில் சிங்கள 'சிறீ' எழுத்தை இலக்கத் தகடுகளில் பொறித்தார்கள். தந்தை செல்வா தலைமையில்

இயங்கிய தமிழரசுக் கட்சி போர்க்கொடி உயர்த்திற்று. மட்டக்களப்பு காவல் நிலையத்தின் உள்ளே நுழைந்து கவிஞர் அங்கிருந்த பெயர்ப்பலகையில் சிங்கள எழுத்துக்களை மை பூசி அழித்தார். காவலரின் கொடுமையான தாக்குதலுக்கு ஆளானார். இரத்த வாந்தி எடுத்த கவிஞர் இதன் விளைவாகக் காசநோயாளி ஆனார். உணர்ச்சிக் கவிஞர் ஐந்து ஆண்டுகள் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சிறைச்சாலைகளில் கைதியாக வாழ்ந்தார். அதே போன்று ஐந்து ஆண்டுகள் மருத்துவமனைகளில் காசநோயாளி ஆகவும் வாழ்ந்தார்.

அதன்பின் தமிழ்நாட்டில் தங்கியிருந்து காஞ்சிபுரத்திலும், சென்னையிலும் பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். அப்போது பாவேந்தர் பாரதிதாசனின் தொடர்பு கவிஞருக்குக் கிடைத்தது.

எந்தை பாரதி
தாசன் என் ஆசான்
தந்த தமிழால்
தான் நான் வளர்ந்தேன்
அந்த நாள் அவனோ
டிருந்தேன் அதனால்
சந்தனக் காட்டில் இச்
சவுக்கும் மணத்தது[1]

என்று பாவேந்தரின் நினைவில்லத்தில் தாம் எழுதியதை அந்தத் தோழமையின் நினைவாகக் காசி ஆனந்தன் குறிப்பிடுகிறார். சென்னையில் தம் கல்வியை முடித்துக் கொண்டு இலங்கையில் அரசு மொழிபெயர்ப்பாளராகக் கவிஞர் சில காலம் பணியாற்றினார். 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்ட போது தமிழரை அடிமைகளாக்கிய புதிய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்து கை நிறையச் சம்பளம் வாங்கிய பதவியைத் தூக்கி எறிந்து - களத்தில் குதித்தார் கவிஞர். இந்நிகழ்ச்சியின் பின்புதான் கொடுமையான அவர் சிறை வாழ்க்கை தொடங்கிற்று. இலங்கை அரசினர் இவரைக் கைது செய்வதும் சிறையில் தள்ளுவதும் வழக்கமாயிற்று.[2] 1979ஆம் ஆண்டு கவிஞர் காசி ஆனந்தன் சரோஜினி தேவி என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு அமுதநிலா, தேன்

அல்லி எனும் இரு பெண் குழந்தைகள் உள்ளனர். கவிஞர் காசி ஆனந்தனின் குடும்பத்தினர் அனைவரும் தமிழ் ஈழ விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்கள். இந்த அனுபவத்தைக் கவிஞர் இன்குலாப் 'விழித்தெழ வேண்டிய வேளை இது' எனும் தலைப்பில் பதிவு செய்துள்ளார். கவிஞர் காசி ஆனந்தனின் நெஞ்சை உலுக்கும் கவிதைகளை இதில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தங்கை சிவமலர், அரசின் ஏவல் நாய்களால் கடித்துக் குதறப் பட்டதை அவர் கவிதையாகப் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

தங்க மலரை
தனிமைச் சிறையில்
எங்கோ கொடியர்
இருத்தினார்களாம். . .
கீழே நிலத்தில்
கிடத்திச் செருப்பால்
மேலே மிதிக்க
மேனி துடித்ததாம் . . .
அன்புத் தங்கையின்
ஆவி பிழைக்கும்
என்பது கூட
நம்புதற்கிலையாம்

என்று அவர் தமது துயரத்தை முற்றுப் பெறாத தொனியிலேயே நிறுத்தி வைக்கிறார்".[3] அவருடைய தம்பியர் சிவஜெயம், சுதர்சன் என்போர் சிறைவாசம் இருந்தனர்.

அட என் தம்பி
அண்ணனை மறந்தா
இடம்நீ பெயர்ந்தாய்
எப்படி முடிந்தது?
மண்ணுக் காய் நீ
மடிந்த சாவினை
எண்ணி மகிழ்கிறேன்
இருந்தும் அழுகிறேன்

என்ற வரிகளின் சோகம் நமது இதயத்தையும் கவ்வுகிறது. அடுத்த கவிதையைப் படிக்க முடியவில்லை. கண்ணெல்லாம் நீரால்

சுமக்கிறது"[4] என்று குறிப்பிடுகிறார் கவிஞர் இன்குலாப். தமிழர்களின் கோபத்தைக் கவிஞர் காசி ஆனந்தனின் வழியாகச் சிங்கள அரசு கண்டுணர்ந்தது.

வெறும் பேனா வீரராகக் கவிஞரை எதிரிகள் ஒரு போதும் கணித்ததில்லை. அவரது எழுத்துக்கள் தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு கண்ணிலும் பொறியாகச் சுடர் விடுவதை அவர்கள் கண்டுணர்ந்தார்கள். 'புலிகளின் தாகம் சுதந்திரத் தமிழீழம்' என்று சாவின் விளிம்பில் நின்ற தருணங்களிலும் முழங்குவது, எதிரிகளின் செவிப்பறைகளில் இடியாக இறங்குகிறது. இந்த முழக்கத்தைத் தந்தவன் யார்? என்று அஞ்சித் தேடிய பொழுது, அங்குக் காசி ஆனந்தன் மண்ணுக்கும் விண்ணுக்கும் வடிவெடுத்து நிற்பதைக் கண்டார்கள். இந்த முழக்கம் ஈழ மக்களின் நெஞ்சங்களில் துடித்துக் கொண்டிருந்தது. அது காசி ஆனந்தனின் உதடுகளில் வெளிப்பட்டது. மக்களை அடக்க நினைக்கும் ஒவ்வொரு எதிரியும், தன்னை எதிர்ப்பவனைத் தனிமனிதனாகத்தான் பார்க்கிறான். அவன் வீழும் பொழுதுதான் அவனுக்குத் தெரிகிறது. தன்னை மிதிப்பது ஒரு ஜோடிக் கால்கள் அல்ல; ஒரு கோடிக்கால்கள் என்று. காசி ஆனந்தனுடைய தலைக்கும் சிங்கள அரசு ஒரு விலை வைத்தது. ரூ. 25, 000. அதைக் கவிஞர் எப்படி எதிர்கொண்டார்?

> **இனிது விடுதலை இனிதென்று ரைத்ததால். . .**
> **என்தலைக்குநீர் விலைவைத்தீர் . . .**
> **அச்சம் இலாத என் தமிழர் குருதியின்**
> **அணுவில் உள்ளது விடுதலை!**
> **பிச்சை விலை எவன் குறித்தவன்? தலை**
> **பிடுங்க, நினைத்தவன் எவனடா?**

மீண்டும் ஒரு முழக்கந்தான் இந்தக் கவிஞரிடமிருந்து புறப்பட்டது."[5] பெற்ற பிள்ளைகளுக்கு ஏற்பட்ட பலவிதமான இன்னல்களால் தந்தை மாரடைப்பால் மரணமடைந்தார். கவிஞரின் மனைவியும் மக்களும் சொந்த மண்ணில் வாழ முடியாமல் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர். இவ்வாறு அவர் குடும்பமே விடுதலைப் போராட்டத் தியாகத் தீயில் குளித்தது. கவிஞரின் வீடு பலமுறை இராணுவத்தினரால் சோதனையிடப் பட்டது. அடக்குமுறைச் சட்டம், செத்து மடியும் மக்கள்,

எதிரிகளை வீழ்த்தும் தம்பிகளின் இழப்பு ஆகிய பலவிதமான நெருக்கடிச் சூழல்களுக்கு நடுவில் இன்றும் எழுச்சி மிகு கவிதைகளை வழங்குகிறார். உணர்ச்சிக் கவிஞர் இன்றும் எரிதழல் நடுவிலேயே உட்கார்ந்திருக்கிறார். கரடுமுரடான அடக்கு முறைச் சட்டங்களுக்கு நடுவில் நின்றுதான் அந்தக் குயில் கம்பீரமான குரலில் பாடுகிறது.[6] கவிஞர் காசி ஆனந்தனின் இன்றைய வாழ்க்கைச் சூழல் இவ்வாறுதான் உள்ளது.

காசி ஆனந்தனின் படைப்புகள்

காசி ஆனந்தன் கவிதைகள் முதல் தொகுப்பு 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. **காசி ஆனந்தன் கவிதைகள்** எனும் இரண்டாம் தொகுப்பு 1990ஆம் ஆண்டு (டிச.) வெளியிடப்பட்டது. **தம்பி ஜெயத்துக்கு, தமிழனா . . . தமிங்கிலனா, நறுக்குகள், காசி ஆனந்தன் கதைகள்** ஆகியன இவருடைய படைப்புகளாகும். இதில் **நறுக்குகள், காசி ஆனந்தன் கதைகள்** ஆகிய இரண்டையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் பணி நடைபெற்றுவருகின்றது.

காசி ஆனந்தன் கவிதைகள் யாவும் தமிழ்மொழி - இன - நாட்டு விடுதலைப் பாடல்களாக அமைந்துள்ளன. காசி ஆனந்தன் கவிதைகள் முதல் தொகுப்பு இக்கட்டுரைக்குக் களமாக அமைகின்றது. உயிர் தமிழுக்கு, களமும் கவிஞனும், கண்ணீர், மண்ணும் பண்ணும் எனும் தலைப்புகளின் கீழ் 81 கவிதைகளும், தமிழன் கனவு எனுங் குறுங்காப்பியமும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தமிழ்மொழி, தமிழர் உணர்வு, தமிழர் உரிமை ஆகிய பொருண்மைகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.

கவிஞர் தமிழைத் தன்னுடைய உயிராக, உணர்வாக, உறவாகக் கருதுவதை, 'தமிழே! உயிரே!' என்னும் கவிதையில் படைத்துக்காட்டியுள்ளார். அதற்குத் தீங்கு செய்வோரை அழிப்போம் என்று சூளுரைக்கின்றார்.

தமிழே! உயிரே! வணக்கம்
தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்
அமிழ்தே! நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும்! புளிக்கும்! . . .

தமிழே! உனக்கேன் கலக்கம்?
தாயே! பொறம்மா முழக்கம் வெடிக்கும்!
அமிழ்தே! உனை எவன் தொட்டான்?
அவனை என் கைவாள் அழிக்கும்! முடிக்கும்!
(ப. 94)

தமிழைக் காக்கும் போராட்டத்தில் தன் உயிரைத் தியாகம் செய்யவும் முன்னிற்பதாக 'மறப்பேனா?' என்னும் கவிதையில் குறிப்பிடுகிறார்.

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் – என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் – உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் – ஒரு
செங்களம் ஆடிவரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா? (ப. 33)

என்று குறிப்பிடுகிறார். தமிழை இழிவுபடுத்துவோரை, தமிழுக்குக் கேடு செய்வோரை, தமிழ் பேசும் மக்களைத் துன்புறுத்துவோரை, தமிழரின் உரிமையைப் பறிப்போரை எளிதில் விடமாட்டோம் என்பதை 'உயிர் தமிழுக்கு' எனும் பகுதியில் இடம்பெற்றுள்ள 57 கவிதைகளிலும் எக்காளமிடுகிறார் கவிஞர் காசி ஆனந்தன். தமிழின் மீதும் தமிழர் மீதும் தொடுக்கும் தாக்குதல்களைச் சந்திக்கத் தமிழ்ப்படை வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மானம் விழுந்து துடிக்குதடா! தம்பி!
மறவன் கதைகள் விளைந்த மண்ணில்
ஈனம் விளைந்து கிடக்குதடா! இதை
எத்தனை காலம் பொறுத்திருப்போம்?

துள்ளி எழுந்து புறப்படடா! தம்பி
தூய தமிழ்ப்படை ஒன்றமைப்போம்!
எள்ளி நகைக்கும் பகைவன் உடல்களை
எண்பது துண்டுகளாக்கி வைப்போம்! (ப. 90)

என்று போராட்டக் களத்திற்கு இளைஞர்களை அழைக்கின்றார். இந்திமொழி திணிப்பால் செந்தமிழுக்குத் தீங்கு நேரும் என்ற கருத்தில் கவிஞர் பல கவிதைகளை வழங்கியுள்ளார்

இந்தி வந்து செந்தமிழுக்கு வாயில் மண்ணை
இட்டு வைக்க நாங்கள் விட்டு வைக்கவோ?
மந்தை போல வாழ்விழந்து நொந்து கெட்ட
மானவாழ்வில் ஊறுபட்டு நிற்கவோ?
தந்தையர்கள் ஆண்டுலாவி மாண்பு தந்த
தாயகத்து மண்ணை இன்று விற்கவோ?
பொந்துபட்ட மார்பினோடு குண்டுபட்ட
போர்க்களத்தில் ஆடிவெற்றி சூடுவோம்! (ப. 91)

என்பதை ஒரு சான்றாக்கலாம். காலந்தோறும் தமிழுக்கு ஏற்பட்டு வரும் தீங்குகளைக் கண்டும், தாழ்ந்த நிலை கண்டும் தங்களுடைய எதிர்ப்புகளைக் காட்டாத தமிழர்களைக் கோபங்கொண்டு ஏசுகிறார்.

மறங்குன்றிப் பொதி சுமக்கும்
மாடானாய் . . . சீ பகைவன்
புறங்காலை நக்குகிறாய்!
போடா போ! செத்துப் போ! (ப. 75)

என்று கடிந்துரைக்கின்றார். 'மண்ணும் பண்ணும்' எனும் தலைப்பில் உள்ள பல கவிதைகள் தமிழர்களை இடித்துரைப் பவையாக அமைந்துள்ளன.

தமிழா!
நீ
பேசுவது தமிழா?
அன்னையைத் தமிழ்வாயால்
'மம்மி' என்றழைத்தாய் . . .
அழகுக் குழந்தையை
'பேபி' என்றழைத்தாய். . .
என்னடா தந்தையை
'டாடி' என்றழைத்தாய். . .
இன்னுயிர்த் தமிழை
கொன்று தொலைத்தாய்
தமிழா
நீ
பேசுவது தமிழா?

என்று இன்றைய தமிழர்கள் ஆங்கிலம் கலந்து பேசுவதையும், அனைத்தையும் ஆங்கிலமயமாக்கி அதில் சுகம் காணுவதையும் இடித்துக் காட்டுகிறார். இந்தப் போக்கைக் கண்டித்து, தமிழனா-தமிங்கிலனா என்ற ஒரு தனி நூலையும் படைத்துக் காட்டியுள்ளார். இந்த அழிவு நிலைகளைச் சுட்டிக் காட்டும் கவிஞர் தமிழர்களுக்கு அறிவுரை வழங்கும் பொழுது,

> இருப்பாய் தமிழா நெருப்பாய்!
> இருந்தது போதும் இதுவரை செருப்பாய்!
> இருப்பாய் தமிழா நெருப்பாய் (ப. 141)

என்று தீப்பிழம்பாய்த் தன் கவிதை வரிகளை வழங்கியுள்ளார். புதியதொரு வரலாற்றைப் படைக்கத் தமிழர் முன்வரவேண்டும். எந்த நிலையிலும் தம்முடைய உரிமைகளை விட்டுக் கொடுத்தல் கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழருக்கும் சிங்களருக்கும் இடையே நடைபெறுகின்ற மாபெரும் எழுச்சி - போர் - விடுதலை அனைத்தையும் கவிதைகளாக வழங்கியுள்ளார் கவிஞர் காசி ஆனந்தன். இந்த விடுதலைக்கு முதலாவதாகவும், இறுதியாகவும் தரத் தக்கது உயிர் என்பதை அடிப்படையாகக் கொண்ட போராளிகளின் வீரத்தைப் பல கவிதைகளில் எடுத்துக் காட்டுகிறார்.

> திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
> உடுக்க ளோடும்
> மங்குக் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்
> நாங்கள், ஆண்மைச்
> சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம் செய்
> முழங்கு சங்கே!
> சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
> தீராதி தீரரென் றூதூது சங்கே!
> பொங்கும் தமிழர்க் கின்னல் விளைத்தால்
> சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு[8]

என்று பாவேந்தர் பாரதிதாசன் 'சங்கநாதம்' எனும் தலைப்பில் துல்லியமாகத் தமிழர்மீது நடத்தும் சிங்களரின் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம் என்று சூளுரைத்துச் சென்றார். அவருடைய

வழியில் கவிஞர் காசி ஆனந்தன் இப்போராட்டக் களத்தில் நின்று எக்காளமிடுகிறார்.

குங்குமக் குருதி பொங்கிடத் தமிழன்
வெங்களச் செருவில் ஆடவும்
சிங்களப் பகைவர் கண்களைத் தமிழர்
தங்கொடித் திரைகள் மூடவும்
கங்கையின் வடவர் சங்கடப் படவும்
இங்கு வெம்பரணி பாடவும்
சங்கு கத்தியது! பொங்கு மாமறவர்
செங்களத்து மிசை தாவுவோம்! (ப. 64)

என்று 'தாவுவோம்!' என்ற கவிதையில் முழக்கமிடுகிறார்.

களமும் கவிஞனும்

சிங்கள சிறீலங்காவின் காவல் நிலையங்களில் அடியுதை தாங்கியும் சிறைச்சாலைகளில் கைதியாய் இருந்தும் - மருத்துவ மனைகளில் நோயாளியாய் வருந்தியும் கவிஞர் வழங்கிய கவிதைகள் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன.

1957ஆம் ஆண்டு மட்டக்களப்பு காவல் நிலையத்தில் பெயர்ப்பலகையில் சிங்கள எழுத்துகளைக் கவிஞர் மை பூசி அழித்ததால் காவலர்களால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு ஆளானபோது அங்கே பிறந்த பாடல் இது;

தடித்த சிங்களத்தின் தறுக்கனே! மூடா!
தமிழன்யான் உனைக்கண்டு தலைதாழ்த்த வோடா?
துடிப்புள்ள தமிழ் வீரர் தோள்வீரம் அறியாய். . . .
துள்ளுக்கின்றாயடா! நில்! எங்கள் மண்ணில்
வெடிக்கின்ற குண்டுக்கும் அசையாத வீரர்
விளைந்துள்ள காலம்நீ விளையாடு கின்றாய்!
இடிக்கின்றாயா? சரி . . . . இடித்துப்பார் என்றன்
எலும்போடு தசைமோதித் தமிழென்றே கூறும்!
(ப.105)

எனும் இக்கவிதையில் நாட்டை, இந்த மண்ணை மீட்பதே என் முதல் வேலை என்று குறிப்பிடுகிறார். மேலும் இக்கவிதையில்

'தமிழீழம்' என்ற சொல் கவிஞரால் (1957) முதன் முதலில் அறிமுகப்படுத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மந்திரமான செந்தமிழோடு வாழ்ந்தோம்!
மலைமோதினாலும் நிலை தாழுவோமா?
தந்தை இராவணன் ஆண்ட பொன்னாடு!
தமிழீழ நாடென்றன் தாய்நாடு கண்டாய்! (ப. 105)

என்று எழுதியதைக் கட்டுரையாளரின் நேர்காணலில் கவிஞர் கூறியுள்ளது இதற்குச் சான்றாகும். அத்துடன் 'புலிப்படை' (ப74) என்ற சொல்லும் இவரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தடுப்புக் காவலில் கவிஞர்

சிங்கள ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிராகக் கவிஞரின் கவிதைகளும், அவரின் செயல்பாடுகளும் ஆட்சியாளர்கள் கவனத்தைத் திருப்பின. கவிதையின் வேகமும், தெளிவும் ஆட்சியாளர்களுக்கு அறைகூவலாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்தன. "1958ஆம் ஆண்டு தமிழ் ஈழம் போர்க்கோலம் பூண்டது. சிங்கள சிறீலங்காவில் தமிழர்கள் சித்திரவதைக்கு ஆளானார்கள். தமிழர்களுக்கு உயிரோடு தழல் மூட்டப்பட்டது. கவிஞர் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அப்பொழுது 'வேலி ஒரு கேடா' எனும் தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். இக்கவிதையில் நான் தமிழன்; இந்தக் காவலுக்கு அஞ்சமாட்டேன் எனும் கருத்தில்

மாட்டினார் சிறைபூட்டினார் இவை
மறவனை என் செய்யும்?
வீட்டுக் காவலும் வெறியர் கொட்டமும்
வீரனை என் செய்யும்?
நீட்டு துப்பாக்கிக் குண்டுகள் அஞ்சா
நெஞ்சனை என் செய்யும்?
நாட்டுப் பற்றுடை யானை நாய்களும்
நரிகளும் என் செய்யும்? (ப. 107)

என்று தன் துணிவைக் காட்டுவதுடன், எதிர்காலத்தில் தமிழனே வெல்வான் என்ற உறுதியையும், நம்பிக்கையையும் இக்கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் காவலர்களால் கவிஞர் தாக்கப்பட்டதன் விளைவாக, அவருடைய மார்பில் ஏற்பட்ட புண் காசநோய்க்கு வித்திட்டது. வாயால் குருதி கொப்பளித்தவராய்ச் சென்னை வந்து அரசினர் மருத்துவமனையில் சில காலம் அவர் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது இறைவனிடம் 'குயிலுக்கு வாழ்வு கொடு' என்று முறையிடுவதாக ஒரு கவிதை எழுதியுள்ளார்.

நோயால் எனையுருக்கி
எலும்பாக மாற்றிவிட்டாய்! – இந்த
வாயால் ஓய்விலாது
குருதி வரவும் செய்தாய்! – உன்றன்
சேயாம் தமிழ்க்குலத்தின்
துயர் களைந்திட்ட பிள்ளை – இன்று
காயாய் இருக்கையில்
வீழ்ந்து கருக வைப்பாயோ? (ப. 110)

என்று களைத்து, சோர்ந்து போன நிலையை விளக்கும் கவிஞர்,

உயிரை நீட்டி என்னை
முன்போல் உலவ விடுவாய்! – சூழும்
துயிலை நீக்கி வைப்பாய்!
புதியதோர் துணிவளிப்பாய் – அஞ்சா
வயிரநெஞ்சில் ஒன்றும்
மலைத்தோளும் ஈந்தருள்வாய்! – இந்தக்
குயிலை வாழ வைப்பாய்!
தமிழ் கூவவேண்டும் ஐயா! (ப. 111)

என்று இறைவனிடம் துணிவும் வீரமும் தர வேண்டுகிறார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் காசி ஆனந்தன்

தமிழீழப் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்குக் கவிஞரின் கவிதைகள் பெரும் ஊக்க சக்தியாக விளங்கின. இளைஞர்கள் இவருடைய கவிதைகளால் ஈர்க்கப்பட்டு, தங்களுடைய கல்வி, குடும்பம், பணி அனைத்தையும் துறந்து ஈடுபட்டனர் என்பதை டாக்டர் டி. விக்னேசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

> 1972ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா குடியரசு ஆனபோது தமிழீழத்தை அடிமைப்படுத்திய குடியரசு அரசியல்

அமைப்பை எதிர்த்துக் கவிஞர் அரசு பதவியான தனது மொழிபெயர்ப்பாளர் பதவியைத் தூக்கி எறிந்தார். தமிழ் ஈழத்தில் உணர்ச்சித் தழல் விட்டெரியத் தொடங்கிற்று. கவிஞர் கைதானார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் இரண்டரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்.[8]

அப்போது 'புகழ் படைப்போம்' என்ற ஒரு தலைப்பில் எழுதிய கவிதையில் 'நான் தமிழ்ஈழ நாடமைத்தே சாவேன்' என்று சூளுரைக்கின்றார். அவ்வாறில்லாமல்

சற்று முன்பேனும் யான் சாவேனானால்
சடலத்தில் உமிழ்ந்தே பின் தழல் மூட்டுங்கள்! (ப. 112)

என்று தன் முடிவையும் எழுதிக் காட்டியுள்ளார்.

ஊர்கேட்டேன்! இன்னுயிர் உரிமை கேட்டேன்!
'ஒளிஆர்ந்த தமிழீழம் ஆள நீங்கள்
ஆர்?' என்று சிங்களர் அதிரக் கேட்டேன்!
அறம் கேட்டேன்! எனைச்சிறை அகத்தே போட்டார்!
கூர்போட்ட வேல்போட்டுக் கொன்று போட்டு
குருதியோடு போட்டாலும் ஒன்று சொல்வேன்
போர்போட்டுப் புகழ்போட்டு வாழ்ந்த சாதி
பொன்னீழக் கொடிபோட்டே தலையைப் போடும்!
(ப. 112)

என்று தன்னம்பிக்கையுடன் எக்காளமிடுகிறார் கவிஞர்.

வெஞ்சிறை அழைப்பினும் சரியே எம்மை
வெடிகுண்டு துளைப்பினும் சரியே நாங்கள்
அஞ்சி நில்லோம்! ஒன்றும் அசையமாட்டோம்
அனல் மூச்சை நிறுத்தோம்! போர் ஓய்தல் செய்யோம்!
(ப. 112)

என்று போர்க்களத்தில் நிற்கும் தமிழ்வீரர்களின் பிரதிநிதியாகக் கவிஞர் எதிரிகளுக்கு அறைகூவல் விடுகின்றார்.

நெருப்புப்பழம்

1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத் தலைவர் ஆல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டதைத்

தொடர்ந்து கவிஞர் மீண்டும் கைதாகி வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்.[9] அச்சிறைச்சாலையில் 'நெருப்புப்பழம்' என்ற தலைப்பில் கவிதை ஒன்று வழங்கியுள்ளார்.

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது . . . !
அன்னைத் தமிழ் ஈழம்
என்றன் உயிர்த் தாயகம்
தன்னை எவன் தொட்டான்?
தமிழா எழுக! என
மின்னை இடியைப்
புயலைத் தமிழ் செய்தேன்
எனைக் கொடுங்கவிஞன்
என்றார் சிறையிலிட்டார் (ப. 114)

இந்தச் சிறைக் கொடுமை குறித்தும் கவிதையாக்கினார். இவர் இச்சிறைவாசம் அனுபவித்த பொழுது அவருடைய உடன் பிறப்புகள் தம்பிகள் இருவர் (சிவஜெயம் - சுதர்சன்) கண்டிச் சிறைச்சாலையில் கைதிகளாக இருந்தார்கள். அவர்களை நினைத்து, 'தம்பிகாள்' எனும் தலைப்பில் அவர் எழுதிய கவிதையில் தமிழீழம் பெற உங்கள் உயிரை வேண்டுமானாலும் கொடுங்கள் என்று கூறி நெஞ்சு நிமிர்த்தும் கவிஞரின் உணர்ச்சி படிப்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

நெடும்போர் ஆடும் நிமிர்ந்த உயிர்களே!
நெருப்பினில் பூத்த நெஞ்சங்காள்!
கொடுஞ்சிங் களத்தின் வெலிக்கடைக் கோட்டம்
குடியிருக்கும் உங்கள் அண்ணன்
இடும்பணி கேளீர் கண் விழித்திருங்கள்!
இன்னுயிர்தான் விலை எனினும்
கொடுங்களடா என்தம்பிகாள்! கொடுங்கள்
கூத்தாடு வேன் உடன்பிறப்பே" (ப. 118)

நெற்றி சுழித்தால் நெருப்பு

1978ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் அமைப்பைக் கவிஞர் எதிர்த்ததால் மட்டக்களப்பில் கைதானார். கண்டிச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அப்போது 'நெற்றி சுழித்தால்

நெருப்பு' எனும் தலைப்பில் சிங்கள அரசு வீழும் என்று சாபமிடுகிறார்.

கண்டிச் சிறையகம் வைத்தீர்! கவிஞனை
முண்டிக் குதித்தீர்! உடல் முறித்தீர்!
தண்டித்தீர்!
வெற்றி எது கண்டீர்! இருங்கள்! தமிழ் வேங்கை
நெற்றி சுழித்தால் நெருப்பு (ப. 119)

என்று கோபக்கனல் வீசுகிறார்.

எதிரிகளின்
கொடி விழும்! கோல்விழும்! ஆள்வோர் தலையில்
இடி விழும்! வாயில் அரிசி
பிடி விழும்!
நாடெல்லாம் பாழ் விழும் உங்கள் கெடு நாட்டில்
வீடெல்லாம் வௌவால் விழும்! (ப. 120)

என்று தமிழின எதிரிகளின் முடிவைக் காட்சிப்படுத்துகிறார்.

பிடிசாபம்!

கவிஞர் காசி ஆனந்தனின் கோபமும் சாபமும் கவிதைகளாகுகின்றன. '1981ஆம் ஆண்டு தமிழ் ஈழத்தில் சிங்கள இனவெறி தலைவிரித்தாடிற்று. மட்டக்களப்பில் கவிஞரின் வீட்டை இராணுவத்தினர் சோதனை போட்டார்கள். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் தீயில் எரிந்து சாம்பல் ஆயின. மட்டக்களப்பில் இருந்த கவிஞர் சேதி அறிந்து மனம் வெந்து பாடிய பாடல் பிடிசாபம். இதில் தன் கண்ணீரும் தீ! என்று கொதிக்கின்றார்.

கன்னெஞ்சர் சிங்களத்தர்
கயவர் என்தமிழ் ஈழத்தை
அன்னை மண்ணைச் செந்தீயால்
அழித்தார் என்றெழுந்த சேதி
மின்னலாய்த் தாக்கிற்றம்மா. . .
விம்மிநின் றழுகின்றேன் யான்!
என் கண்ணில் நீரா? இல்லை!
இதுவும் தீ! இதுவும் தீயே! (ப. 123)

என்று மனங்கொதிக்கும் கவிஞர் யாழ்ப்பாணப் பகுதி எரிந்த காட்சியைக் கவிதையாக்கினார்.

வீடுகளெல்லாம் தீயால்
    வீழ்த்தினார்! கடைகளெல்லாம்
கேடுற நெருப்பு வைத்தார்
    கீழ்மன வெறியர் எங்கள்
பீடுறு யாழ்மா நாட்டின்
    பெரியநூல் நிலைய மீதும்
போடுசெந் தீயை என்றார் . . . !
    பொன்னூல்கள் எரித்தார்! சென்றார்! (ப. 124)

இந்தத் தீயில் கம்பன் மாண்டான், வள்ளுவன் மடிந்தான், இளங்கோ இறந்தான், செம்மனப் புலவரெல்லாம் செந்தீயில் வெந்தாரம்மா என்று அனலிடை வீழ்ந்த உயிராய்க் கலங்குகின்றார் கவிஞர்.

'இனமானப் புலி எங்கே?' 'அண்ணனை இழந்தோம்', 'அழுகின்றோம் அழுகின்றோமே!', 'எழவைத்த தலைவனை விழவைத்தாய் சாவே!', 'நெருப்பாய் எரிகிறதே நெஞ்சு!', 'குரல் நிறுத்திய குயில்' ஆகிய தலைப்புகளில் உள்ள கவிதைகள் தங்களுடைய பெரும் இழப்புகளைக் 'கண்ணீர்' எனும் பகுதியில் இத்தொகுதியில் இடம்பெறச் செய்துள்ளார்.

தமிழன் கனவு

1965ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் மட்டக் களப்பு மருத்துவமனையில் நோயாளியாய் இருந்தபோது 'தமிழன் அரசு மலராதா' என்னும் தவிப்போடு கவிஞர் எழுதிய குறுங் காப்பியம் **காசி ஆனந்தன் கவிதைகள்** (முதல் தொகுதி) தொகுப்பில் 'தமிழன் கனவு' எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

தமிழின் வளமும், சிறப்பும், தமிழ் மண்ணின் வளமும் பெருமையும் பாடும் கவிஞர் தமிழர்களுக்குள் உள்ள சாதி சமயப் பிரிவுகளால் தாழ்ந்து கிடப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

காட்டு மரங்களிலே
    கள்ளர் மரம் ஐயர் மரம்
தோட்டிமர முண்டோடா தோழா?

நாட்டு மனிதரிலே
வேற்றுமைகள் காட்டுகிறாய். . . .
நட்டமரம் உன்னைவிட மேலா?
கூண்டுப் பறவையிலே
குறப்பறவை இழிபறவை
தீண்டாப் பறவையுமுண்டோடா?
ஆண்டிப் பிறவியென்றும்
அம்பட்டனென்றுங் குலைப்பாய் . . .
அறிவால் விளைந்துவிட்ட கேடா? (ப. 186)

என்று சாடுகிறார் கவிஞர். தங்கள் வேறுபாடுகளைக் கடந்து தமிழர் ஒன்றாகி உரிமைப்போரில் பகைவரை வென்று விடுதலை பெறுவதாகத் தமிழனின் கனவு அமைகின்றது. அந்த விடுதலை நாளை விழா எடுத்துக் கொண்டாடுவதாக இக்குறுங்காப்பியத்தை முடிக்கின்றார்.

முத்து வளைவுகள்! மணிகள்! பச்சை
மாவிலைப் பந்தல்! முகங் குனியும்
பத்தினிபோல் குலைசரிந்த வாழை
தெருப்புறத்தே! கோலம் தரையெல்லாம்!
குத்துவிளக்குகள்! மலர்கள்! காற்றில்
எழுந்தாடும் வண்ணக் கொடிக்கூட்டம்!
பத்து திசைகளும் அழகுக் காட்சி!
கவிஞன்கண் பார்த்துக் களிப்பதற்கே! (ப. 217)

என்று கவிஞர் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார். தமிழ் ஈழ விடுதலைப் போர் வரலாற்றில் கவிஞர் காசி ஆனந்தன் பெரும் உந்து சக்தியாக, ஊக்க சக்தியாக, இளைஞர்களின் வழிகாட்டியாக விளங்கினார் என்பதை எஸ்.ஏ. டேவிட் என்பார் Tamil Eelam Freedom Struggle (An Inside Story) என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் அறப்போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறிய காலத்தில் வாழ்ந்த கவிஞரின் கவிதைகள் ஆயுதங்களாக மாறின.

போராட்ட அழகியல் தன்மை

கவிதை இன்பமளிக்கும், அழகு, நயம், வளம் காட்டும், தனி மனிதரை வழிநடத்தும், சமுதாயத்தின் நிறைகுறைகளை

எடுத்துக்காட்டும், சமுதாய, அரசியல், பொருளாதார மாற்றத் திற்கான தேவைகளை வலியுறுத்தும், வரலாற்றை வடித்துக் காட்டும், அடக்குமுறை ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்புக் குரலாக ஒலிக்கும், ஒடுக்குமுறைக்கு எதிராகக் கவிதை தன் கைகளை உயர்த்தும், விடுதலை மனிதர்களை அடையாளங்காட்டும், ஏதுமற்றவர்களை வீரர்களாக்கும், போராட்டக் களத்தில் செயல்பட வைக்கும். படைப்பாளரைப் போராளியாக ஆக்கும், எட்டி நிற்கும் விடுதலையை இலட்சியத்தைத் தொட்டுவிடும் தூரத்தில் நிற்க வைக்கும். பாரதியும் பாரதிதாசனும் இந்தப் பண்புகளைத் தங்கள் கவிதைகள் மூலம் நிறுவிக் காட்டினர். போர்க்குணம் மிக்கக் கவிதை மரபை, 'போராட்ட அழகியல்' என்று தற்காலத்தில் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வால்ட்விட்மன், மாயாகோவ்ஸ்கி, பாப்லோ நெருடா முதலியோருடைய கவிதைகளில் எல்லாம் இப்போராட்ட அழகியலே இழையோடக் காண்கிறேன். ஈழத்துக் கவிதைகளின் அழகியலைப் போராட்டமே தீர்மானித்தது[10] என்று குறிப்பிடுகிறார் கவிஞர் இன்குலாப். புரட்சிக்கவி பாரதிதாசனின் கவிதைகள் போன்று கவிஞரின் கவிதைகள் துடிப்பும், எழுச்சியும், வீரமும், போர்க்குணமும் மிக்கவையாகத் திகழுகின்றன. இந்த வரிசையில் கவிஞரின் கவிதைகள் போராட்ட அழகியல் தன்மை மிக்கவையாகத் திகழ்கின்றன.

காசி ஆனந்தன் கவிதைகள் நூலிற்கு அணிந்துரை வழங்கிய கலைஞர் மு. கருணாநிதி அவருடைய கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது

> அவரது கவிதைகளில் புயலின் வேகத்தை - பூகம்பக் குலுக்கலை - எரிமலையின் சீற்றத்தை உணர முடியும். வேகப் பாட்டெழுதும் புலவர் மட்டுமல்ல, வெஞ்சிறை வாழ்வுக்கும் வன்கணாளர் கொடுமைக்கும் அஞ்சிடாத நெஞ்சுரம் கொண்டவர். அதனாலே அவர்பால் எனக்கொரு தனி மதிப்பு உண்டு! இந்த நூல் முழுதும் தமிழனின் இரத்த நாளங்களில் உணர்ச்சித் துடிப்புகளையேற்றிச் சூடு கிளம்பச் செய்யும் கவிதைகள் நிறைந்து கிடக்கின்றன.

காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்!
களிப்பினில் என்னை மறந்தேன்! – இன்பம்

ஏற்ற மறுபொழுது தென்கரம் பார்த்தேன் . . .
இரு கைவிலங்கோ டிருந்தேன்!

என்ற வரிகளைப் படிக்கும் பொழுது சுதந்திர தாகத்தைச் சுட்டிக்காட்டும் அவரது கவிதையோடு நானும் இணைந்து விட்டேன்! ஒன்றாகக் கலந்து விட்டேன்!

களமெனில் முழங்கி வரும் ஏறு! – தமிழன்
கங்கு கரை பொங்கி வரும் ஆறு!

தமிழனின் ஆற்றலை இந்த இரண்டு வரிகள் எப்படிப் புலப்படுத்திக் கம்பீரமாக நிற்கின்றன!. . . எழுத்துக்கள் அல்ல; ஈட்டிகள்! வேல்கள்! போர்வாட்கள்[11]

எனக் கவிஞரின் எழுத்தாற்றலை உணர்த்தியுள்ளார்.

துன்பமும் கொடுமையும் நிறைந்த காலத்தில் வாழும் கவிஞனுக்கு நிலவும் மலரும் பாடுபொருளாக வாய்ப்பில்லை. மனிதநேயம்தான் இலக்கியத்தின் அடிப்படை. மனித நேயத்திற்கு எதிரான எல்லாவற்றையும் களைவதுதான் அடிப்படையாக இருக்க முடியும். துன்பத்தில் வாழும் கவிஞன் மகிழ்ச்சியைத் தேடுகிறவனாக, மகிழ்ச்சியாக இருப்பவனாக இருக்க முடியாது. ஜோடிப்புகளுககு இடமிருக்காது, தோரணங்கள் இருக்காது. என்னுடைய கவிதைகள் எதிரிகளை அசைத்திருக்கிறது, என்னுடைய போராளிகளை அசைத்திருக்கிறது[12]

என்று குறிப்பிடுகிறார் கவிஞர். கவிதைகளால் ஊக்கம் பெற்ற இளைஞர்கள் தன் கைகளைக் கிழித்துக் கவிஞருக்கு இரத்தப் பொட்டு வைத்து உறுதிமொழி எடுத்த அனுபவங்கள் தமிழீழப் போராட்ட வரலாற்றில் இடம்பெறத்தக்க நிகழ்வுகளாகும்.

அவருடைய கவிதைகளை இசை வடிவத்தில் தேனிசை செல்லப்பா தனது குழுவினருடன் உலகமெங்கும் பரப்பி வருகிறார். இவை ஒலிப்பேழைகளாக மக்களிடையே வலம் வருகின்றன. உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் மனத்தில் கவிஞர் போராளிக் கவிஞனாக இடம் பெற்றுள்ளார்.

உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் வீடுகளிலும் நிகழ்ச்சிகளிலும் அவரது பாடல்கள் 'தேனிசை'யாகப்

பொழிவதைக் கேட்டு நெக்குருகிக் கண்ணீர் மல்கும்
மக்களைக் கண்டு மெய்சிலிர்த்திருக்கிறேன்[13]

எனப் பழ.நெடுமாறன் தன்னுடைய நேரடி அனுபவத்தை இந்நூலின் சிறப்புரையில் பதிவு செய்துள்ளார்.

கவிஞர் தனிமனிதரல்ல; விடுதலை வேட்கை உடைய கோடிக்கணக்கான மனிதர்களின் அன்புக்குரியவர் தனது போராட்ட அனுபவத்தைக் கலை வடிவமாக்கிய போராளி. தமிழன் தொடுத்த போரில் கவிஞர் காசி ஆனந்தன் இருபதாம் நூற்றாண்டின் ஓர் இலக்கிய அடையாளம்.

அடிக்குறிப்புகள்

1. கவிஞர் காசி ஆனந்தன் - கட்டுரையாளர் நேர் காணல், 25-3-2004.
2. காசி ஆனந்தன் கவிதைகள், முதல் தொகுப்பு, ப. 16.
3. காசி ஆனந்தன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, காசி ஆனந்தன், விடுதலைக் குயில்கள் பதிப்பகம், கோயம்புத்தூர் - 45, பதி. 1990, ப. 10.
4. மேற்படி, ப. 10-11.
5. மேற்படி, ப. 11-12.
6. காசி ஆனந்தன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 17.
7. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதாசன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதி 1992, பக். 69.
8. காசி ஆனந்தன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 112.
9. மேற்படி, ப. 114.
10. நானும் என் கவிதையும், பதி. மு. வளர்மதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, பதி. டிச. 1999, ப. 22.
11. காசி ஆனந்தன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 3.
12. நேர்காணல், 24-3-2004.
13. காசி ஆனந்தன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 10.

மீரா

இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க கவிஞரான 'மீரா' என்றழைக்கப்படும் மீ. இராசேந்திரனின் 'ஊசிகள்' கவிதைத் தொகுதியில், அரசியல், சமூகம் சார்ந்த அரசியல் கவிதைகள் இவண் நோக்கப்படுகின்றன.

> *தமிழ்ப் புதுக்கவிதை எதுகை, மோனையைக் களைந்து விட்டாலும், உணர்ச்சிக்கேற்ற ஒலி நயத்தை விட்டுவிட முடியாது என்று கருதுபவர் மீரா. அவரது கவிதைகள் அவரது கொள்கையோடு ஒத்துப் போவதைக் காணலாம். எவருடைய தாக்குதலுக்கும் ஆளாகாமல் பரபரப்பின்றி, ஒரே சீராக நின்று சிறப்படைபவர் மீரா[1]*

கவிஞனும் கவிதைகளும்

மக்களுக்கு அவர்கள் மறந்து போய்விடுகிற சமூக உணர்வுகளையும் மனசாட்சியின் குரலையும், எப்போதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதுதான் ஒரு கவிஞனின் தொழில் எனலாம். அவ்வகையில் மீராவின் 'ஊசிகள்' எனும் தொகுப்பிலுள்ள புதுக்கவிதைகள் ஆரோக்கிய சமுதாயம் பற்றிய அவரின் கனவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய உப்பரிகையில் உலாவுவதை விடச் சமுதாய நடைபாதைகளைச் செப்பனிட விரும்பிய மீரா,

> *சமுதாயத்தின் நோய்க்கிருமிகளைப் பார்க்கிறபோது சங்கடப்படுகிறேன், கோபமும் வருகிறது, ஒரு சுகாதாரமான சமுதாய ஆசைதான் இந்த ஊசிகளை உருவாக்கியது[2]*

என்கிறார். மீராவின் ஊசிகள் சமுதாயத்தின் நோய்க்கிருமிகளை அழிக்கத் துடிக்கும் மருந்து ஊசிகளாக, குற்றப் பிறவிகளின் நகக்கண்களில் ஏற்றப்படும் குத்தூசிகளாக, சமுதாயத்தின் கிழிசல் பக்கங்களைத் தைக்க உதவும் தையல் ஊசிகளாகப் பல வடிவம் எடுக்கிறது.

ஒரு கிழிசலைத் தைக்க வாங்கிய ஊசியை மீண்டும் தேவைப்படும்போது பயன்படுத்தப் பத்திரப்படுத்திக் கொள்வது போல இவற்றையும் பத்திரப்படுத்திக் கொள்ளலாம். மீராவின் ஊசிகளில் ஒரு குறிப்பிட்ட தத்துவ நூல் கோர்க்கப்பட்டிருக்கிறது.[3]

இக்கவிதைகளில் சில புகழ்பெற்ற அரசியல் முழக்கங்கள், இலக்கியத் தொடர்கள், பழமொழிகள், திரைப்பாடல் வரிகள் ஆகியவற்றைப் பொருத்தமாகக் கையாண்டு கவிதைகளுக்கு வலிமை சேர்த்துள்ளார். மேலும் ஊசிகளில் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட உத்தி கையாளப்பட்டிருக்கிறது. சொல்ல வந்த கருத்துக்குப் பகைப்புலமாக முரண்பாடான ஒன்றை நிறுத்திச் சொல்லும் உத்தி திறமையோடு கையாளப்பட்டிருக்கிறது.

படைப்பாளியின் பன்முகங்கள்

தமிழ்க் கவிதைப் போக்கில் ஒரு புதிய அலையை உண்டாக்கியவர் மீரா. **இராசேந்திரன் கவிதைகள்** என்ற மரபுக் கவிதைத் தொகுப்பு மீராவின் முதல் படைப்பாக வெளிவந்தது. பாரதிதாசன் கவிதைகளின் பாதிப்பும் வீச்சும் இதில் காணப்பட்டன. பின்னர் **மூன்றும் ஆறும்** என்ற தொகுப்பு மேடைக்கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்தது. எழுபதுகளின் தொடக்கத்தில் வெளிவந்த மீராவின் **கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்** மற்றும், 1974இல் வெளிவந்த **ஊசிகள்** போன்ற கவிதைத் தொகுதிகள் குறிப்பிடத்தக்கன.

மீரா **கவி, அன்னம் விடு தூது** ஆகிய இதழ்களை நடத்தினார். ஆங்கிலத்தில் பென்குவின் பதிப்பகம் இருப்பது போலத் தமிழிலும் ஒரு பதிப்பகத்தை உருவாக்க விரும்பி **அன்னம்** பதிப்பகத்தை ஏற்படுத்தினார். அதன் மூலம் பல நல்ல கவிஞர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தினார். மீராவை, **படைப்பாளிகளின் தாய்** என்றார் இன்குலாப். மீரா சாகும் வரை கடவுள் மறுப்பாளராகவும், சாதி மறுப்பாளராகவும் இருந்தார்.

சிற்பி அறக்கட்டளையால் வழங்கப்பட்ட **வாழ்நாள் சாதனையாளர் விருது** மற்றும் அப்துல் ரகுமானின் **கவிக்கோ விருது** ஆகிய விருதுகள் பெற்ற மீரா, பேராசிரியர், கல்லூரி

முதல்வர், கவிஞர், கட்டுரையாளர், பதிப்பு வித்தகர், பேச்சாளர் என ஆற்றல்மிகு திருமுகங்கள் பல கொண்டவர்; கலை, இலக்கியம், அரசியல் எனப் பல தளங்களில் கால் பதித்தவர்.

ஊசிகள் – எளிமை

இக்கவிதைகளில் கருத்துகளை எளிமையாகச் சொல்கிற பாங்கைக் காணமுடிகிறது. எதையுமே பூடகமாகச் சொல்வதை விட எளிமையாகச் சொல்லும்போது புரிதல் எளிதாகிறது. உவமை, கற்பனை போன்றவை கவிதைக்கு அணி செய்வது போல எளிமையும் ஓர் அழகுதான்.

> ஒரு வரியாக இருந்தாலும் அது மனதைத் தீண்ட வேண்டும். அதுவே கவிதையின் அடிப்படைத் தகுதி. இதை விட்டுவிட்டுப் புரியாமல்தான் எழுத வேண்டும் என்பது அவ்வளவு சரியான கருத்தில்லை[5]

என்று தற்காலக் கவிதைப் போக்கில் புரிதல் பற்றிக் கருத்துரைக்கிறார் மீரா. மீராவிடம் இருக்கும் மெல்லிய நகைச்சுவை ஊசிகளின் தனியழகுக்குக் காரணம்.

அரசியல்

மக்களால் மக்களுக்காக மக்களைக் கொண்டு ஆளப்படுவதுதான் சனநாயகம். ஆனால் அரசியல்வாதிகள் சுயநலவாதிகளாக மாறிவிடும்போது மக்களுக்கு எந்த நன்மையும் விளையப் போவதில்லை.

> மக்களுக்காகத் தலைவர்கள் என்பது சனநாயகத்தின் அடிப்படை. ஆனால், தலைவர்களின் வாழ்வுக்காக மக்கள் என்று ஆகிவிட்டது சனநாயகத்தின் நடைமுறை[6]

என்ற கவிஞர் கண்ணதாசன் கூற்று அரசியல் அவலத்தைக் காட்டுகிறது.

வாரி வழங்கிய
வள்ளல்கள்
வாழ்ந்த பூமி இது!
தர்மத்தின் உரத்தால்
கன்னலும் செந்நெலும்
செழித்த பூமி இது!

இப்போது
பணப்பயிர் சாகுபடி
படுத்து விட்டது.
ஓ!
பணத்தையே
பயிர் செய்கின்றனரே
எங்கள்
அரசியல்வாதிகள்!

என வேதனைப்படும்படி இருக்கின்றது இன்றைய அரசியல்.

அரசியல் எள்ளல்

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் என்பவைகூடக் கிடைக்காத மனிதர்களும் இருக்கிறார்கள். ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு, ஆனால், சொல்வேறு செயல் வேறாக, சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத அரசியல்வாதிகளிடம் காணப்படுகின்ற போலி நிலையைக் கூறுகிறார்.

எட்டு மாதமாய்
எங்கள் தலைவர்
தெருவில் நின்று
செழிக்கச் செய்தார்
முழக்கம் . . . . . .
வறுமை
வெளியேறிற்றா
விரைவாய் . . . . ? நேற்று
செட்டியார் வீட்டுத்
திருமணப் பந்தியில்
எதுவும் பேசாது
எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்
வறுமை,
வேக வேகமாய்
வெளியேறிற்று
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக . . . . . . ![7]

வறுமையை ஒழிக்க வேண்டும் என்று பேசிய அரசியல்வாதி ஏழ்மையில் இருக்கும் ஒருவனை அடித்து விரட்டிய அவலத்தைச் சுட்டுகிறார். இப்படிப்பட்ட போலி மனிதர்கள் தோலுரிக்கப்படும்போது நாம் சமுதாயத்தை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.

> மனிதன் மகிழ்வதற்காகப் பிறந்தவன். ஆனால், அந்த மகிழ்ச்சியை அவன் அடைந்து விடாமல் தடுக்க நிரந்தர சதி நடந்து கொண்டே இருக்கிறது. யார் அந்தச் சதிகாரர்கள்? சிம்மாசனங்களில், நீதிமன்றங்களில், சமயபீடங்களில், கல்விக்கூடங்களில் அமர்ந்து கொண்டு உதடு வேர்க்காமல் திருவாய் மலர்ந்தருளும் ஆஷாட பூதிப் பூனைகள்[8]

என்ற அறிஞர் கூற்று சுட்டத்தக்கது. எந்த ஒரு படைப்பும் சமுதாய நலன் கருதியதாக, நல்வினை ஊக்கியாகச் செயல்பட வேண்டும். அந்த வகையில் மீராவின் ஊசிகள் கவிதை நூல் சமகாலச் சமூக நிகழ்வுகளை உடனுக்குடன் உள்வாங்கிச் சமூக உணர்வைத் தூண்டக்கூடிய படைப்பாக்கமாக அமைந்துள்ளது.

சமுதாய அமைப்பைச் செழுமைப்படுத்தி வளப்படுத்தினால் தான் தனிமனிதன் வளர்வான். நாட்டின் குடிமகன் என்ற தனிமனிதனைப் பற்றிக் கவலைப்படாத, அரசியல்வாதி என்ற தனிமனிதன், உழைப்பின்றித் தன்னை வளப்படுத்திக் கொள்ளும் போது அரசியல் சாக்கடையாகிறது.

> ஆரா வமுதன்
> அமைச்சர் பதவியை
> இழந்து வருந்தி
> இருந்த ஓர் இரவில்
> அருகில் தூங்கிய
> ஆசை மனைவியைச்
> சும்மா சும்மா
> சுரண்டலானார்;
>
> அம்மா கேட்டார் ஆத்திரத்தில்:
> ஏன்தான் உங்களுக்கு
> இன்னும் அந்தப்
> பொல்லாப் பழக்கம்
> போகவில்லையோ?[9]

சுரண்டி வாழும் அரசியல் அசிங்கங்களை அம்பலப்படுத்தும் இவ்வரிகளில் நகைச்சுவை இழையோடுகிறது.

> நெல்லைத் தூற்றும் போது பதர்கள் எல்லாம் ஒரு பக்கம் குவியும்; மணிகளெல்லாம் ஒரு பக்கம் குவியும்; மணியை விட அதிக விலைக்குப் பதர்களை விற்கத் தெரிந்தவன் அரசியல்வாதி[10]

என்ற கூற்று இங்குச் சிந்திக்கத் தூண்டுகிறது. இலஞ்சம், ஊழலில் ஊறிப் போய் விட்ட சமுதாயத்தில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது. இன்று முறைகேடுகள் அன்றாட அலுவலாகிப் போயின.

சமுதாயத்தைச் சீர்திருத்த முனையுமுன் சமுதாயம் எப்படி அமைந்திருக்கிறது என்பதனை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். நோயாளியை மட்டும் அறிமுகம் செய்துகொள்ளுவதோடு நிறுத்தாது, நோய் எதுவென்று துல்லியமாகத் தெரிந்து கொள்ளுதலே சீர்திருத்திகளின் கடமை என்பதற்கேற்ப மீரா, நோய்க்கு வித்து அரசியல்வாதிகளே என்பதை உணர்த்துகிறார்.

தன்னல மறுப்பும், தியாக உணர்வும் கொண்ட மனிதர்களைக் காணவேண்டும் என்ற அவாவினால் இலஞ்ச இலாவண்யங்களும் ஊழலும் புரையோடிப் போயிருக்கிற சமுதாயத்துக்குக் குத்தூசியாய்த் தனது கவிதைகளைப் படைத்துள்ளார்.

> **மகாத் மாவின்**
> **சிலையைச் செய்ததில்**
> **மாபெரும் மோசடி யாமே!**
>
> **ஆத்திரம் வேண்டாம்**
> **அன்பரீர் . . . .**
> **மோசடி செய்ததற் கிடையில்**
> **ஏதோ**
> **சிலையும் செய்ததாய்**
> **நினைத்துக் கொண்டால்**
> **நெஞ்சம் மகிழ்ந்து போவீர்![12]**

என்ற கவிதை படிப்போரின் சுய சிந்தனைக்குத் தூண்டுகோலாக அமைகிறது.

காட்டில் மலையில்
கண்படா திருந்த
இரவுக் கொள்ளையர்
இதயம் வெளுத்துச்
சரணடைந்தார்களாம்

அதுசரி,

நாட்டில் தெருவில்
நடமாடு கின்ற
பாக்கி யுள்ள
பகற் கொள்ளையர்கள்
என்றைக்குச் சரண்
அடைய எண்ணமாம்![13]

என்ற வரிகள் வேலியே பயிரை மேயும் அவலத்தைச் சுட்டுகின்றன.

ஆட்சித் தலைவர்
அலுவ லகத்தில்
உட்கார்ந் திருந்தவோர்
ஊழியரிடம் போய்
விவரம் ஏதோ
வேண்டும் என்றார்;
இரண்டு தாளை
எடுத்து நீட்டினார்.

மாட்டேன் என்றே
மறுத்தார் ஊழியர்
. . . .
நெஞ்சங் குளிர்ந்து
சென்றார் வெளியே...
சென்றதும் ஊழியர்
திருவாய் மலர்ந்தார்...

'பத்து ரூபாய்க்கா
பார்த்துச் சொல்வேன்
அவ்வளவு எளிதாய்?
அலைய விட்டு நான்
அப்புறம் கறப்பேன்
அறுபது எழுபது...'[14]

கம்பீரமான எளிமையுடன் படைக்கப்பட்டுள்ள மீராவின் ஊசிகளில் தெளிவான சிந்தனையும் அழுத்தமான சமூக அக்கறையும் வெளிப்படுகின்றன.

> அரசியல்வாதிகளுக்குச் சில்லறை சேர வேண்டுமென்றால் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். பொதுத்தொண்டர் தட்டிக்கேட்பார். தவறு கண்டால் தண்டனை கிடைக்க வழி செய்வார் எனும் அச்சம் இருந்திருந்தால் அதிகாரிகள் ஊழல் புரிய வாய்ப்பிராது. ஆனால் அரசியல்வாதிகளுக்குப் பண ஏற்பாடு செய்து கொடுக்கும் அதிகாரிகள் தங்கள் பங்குக்கு இந்தச் சமுதாயத்தைச் சுரண்ட முற்படுகின்றனர். கையூட்டு இந்த இடத்தில்தான் தொடங்குகிறது[15]

என்கிறார் மு. தமிழ்க்குடிமகன். அடித்தட்டிலிருந்து மேல்தட்டு வரை கையூட்டு என்பது வாழ்க்கையின் அங்கமாகிவிட்டது. "படம் எடுப்பதில் அமெரிக்காவுக்கு அடுத்தபடி இந்தியாவே சிறந்து விளங்குகிறது"[16] என்று சோமலெ கூறுகிறார். இந்தியாவில் உருவாகும் படங்களில் இந்திமொழிக்கு அடுத்தபடியாக மிகுதியாகப் படங்கள் தமிழ்மொழியில் எடுக்கப்படுகின்றன. திரைப்படம் மக்களுக்குக் கல்வியூட்ட வேண்டும். திரையரங்கு ஒரு வகுப்பறையாகத் திகழ வேண்டும். "திரைப்படம் ஒரு மனிதனின் மன உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மீடியம்"[17] என்று மறை. லாரன்சு குறிப்பிடுகின்றார்.

நடப்பியல் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்து, மக்களைச் சிந்திக்க வைக்கும் ஊடகமாகத் திகழ வேண்டிய திரைப்படத்தைக் கட்சிகள் தங்கள் அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கின. மக்களிடையே தம் கட்சியின் செல்வாக்கை உயர்த்த, தம் கட்சியின் கொள்கை, கோட்பாடுகளை வெளிப்படுத்த சில நடிகர்களும் தயாரிப்பாளர்களும் திரைப்படத்தைப் பயன்படுத்தினர். திரைப்படம் அவர்களுக்கு அரசியல் கருவியாக அமைந்தது. அரசியல் இயக்கத்தினர், தம் திரைப்படப் படைப்புகளில் தம் கட்சியின் சின்னத்தைக் காட்டுவதில் தொடங்கிப் பல்வேறு விதமாக அரசியல் கொள்கைகளையும், கருத்துகளையும் புகுத்தினர்.

சினிமா அரங்கில்
அரசியல் கூத்து;

அரசியல் மேடையில்
சினிமாச் சண்டை.....
என்னருந் தமிழ்த்தாய்
ஈன்ற மக்களே!
உங்களைப் போல
உலகில் யாரே
கொடுத்து வைத்தவர்[18]

என்று நையாண்டி செய்கிறார் மீரா. பதவிக்கும் நாற்காலிக்கும் ஆசைப்படாத மனிதர்களே கிடையாது எனலாம். காலங் காலமாய்ப் பதவிச் சண்டையும் நாற்காலிச் சண்டையும் காலத்தின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இருந்த போது
எம்.பி. பதவி . . . . .
இறந்த போது
சிவலோகப் பதவி . . . .[19]

என்பதன் மூலம் அரசியல்வாதிகளின் பதவி ஆசையை நகைச்சுவையோடு வெளிப்படுத்துகிறார்.

> பதவி என்ற தகுதி இருந்தால் போதும் ஊழல் பேர்வழி ஒழுக்கம், நேர்மை பற்றிப் பேசலாம். சாராயத் தொழிற்சாலை முதலாளி குடிகுடியைக் கெடுக்கும் என்று உபதேசிக்கலாம். தேசத்தைக் கொள்ளை அடிப்பவன் தேசியம் பேசலாம்[20]

என்று அப்துல்ரகுமான் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மக்கள் வாழ்க்கையைத் துண்டாடும் அரசியல்வாதிகளின் பேராசையை, கீழ்மையை,

தலைவர் வாயில்
அடிக்கடி துண்டு
விழக் காரணம் – அவர்
கழுத்தில் துண்டு
விழாக் காரணமென
விரைவில் புரிந்தது[21]

என்று சொல்கிறார்.

ஐந்து வருடம்
முடிந்தால் தேர்தல்
என்பதை மாற்றி
இங்கே
வருடா வருடம்
வைத்தால் போதும்
பெரும் பெரும்
புள்ளிகள் எல்லாம்
வெள்ளிப் பணத்தை
அள்ளி இறைப்பார்
ஆடிக் கரைப்பார்
சுலபமாகச்
சோஷ லிசத்தை
அடையும் வழியிது
அற்புத வழியிது[22]

என்ற வரிகள் தேர்தலின்போது வீண் ஆடம்பரத்துக்காகச் செலவழிக்கப்படும் பணத்தைச் சுட்டுகின்றன. இன்றைய அரசியலில், தேர்தல் களத்தில் மக்கள் விலைக்கு வாங்கப் படுகிறார்கள். பதவியைப் பிடிக்கவேண்டும் என்ற ஆசையால் பணத்தை வீணாக்க அரசியல்வாதிகள் தயங்குவதில்லை. சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கின்ற தந்திரசாலிகள் அரசியல்வாதிகள். தேர்தலின்போது செலவழிக்கும் பணத்தை ஆட்சியைப் பிடித்த பிறகு பன்மடங்காகச் சுருட்டி விடலாம் என்ற நம்பிக்கையே அவர்கள் செயலுக்குக் காரணம் எனலாம்.

இப்போது கூடக்
காலம் வீணாய்க்
கடத்தாமல் புதுக்
கட்சியைத் தொடங்கினால்
கண்டிப்பாக
ஆட்சியைப் பிடிக்கலாம் . . . .
அடியேன் பறைவது
மெய்யப்பா
ஐயப்பா![23]

என்ற வரிகள் தேர்தல் பற்றிய கண்ணோட்டத்தைத் தருகின்றன.

பெரிய நாட்டின்
பிரதமர் பொறுப்புடன்
மந்திரி மார்கள்
மத்தியில் சொன்னார்.
விருந்தைக் குறைப்பீர்!
வெளிநாட்டுக்குப்
பறந்து போகும்
பழக்கம் குறைப்பீர்....
எங்கோ இருந்தோர்
எதிரொலி கேட்டது
பிரியம் மிகுந்த
பிரதமரே
உமது
மந்திரி சபையின்
எண்ணிக்கையை நீர்
கொஞ்சம் குறைப்பீர்
கொஞ்சம்.....[24]

எளிமையாக இருப்பினும் இக்கவிதையின் ஒவ்வொரு சொல்லும் பலமுறை சிந்திக்க வைக்கும் பேராற்றல் படைத்ததாக விளங்குகின்றது.

குப்பா! குப்பா
உன்னைப் பெற்ற தந்தைக்கு
உன்னைத் தானே
அடிக்கத் தெரியும்
என்னைப் பெற்ற தந்தைக்கு
இந்த ஊரையே
அடிக்கத் தெரியும்[25]

என்று மேயர்மகன் தோட்டிமகனுக்குக் கூறுவதாக அமைந்துள்ள கவிதை அங்கதத் தன்மையுடன் புதிய மாதிரியாக விளங்குகிறது.

அறியாப் பருவமான குழந்தைப் பருவத்தில் இருக்கும் சிறுவர்கள் பேசிக் கொள்வதாக அமைந்துள்ள கவிதையில்,

பாரதச் செல்வனும்
அந்நியச் சிறுவனும்

தத்தம் பெருமை
பேசலானார் . . . . .
எங்கள் நாட்டில்
நாய்கள் பற்பல
குட்டிகள் போடும் . . . . .
எங்கள் நாட்டில்
மட்டும் என்னவாம்?
எங்கள் நாட்டில்
பன்றிகள் பற்பல
குட்டிகள் போடும் . . . . .
ஆச்சர்யம் இதில்
என்னவாம் . . . . .
அங்கும் அப்படியே!

எங்கள் நாட்டில்
கட்சிகள் பற்பல
குட்டிகள் போடும் . . . .
அந்நியச் சிறுவன்
அமைதி யாகத்
தலையைக் கீழே
தொங்கப் போட்டான்[26]

என்பதனால் ஒற்றுமையற்ற உட்கட்சிப் பூசல்களையும் கேலிக்கூத்தான அரசியலையும் சாடுகிறார்.

> ஆழமாக உணர்ந்து அதை ஆழமாகவே உணர்த்தி விடுகிற கவிஞனின் திறன் வாழ்க்கையை நுட்பமாக அடையாளம் காட்டி விடுகின்றது. இதுவே கவிதை

என்று மு.வ. கூறுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

எங்கள் ஊர் எம்.எல்.ஏ
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினார்
மின்னல் வேகம்
என்ன வேகம்?
இன்னும் எழுபது

கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி இருப்பார் ....
என்ன தேசம்
இந்தத் தேசம்?[27]

என்பதனால் கொள்கைப் பிடிப்பில்லாத அரசியல்வாதிகளைத் தோலுரிக்கிறார். பதவி ஆசையாலும் பணத்தாசையாலும் உந்தப்பட்டுத் தடம் மாறும் அரசியல்வாதிகள் திருந்த வேண்டும். அல்லது "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?" என எண்ணும் மக்களின் மனப்போக்கு மாறி, உரியவர்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சிப் பீடத்தில் அமர்த்த வேண்டும் என்ற அவாவே இங்குக் கவிதையாகியுள்ளது.

1974இல் மீரா, ஏழு மாதத்தில் எட்டுத் தடவை கட்சி மாறிய எம்.எல்.ஏ.வைப் பற்றி வருந்திப் பாடியுள்ளார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பத்தாவது அட்டவணையாகக் **கட்சித் தாவல் தடைச் சட்டம்** (Anti-defection Law) 1985இல் இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கட்சித் தாவல் தடைச் சட்டம் இந்திய அரசியலமைப்பின் 52ஆவது சீர்திருத்த மசோதாவின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தால் பதவி பறிபோய்விடும் என்ற காரணத்தால் எம்பிக்களும் எம்.எல்.ஏ.க் களும் கட்சித் தாவலில் ஈடுபடாமல் இருப்பார்கள் என்பது சற்று ஆறுதலான செய்தி.

மக்களைக் 'காத்தல்' தொழில் செய்ய வேண்டிய அரசியல்வாதிகள், மனச்சாட்சியைக் கொன்று விட்டு, சமூகத்தின் பல்வேறு தளங்களில் 'அழித்தல்' தொழில் செய்யும் நிலை மாறும் வரை ஊசிகள் போன்ற கவிதைகளைப் 'படைத்தலே' கவிஞனின் தொழிலாகிறது.

தீர்வு

இக்கவிதைகள், இலட்சியங்கள் மனித இலட்சணம் ஆகும்போதுதான் விடிவு ஏற்படும் என உணர்த்துகின்றன. தீமையைக் கண்டால் பொங்கும் திடமான கோபம் வேண்டும் என எண்ண வைக்கின்றன. குறைகளைச் சுட்டுவதன் மூலம் அக்குறைகள் களையப்பட வேண்டும் என்ற எண்ணத்தைப்

படிப்போர் மனத்தில் தைக்கின்றன. எளிமையும் வெளிப்படையும் கொண்ட இக்கவிதைகள் வெறும் செய்திகளாக எஞ்சாமல் படிப்பவர்களைத் தீர்ப்புகளுக்குப் பழக்கப்படுத்துகின்றன. இவையே 'ஊசிகள் - கவிதைகள்' மூலம் சமூகச் சீர்கேட்டிற்கும் அவலத்திற்கும் கவிஞன் வழங்கும் தீர்வு எனலாம்.

நிறைவுரை

மீரா சமூக அவலங்களுக்கு எதிராகத் தமது எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்துள்ளார். வார்த்தைகளைத் தன் ஆளுமையில் வைத்திருப்பவனே படைப்பிலக்கியத்தில் வெற்றி பெற முடியும். அந்த வகையில் மீரா வெற்றி பெற்றுள்ளார் எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. மு. தமிழ்க்குடிமகன், **பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்,** ப.17.
2. மீரா, **ஊசிகள்,** (பரிசோதனை), ப.3.
3. மீரா, **ஊசிகள்,** ப.6.
4. அறிவுமதி, **மீரா சிறப்பிதழ்,** ப.37.
5. அறிவுமதி, **மீரா சிறப்பிதழ்,** (அகவல் நேர்காணல்) ப.61.
6. கவிஞர் கண்ணதாசன், **அனுபவ மொழிகள்,** ப.154.
7. மீரா, **ஊசிகள்,** ப.16.
8. **கவிக்கோ அப்துல்ரகுமான் மணிவிழா மலர்,** ப.27.
9. மீரா, **ஊசிகள்,** ப.19.
10. கவிஞர் கண்ணதாசன், அனுபவ மொழிகள், ப.147.
11. மு. தமிழ்க்குடிமகன், **பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்,** ப.246.
12. மீரா, **ஊசிகள்,** ப.64.
13. மேற்படி, ப.44.
14. மேற்படி, பக்.38-39.
15. மு. தமிழ்க்குடிமகன், **பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்,** ப.253.
16. சோமலெ, **வளரும் தமிழ்,** ப.225.

17. மறை. திரு. லாரன்சு, **இன்றைய தமிழ்த் திரைப்படங்களில் முற்போக்குப் பார்வைகள்,** ப.163.

18. மீரா, **ஊசிகள்,** ப.66.

19. மேற்படி, ப.22.

20. அப்துல் ரகுமான், **சுட்டுவிரல்,** ப.60.

21. மீரா, **ஊசிகள்,** ப.49.

22. மேற்படி, ப.28.

23. மேற்படி, ப.26.

24. மேற்படி, பக்.46-47.

25. மேற்படி, ப.17.

26. மேற்படி, பக். 58-59.

27. மேற்படி, ப. 13.

முதன்மை ஆதாரம்

1. **ஊசிகள்** (கவிதைத் தொகுதி), மீரா, செல்மா பதிப்பகம், சிவகங்கை, முதற்பதிப்பு, 1974.

துணை நூல்கள்

1. மீரா, **எதிர்காலத் தமிழ்க் கவிதை,** அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதல் பதிப்பு, 1985.

2. **கவிக்கோ அப்துல் ரகுமான் மணிவிழா மலர்,** ரூபி பதிப்பகம், சென்னை, 1998.

3. கவிஞர் அப்துல் ரகுமான், **சுட்டு விரல்,** கவிக்கோ பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1996.

4. சு. அரங்கராசு, **தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு,** மூன்றாம் உலகப் பதிப்பகம், கோவை, முதல் பதிப்பு, 1991.

5. முனைவர் வா.மு.சே. ஆண்டவர், **தமிழ்க் கவிதைகளில் சமகால வரலாறு,** கவியரசன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1998.

6. டாக்டர் ந. பிச்சமுத்து, **திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்,** சக்தி வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு, 1998.

7. அப்துல் ரகுமான், **தொலைபேசிக் கண்ணீர்,** (கட்டுரைத் தொகுதி), கவிக்கோ பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1999.

8. மு. வளர்மதி, **நானும் என் கவிதையும்,** (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்., சென்னை, முதல் பதிப்பு, 1999.

9. மு. தமிழ்க் குடிமகன், **பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்,** அறிவொளி பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 1986.

10. அறிவுமதி, **மண்,** காலாண்டிதழ், (மீரா சிறப்பிதழ்), மித்ரா வெளியீட்டகம், சென்னை.

11. D.D. Basu, **Introduction to the Constitution of India,** Prentice - Hall of India Pvt. Ltd, New Delhi.

12. **MODERN TAMIL POETS SERIES (MEERA -** His life and Art) A Monograph by R. Balachandran, Tirunelveli, First Print, 2000.

இவரா

கவிஞர் அறிமுகம்

இயற்பெயர்: இந்திரபவாநி. இதனுடன், தன் கணவர் பெயரான வரதராஜபாண்டியன் என்பதைச் சேர்த்து வ. இந்திரபவாநி வரதராஜபாண்டியன் என்றும் அழைக்கப்பட்டார். இப்பெயரின் சுருக்கமாகவே 'இவரா' என்றும், 'இந்துவரதன்' என்றும் புனைபெயர்கள் அமைந்தன. இறுதியில் 'இவரா' என்பதே கவிஞராக நிலைத்தது. கவிஞர் இவரா, இதழாசிரியரும் சிறுகதை எழுத்தாளரும் கூட. குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். **சங்க நூல்களில் கிருஷ்ண வழிபாடு** [1] எனும் தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தில் புராணங்களில் மகளிர் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். ஆதலால், ஆசிரியப் பணியுடன் ஆய்வுப்பணியிலும் இவர் சிறந்தவராகிறார்.

தமிழகத்தில் தயாரிக்கப்பெற்று இலண்டன் மாநகரில் வெளியாகும் **தமிழ் மலர்ச்சி** எனும் மாத இதழின் ஆசிரியராகவும் இந்திரபவாநி குற்றாலத்தில் 1980களில் பொறுப்பேற்றிருந்தார். இக்காலக்கட்டத்திற்கு முன்பே கவிதை எழுதி வந்த இவர், இதழாசிரியர் பொறுப்பு வகித்தபோதே ஓர் எழுத்தாளராக - கவிஞராக முழுதும் பரிணமித்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அந்த இதழின் இலண்டன் வெளியீட்டாளரான பாண்டிச்சேரி வி.சி. அப்பாசாமி அவர்களுக்கும் இக்கட்டுரையாசிரியருக்கும் இலண்டனில் 1979இல் அறிமுகம் ஏற்பட்டது. அதன்பிறகு, இந்திரபவாநிக்கு உதவும் பொருட்டு இக்கட்டுரையாசிரியர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இவ்வாறு ஏற்பட்ட எழுத்துலகத் தொடர்பின் காரணமாக, 1982இல் இவராவின் **மௌனப்பூவின் மகரந்த உச்சரிப்புக்கள்**[2] எனும் முதல் கவிதைத் தொகுதியும், **நித்தம் எரியும் துர்க்கைகள்**[3] எனும் இரண்டாவது கவிதைத் தொகுப்பும் வெளிவந்தன.

1984இல் இவராவின் **நிஜங்கள்**[4] எனும் சிறுகதைத் தொகுப்பு வெளியிடப் பெற்றது. குஜராத் மாநில அந்நாள் கல்வி அமைச்சர் ஹஸ்முக் பட்டேல் ஆங்கிலத்தில் இயற்றிய **Excuse Me** எனும் கவிதைத் தொகுப்பை **மன்னியுங்கள்**[5] எனும் தலைப்பில் இந்துவரதன் எனும் புனைபெயரில் (1987இல்) இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

பக்கவாதம் ஏற்பட்டும் மனம் தளராது பயிற்சிகள் செய்து இடது கையால் எழுதப் பழகி எழுதிய **தாட்சாயிணி** என்ற சிறுகதைத் தொகுப்பு[6] இவர் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் (2001இல்) வெளியாகியது. அச்சூட்டோடு சூடாக அவருக்கு முனைவர் பட்டமும் கிடைத்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தில் நல்ல முறையில் நூல்கள் பராமரிக்கப்பட்டு வருவதாலும், இந்நூலகத்தை ஏராளமான ஆய்வு மாணவர்கள் பயன்படுத்துவதாலும் கவிஞர் இவரா பராமரித்து வந்த தன் நூல்கள் அனைத்தையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்திற்கு அன்பளிப்பாக அளிக்க வேண்டும் என்று தன் இறுதி மூச்சில் தெரிவித்திருந்தார் போலும். அன்னாருடைய கணவரான தொழிலதிபர் வரதராஜபாண்டியனும் மகனார் சுரேசும் அம்மையாரின் இறுதி ஆசையை நிறைவு செய்யும் பொருட்டு இக்கட்டுரையாசிரியரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் சா. கிருட்டினமூர்த்தியையும் தொடர்பு கொண்டனர். அதன் விளைவாக நிறுவன இயக்குநரும், நிறுவன மேலாளர் வீரபாகுசுப்பிரமணியனும் நூலக உதவியாளர் பெருமாள்சாமியும் கவிஞர் வாழ்ந்த இல்லத்திற்குச் சென்று 1500க்கும் மேற்பட்ட நூல்களை நிறுவன நூலகத்திற்குப் பெற்றுக் கொண்டு வந்தனர். கவிஞர் இவராவுக்குக் காட்டும் நன்றிக் கடப்பாடாக அந்நூல்கள் தனி இரும்பு அலமாரிகளில் பாதுகாக்கப் பெற்று வருகின்றன.

மௌனப்பூவின் மகரந்த உச்சரிப்புக்கள்

இவராவின் கன்னி முயற்சிக் கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்த **மௌனப்பூவின் மகரந்த உச்சரிப்புக்கள்** அவருக்கும் அவர் கணவருக்கும் இடையே எழுந்த அன்புக் கவிதைகளாகப் பரிணமித்துள்ளன என, **மன்னியுங்கள்** என்ற நூலின் பின் அட்டையில் இதழாளர் P. சுந்தரேசன் குறிப்பிட்டுள்ளார். இலக்கியம் படித்த, அதிலும் பழந்தமிழ்

இலக்கியம் படித்த பெரும்பாலானவர்கள் அன்புக் கவிதைகளை அறிமுக நாள்களில் எழுதுவதைத் தவிர்க்க இயலாது. இக்கவிதை நூலை 1982இல் மதிப்பிட்ட **தற்காலத் தமிழ்க்கவிதைகள் - ஆய்வு**[7] என்ற நூல்:

> *அப்துல்ரகுமானின் பால்யவீதி, நா. காமராசனின் கறுப்பு மலர்கள், மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், ஊசிகள், கங்கைகொண்டானின் கூட்டுப்புழுக்கள் .... இவற்றில் சிதறல் அனுபவங்கள் தாம் உள்ளன. அனுபவப் பரிமாணமென்று பெரிதுபடுத்திச் சொல்லுமளவிற்கு ஒன்றுமில்லை. இவர்களுடைய "காதல்" என்ற சிதறல் அனுபவம் காதலாக வராது கருத்தும் சேர்ந்து விடுகிறபோது கவிதை அனுபவ வெளியீடாக அமையாது போய் விடுகிறது. வெளியீட்டின்போது கூட முழுநிலையில் இல்லாது இடையிலோ அல்லது எங்கோ முடிந்து வெளியீட்டு வறுமையால், வெளியீட்டுத் திறமையின்மையால் குறையுள்ள கவிதையாகின்றன. காதல் என்ற இந்தச் சிதறல் அனுபவம் கற்பு நிலையில் 'இவரா'வின் மௌனப்பூவின் மகரந்த உச்சரிப்புக்கள் என்ற கவிதை நூலில் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும் கூடப் பிரிவிலும் இணைவிலும் தான் இச்சிதறல் அனுபவம் படிமமாய் வெளியிடப்பட்டுள்ளது.*

என்கிறது. அப்துல்ரகுமான், காமராசன், மீரா, மு. மேத்தா போன்ற அந்நாளைய கவிஞர்களின் தலைப்புத் தாக்கம், கருத்துத் தாக்கம் இவற்றுக்கு இவரா தப்பவில்லை என்று தெரிகிறது. ஆனால், அவர் மேலும் ஒரு படி சென்று காதலைக் கொச்சையாக்காது கற்பு நிலையில் சிறிது முயற்சித்திருக்கிறார் எனக் கருதலாம்.

இக்கவிதைத் தொகுதியில் கூடல், பிரிவு, பிரிவும் கூடலும், நினைவுகள், பிறருக்குப் புரியாது, நான் நாமானதும், உன் மடல்கள், ஏக்கங்கள், என் படைப்புக்கள் எனும் தலைப்புகளின் கீழ்ப் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கூடலில்,

> *நம்*
> *நிமிஷப் பகிர்வில்*
> *என்*
> *வருஷப்பொழுது*
> *பறக்கிறது*

என்பது முதல் கவிதை. உருவில் சிறியது. ஏனைய 21 கூடல் கவிதைகளுக்குக் கருவானது. புதுக்கவிதை வடிவெடுத்திருப்பது. பிரிவில் வரும் 9 கவிதைகளுக்கு முன் ஒரு குட்டிக் கவிதை வருமாறு:

உன்
ஒவ்வொரு
போய் வரவாவும்
நோய் தரவா பொருள்
தரும்

பிரிவும் கூடலும் எனும் பகுப்பில் உள்ள 8 கவிதைகளுக்கு முன்,

குப்ஜா கூனல்
கண்ணன்
விரல் பட்டதும்
அகன்றதாம்
-இப்போது புரிகிறது

என்னும் குட்டிக் கவிதை உள்ளது. நினைவுகளில்,

நலக் காலொடு
செருப்பாய்
நடப்பது
உந்தன் நினைவில்
எந்தன் மனசு

இக்குட்டிக் கவிதையின் விரிவாக 29 கவிதைகள் பிறந்துள்ளன. **பிறருக்குப் புரியாது** எனும் பகுப்பில்,

வயிற்றுப் பிள்ளையின்
வளர்ச்சி
அன்னைக்கன்றோ
புரியும்
பிறருக்கெங்கே
புரியும்

எனும் கருக் கவிதையின் விரிவாக 13 கவிதைகள் உள்ளன. **நான் நாமானதும்** என்ற பகுப்பில்,

தனிமைப் பேயின்
தலை மறைவு
இனிமை ஏஞ்சலின்
எழில் வரவு

என்பதன் விரிவாக 5 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. உன் மடல்களின் கீழ்,

என்னையும்
உன்னையும்
இணைக்கும்
'ஜரை'கள்

எனும் கருவின் விரிவாக 4 கவிதைகள் உள. ஏக்கங்களின் கீழ்,

எனது
ஏக்கச் சாரல்கள்
உன்னை
ஈர்க்கும்
இசைக்கருவி

என்பது குட்டிக்கவிதை. 5 விரிந்த கவிதைகள் அதற்கு உள்ளன. **என் படைப்புக்கள்** என்பதற்கான குட்டிக்கவிதை வருமாறு:

என்
கவிதைகளின்
விதை
நீ

இப்பகுப்பில் 2 நீண்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவராவின் குட்டிக் கவிதைகளுக்கான விரிந்த கவிதைகள் ஒவ்வொன்றிலும் சில படிமச் சிதறல்கள் காணப்படுகின்றன. சான்றாக முதல் கவிதையில்,

உன் கழுத்தைச் சுற்றி
என் கைகளை
இணைத்துக் கொள்ளும் போது
தெய்வத்தின் கழுத்தில் விழுந்த
மாலையாக
நான் குளிர்ச்சியாக
உணர்கிறேன்

இதிலுள்ள முரண் படிமம் அடுத்த அடிகளிலும் அவற்றுக்குப் பின்னும் கலைந்து விடுகின்றது. கவிதை தொடர்ந்து வருமாறு:

மலைத் தோளில் வளைய வரும்
அருவி மகளாகச்
சிரிப்பும் சிலிர்ப்புமாக
என் உணர்ச்சிகள்
கொள்ளை அவசரத்தோடு
இயங்குவதை உணர்கிறேன் . . .

மேலேயுள்ள முரண் படிமம் தொடர்ந்து கீழே படிமமாக விரிந்தாலும் இறுதியில் சிதறிவிடுகிறது. கைகள் மற்றும் மலை அருவித் தழுவலுக்குப் பின் 'மார்பில் முகம் வைத்தல்' எனும் பொருண்மை கவிதையில் வந்து விடுகிறது. அதன்பின் கவிதை கட்டவிழ்ந்து போகிறது. கவிதை வருணனையாக வழிமாறிப் போகிறது. விரிவான கவிதைகளில் கிடக்கும் படிம அடிகளை மட்டும் எடுத்துக் கவிதைகளாகப் பரப்பியிருந்தால் சில கவிதை களாவது உருப்படியாகத் தேறியிருக்கும். அவ்வாறின்றிப் படிமங் களும் வருணனைகளுமாக மாறிமாறி வரும்போது பொழுது போக்காகப் படிப்பவர்களுக்கும் புதிதாகப் படிப்பவர்களுக்கும் வேண்டுமானால் கவிதைகள் இரசிப்பை ஏற்படுத்தும்.

இவராவின் கவிதைகளில் வியாபித்துள்ள வருணனை களில் கற்பனைக்கும் உவமைக்கும் உருவகத்துக்கும் பஞ்சமில்லை. அவ்வாறு கற்பனை சிறகடித்துப் பறக்கும்போது கவிதையில் சொற்களும் பல்கிவிடுகின்றன. சொற்செட்டு தளர்ந்துவிடுகிறது.

மகிழ்ச்சியின் உச்சத்திலே
என் சொற்கள்
இரவு வானத்தில்
நிலவொளியில்
சிந்திய விண்மீன்களாகக்
கோவையின்றிச் சிதறுகின்றன.

தானே கனிந்த கனியாக
என் சொற்களில் நெகிழ்வு
எங்கிருந்தோ வந்து
இணைந்து கொள்கின்றது

யாழிலிருந்து பிறக்கும் இசை
எப்படியோ என் பேச்சில் இழைந்து
என்னை வியப்பில் ஆழ்த்தி
மயக்குகிறது.

அன்னையைக் கண்ட
ஆறுமாதக் குழந்தை
தன் பொக்கை வாயைத் திறந்து
கைகால்களை உதைத்துக் கொண்டு
சிரிப்பதுபோல,
என் மனம்
தன்னை மறந்து
உலகம் கேட்காதபடி
கண்ணாடி அறைக்குள் நடக்கும்
இசை நிகழ்ச்சியாகச்
சிலிர்த்துச் சிரிக்கிறது...

இவராவின் இக்கவிதைத் தொகுப்பில் உள்ள குட்டிக் கவிதைகள், சிறுகவிதைகள், விரிந்த கவிதைகள் எனப் பார்க்கும் போது அடியால் குறைந்த கவிதைகள் கவிதைத் தரத்தை எட்டிப் பிடிக்கின்றன என முடிவுக்கு வரமுடிகின்றது. ஏனைய் தடம்மாறிச் செல்கின்றன. இவ்வாறான ஓர் இறுக்கமான திறனாய்வு பழந்தலைமுறைப் புதுக்கவிதைகளுக்குத் தேவையாகிறதாலேயே மேற்கண்டவாறு இவராவின் கவிதைகள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டன.

நித்தம் எரியும் துர்க்கைகள்

குறியீட்டுப் பெயரிலேயே இத்தொகுப்பில் அடங்கும் சில கவிதைகள் பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்பட்டதாக உணர முடிகிறது. இக்கவிதைத் தொகுப்பில் சொற்கள், எழுத்து, படைப்புகள், பிழைகள், நீராட்டவோ, எது எதில் சிறந்தது ஏன்?, கடலின் ஆழம், விமர்சனம், வக்கிரபுத்தி மியூல்கள், புத்தமுகத்துப் போகி எனும் கவிதைகள் 'படைப்பும் விமர்சனமும்' என்பதின்கீழ் உள்ளன. 'திசையெலாம் தீனி' எனும் தலைப்பின்கீழ், திறமைகள், பொறுமைகள், வணக்கத்திற்குரியது,

விஷம், அவதாரம், ஹிப்போக்ரிட்ஸ், வேரிலாப்பூக்கள், சுடர் நட்சத்திரங்கள் என்பன அடங்கியுள்ளன. நித்தம் எரியும் துர்க்கைகள் எனும் தலைப்பின்கீழ், நித்தம் எரியும் துர்க்கைகள், மேட்ரிமோனியல்ஸ், சொர்க்கத்து நிச்சயங்கள், பாவிகள் நாங்கள், குமரியும் இமயமும், ஒரு கட்டை விரலின் சவால் என்பன உள்ளன. இவற்றுள் 'சுடர் நட்சத்திரங்கள்', 'நித்தம் எரியும் துர்க்கைகள், 'ஒரு கட்டை விரலின் சவால்' என்பன சற்று நீண்ட கவிதைகள்.

படைப்பும் விமர்சனமும் பற்றிய இவராவின் பார்வை வருமாறு:

கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்
பரமனுக்கு மட்டுமா
பொருந்தும் இது?
படைப்புக்கும்
விமர்சனத்திற்கும் தான்!

திசையெலாம் தீனி எனும் பகுப்பின் கீழ்,

நதிப்பாதையில்
மொட்டென அமர்ந்து
சிட்டெனப் பெயரும்
ஒளிவிழிக் கேஸட்டில்
நாலாறு விதமாய்
அனுபவங்கள் பதிந்து
மதிமதுப் போதையில்
கவிதையாய் மாறும்

எனும் கருக்கவிதை உள்ளது.

பெண்ணை அடைத்தவன்
கண்ணை அடைத்தவன்
என்ற பாரதிக்கு
நூற்றாண்டு விழா!
ஹூம்!
இன்னமும் பெண்
பா ரதி யாக
மட்டுமே . . .

என்ற முகப்புக் கவிதை நித்தம் எரியும் துர்க்கைகள் எனும் பகுதிக்கு முன்னோட்டமாக அமைந்துள்ளது. கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பைக் காட்டிலும் இரண்டாம் கவிதைத் தொகுப்பான **நித்தம் எரியும் துர்க்கைகளில்** தொடர் படிமங்கள் அமைந்து கவிதைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் கவிதையில் கூடலும் பிரிவும் ஊடலுமான அன்பு எனும் பொருண்மை அமையாமல் மொழி மற்றும் சமுதாயப் பொருண்மைகள் அமையும்போது கவிதைகளில் ஓர் ஈடுபாடு இல்லாமல் போகிறது. இவை மனிதர்களுடன் தொடர்புடையன என்றாலும் 'அன்பு'க்கு அடைக்குந்தாழ் இல்லை என்றே கருதலாம்.

இவராவின் பெண்ணியப்பார்வை இரண்டாம் கவிதைத் தொகுதியின் இறுதியில் காலடி வைத்துப் பின் **தாட்சாயிணி** என்ற சிறுகதைத் தொகுப்பில் வளர்ந்து நின்றுவிட்டிருக்கிறதாகத் தெரிகிறது. 'நித்தம் எரியும் துர்க்கைகளாக' வலம் வரும் பெண்கள் பற்றிய நீண்ட கவிதையின் தொடக்க அடிகள் வருமாறு:

இதய எலுமிச்சைகளில்
எரிமலைத் திவலைகளாம்
உணர்வு நெய்யைச்
செவ்வாய் தொறும்
வார்த்து,
தம் கனவுகளையே
திரியாக்கி,
நம்பிக்கைகளையே
ஒளிச்சுடராக்கி,
சிவன் கோவில் மரத்தில்
கொற்றவை சன்னிதிக் கிளையில்
காத்துக்கிடக்கும்
கிளிகள்,
காணப்போவது
இலவா குலவா?
அந்தக் காலகண்டிதான்
அறிவாள் . . .

இவ்வாறு கவிதை தொடங்கி நீள்கிறது. பெண்ணியச் சிந்தனைகள் புதுக்கவிதைகளில் பெரும்பாலும் ஆண்

கவிஞர்களால் தொடக்கக் காலத்தில் இடம்பெறச் செய்யப்பட்ட போது இவராவும் அவர்களைத் தொடர்ந்து எழுத்தில் குரல் கொடுத்த பெண்களில் முன்னோடியாக அமைந்துள்ளார். பின்பு தாட்சாயிணியில் பொங்கிப் பிரவாகித்திருக்கிறார்.

அன்பு, மொழி, சமுதாயத்தில் பெண்கள் எனக் கவிதைகளில் கருக்கொள்ளச் செய்த கவிஞர் இவராவின் கவிதைகள் அடுத்ததாக அவர் மதுரைப் பல்கலைக்கழகத் தொழிற் சங்கவாதியாக மாறியதால் வெளிப்படவில்லை என்றே தோன்றுகிறது. ஆயினும் கவிதைத் தொடர்பு கொண்டவராகவே அவர் இருந்துள்ளார் என அவர் செய்த மொழிபெயர்ப்புக் கவிதைகள் பறைசாற்றுகின்றன.

மன்னியுங்கள்

கவியாக்கக் கவிஞராக இவராவை இப்படைப்பில் பார்க்க முடிகிறது. ஆங்கில மூலக்கவிஞர் ஹஸ்முக் பட்டேல் ஆக இருந்தாலும், இந்திய ஒருமைப்பாட்டுணர்வுக்குத் தமிழ்க்கவிதைகள் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது இக்கவிதையாக்கத்தின் நோக்கம் புரிகிறது. இத் தொகுப்புக்கு ஆழ்வார்குறிச்சி கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் A.ஸ்ரீ அணிந்துரை அளித்துள்ளார். ‘காலத்தைத் தொட்டுணர்த்தும் கவிதைகள் மலரட்டும்’ எனும் மதிப்பீட்டுத் தலைப்பில் சே. சேவற்கொடியோன் கருத்துகள் நல்கியுள்ளார். சமூகப்பாதிப்பின் காரணமாக ஹஸ்முக் பட்டேலுக்குப் பிறந்த இவ் ஆங்கிலக் கவிதைகள் இவரா என்ற இந்துவரதனுக்கும் உடன்பாடு என்பதால் இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன எனத் தொனிக்கும் குரலோடு சேவற்கொடியோன் கருத்துத் தெரிவித்துள்ளார். இவரா தன்னைத் தன் கவிதைகளின் கடைசிக் காலக்கட்டத்தில் வானம்பாடிக் கூட்டங்களில் ஒருவராக அடையாளம் காட்டிக் கொள்ள நினைத்தாரோ என எண்ணத் தோற்றுவிக்கும் சேவற்கொடியோனின் இக்கருத்து முன்னுரையில் அமைந்துள்ளது. சேவற்கொடியோனுடன் பரிமாறிக் கொண்ட கடிதங்களைப் புடம் போட்டுப் பதிப்பிக்க வேண்டும் என்ற தன் அவாவினை இக்கட்டுரையாசிரியரிடம் இவரா கூறியது இப்போது நினைவுக்கு வருகின்றது. ஏனைய இரு கவிதைத் தொகுப்புகளையும், ஆய்வியல் நிறைஞர் ஏட்டையும்,

நிஜங்களையும் இக்கட்டுரையாசிரியர் புடம் போட்டதுபோல் இக்கடிதங்களுக்கும் அது தேவைப்படும் என்று கருதினார் போலும். அது நிறைவேறாமற் போய்விட்டது.

அடிக்குறிப்புகள்

1. இந்திரபவாநி, வ. சங்க நூல்களில் கிருஷ்ண வழிபாடு, International Printers & Publishers, திருவான்மியூர், சென்னை, 1985.
2. இவரா, மௌனப்பூவின் மகரந்த உச்சரிப்புக்கள், International Printers & Publishers, குற்றாலம், 1982.
3. இவரா, நித்தம் எரியும் துர்க்கைகள், பாரதியார் நூற்றாண்டு வெளியீடு, International Printers & Publishers, குற்றாலம், 1982.
4. இவரா, நிஜங்கள், குற்றாலம், 1984.
5. இந்துவரதன், மன்னியுங்கள், குற்றாலம், 1987.
6. இந்திரபவாநி, தாட்சாயிணி, கவிதா பதிப்பகம், குற்றாலம், 2001.
7. ஆ. தசரதன், தற்காலத் தமிழ்க் கவிதைகள் – ஆய்வு, International Printers & Publishers, குற்றாலம், 1982.

பழமலய்

படைப்பாளி – படைப்புகள் – அறிமுகம்

கவிஞர்களை அறிமுகப்படுத்துவதில் இதழ்களும் இலக்கிய மலர்களும் பெரும்பங்காற்றி வருகின்றன. அவ்வகையில், கதை சொல்லி, ஆரண்யம், கவிதாசரண், நவீன விருட்சம், கோடு, கவிக்கோ, காலக்குறி, கனவு, நடவு, சதங்கை ஆகிய காலாண்டிதழ்களிலும் சங்கு, பயணம், எதிர்வு ஆகிய இருமாத இதழ்களிலும் கணையாழி, மணிமுத்தாறு, சுந்தரசுகன், ஓம்சக்தி, முங்காரி (இருமொழி சமூக இலக்கிய மாத இதழ்) புதிய கோடாங்கி, நிகழ், தமிழர் கண்ணோட்டம், புயல், ஸ்வரம், ழ, விருந்து, வாசல், கவிக்காவிரி, அச்சமில்லை, சிந்தனையாளன், ஒடுக்கப்பட்டோர் குரல், மள்ளர் மலர், தமிழ் அமிழ்தம் ஆகிய மாத இதழ்களிலும் தமிழன் எக்ஸ்பிரஸ், புதிய பார்வை, அரங்கேற்றம் ஆகிய மாதம் இருமுறை வெளிவரும் இதழ்களிலும் தினமணி கதிர், ஆனந்த விகடன், குமுதம் ஆகிய வார இதழ்களிலும் ந. பிச்சமூர்த்தி நினைவாக (தொகுதி-2). கவிதைமாலை, இந்தியா டுடே இலக்கிய ஆய்வு மலர், தினமணி கதிர் கவிதைச் சிறப்பிதழ், 12 நெடுங்கவிதைகள் (சுவடுகள் ஆண்டு வெளியீடு), அகவல் (ஐந்து கவிஞர்களின் இருபது கவிதைகள்) ஆகிய இலக்கிய மலர்களிலும் வெளியாகியுள்ள பழமலயின் கவிதைகள், இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் வரிசையில் அவர் பெயரும் இடம்பெற வழி வகுத்துள்ளன. பிற்காலத்தில், பழமலய் இக்கவிதைகளைத் தொகுத்தும் அவற்றுடன் புதிய கவிதைகள் பலவற்றைச் சேர்த்தும் எட்டுக் கவிதைத் தொகுப்புகளாக வெளியிட்டுள்ளார்.

கவிதைத் தொகுப்புகளின் பின்னிணைப்புகள் மற்றும் 'புதிய புத்தகம் பேசுது' மாத இதழ் ஆகியவற்றின்வழிப் பெறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் கவிஞர் அறிமுகப்பகுதி அமைகிறது.

விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில் பெண்ணாகடம் - மாத்தூர் இரயில் நிலையத்திற்கு மேற்கே சில தொலைவில் உள்ள குழுமூர் எனும் சிற்றூரைச் சேர்ந்தவர் பழமலய் (3/2/1943). உழுதுண்டு வாழும் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி அரசு கலைக்கல்லூரியில் 1966இல் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியமர்ந்தார். அதன் பிறகு மதுரைப் பல்கலைக்கழகத்தில் 'நீரிடங்களும் பெண் தெய்வ வழிபாடும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து ஆய்வியல் நிறைஞர் பட்டம் (1979-1980) பெற்றார். திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி ஆகிய இடங்களில் பணிபுரிந்து, இறுதியாக விழுப்புரத்தில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்து 2001இல் ஓய்வு பெற்றார்.

கல்லூரியில் பயின்ற காலங்களில் கவிமணி நினைவு கவிதைப்போட்டி (1964), அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - சர்வோதய மாணவர் மன்றம் - கவிதைப் போட்டி (1964), அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - தேசிய திட்ட வாரவிழா - கவிசம்மேளனம் (1964), ஆரணியில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் மாநாட்டையொட்டிக் கல்லூரி மாணவர்க்காக நடத்திய கவிதைப்போட்டி (1965), காரைக்குடி திருக்குறட் கழகத்தினர் நிகழ்த்திய கல்லூரிக்கான கவிதைப்போட்டி (1965), காரைக்குடி அழகப்பா கல்லூரிகள் வட்டம் அழகப்பா தமிழ் மன்றம் நடத்திய யாப்புப் போட்டி (1965-1966) ஆகிய போட்டிகளில் பங்குகொண்டு கட்டுரை வழங்கியுள்ளார்.

பேராசிரியரான பின்னர், 1996இல் அகில இந்திய வானொலியின் குடியரசு நாள்விழா - சர்வபாஷா கவி சம்மேளனத்தில், தமிழ்நாடு - புதுச்சேரி மாநிலங்களின் சார்பாகக் கலந்துகொண்டார். அங்கு, இவரது **'குருவி பாடியது'** என்ற கவிதை படிக்கத் தேர்வு செய்யப்பட்டது.

மேலும் இவர் நூல் மதிப்புரையாளராகவும் அறியப் படுகிறார். இவரது நூல்கள் :

1. **அண்ணன் குப்புசாமி இன்னும் ஆழமானவர்** (வாழ்க்கைக் குறிப்புகள்)
2. **துப்பாக்கிக்காரனின் புல்லாங்குழல்** (பாடல்கள் 12),

3. நரபலி; (தெய்வங்கள் திருவிழாக்கள் - கள ஆய்வுகளின் தொகுப்பு (2002))
4. பாம்புகள் - (சிறுகதைகள்)
5. சனங்களின் கதை (1988, 1996),
6. குரோட்டன்களோடு கொஞ்ச நேரம் (1991),
7. இவர்கள் வாழ்ந்தது (1994),
8. இன்றும் என்றும் (1998),
9. முன்நிலவுக் காலம் (1999),
10. புறநகர் வீடு (2000),
11. இரவுகள் அழகு (2001),
12. வேறு ஒரு சூரியன் (2002)

இவரது படைப்புகள் மலையாளம், இந்தி, ஆங்கிலம், ஒரியா ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளன என்பது தெரிய வருகிறது. **இவர்கள் வாழ்ந்தது** என்ற கவிதைத் தொகுப்பு 1997ஆம் ஆண்டிற்குரிய கவிஞர் சிற்பி இலக்கிய விருதைப் பெற்றது. '**இன்றும் என்றும்** என்ற கவிதைத் தொகுப்பு 1998இல் சேலம் கே.ஆர்.ஜி. நாகப்பன் - இராஜம்மாள் அறக்கட்டளை இலக்கியப் பரிசுப்போட்டியில் பகுத்தறிவு நூல் பரிசைப் பெற்றது. 1999இல் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் விழுப்புரம் மாவட்டக் கிளை இவரது தமிழ்ப்பணியைப் பாராட்டி முப்பெரும் விழாவில் இலக்கியச் செம்மல் விருது வழங்கியது.

சனங்களின் கதை கவிதைத் தொகுப்பு கேரளப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றது என்பது முனைவர் கி. நாச்சிமுத்துவின் 8-2-93 தேதியிடப்பட்ட கடிதம் வழித் தெரிய வருகிறது. **குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்** 29-11-93 இல் நடந்த கோழிக்கோடு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பாடத்திட்டக்குழுவில் முதுகலை வகுப்பிற்குப் பாடமாக இடம்பெற்றது என்பதை முனைவர் எஸ். முருகனின் 3-2-93 தேதியிடப்பட்ட கடிதம் வழி அறியமுடிகிறது.

சனங்களின் கதை (1965 - 96 வரை எழுதியவற்றுள் தேர்ந்தவை), **குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்** (1984 - 91

வரை எழுதியவற்றுள் தேர்ந்தவை), **புறநகர் வீடு** (1988 - 97 வரை எழுதியவற்றுள் தேர்ந்தவை), **இரவுகள் அழகு** (1996 - 2001 வரை எழுதியவற்றுள் தேர்ந்தவை), **வேறு ஒரு சூரியன்** (1996 - 2001 வரை எழுதியவற்றுள் தேர்ந்தவை) ஆகிய ஐந்து கவிதைத் தொகுப்புகள்வழி, பழமலயை அறிமுகப்படுத்துவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பழமலய், தன் கவிதைகள் வழி முன் வைத்துள்ள கருத்துகளை,

1. அனுபவம் காரணமாக வெளிப்படுத்தியுள்ள கருத்துகள்
2. சில செய்திகள் ஏற்படுத்திய தாக்கத்தால் வெளிப் படுத்தியுள்ள கருத்துகள்

என இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காணமுடிகிறது.

அனுபவம் காரணமாக வெளிப்படுத்தியுள்ள கருத்துகள்

குழுமூரில் மாணவப் பருவம் தொடங்கி, விழுப்புரத்தில் பேராசிரியராக இருந்ததுவரை, தான் சந்தித்த மனிதர்கள், அவர்தம் பண்புகள், தன்னுடைய அனுபவங்கள், அந்த அனுபவங்கள் வழி வெளிப்பட்ட உணர்வுகள் என அனைத்தையும் தமது கவிதைகள் வழிப் படிப்பவருடன் பகிர்ந்து கொள்கிறார். குறிப்பாக, சனங்களின் கதை கவிதைத் தொகுப்பை இங்குச் சுட்டவேண்டும். இந்தக் கவிதைத் தொகுப்பில் குழுமூரில் தன்னைச் சுற்றி வாழ்ந்த மக்களைப் பதிவு செய்துள்ளார்.

> நான் இங்கே அனுபவங்கள் சிலவற்றையும் ஆள்கள் சிலரையும் வரைந்துள்ளேன். அனுபவங்களைக் கவிதைகளாக உணர்கிற நான், ஆள்களையும் கவிதைகளாகவே உணர்கிறேன். எனக்கு ஆள்களும் அனுபவங்களாகவே உள்ளார்கள்

பெற்றோர், உறவினர், சுற்றத்தார் எனக் குழுமூரில் தன்னைச் சுற்றி வாழ்ந்த மக்களை, அவர்தம் பண்புகளுடன் கூறி, **சனங்களின் கதை** வழி அறிமுகப்படுத்துகிறார். இந்தக் காரணத்தால் **சனங்களின் கதை** ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் வாழ்ந்த குழுமூர் மக்களின் வாழ்வுமுறை பற்றிய ஒரு கள ஆய்வு போல விளங்குகிறது.

வயிற்றுப் பிழைப்பிற்காக, விருப்பமான கிராமத்தையும் வயதான பெற்றோரையும் விட்டுத் தொலைவில் வந்து விட்ட ஏக்கத்தைப் பழமலய், தனது கவிதைகள் பலவற்றில் வெளிப் படுத்தியுள்ளார். பல்வேறு பயண இடர்ப்பாடுகளைக் கடந்து, சோர்வுடன் கிராமத்தை அடையும்போது, பெற்றோர், தங்கள் துன்பம் நீங்கப்பெற்று மகிழ்ச்சியுற்றது கண்டு தன் களைப்பு நீங்கியதை,

விளக்கை எடுத்து வந்து
முகத்தைப் பார்த்தார்கள்.
இருள் கவிந்த முகங்கள்!
விளக்காலும் விலக்கமுடியாத இருள்
வேண்டியவர்களைக் கண்டதும்
விலகி ஓடிவிடுவது எப்படி? (ச.க:ப. 83)

என்று பதிவு செய்துள்ளார். தமது கவிதைகளின் வழித் தன் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோரையும் பழமலய் அறிமுகப்படுத்து கிறார். கவிஞரின் வாழ்வு முறையில் நிறைவு காணமுடியாமல் அவர் மனைவி புலம்பியதை,

இவர்கள் வாழ்ந்தது'ன்னு எழுதியிருக்கிறார்
இவரோட வாழ்ந்தத நான் எழுதணும் (இ.அ: ப. 42)

என்பதன்வழிச் சுட்டியுள்ளார்.

சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பணம் செலுத்திப் படிப்பதற்கு இவர் உடன்படாததால், இவர்மீது பிள்ளைகள் கொண்டிருந்த மனக்கசப்பைக் கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

சரியோ தவறோ
சரி என்று தோன்றிய மாதிரி வளர்த்தார்கள்
இயல்வதோ இயலாததோ
இயல்வது என்று பட்டதைச் செய்தார்கள்.
என்கிற புரிதல் உடையவர்களாய்ப் பிள்ளைகள் இல்லாமை
(இ.அ: ப. 44)

என்ற வரிகள் தன் பிள்ளைகள், தன்னைப் புரிந்து கொள்ள வில்லையே என்ற வருத்தத்தில் வெளிப்பட்டவையாக இருக்கின்றன. பேரப்பிள்ளைகளின் குறும்புகள், விளையாட்டுகள் அனைத்திலும் மனத்தைப் பறிகொடுக்கிறார் கவிஞர்.

பேனாவை, புத்தகத்தைப் பிடுங்குவது
இவை படுத்துபவை ஆகா;
பங்கு பெறுவது! (இ.அ: ப. 49)

என்று குழந்தைகளுடன் கலந்து மகிழ்கிறார்.

சூழலியல்

சூழலியல் சார்ந்த விழிப்புணர்வுச் சிந்தனைகளைப் பழமலய், தன் கவிதைகள் வழி முன்வைத்துள்ளார். செடி, கொடிகள் வளர்ப்பதால் தனிமனிதனுக்கு ஏற்படும் மனநிறைவு தொடங்கிக் காடுகளை உருவாக்குவதால் உலக உயிர்களுக்கு ஏற்படும் நன்மைகள் வரை பலதரப்பட்ட கருத்துகளை அவர் கூறியுள்ளார். செடி வளர்ப்பதில் தனக்கு இருக்கும் ஈடுபாட்டை,

தொட்டிகள் மட்டுமோ தோட்டங்கள் மட்டுமோ
அழகு வளர்க்கப் போதவே போதாது
இதற்குத்
தொங்கும் பூமியும் ஒரு சிறு தொட்டி (கு.கொ.நே: ப.17)

என்று வெளிப்படுத்தியுள்ளார். வீட்டுக் கவலைகள் ஏதுமின்றி இருக்கும் தன் இளைய மகள் குறித்து 'ஏனிந்த வெயிலென்றே அறியாத கொழுந்தாய்' (கு.கொ.நே:ப.13) என உவமை கூறுமிடத்தும் செடிகளோடு தொடர்புடைய உவமைகளைப் பயன்படுத்தி யிருப்பதும் இங்குச் சுட்டத்தக்கது. இன்று காணப்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டில் செடி வளர்த்தல் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது என்பதை,

வறண்ட கிணற்றில்
சிறுவர்களை ஏமாற்றிய ரப்பர் பந்துகள்
மிதக்காமல் கிடக்கும் . . . .
ஆழத்தில் முகந்தேடி ஏமாறும்
வானமும் மேகமும்
அந்தக் கண்ணாடிகள் எங்கே (கு.கொ.நே:ப. 70)

என்று வறண்ட கிணறுகள்வழிச் சுட்டும் கவிஞர்,

குரோட்டன் லிங்கத்திற்கு
வாய்நீர் அபிசேகம் (கு.கொ.நே: ப. 63)

என வீட்டில் பயன்படுத்திய நீரைக் கொண்டே செடி வளர்க்க முடியும் என்று வழியும் கூறுகிறார். வறட்சி நீங்க இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, வளர்ப்பது தீர்வாக அமையும். கவிஞர் இந்தக் கருத்தை நடைமுறையில் செயல்படுத்தியும், தன் கவிதைகள் வாயிலாகவும் மக்களுக்கு எடுத்துரைக்கிறார்.

கார்முகிலுக்கு நான்வீசும்
பச்சைப்பசும் வலைகள் இவை
கரையில் நான் உதறும்
வலைமீன்கள் மழைத்துளிகள் (பு.வீ:ப. 72)

என்ற கவிஞரின் வரிகள் இங்குச் சுட்டத்தக்கன.

தீண்டாமை

மனிதனை மனிதனே வேறுபடுத்திப் பார்க்கும் கொடிய வழக்கமாகிய தீண்டாமை இன்றளவும் தீராத ஒரு சமூகச் சிக்கலாக இருக்கிறது. படிப்பறிவு பெற்றோரிடையும் இந்தக் கொடிய வழக்கம் காணப்படுவது வேதனைக்குரிய ஒன்றாகும்.

தீண்டாமை தன்னைத் தீண்டிய அனுபவத்தை, அந்த அனுபவம் தனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தை விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

எங்கள் ஆசிரியர் ஒருவர் வீட்டில்
இரவு தங்க நேர்ந்தது
உள் திண்ணையில் படுக்கவைத்தார்.
அடுத்த முறை போனபோது பார்த்தேன்:
அந்த இடத்தில் நாய் கட்டப்பட்டிருந்தது.
அன்றைக்குத் தாங்கிக் கொண்ட ஒரு நாற்றமும்
அப்போது நினைவுக்கு வந்தது. (இ.அ: ப. 52–53)

அன்று நானும் சரியாகத் தூங்கவில்லை
அந்த மெத்தைப்படி அடியில்
நாய்க்கும் நல்ல தூக்கம் இருந்திருக்காது.
(இ.அ: ப. 52)

எனத் தொடங்கி, நண்பர் வீட்டிலும் இதே போல் ஏற்பட்ட அனுபவத்தையும் கூறி, இறுதியில்,

நாங்கள் தெரு நாய்களோடு கூடப்
படுத்து உறங்கிவிட முடியும்
வீட்டு நாய்களுக்கு எங்களை
'வில்லன்கள்' ஆக்காதீர்கள்.
நாய்களின் சகவாசமோ இடவாசமோ
நாங்கள் அறியாதவர்கள். பாவம்! (இ.அ: ப. 53)

எனத் தன் உணர்வை, பாதிப்பிற்குள்ளாகும் அனைவரின் உணர்வாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

நகர வாழ்வுமுறை

இயந்திரமயமான இன்றைய சூழ்நிலையில் எதிர்ப்படும் இரண்டு நண்பர்கள் நின்று பேசிக்கொள்வதும் அரிதாகிவிட்டது. நகரத்தின் இத்தகு வாழ்வுமுறையோடு தன்னைப் பொருத்திக் கொள்ள முடியாமல்,

எப்போது நீயும் நானும் எதிர்ப்படுகையில்
நடுத்தெருவில் நின்று பேசிக்கொள்வது?
என்னவோ பேசுகிறார்கள்! என்று
ஒதுங்கிச் சூரியன் மறைவது
'என்னதான் பேசுகிறார்கள்?' என்று
நெருங்கிச் சந்திரன் வருவது (இ.அ: ப. 13)

என்று மாற்றத்திற்கு ஏங்குகிறார். இத்தகு சூழ்நிலையில் எளிதில் உணர்ச்சிவசப்பட்டுக் கோபப்படுபவர்கள் மிகுந்துவிட்டனர். இதன் காரணமாக வாழைப்பழம் வாங்குவது முதல், வண்டியில் ஏறி இறங்குவது வரை அனைத்தும் சிக்கலாகிவிட்டது என்பதைக் குறிப்பிட்டுவிட்டு,

எத்தனை சூழல்களோ
அத்தனை சிக்கல்கள்
எவ்வளவுக்கு ஆள்களோ
அவ்வளவுக்கும் படிப்பினைகள்
இந்தப் பிறவியில்
எந்தக் காலம் தேறுவது? (இ.அ: ப. 51)

என்று தன் ஏக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் பழமலய். கவிஞரின் இத்தகு அனுபவங்கள், கிராமத்தில் வாழ்ந்தவர்கள்

நகரத்து நாகரிகத்தோடு பொருந்த இயலாமல் தவிக்கும் தவிப்பை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன. மேலும் தான் வீடு கட்டிய அனுபவம்; தம்பி மகன் மறைவு, பாட்டியின் மறைவு; ஆகியவை தனக்குள் ஏற்படுத்திய அதிர்ச்சி ஆகியவற்றையும் பதிவு செய்துள்ளார்.

சில தாக்கத்தால் வெளிப்பட்டுள்ள கருத்துகள்

சில பத்திரிகைச் செய்திகள், செவிவழிச் செய்திகள் தனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தையும், அவை குறித்த தன் கருத்துகளையும் கவிஞர் தனது கவிதைகள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல்

ஏழை மக்களின் நலனுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய அரசியல்வாதிகளே, அவர்களுக்குச் சேரவேண்டிய நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டு ஏமாற்றிய செய்தி கண்டு தனக்கு ஏற்பட்ட மனவருத்தத்தை

> **வாக்காளர்களுக்கு ஏன் வீட்டு மனைகள்?**
> **ஏன் வீடுகள்?**
> **இருக்க வேண்டியது எல்லாம்–**
> **ஒரு வாக்கு!**
> **உள்ள வாக்கோ! கள்ள வாக்கோ!! (பு.வீ:ப.47)**

என்று வெளிப்படுத்தியுள்ளார்.

போர்

போர் காரணமாக விளையும் தீமைகள் அக்கால மக்களை மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரையும் பாதிக்கக் கூடியவை என்பதற்கு ஜப்பானின் நகரங்கள் இன்றும் சான்றாக இருக்கின்றன. இத்தகு நிகழ்வுகள் குறித்த செய்திகள் பழமலய்க்குக் கவிதைகள் தோன்றக் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. போர் காரணமாக வீடு, உடமைகள் ஆகியவற்றை இழந்து தவிக்கும் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களை எண்ணி, தான் அடைந்த துயரை,

> **பெரியவர்கள் நிலம் நீச்சை இழந்து–**
> **பிள்ளைகள் வீடு விளையாட்டை இழந்து–**

யாவரும் நிகழ்காலம் இழந்து—
வீட்டு முன்னால் தென்னங்கன்றுகள்
கீற்றுக் கண்களில்
ஆற்றாமை வடிக்கின்றன.
எம் மக்கள் அங்கே
மண்ணில் கிடந்து அடைமழையில்,
மண்ணாங்கட்டியாய்க் கரைகிறார்கள்
ஓர் அனுதாபமாய் இங்கு விழுப்புரத்தில்
மரங்களும் நனைகின்றன.
மட்டைகளும் நனைகின்றன. (பு.வீ: ப. 64)

என இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். ஈராக் போர் ஏற்படுத்திய சேதங்களைச் சுட்டி, அழிவை ஏற்படுத்தும் போர்கள் புரிவதை ஒழித்து, மனிதநலம் பேணுதற்குரிய வழிமுறைகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற கருத்தைப் பின்வரும் கவிதை வரிகளில் சுட்டியுள்ளார்.

போர் வளர்க்கும் மக்கள்
காடு வளர்க்கட்டும்
காடு வளர்ப்பது
புதிய நாகரிகம் வளர்ப்பதாய் இருக்கும்
(கு.கொ.நே: ப. 55)

பிறசெய்திகள்

போபால் விஷவாயுக்கசிவு, அதன் விளைவுகள் குறித்த செய்தி தனக்குள் ஏற்படுத்திய அதிர்ச்சியைச் செடிகளிடம் பகிர்ந்து கொண்டு ஆறுதல் தேடுகிறார்.

போபால் விபத்தால்
நாளைக்கு ஒருவர் செத்து வருகிறார்
பார்வை மங்கி இருண்டு வருகிறது
பார்வையும் காட்சியும் இல்லாததாக
நேர்வதை நினைத்து நினைத்துக்
கட்டிப் பிடித்து இலைகள் கோதுகிறேன்
மீட்கச் சொல்கின்றன முதலில்
மனிதர்களிடமிருந்து மனிதர்களை
(கு.கொ.நே:ப. 49)

இப்போது சாலைகள் உள்ள அவல நிலை மற்றும் பெருகி வரும் வாகனங்களின் பெருக்கம், அவை மக்களுக்கு அளிக்கும் இன்னல்கள் ஆகியவை குறித்த கருத்துகளையும் கவிஞர் தன் கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

புகை, புழுதி கூடப் பரவாயில்லை
தேங்கிய மழை, சாக்கடை நீர்—
ஓட்டுநர், உரிமையாளர்கள் கவனிக்க வேண்டும்;
ஒலிப்பண்டிகை ஒரு நாள்தான்! (இ.அ:ப. 9)

என இந்த மழைக்காலச் சிக்கலை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார். மேலும் தஞ்சை மாவட்ட வறட்சி, மணிலா - பிலிப்பைன்ஸ் சூறாவளி, குடிசைகளில் ஏற்பட்ட தீ விபத்து, வீட்டுக்கடன், வாஸ்து குறித்த விளம்பரங்கள், பாம்புகளுடன் இருந்து கின்னஸ் சாதனை ஆகிய செய்திகள் குறித்தும் தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

கவிஞரின் தனிச்சிறப்புகள்

குழுமூர் மக்களின் வாழ்வுமுறை குறித்த கவிதைகளில், அந்த ஊர் மக்களின் பேச்சுத் தமிழையே பயன்படுத்தியுள்ளார். **தொட்டுத் தடவ எண்ணெ இருக்காது. சுட்டுத்தாடி பணியாரம்** (ச.க: ப. 11), **மாவுக்கேத்த பணியாரம்** (கு.கொ. நே:ப. 14) போன்ற மக்களிடையே வழங்கும் பழமொழிகளையும் தன் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார். ஊரில் நடக்கும் தெருக்கூத்து பற்றிக் கூறும்போது, அதில் இடம்பெறும் பாடலடிகளை மேற்கோளாகச் சுட்டியுள்ளார்.

புடலங்காய் என்று சொன்னாய் பாதகனே தொண்டா!
பூணும் பாம்பு அல்லோ பாதகனே தொண்டா! (ச.க.ப. 64)

என்ற பாடல் சிறுதொண்டர் தெருக்கூத்தில் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஊரில் வயதானவர்கள் ஒப்பாரியிட்டுப் பாடுவதையும் சுட்டியுள்ளார்.

கல்லெடுத்துச் சாந்தரச்சிக்
காலல்லாம் புண்ணாவக்
கட்டிவச்ச கோட்டயிலே
கண்ணயரத் திண்ண இல்ல!

வித்துமாறிப் போனானே!
வீதியில உட்டானே!
அய்யா, நீ போவயில
அழயாமல் போனீயே! *(ச.க:ப. 31-32)*

என்று தன் அம்மா - ஆயியின் ஒப்பாரியைப் பதிவு செய்துள்ளமை இங்குச் சுட்டத்தக்கது. பழமலயில் சங்கப் பாடல்களின் தாக்கத்தைக் காணமுடிகிறது. நட்புப் பற்றிக் கூறுமிடத்துப் பிசிராந்தையாரையும், காடு பற்றிக் குறிப்பிடு மிடத்துக் கபிலரையும் சுட்டியுள்ளார். கவிதை ஒன்றிற்கு "காக்கை பாடினி" (வே.ஒ.சூ:ப.22) என்று பெயரிட்டிருப்பதும் "அறுகால் சிறுபறவை" (கு.கொ.நே. ப. 47) என்ற தொடரின் பயன்பாடும் இத்தாக்கத்தின் வெளிப்பாடாக இருக்கின்றன. புளியமரம் குறித்துக் கூறுமிடத்து,

விளையாடும் சிறுமியர்க்குக்
கிளைகள் தாழ்ந்து பிஞ்சு தரும் *(ச.க: ப. 61)*

என்ற இவரது கவிதை வரிகள்,

பாடல்சால் சிறப்பிற் சினையவுஞ் சுனையவும்
நாடினர் கொளல்வேண்டா நயந்துதாங் கொடுப்பபோல்
தோடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெற *(கலி. 28:1-4)*

என்ற பாலைக்கலிப் பகுதிக்கு இணையாகக் காணப்படுவதும் இங்குக் கருதத்தக்கது.

பழமலய், தன் நன்றியுணர்வை, தனது பல கவிதைகளில் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தியுள்ளார். வீடு கட்டிய போது உதவிபுரிந்தவர்களுக்கு நன்றி கூறுமுகமாகப் புறநகர் வீடு கவிதைத்தொகுப்பில் **வினைத்துணை** என்ற கவிதையை இயற்றி யுள்ளார். அந்தக் கவிதைத் தொகுப்பில் அடுத்தவர் நிழல் என்ற கவிதையில் ஸ்ரீநகரில் தான் கண்டுகளித்த காட்சிகளை விவரித்த பிறகு அடைப்புக் குறிக்குள், தன்னை ஸ்ரீநகருக்கு அழைத்துச் சென்றவருக்கு நன்றி கூறியுள்ளார். இதே முறையில் தனக்குப் பலவகை விதைகளையும் செடிகளையும் அளித்தவர்களுக்கும் நன்றி கூறியுள்ளார்.

கவிதைத் தொகுப்புகளின் தனிச்சிறப்புகள்

பழமலய், தன் கவிதைத் தொகுப்புகளில் பின்னிணைப்பாக இணைத்துள்ள செய்திகள் அவரைக் குறித்தும் அவரது கவிதைகள் குறித்தும் முழுமையாக அறிந்துகொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் இருக்கின்றன. படைப்புகள் உருவான நாட்கள், இடம், சொற்பொருள் விளக்கம், செய்தி இடம் பெற்றுள்ள செய்தித்தாள், செய்தி விளக்கங்கள், கருத்தோடு தொடர்புடைய குறள் ஆகிய அனைத்தையும் பின்னிணைப்பில் கூறியுள்ளார். இவை தவிர்த்து, அவரது பிற படைப்புகள், வாழ்க்கை வரலாறு, மறுபதிப்பாயின் முதற்பதிப்பின் பதிப்புரை, கவிதை இயற்றப்பட்ட தேதி, கவிதைகளைப் பிரசுரித்த இதழ்கள், கவிதைத் தொகுப்புகளுக்கு வந்த மதிப்புரைகள், மடல்கள் ஆகியவற்றையும் இணைத்துள்ளார்.

குரோட்டன்களோடு கொஞ்ச நேரம் கவிதைத் தொகுப்பை அமெரிக்க நீக்ரோ பாடகர் ஸ்டீவி வொன்டருக்குச் (பார்வையற்றவர்) சிறப்புச் செய்யும் வகையில் வெளியிட்டுள்ளார். இந்த நூலின் பின்னிணைப்பில் அந்தப் பாடகர் குறித்த செய்தி களையும், அவர் பாடியுள்ள தாவரங்களின் இரகசிய வாழ்க்கையின் ஊடான பயணம் என்ற பாடலை மொழிபெயர்த்தும் இணைத்துள்ளார். இத்தகு இணைப்புகள் கவிதைகளைப் படிப்பவர்களுக்கு மட்டுமன்றி ஆய்வு மேற்கொள்ள இருப்போருக்கும் பயன்படும் வகையில் இருக்கின்றன.

நிறைவுரை

தனது சுற்றம் தொடங்கி, மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சிக்கல்கள் வரை இவர் பதிவு செய்துள்ளமையால், இவரது கவிதைத் தொகுப்புகளை வாசிக்கும்போது, இவரது நாட்குறிப்பை வாசிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. **சனங்களின் கதை, வேறு ஒரு சூரியன்** ஆகிய கவிதைத் தொகுப்புகள் குழுமூர் மக்களின் பண்பாட்டை அறிய உதவும் தரவுகளாகவும் இருக்கின்றன. இவர் தன் கவிதைகள் வழி முன் வைத்துள்ள சமூகச் சிக்கல்களும், கருத்துகளும் படிப்பவரையும் அந்தச் சிக்கல்கள் குறித்து சிந்திக்க வைப்பதாக இருக்கின்றன.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ச.க.	- சனங்களின் கதை
கு.கொ.நே.	- குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்
பு.வீ.	- புறநகர் வீடு
இ.அ.	- இரவுகள் அழகு
வே.ஒ.சூ.	- வேறு ஒரு சூரியன்

முதன்மை நூல்கள்

1. **இரவுகள் அழகு,** பழமலய், த., பெருமிதம் வெளியீடு, விழுப்புரம், 2001.
2. **குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்,** பழமலய், த., ரிஷபம் பதிப்பகம், சென்னை - 8, இ.ப. 2001.
3. **சனங்களின் கதை,** பழமலய், த., தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை - 8, இ.ப. 1996.
4. **புறநகர் வீடு,** பழமலய், த., பெருமிதம் வெளியீடு, விழுப்புரம், 2001.
5. **வேறு ஒரு சூரியன்,** பழமலய், த., பெருமிதம் வெளியீடு, விழுப்புரம், 2002.

ஆ. கோவிந்தராசலு

பிறப்பும் சிறப்பும்

கவிஞர் ஆ. கோவிந்தராசலு 10-3-1945ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையின் பெயர் ஆளவந்தார். தாய் குமுதவல்லி. இவர் எம்.ஏ., பி.எட். பட்டம் பெற்று, புதுவையைச் சேர்ந்த சேலியமேடு என்னும் ஊரிலுள்ள கவிஞரேறு வாணிதாசனார் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். சமுதாய அறிவியல், இயற்கை அறிவியல், வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 14 குழந்தை இலக்கிய நூல்களை வழங்கியுள்ளார். குழந்தைகளுக்கான அறிவியல் இதழான 'துளிர்' இதழ் நிறுவனர்களில் இவரும் ஒருவர். 'துளிர்' ஆசிரியர் குழுவில் (1987-91) இடம்பெற்று வந்துள்ளார். புதுவைக் குழந்தை எழுத்தாளர் சங்க உறுப்பினராகவும் உள்ளார்.

புதுவை அறிவியல் இயக்கத்தில் பங்கேற்பதில் இவர் ஈடுபாடு காட்டியுள்ளார். 1991ஆம் ஆண்டு உலக அளவில் சிறந்த எழுத்தறிவுப் பணிக்காக **'யுனெஸ்கோ'** அமைப்பின் மிக உயர்ந்த **'கிங்செஜாங்'** விருது வென்ற புதுவை அறிவொளி இயக்க அமைப்பாளர்களுள் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார். இவரின் முதல் படைப்பான **அறிவியற் பூக்கள்** சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் முதல் பரிசாகிய ஏ.வி.எம். தங்கப்பதக்கம் பெற்றுள்ளது. இவருடைய படைப்புகள் **குயில், செம்மலர், துளிர், வண்ணக்கதிர்** ஆகிய ஏடுகளில் இடம் பெற்றுள்ளன. இவருடைய எழுத்துகள் குழந்தைகளுக்கு அறிவியல் மற்றும் அறிவியல் கண்ணோட்டமிக்க சமுதாயவியல் கருத்துகளைக் கூறுதல் என்பதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. **தடுக்கும் வழி அறிவியல்**[1] என அறிவியலின் நன்மை குறித்து வெகு எளிமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

அய்ம்பொறி கொண்டே
அறிந்திடும் அறிவே
அறிவினுள் அறிவாகும் – மீதி
அழிந்திடும் அறிவாகும்

எதையும் எங்கும்
என்ன எப்படி
என்றே ஆராய்வோம் – அது
ஒன்றே அறிவியலாம்[2]

அறிவு என்பது என்ன? அறிவியல் என்பது என்ன? என்பதை 'அறிவியல் தேர்ச்சிகொள்' எனும் கவிதையில் சுருக்கமாக வழங்குகிறார். வானம், கடல், இடி, மின்னல், கோள்கள் மற்றும் உலகில் உள்ள பல பொருள்களின் இயல்பை அறியும் சிந்தனை வேண்டும் என இக் கவிதையில் குறிப்பிடுகிறார். இத்தொகுப்பில் அறிவியல், அறிவியல் தேர்ச்சி கொள், வண்ணம் யாது?, காற்று, உழைப்பும் உறுப்பும், அணு, எல்லாம் அணுவே, மின்விசை, அணுவிசை, மின்விளக்கு, தொலைக்காட்சி, நாமும் இறைவனும், டார்வினிசம், இராமன் விளைவு, நாமே சென்று உலா வருவோம், வைரஸ், கல்வி, மழை, அறிவியல் அதிசயம், கோள்களுக்குப் போகலாம், பூக்கள், லூயி பாஸ்டர், கணிதமேதை, ஒபாரின், நோபல் பரிசு ஆகிய 25 அறிவியல் கவிதைகளை ஆசிரியர் ஆ.கோவிந்தராசலு வழங்கியுள்ளார்.

'அணு' என்பது மிகமிகச் சிறிய பகுதி. எனினும் அதன் ஆற்றலைச் சிறுவர்கள் அறியும் வகையில் அதன் பலவிதத் தன்மைகளை ஒரே கவிதையில் வடித்துள்ளார்.

மணலை விடவும் பலகோடி
மடங்கு சிறியது அணுவாகும்
ஊசி முனையின் சதகோடி
உருவம் சிறுத்தது அணுவாகும்!

புரோட்டான் நியூட்ரான் இவ்விரண்டும்
அணுவின் உட்கரு கொண்டனவாம்
அதனை ஏதும் அணுகாமல்
சுற்றி வருவது எலக்ட்ரானாம்!

ஒருவகை அணுக்கள் பலகோடி
ஒன்றாய்ச் சேர்ந்தது பொருளாகும்!
உலகில் உள்ள பொருளெல்லாம்
அணுக்கள் சேர்ந்தே ஆனவையாம்!

பொருளைப் பகுத்துப் பிரிக்கையிலே
மிகமிகச் சிறியது அணுவாகும்
உருவில் அணுவாய் இருந்தாலும்
அணுவிசை மிகவும் பெரிதாகும்!

பொருள்கள் அணுவால் ஆனதெனப்
பகுத்தவர் 'டால்டான்' என்பவராம்
பிரித்தால் அணுதரும் பேராற்றல்
பெரிதினும் பெரிதாம் பாரீரோ![3]

என அணுவைப் பற்றிய கவிதை அமைகிறது. சிறுவர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக எளிய நடையில் அரிய செய்திகளைக் கவிஞர் வழங்கியுள்ளார்.இதைப்போன்றே இவரின் குறிப்பிடத்தக்க மற்றொரு அறிவியல் கவிதைப் படைப்பு **வைரக்கற்கள்.**

வைரக்கற்கள்

வைரக்கற்கள் எனும் தலைப்பில் 27 அறிவியல் கவிதைகளை ஆ. கோவிந்தராசலு வழங்கியுள்ளார். இவை யாவும் புதிர் கவிதைகளாக அமைந்துள்ளன. தொடக்கத்தில் விஞ்ஞானியின் பெயரைக் கூறாமல் அவருடைய வாழ்க்கை, கண்டுபிடிப்பு ஆகியவற்றைக் கூறி இறுதியில் அந்த அறிவியல் அறிஞர் யார்? எனக் கேட்டு முடிப்பதை ஒரு முறையாகக் கொண்டுள்ளார். இதே போன்று பொருட்கள், கண்டுபிடிப்புகள் குறித்துக் கூறி, அதன் பெயரென்ன?, அதைக் கண்டவர் பெயரைச் சொல்லிடுவீர் எனச் சிறுவர்களுக்கு வினாக்கள் மூலம் சிந்திக்கத் தூண்டுகிறார். அறிவியல் என்பது உண்மை. கற்பனையல்ல. கவிதை கற்பனையில் முகிழ்ப்பது. ஆனால், அறிவியலைச் சொல்லும் இக்கவிதைகள் கற்பனை கலவாத உண்மைக் கருத்துகளில் உருவாகியவையாக அமைந்துள்ளன; இந் நூலாசிரியருக்கு இந்த உத்தி கைவந்த கலையாக அமைந்துள்ளது. சான்று:

(எ.டு.) தொழிலில் புரட்சி முதன்முதலில் – நனி
தொடங்கிய மேற்குக் கண்டத்தில்
அழகிய நல்ல போலந்தில் – உயர்
அணங்காய்த் தோன்றிய அறிஞர் யார்?

அறிவியல் அறிஞர் அவர் தந்தை – ஓர்
ஆசிரியை தான் அவர் அன்னை
அறிவியல் அன்பாய்க் கற்பித்த – அவர்
அன்னையை இளமையில் இழந்திட்டார்

குடும்பம் வறுமை ஆனதனால் – பல்
கூலி வேலை செய்திட்டார்
இடுக்கண் நிறைந்த அப்போதும் – நள்
இரவில் கற்றே பெயர் பெற்றார்;

பணியால் பெற்ற பணத்தாலே – நாம்
பார்க்கத் தக்க பாரீசில்
பருவியல் வேதியல் பாடத்தில் – நல்
சிறப்புப் பட்டம் பெற்றிட்டார்;

உலகம் போற்றும் ரேடியத்தை – இவ்
உலகம் உய்யக் கண்டவர் யார்?
உயர்ந்த நோபல் பரிசினையே – தம்
உடைமை கொண்டார் பெயர் சொல்வீர்![4]

எனும் கவிதையை வழங்கிய கவிஞர் இதன் விடை 'மேடம் கியூரி' என்பதை நூலின் இறுதிப் பக்கத்தில் வழங்கி, சிறுவர்கள் பார்த்து அறிந்து கொள்ளும்படிச் செய்துள்ளார். இதைப் போன்று எலெக்ட்ரான் அலையின் தன்மையைக் கண்டறிந்து நோபல் பரிசு பெற்ற லூயிஸ் டீ ஃபூரோக்லி, வடிவியல் கணிதம் வழங்கிய பெலிக்ஸ் க்ளைன் (Felix Klein), மின்திறனை அறியும் மேஸர் (Maser) எனும் கருவியைக் கண்டறிந்த சார்லஸ் H டவுன்ஸ் (Charles H Towns), முதன்முதலில் ஏவுகணை செய்து வானில் செலுத்திய S.P. கார்லோவ் (Sergey Pavlovich Korolov), எஃகு இரும்பைக் கண்டுபிடித்த ஹார்வே பிரேர்லி, அணுவியல் அறிஞர் மென்டலீவ் (Dmitry Mendeleiv), புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிந்த சர் ஐசக் நியூட்டன் மின் ஆற்றலைக் கண்டுபிடித்த மைக்கேல் ஃபாரடே, ஆகாய விமானத்தை கண்டுபிடித்த ரைட்

சகோதரர்கள், மின் விசை, வேதியியல், உலோகவியல் ஆகிய பல துறைகளில் சாதனை நிகழ்த்திய ஹென்றி கேவன்டிஷ் (Henry Cavendish), அணுவின் அமைப்பு, தன்மைகளைக் கண்டறிந்த 'கனடா', மரபியல் அறிஞர் 'H.G. கொரனா' வானியல் அறிஞர் ஆரியபட்டா (Aryabhatta), அமெரிக்கத் தீவைக் கண்டறிந்த மாலுமி கொலம்பஸ், தாவரவியல் ஆய்வறிஞர் ஜே.சி. போஸ் ஆகிய விஞ்ஞானிகளைப் பற்றி ஆ. கோவிந்தராசலு கவிதையில் வழங்கியுள்ளார். இக்கவிதைகளில் இடம்பெறும் அறிவியல் கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்து கவிதையில் இடம்பெறச் செய்துள்ளார்.

இயங்கிக் கொண்டே இருக்கும் பொருளின்
இயங்கு தூரம் அளக்கின்ற
ஒரு 'தொகை கணிதம்'* என்பதைக் கண்ட
ஒப்பில்லாத அறிஞர் யார்?

இயங்கிக் கொண்டே இருக்கும் பொருளின்
இயங்கு வேகம் அளக்கின்ற
ஒரு 'வகை கணிதம்'** என்பதைக் கண்ட
இங்கிலாந்தின் அறிஞர் யார்?[5]

எனும் இக் கவிதையில் *Integral Calculus, **Differential Calculus (தொகை கணிதம், வகை கணிதம்) எனும் கணிதவியல் கலைச் சொற்களைத் தமிழில் வழங்குவதுடன் ஐசக் நியூட்டனையும், அவருடைய கண்டுபிடிப்பையும் எளிமையான நடையில் பொதித்துள்ளார். இதுபோன்று பல அறிவியல் அறிஞர்களை அறிமுகப்படுத்துவதில் மிகுந்த முனைப்புக் காட்டியுள்ளார். அறிவியல் கருத்துகளை எளிமையாக்குவதில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். அறிவியலைக் கற்றுக் கொடுப்பதுடன் அறிவியல் உணர்வை ஊட்டி வளர்க்க வேண்டும் என்பதும் இக்கவிதைகளின் நோக்கமாக உள்ளது.

தேன் அருவி

கவிஞர் ஆ. கோவிந்தராசலுவின் மற்றொரு படைப்பான தேன் அருவி எனும் தொகுதியில் 49 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவை யாவும் சிறுவர்களுக்குப் பொதுஅறிவை ஊட்டக் கூடியவையாகும். கவிஞர் குழந்தைகளிடம் பேசுவதைப்

போல 'என்னுரை' எனும் தலைப்பிட்டு இத்தொகுப்பினை வழங்கியுள்ளார். நான் உங்களுக்காகவே எழுதும் 14வது நூல். எனக்கு நீங்கள்தான் நேசமான வாசகர்கள். நீங்கள் பிறக்கும்போது எவ்வளவு வெள்ளை உள்ளம்! உயர் பண்பு. ஆனால் சூழ்நிலை மிகுந்த மாசு உடையதாக உள்ளது. அது உங்களை மாசுபடுத்து கிறது. முக்கியமாகத் தொலைக்காட்சி மாசு அதிகம்; மாசுடை நூல்களும், இதழ்களும் மிகுதி. உங்களுக்கான படங்கள், நூல்கள் மிக மிகக் குறைவு. 'பள்ளிப் பாடம் மட்டும் படி' என அனைவரும் கட்டாயப்படுத்துகின்றனர். அந்தப் பாடங்களும் மகிழ்ச்சி அளிப்பதாய் இல்லை; பெரும் சுமையாகவும் உள்ளது. நீங்கள் மகிழ்ச்சியாகக் கற்க வேண்டும்; உங்கள் உள்ளம் மேலும் மேலும் உயர்வடைய வேண்டும்; ஒருமைப்பாடும் உயரவேண்டும். நீங்கள் படிக்க ஏற்றதாய், அருமையாய், இனிமையாய், எளிமையாய், எழுதி இருக்கிறேன்[6] எனக் குழந்தைகளின் உளவியலை அறிந்து அதற்கு ஏற்றாற்போல இத்தொகுப்பை அமைத்துள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

இதில் புத்தாண்டு, பாரதியார் நினைவு நாள் (செப்.11.1921), சுதந்திரநாள் (ஆக. 15), ஆசிரியர் நாள் (செப். 5), மகளிர் தினம் (மார்ச். 8), உலக முதியோர் நாள் (அக். 1), பொங்கல் (தை), உலக சேமிப்பு நாள் (அக். 30), நபிகள் பிறந்த நாள் (மொகரம்), உலக நுகர்வோர் நாள் (மார்ச். 15), உலக நீர் நாள் (மார்ச் 22), உலக இயற்கை இன்னல் குறைப்பு நாள் (அக். இர.புதன்), தீயணைப்பு நாள் (ஏப்ரல் 14-20), குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாள் (ஏப். 30), கார்கில் தியாகிகள் நாள் (ஜூலை 26-1999), உலகப் புத்தக நாள் (ஏப். 28), உடல் ஊனமுற்றோர் நல நாள் (அக். 15) ஆகிய நாட்களுக்குரிய செய்திகளைக் கவிதைகளாகச் சிறுவர்கள் எளிமையாக அறியும்படியாக அமைத்து வழங்கியுள்ளார். இத்துடன் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், தோழர் சிங்காரவேலர், புதுமைப்பித்தன், கோவிந்தம்மாள், லியோ டால்ஸ்டாய், ஜோஸ் செரமாகோ, ஜோசப் விசரியானவிச் ஐவன் - ஸ்டாலின் ஆகியோரைப் பற்றிய கவிதைகளையும் இதில் இடம்பெறச் செய்துள்ளார். சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் எளிமை யாகப் படித்து அறிய வேண்டிய செய்திகளை உடையனவாக இக்கவிதைகள் திகழுகின்றன.

எல்லாம் படிக்கணும், அரசு பள்ளி, ஒன்று சேர்ந்தால், சிறுவர் நாங்கள், எழுது, விளையாடு, உயர்வே பெறுவார், தண்ணீர், உலகம் வாழ, நாமும் நன்மை செய்குவோம், மாற்றிடுவோம், ஒருமைப்பாடு, பொய்க்கால் குதிரை, பல்துலக்கு, வானவில், நல்ல நூலே, சுற்றுச்சூழல் காப்போம், சிக்கனம், நீர் மூழ்கி, ஐக்கிய நாடுகள், போன்ற பல்வேறு செய்திகள் அடங்கிய கவிதைகளை இத்தொகுதியில் வழங்கியுள்ளார். இதில் சிறுவர்கள் தங்கள் மனநிலையைத் தாங்களே கூறுவது போல, 'சிறுவர்கள் நாங்கள்' எனும் கவிதையில் அமைத்துள்ளது சிறப்புக்குரியது

கட்டுக் கட்டாய்ப் புத்தகம்
காலம் முதலாய்த் தூக்கியே
கூனல் ஆகிப் போனதே
கொஞ்சம் இரக்கம் இல்லையா!

தாயின் மொழியும் மறந்ததே
தமிழும் மறந்து போனதே
தூய மொழியும் மறந்ததே
தூர மொழியும் உதைத்ததே!

கணக்குப் பாடம் ஓரடி
அறிவியல் படம் ஈரடி
சமூகப் பாடம் மூவடி
எல்லாம் சேர்ந்து பேரிடி!

ஆட நேரம் இல்லையே
அசைய நேரம் இல்லையே
ஓட நேரம் இல்லையே
ஓய்வு சிறிதும் இல்லையே!

எனக்குப் படிக்க ஆசைதான்
எளிமையாக வேணுந்தான்
இனிக்கும் பாடம் ஆசைதான்
இயற்ற வேண்டும் நீங்கள்தான்!

செய்து கற்க வேண்டுமே
சேர்ந்து கற்க வேண்டுமே
சிரித்துக் கற்க வேண்டுமே
சிறுவர் நாங்கள் இல்லையா!![7]

எனச் சிறுவர்களின் நிலையை, அவர்களின் துன்பத்தை எடுத்துக்காட்டியுள்ளார் கவிஞர். கல்வி ஒரு சுமை; அவர்கள் விரும்பாத கல்வி அவர்கள் மீது திணிக்கப்படுகிறது, தாய்மொழிப் பற்று அழிந்து வருகிறது; அவர்களின் விளையாட்டு உணர்வு, உரிமையாவும் பறிக்கப்பட்டுவிட்டது, ஒட்டு மொத்தமாக அவர்களின் 'குழந்தை உள்ளம்' களவாடப்பட்டுவிட்டது என்ற பொருள் இந்தக் கவிதைக்குள் உள்ளடக்கமாக அமைந்துள்ளது. இது பெரியவர்கள் படித்தறிய வேண்டிய கவிதையாகவும் அமைந்துள்ளது. இக்கவிதையில் **'செய்து கற்க வேண்டும்'** 'Practical Education' எனும் தொழில் பயிற்சிக் கல்வி முறை சிறுவர் களுக்குப் பயனளிக்கும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். வாழ்வியலுக்குத் தேவையான கல்வி அவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்ற கருத்தை மேலோங்கிச் சொல்கிறது இக்கவிதை. அறிவியலையும், சமூகவியலையும் இணைத்துக் காட்டியுள்ள கவிதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

அருமை யான தண்ணீர் – வீண்
ஆகிப் போனால் கண்ணீர்
ஒரு துளி நீரும் கூட – வீண்
ஆவதைத் தடுப்போம் மண்ணில்[8]

புகையிலா ஆலை படைத்துப்
புதுபுது பொருட்கள் செய்வோம் – மக்கள்
புகைக்கா திருக்க செய்வோம்
புகையிலா வாழ்க்கை வாழ
பொதுமைப் பாடம் பயில்வோம்
புதுமைக் கல்விப் பயில்வோம்[9]

'தீயணைப்பு நாள் – ஏப். 14' எனும் தலைப்பில் கோடைகாலத்தில் எளிதில் தீ விபத்து ஏற்படும் என்பதால் தீயைக் கவனமாகக் கையாள வேண்டும் என்று அறிவுறுத்தும் கவிதையை வழங்கியுள்ளார்.

சிறுபொறி தீப்பொறி பெரும்பொறி தீப்பொறி
சாம்பல் ஆக்கும் காலம் – நம்மை
சாம்பல் ஆக்கும் காலம்

சிறுபொறி தீப்பொறி சிந்தி விடாமல்
சிறுபொறி காக்க வேண்டும் – நாமும்
சிறுபொறி காக்க வேண்டும்.

தீப்பொறி நம்வசம் கையில் இருந்தால்
தீமை தடுக்க முடியும் – தரையில்
தீமை தடுக்க முடியும்

தீப்பொறி நம்வசம் தப்பிப் போனால்
தீமை யாக முடியும்
தீமை யாக முடியும்![10]

சிறுவர் இலக்கிய வாசிப்பு இனிய அனுபவமாக, புத்துணர்ச்சி மிக்கதாக, அறிவார்ந்த செயலாக அமைவதற்கான கூறுகளைக் கவிஞர் கோவிந்தராசலு நன்கு அறிந்திருப்பதால் இவருடைய படைப்புகள் அதற்குரிய குணநலன்களுடன் வெளிவந்துள்ளன. அத்தகையதொரு மற்றொரு படைப்பு **மழலை மணம்** எனும் பாடல் தொகுதியாகும்.

மழலை மணம்

இத்தொகுப்பில் 50 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவை பொதுஅறிவைத் தரும் செய்திகளைத் தாங்கியுள்ளன. மழலையர் எளிதாகப் பாடி மகிழும் வகையில் அமைந்துள்ளது இதன் மற்றொரு சிறப்பாகும்.

அறிவு கூட்ட வேண்டும்
ஆசை கழிக்க வேண்டும்
இன்பம் கூட்ட வேண்டும்
ஈனம் கழிக்க வேண்டும்
உண்மை கூட்ட வேண்டும்
ஊனைக் கழிக்க வேண்டும்
எழுத்தைக் கூட்ட வேண்டும்
ஏக்கம் கழிக்க வேண்டும்
ஐயம் கூட்ட வேண்டும்
ஒப்பனைக் கழிக்க வேண்டும்
ஓதல் கூட்ட வேண்டும்
ஔடதம் கழிக்க வேண்டும்;
இப்படி இனிதாய் வாழ வேண்டும்[11]

எனக் 'கூட்டல் கழித்தல்' எனும் கவிதையில் மழலையர், உயிரெழுத்துகளை அறியும்பொழுதே வாழ்க்கையில் கூட்டல் கழித்தலுடன் எவ்வாறு வாழவேண்டும் என்ற ஒரு கணித

முறையையும் இதில் அறிமுகப்படுத்துகிறார். மழலையர் என்றாலும் அவர்களுக்கும் அறிவியலை இனிமையாகப் புகட்டுகிறார் கவிஞர்.

> தாயைச் சுற்றும் பிள்ளைகள் போல்
> கோள்கள் சுற்றும் சூரியனை;
>
> செவ்வாய், பூமி, வெள்ளி, புதன்
> நெப்டியூன், புளூட்டோ சிறியவையாம்;
>
> புதன்கோள் அருகில் சுற்றுவதாம்
> புளூட்டோ தொலைவில் சுற்றுவதாம்
>
> புதனே மிகவும் சிறியதுவாம்
> வியாழன் மிகவும் பெரியதுவாம்[12]

எனக் கோள்களின் இயக்கத்தை, சூரிய மண்டலத்தின் தனித்தன்மையை 'நாயகன்' எனும் கவிதையில் சுட்டிச் செல்கிறார். மிகப் பெரிய அறிவியல் உண்மைகளை, மிக நேர்த்தியான முறையில் குழறிப் பேசும் மழலையருக்குச் சின்ன, சின்ன சொற்களை அமைத்து ஓசை நயத்துடன் வழங்கியிருப்பது, மழலையர் தம் சின்னஞ் சிறிய கைகளை அசைத்து, கண்களை விரித்து, அபிநயத்துடன், தலையை அசைத்துப்பாடும் காட்சி ஓர் இனிய இலக்கியமாகக் கண்ணில் விரியச் செய்கிறார் கவிஞர். இதுபோன்று இத்தொகுதியில் சுட்டிக் காட்டப் பல கவிதைகள் உண்டு.

> ஏணி வைத்து ஏறி எக்கி, எக்கி ஒவ்வொன்றாகக்
> கனிந்த கனி தேர்ந்து, பறித்துக் கொடுப்பது போல,
> நான் ஒவ்வொரு எழுத்தாகத் தேடித் தேடிக் கோர்த்து
> எழுதியதுதான் இந்த மழலை மணம்[13]

எனக் கவிஞர் ஆ. கோவிந்தராசலு தம் படைப்பு அனுபவத்தைக் கூறியுள்ளார். கவிதையில் மட்டுமல்லாமல் உரைநடையில் அமைந்த ஹாலியிலே வானுலா, கங்கையும் தணிகையும் ஆகிய இரு படைப்புகளும் கவிஞரின் அறிவியல்மீது கொண்ட நாட்டத்தை வெளிப்படுத்துகின்றன. உரைநடையிலும் கவிஞர் தமது திறமையை நிலைநாட்டிக் காட்டியுள்ளார்.

ஹாலியிலே வானுலா

ஜான்சி ராணி இலட்சுமி பாய் என்ற சிறுமி பனிப்பாறை போல் உள்ள ஹாலி வால் மீன் (Halley's Comet) முதுகில் அமர்ந்து சூரிய மண்டலத்தைச் சுற்றி வருவதுபோல, விறுவிறுப்புடன் அமைந்தது இக்கதை. உலகப் புகழ் பெற்ற ஆலிஸ் அட்வென்ச்சர்ஸ் இன் வொண்டர் லேண்ட் (Allies Adventures in Wonderland) எனும் சிறுவர் நாவலில் ஆலிஸ் எனும் சிறுமி ஒரு முயலைத் துரத்திக் கொண்டே சென்று அது செல்லும் குழிக்குள் விழுந்து கீழே.... கீழே.... பூமிக்குள் சென்று விலங்குகளும், பறவைகளும், விநோத நிகழ்ச்சிகளும் நிறைந்த ஒரு விந்தை உலகத்தைச் சுற்றி வருகிறாள். இறுதியில் இது அவள் கனவில் நடைபெறுவதாக அமைத்துள்ளார். ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் எல் டாட்க்சனின் இதே கதை உத்தியைக் கையாண்டு, கோவிந்தராசலு ஜான்சி விண்ணுலகில் உள்ள உண்மையான விந்தைகளைக் காணுவதாக அமைத்துள்ளார்.

'ஹாலி' விண்மீனுக்கும் ஜான்சிக்கும் இடையே நடக்கும் உரையாடலில் ஹாலி வால் நட்சத்திரம் என்பது அதைக் கண்டுபிடித்த 'எட்மண்ட் ஹாலி' என்பவர் பெயரால் அழைக்கப்படுவது குறித்தும் சூரியன், பூமி, பிரபஞ்ச வெளியில் சுற்றி வரும் கோள்கள் அவற்றின் பெயர்கள், அதனதன் தனித் தன்மைகள், செயற்கைக் கோள்கள், பால்வழி மண்டலம், காமாக் கதிர்கள், ஒளியாண்டு, விண்மீன் உருவங்கள், அமைப்புகள், நெபுலாக்கள் போன்ற பலவிதமான அறிவியற் செய்திகளையும் இனிய உரையாடல் வழியாக வழங்குகிறார் கவிஞர்.

> *உங்களைப் போல வேறு வால்மீன்கள் உண்டா மாமா?*
>
> இம் உண்டே, ஏழாண்டுக் கொரு முறை கதிரவனைச் சுற்றும் பெய்லா, மேலும் ஹாவார்டு, கூமான், மைக்கேல், ஐக்யா - சேஹி, அன்கே (Enche), கபயாஷி - பர்கர் - மிலன் . . . முதல் பத்தாயிரம் ஆண்டுக்கொருமுறை வரும் கோஹுடக் (Kohutek) வரை இப்படி பெயர் கொண்ட சுமார் அறுநூற்று அறுபது வால்மீன்களுக்கு மேல் தெரிகின்றன.
>
> *அம்மாடியோ அவ்வளவா இருக்கு . . . சரி மாமா! நீங்கள் இவ்வளவு வேகமாகப் போகும் போது எப்போதாவது மோதிக் கொண்டதுண்டா?*

ஜான்! இதுவரை நானும் மோதியதில்லை, மற்றவையும் மோதியதாகத் தெரியவில்லை

வால்மீன்கள் எல்லாம் எப்படித் தோன்றின, மாமா?

நாங்களா, நாங்கள் சூரிய மண்டலம் உருவாகும் போதே வால்மீன்களும் உருவாகியிருக்கலாம்; அல்லது கோள்களிலிருந்தோ, துணைக் கோள்களி லிருந்தோ உதித்திருக்கலாம்; அல்லது சூரிய மண்டலத்திற்கு வெகு தூரத்திலுள்ள ஓர்ட் மேகப் (Oort Cloud) பகுதியிலிருந்து வந்திருக்கலாம்.[14]

என ஹாலி வால் நட்சத்திரம் மாமா எனும் மனித உறவுடன் ஜான்சி எனும் சிறுமியைத் தன் முதுகில் சுமந்து விண்வெளியைச் சுற்றி வருவதுபோல் விந்தை விண்மீன்களைப் பற்றி அரும்பெருஞ் செய்திகளை வழங்குகிறார். ஆசிரியர் பல நூல்களிலிருந்து தாம் அறிந்த செய்திகளைச் சிறுவர்களுக்குத் தாமே கூறுவதற்குப் பதிலாக 'ஹாலி' மாமா மூலம் ஒரு சிறு நூலாக வழங்கியிருப்பது புதிய உத்தி முறையாகும்.

இதே போன்று உலகில் உள்ள மிகப் பெரிய கடல், நீரோட்டங்கள், கடல் வாழ் உயிரினங்கள் பற்றிச் சிறுவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் கவிஞர் **கங்கையும் தணிகையும்** என்ற ஒரு சிறு நூலை வழங்கியுள்ளார்.

கங்கையும் தணிகையும்

இந்நூல் 46 பக்கங்கள் கொண்ட சிறிய அளவினதாயினும் மிக அரிய பெரிய செய்திகளைக் கூறுவதாக உள்ளது. அறிவியல் உலாக் காணத் தணிகைமணியைக் கங்கை அழைத்துச் செல்வதாகக் கதை தொடங்குகிறது. கடல் நீரோட்டங்கள், சூறாவளிகள், ஆர்க்டிக் கடல், பசுபிக் கடல், கண்டத் திட்டுக்கள் எனப் பலபல வழியில் தென்படுகின்றன. நீரின் தோற்றம், பூமியின் வரலாறு, காற்று மண்டலம், கடல் வாழ் உயிரினங்கள் என எத்தனையோ கனமான கருத்துகளைப் பற்றிக் கங்கையிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறான். படிப்பதற்கு விறுவிறுப்பான நடையில், கங்கையும் தணிகையும் உரையாடுவதைப்போல் கவிஞர் இந்நூலை வழங்கியுள்ளார்.

சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியவர்களும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நாடக நூல்கள்

ஜெய்ஹிந்த், குருதிக்கொடை, குருதிப்பூக்கள் எனும் மூன்று நாடக நூல்களைக் கவிஞர் எழுதியுள்ளார். ஜெய்ஹிந்த் எனும் நாடக நூலில் வரலாற்றுச் செய்திகளைச் சிறுவர்கள் படிக்கவும், நடிக்கவும் ஏற்ற வகையில் ஜெய்ஹிந்த், சுதந்திரத் தாகம், வெற்றியின் விளைநிலம் எனும் மூன்று நாடகங்களை வழங்கியுள்ளார். இந்திய ராணுவ வீரர்களின் தியாகத்தையும் துணிவு, வீரச்செயல்களை எடுத்துக்காட்டும் 'ஜெய்ஹிந்த்', டாக்டர் அம்பேத்கரின் இளமைப்பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் காட்டும் **சுதந்திரத்தாகம், மாவீரன் அலெக்சாண்டர்** பற்றிய கவிதை நாடகமான **'வெற்றியின் விளைநிலம்** ஆகிய மூன்றும் வரலாற்று உணர்வு, சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை வளர்க்கும் என்ற நோக்கத்துடன் ஆசிரியர் இந்நூலை வழங்கியுள்ளார்.

குருதிக்கொடை எனும் தொகுப்பில் மூடநம்பிக்கையால் உடல் நோய்க்கு மருத்துவம் பார்க்காமல் சாமியார்களைத் தேடி ஓடும் மக்களின் அறியாமையைக் காட்டும் **மருந்தா மாயமா?** மத நல்லிணக்கத்தையும், இரத்த தானத்தின் (குருதிக்கொடை) முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் **குருதிக்கொடை, எமன், சித்திரகுப்தன், கிங்கரர்** ஆகியோரிடையே, தவறாகப் பிடித்து வந்த ரகுராமனின் உயிரைத் திருப்பி அனுப்பும் விவாதம் - ஒரு கனவுக் காட்சியாக நகைச்சுவையுடன் அமைந்த **எது சொர்க்கம்** கூடா நட்பின் தீமை, அவலத்தைக் காட்டும் **அம்மா** ஆகிய சிந்தனையைத் தூண்டும் நாடகங்களை வழங்கியுள்ளார்.

குருதிப்பூக்கள் எனும் தொகுப்பில் திருப்பூர் குமரனின் தியாகத்தை எடுத்துக்காட்டும் 'குருதிப்பூக்கள்' எனும் நாடகம், அந்நியர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற முகலாய மன்னர் 'சிராஜ்-உத்-தௌலா'வைப் பற்றிக் கூறும் **உரிமைப்போர்** எனும் நாடகம், நாட்டைக் காக்க தன் மகனோடு வீர மரணத்தைத் தழுவிய **துர்க்காதேவியைப்** பற்றி அக்பரை எதிர்த்த **ஆரணங்கு** எனும் நாடகம் ஆகியவற்றைச் சுவைபட வழங்கியுள்ளார்.

ஆங்காங்கே எளிமையாக உரைநடைக்கு இடையே சிறு சிறு வரிகளில் கவிதை நடையில் கருத்தை வழங்கியிருப்பது சிறுவர்களைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

அரக்ககுணம் அளவற்ற
ஆங்கிலேய அன்னியர்கள்
இரக்கமற்ற முறையில்
ஈடில்லா காந்தி – இர்வின்
உடன்பாட்டை உடைத்தனர்
ஊமைச்சனங்களை உருக்குலைத்தனர்
எண்ணற்ற அடக்குமுறைகள்
ஏனென்று கேட்பதற்கே
ஐயன்மீர்! . . . . மக்கள் கோபம்
ஒத்துழையாமை இயக்கமாய்
ஓங்கி எழுந்தது முப்பத்திரெண்டில்!
'கருப்புச்' சட்டங்கள்
காலவரை இல்லாமல்
கிள்ளியெறிந்தன உழைக்கும் மக்களை!
கீழோர் செயல்; அய்யகோ!
இந்தியா முழுமையும்
உரிமைத் தீ உயர்ந்தெழுந்தது!
'செம்மலர்' முகத்தில் பூக்கக்
'குருதிப்பூக்களின்' அணிவகுப்பு
அவ்வேள்வித் தீயில்
திருப்பூர் நகரில்
ஒருநாள் . . . .[15]

திருப்பூர் குமரனின் தியாகத்தையும், வீரத்தையும் காட்ட, **குருதிப்பூக்கள்** நாடகத்தின் இத் தொடக்கம் இதற்கு ஒரு சான்றாகும். இந்நாடகங்கள் மட்டுமன்றி, சிறுவர்களுக்கான நாவல், சிறுகதைகளை வழங்குவதிலும் கோவிந்தராசலு மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார். புரியாத புதிர், ஊன்றுகோல் ஆகிய இரு படைப்புகளும் இதற்குச் சான்றாகத் திகழுகின்றன.

புரியாத புதிர்

இவருடைய புரியாத புதிர் எனும் நாவல் சாதி மதங்கள் கற்பிக்கும் 'தீண்டாமை' சிறுவர்களின் உள்ளங்களில் விதவிதமான கேள்விகளை எழுப்புகிறது. தங்களின் நட்புக்கு பெரும்

இடையூறாக அமைவதை உணரமுடிகிறது. நடைமுறை வாழ்வில் பெரியோர்களால் இந்தக் கருத்து திணிக்கப்படுகிறது; பொருளாதாரப் பேதம் பற்றிய கண்ணோட்டம்; உண்மையான அன்பு எந்தப் பேதங்களையும் பொருட்படுத்தாது ஆகியவற்றை எளிமையாக எடுத்துக்காட்டுகிறது இந்நாவல்.

ஊன்றுகோல்

பாலைவனக்காதல், உளவு, மகனே, நம்பிக்கை துரோகம், ஊன்றுகோல், வாழ்க்கை முடிவதில்லை, கதிஜா, சகுனத்தடை, காடு, நிலா மனிதன் ஆகிய 9 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. சிறுவர்கள் மன உலகமே விளையாட்டுகளாலும், கதைகளாலும் உருவானது. பிறந்த ஆறுமாதக் குழந்தை வண்ணங்களைக் கொண்டே சலனப்படுவார்கள். வண்ணப் பொருளை நோக்கியே சிரிப்பும் கையும் நீளும் ஒரு வருடப் பிள்ளைக்கு உதட்டு அசைவுகள், மூக்கு நெளிப்புகள், கையாட்டல்கள், கண் விழி அசைவுகள் தான் ஈர்ப்பானதாக இருக்கும். மூக்கு நெளிந்தால் சிரிக்கும், சுளிக்கும் உதடுகளைக் கைகளால் கவ்வும். வண்ணக் கதைகளும், உறுப்பசைவுகளின் விளையாட்டுமே மழலைகளின் மனதில் ரசனையை உருவாக்கும்; இரசனைகளின் மூலம் மனசுகள் உருவாகும். கதை உலகம் சிறுவர்களின் வர்ணங்களில் சம்பவங்களின் ஜாலங்களில் கற்பனைகள் மலரும். சம்பவங்கள் என்பது உருவங்களும் சூழல்களும் கலந்த சலனம்; விளையாட்டு, சொற்கள் என்பது நினைவுகளின் வண்ணம்.[16]

சிறுவர்களின் மனமொழியும், மனநிலையும் அறிந்த கோவிந்தராசலு எளிமையான கருத்துகள்முதல் மிக ஆழ்ந்தறிய வேண்டிய கருத்துகள்வரை பல்வேறு இலக்கிய வடிவில் தமது படைப்புகளை வழங்கியுள்ளார். பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள் சிறுவர்களை நல்வழியில் இட்டுச் செல்லும் எனும் நோக்கத்துடன் **தந்தை பெரியார், வாணியின் கதை** ஆகிய இரு நூல்களைப் படைத்துள்ளார்.

தந்தை பெரியார்

பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைத் தடையில்லாத நடையில் படிப்போட்டம் மிக்கதாக இந்நூலில் வழங்கியுள்ளார். பெரியார் சிறுவனாயிருந்தபோது செய்த குறும்பு முதல்

காங்கிரசில் ஆற்றிய பணி, கதர் இயக்கம், மதுவிலக்கு, கள்ளுக்கடை மறியல், தீண்டாமைக் கொடுமை, வைக்கம் வீரர், சிறை வாழ்க்கை, இட ஒதுக்கீடு, பொதுஉடைமைக் கொள்கை, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பெண் விடுதலை, இந்தி எதிர்ப்பு, கடவுள் மறுப்புக் கொள்கை, பெரியார் எழுதிய பகுத்தறிவு நூல்கள் என மிகச் சுருக்கமாக இந்நூலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது சிறுவர்களுக்கு மிகவும் பயனுடையதாகும்.

வாணியின் கதை

ஒரு கவிஞரைப் பற்றி மற்றொரு கவிஞர் எழுதிய நூல் இது. வில்லியனூரில் பிறந்து, குறும்புகள் செய்து வளர்ந்த ரங்கசாமி எனும் சிறுவன், பாரதிதாசனின் மாணவர்; கல்லூரிக் கல்வி பயின்று, பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழ் மீது கொண்ட தணியாத ஆர்வம், பாவேந்தரின் வழிகாட்டல் ஆகிய இரண்டும் ரங்கசாமியை வாணிதாசனாக்கின. கவிஞரேறு, பாவலர் மணி, புதுமைக்கவிஞர் போன்ற பட்டப்பெயர் பெற்றார். குழந்தைகளுக்கெனக் குழந்தை இலக்கியம், 'இனிக்கும் பாட்டு' வழங்கியவர்.

சின்னச் சின்னப் புத்தகம்
சிறுவர் படிக்கும் புத்தகம்
அன்னை போல எந்த நாளும்
அறிவை ஊட்டும் புத்தகம்[17]

என இனிமையான பாடல்களை வழங்கிக் குழந்தை இலக்கியத் திற்குத் தமது பங்களிப்பை வழங்கிச் சென்றவர் கவிஞர் வாணிதாசன். தமிழச்சி, கொடிமுல்லை, பெரிய இடத்துச் செய்தி, தொடுவானம், எழிலோவியம், பொங்கல் பரிசு, தீர்த்த யாத்திரை, இன்ப இலக்கியம், குழந்தை இலக்கியம், சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டு பிறக்குமடா, இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், பாட்டரங்கப் பாடல்கள் ஆகிய 15 கவிதை நூல்களை வழங்கியவர் கவிஞர் வாணிதாசன். இத்துடன் 'வாணிதாசன் கவிதைகள்' 3 தொகுதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாவேந்தருக்குப் பின் புதுவை மண் வழங்கிய மற்றொரு புரட்சிக் கவிஞர் வாணிதாசன் எனப் பாராட்டுப் பெற்றவர். இப்புதுவைக் கவிஞரின் வரலாற்றை அப்புத்தாத்தா பக்கத்துக்கு வீட்டு குழந்தைகளுக்கு கதையாகச் சொல்வது போல் கவிஞர் ஆ. கோவிந்தராசலு வழங்கியுள்ளார்.

மழலையர் தொடங்கி வளர்ந்த சிறுவர்கள்வரை பகுத்தறிவுக் கொள்கையுடன் வாழ்வதற்கு, ஏற்ற வகையில் அவர்கள் இவ்வுலகில் உண்மை வழியில் நன்மை பெற்று நலமுடன், நல்ல குடிமக்களாக வாழ நன்னெறிப்படுத்தும் வகையில் தமது குழந்தை இலக்கியத் தொண்டை அயராது செய்து வருகின்ற கவிஞர் ஆ. கோவிந்தராசலு பெரிதும் பாராட்டுக்குரியவர்.

அடிக்குறிப்புகள்

1. ஆ. கோவிந்தராசலு, அறிவியற் பூக்கள், பகத்சிங் பதிப்பகம், சென்னை - 81, டிச.1984, ப.2.
2. மேற்படி, ப.4.
3. மேற்படி, ப.11.
4. ஆ. கோவிந்தராசலு, வைரக்கற்கள், அம்சா பதிப்பகம், புதுவை, 1995, ப.31.
5. மேற்படி, ப.35.
6. ஆ. கோவிந்தராசலு, தேன்அருவி, அம்சா பதிப்பகம், புதுவை-7, 30, 2003, என்னுரை, ப.X.
7. மேற்படி, ப.9.
8. மேற்படி, ப.14.
9. மேற்படி, ப.47.
10. மேற்படி, ப.62.
11. ஆ. கோவிந்தராசலு, மழலை மணம், அம்சா பதிப்பகம், புதுவை-7, பக்.33.
12. மேற்படி, ப.86.
13. மேற்படி, முன்.ப.2
14. ஆ. கோவிந்தராசலு, ஹாலியிலே வானுலா, சென்னை புக்ஸ், சென்னை, பதி.1986, ப.12.
15. ஆ. கோவிந்தராசலு, குருதிப்பூக்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, பதி. ஆக.15, 1989, ப.9-10.
16. ஆ. கோவிந்தராசலு, ஊன்றுகோல், அம்சா பதிப்பகம், புதுவை, 6.6.2002, அணிந்துரை, ப.2.
17. ஆ. கோவிந்தராசலு, ' வாணியின் கதை, அம்சா பதிப்பகம்,

பொன். அய்யனாரப்பன்

வாழ்க்கைக் குறிப்பு

காஞ்சிபுர மாவட்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள அரசூர் என்னும் சிற்றூரில் 5-5-1945இல் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பொன்னன், பச்சையம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். உடன் பிறந்தோர் மூன்று மூத்த சகோதரிகள். சிறுவயதிலேயே இவருடைய தந்தை காலமானார்.

சென்னையிலுள்ள புதுக்கல்லூரியில் மாலை நேர இளம் அறிவியல் (பி.எஸ்ஸி. இயற்பியல்) வகுப்பில் சேர்ந்தார். எதிர்பாராத சூழல் காரணமாக அவரால் படிப்பைத் தொடர்ந்து முடிக்க இயலவில்லை. 10-4-1965இல் இந்திய அஞ்சல் தந்தித் துறையில் பணியில் சேர்ந்தார். பணிக்காலத்தில் உலகப் பன்னாட்டுத் தபால் தந்தி தொலைபேசி நிறுவனத்தினரால் (PTTI) சிறந்த தொழிற்சங்கத் தலைவராக இருமுறை அங்கீகரிக்கப் பட்டுள்ளார். தொடர்ந்து 40 ஆண்டுகள் ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்த அவர் தற்போது 31-5-2005இல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். எழுத்தராகப் பணியில் சேர்ந்து பல படிநிலைகளை அடைந்து உயர்பதவியான தலைமைப் பிரிவு மேற்பார்வையாளர் என்ற நிலையில் ஓய்வு பெற்றுள்ளார்.

6-6-1974இல் காமாட்சி என்பவருடன் திருமணம் நடந்தது. தமிழ்க்கொடி, தமிழரசன் என்னும் இரு பிள்ளைகளைப் பெற்றுள்ளார். தமிழ்மீது கொண்ட பற்றுக் காரணமாகத் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டியுள்ளார். தன் இரு பேரப்பிள்ளைகளுக்கும் தன்னுடைய தந்தையின் நினைவாகப் பொன்னரசன், பொன்மதி எனப் பெயரிட்டுள்ளார். கவிஞர் தற்போது கூடுவாஞ்சேரியில் வசித்து வருகிறார். அங்குள்ள தமது இல்லத்திற்கு 'இலக்கியப் பூங்கா' எனப் பெயரிட்டுள்ளார். பிறந்த ஊரான அரசூரில் ஏழை எளிய மக்களுக்காக அழகிய புது நகரை

உருவாக்கி அரசின் உதவி பெற்று எண்பது கான்கிரீட் வீடுகள் தோன்றிட முழுமுதற் காரணமானார். 1985ஆம் ஆண்டு தன் அன்னையின் நினைவாக, அவர் பெயரிலேயே 'பச்சையம்மாள் பதிப்பகம்' நிறுவியுள்ளார். கவிஞருடைய முதல் இரண்டு கவிதைத் தொகுப்புகள் தவிரப் பிற நூல்கள் இப்பதிப்பக வெளியீடாக வந்துள்ளன. தன்னுடைய நூல்கள் தவிர டாக்டர் இரமேஷ்பிரபு எழுதிய 'நீங்களும் மருத்துவர் ஆகலாம்' என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

பெற்ற விருதுகளும், பட்டங்களும்

1. 1975ஆம் ஆண்டு தமிழ் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'கவிக்குயில்' பட்டம் வழங்கப்பெற்றது.
2. 1978ஆம் ஆண்டு மலேசியா செந்தமிழ்க் கலா நிலையத்தின் சார்பில் தமிழ்க்கடல் சுவாமி இராமதாசரால் 'செந்துறைக் கவிஞர்' பட்டம் வழங்கப்பெற்றது.
3. 1982ஆம் ஆண்டு பாரதி இளைஞர் சங்கம் சார்பில் 'கவிமுரசு' பட்டம் வழங்கப்பெற்றது.
4. 1-9-1987இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற எழுத்தாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதை முன்னிட்டு பல்கலைக்கழகத்தினரால் நினைவுப் பரிசு வழங்கப்பெற்றது.
5. 23-3-1990இல் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் நடந்த குறுங்காவியப் போட்டியில் முதல் பரிசாக அரிமா இரமேசு அரிமா மகேசு விருது வழங்கப்பெற்றது.
6. 24-2-1991இல் வி.ஜி.பி. சந்தனம்மாள் அறக்கட்டளை சார்பில் சிறப்பு விருது வழங்கப்பெற்றது.
7. 12-2-1993 முதல் 30-3-1993 வரை 47 நாட்கள் 1300கி.மீ. தமிழ் அறிஞர்கள் நடைப்பயணம் சேதுராமன் தலைமையில் குமரி முதல் சென்னைக் கோட்டை வரையில் நடந்தது. அப்பயண வெற்றிக்கு அரும்பாடு

பட்டதோடு, பயணத்தில் கலந்து கொண்டமைக்காக 'ஓயாத தமிழ் மறவர்' விருது வழங்கப்பெற்றது.

8. 6-4-1994இல் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 'தன்மானத் தமிழ் அரிமா' விருது வழங்கப்பெற்றது.

9. 9-7-1994இல் சென்னை - அண்ணாநகர் கண்ணதாசன் கலை இலக்கியப் பேரவையின் சார்பில் 'கண்ணதாசன்' விருது வழங்கப்பெற்றது.

10. 17-2-1995இல் சென்னை - அண்ணாநகர் கண்ணதாசன் கலை இலக்கியப் பேரவை சார்பில் சுமார் 25 தமிழ்க் கவிஞர்கள் ஒன்றிணைந்து நடத்திய 48 மணி நேரத் தொடர் கவியரங்கம் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளார். உலகில் இதுவே கவிதைக்காக நடந்த முதல் நிகழ்வெனக் கின்னஸ் நிறுவனம் சான்றுரைத்துள்ளது.

11. 1991ஆம் ஆண்டு, தமிழக அரசு நடத்திய பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றுப் பாராட்டுப் பத்திரமும் பண முடிப்பும் பெற்றுள்ளார்.

அயல்நாட்டுப் பயணம்

மலேசியா - சிங்கப்பூர் - தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று உலகத் தமிழ்க் கவிஞர் அரங்கிலும் கவிதை பாடிப் பெருமை சேர்த்துள்ளார். இந்தப் பயணத்தை அடிப்படையாக்கி, கடல் கடந்த கவிதை உலா எனும் பயண நூலை ஆக்கியுள்ளார்.

படைப்புகள்: கவிதைத் தொகுப்புகள்

1. மலைத்தென்றல் - 5-5-1985
2. நவமணிகள் - 5-5-1985
3. கவிமுரசு - 1990
4. கவிக்குயில் - டிசம்பர் 1991
5. புதிய உலக விளக்கு - டிசம்பர் 1992

6. எண்ணக் கோலங்கள் - பிப்ரவரி 1994
7. பொன்னின் சோதி - டிசம்பர் 1995
8. மனமே கவிதை - டிசம்பர் 1996
9. புதுப்புனல் - டிசம்பர் 1997
10. இளங்கிளி - டிசம்பர் 1998
11. மாயக்கனவு - டிசம்பர் 1999
12. தேனும் திணையும் - டிசம்பர் 2001
13. தணியாத தாகங்கள் - அச்சில்

பயண நூல்

14. கடல் கடந்த கவிதை உலா - டிசம்பர் 1991.

ஆய்வு நூல்

15. முப்பால் இன்பம் - டிசம்பர் 2000

ஆய்வுக் கட்டுரைகள்

16. "காரல்மார்க்ஸும் வள்ளலாரும் ஓர் ஒப்பாய்வு" - மலேசிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - நவம்பர், 1987.
17. "Philosophical Ideology of Geethanjali" - 10ஆவது உலகக் கவிஞர் மாநாடு - நவம்பர், 1988.

கவித்திறன்

பள்ளிப் பருவத்திலேயே கவிதை எழுதும் திறன் கவிஞரிடம் இருந்திருக்கிறது. கவிதை இலக்கணம் கற்காத நாட்களிலேயே இவருடைய கவிதைகள் மரபுக் கவிதைகளாக விளங்கின. மரபு மீறிய கவிதைகள் வெளிவரும் இக்காலக் கட்டத்தில் இவரது கவிதைகள் இன்றைய கவிதை உலகிற்குப் புத்துயிர் அளிக்கின்றன. இவர் கவிதைகளில் எதுகை, மோனை, இயைபு முதலிய தொடை நயமும், ஓசை, சந்தம், சுவை முதலியவையும், பாநலமும் சிறந்து விளங்குகின்றன. வெண்பா மற்றும் ஆசிரியப்பாவிலும், செந்தொடையிலும் கவிஞர் கவிதைகளை யாத்துள்ளார். 'இசைப் பாடலானாலும், சந்தப் பாடலானாலும், வெண்பாவானாலும், விருத்தமானாலும், கட்டுக்கோப்பும், கருத்தோட்டமும், நடையழகும், சொல் நயமும், புதுப்புது உத்திகளும் கொண்டு திகழ்கின்றன' (மலைத்தென்றல்,

ப.6). இவரது கவிதைகள் பல வானொலியிலும், தொலைக் காட்சியிலும் ஒலி-ஒளிபரப்பப் பெற்றுள்ளன. அதற்கான குறிப்பு அவரது கவிதைத் தொகுப்புகளிலேயே இடம்பெற்றுள்ளது. 'தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கவிதை பாடும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார். பொயட் (Poet) என்ற இதழில் இவருடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன (புதிய உலக விளக்கு, ப. 10).

முதல் கவிதை

1978ஆம் ஆண்டு தபால் தந்தி இலாகாவில் நடந்த ஒருநாள் வேலை நிறுத்தத்திற்காக எழுதப்பட்ட கவிதையே கவிஞரின் முதல் கவிதை ஆகும். ஆனால் இக்கவிதை அச்சில் வெளிவரவில்லை. சிறு வயது முதலே கவிஞர் கவிதைகள் பல எழுதியிருந்தாலும் வெளியீட்டிற்காக எழுதப்பட்ட முதல் கவிதை இதுவேயாகும். அக்கவிதை பின்வருமாறு:

கருங்காலி என்ற பெயர் வாங்காதே – அதனால்
　　காலமும் நீ வருந்தாதே
கருங்காலி இல்லையென்று காட்டிடுக–
　　கடமையைப் புகழ் ஏணியில் ஏற்றிடுக

இவருடைய கவிதைகள் பன்முகப் பொருளுடையனவாய் அமைந்துள்ளன. சமுதாய நிலை, அரசியல், அறிவியல் சிந்தனை, வாழ்க்கைத் தத்துவம், தொழிற்புரட்சி எனப் பலவாறாக அமைகின்றன.

சமுதாய நிலை

பணம் ஒன்றையே பெரிதாகக் கருதும் சமுதாயத்தினரின் போலி வாழ்வைச் சித்திரிக்கிறார்.

பணம் பணம் என்றலைந்து பண்பினை இழந்தபின்
குணத்தை அடகு வைத்துக் கூத்தாட்டம் போடுகிறார்...
உள்ளதைச் சுருட்டி உடைமைகள் சேர்த்திட்டே
கொள்ளை அடிக்கின்ற கூட்டத்தார் பல்கிவிட்டார்
பக்கம் இருந்துகொண்டு பைக்குள்ளே கைபோடும்
வெட்கம் கெட்டவர் மேவுகிறார் நண்பராக
பொய்க்கே அடிமையாகிப் பொன்னான வாழ்விழந்து
செய்வ,தறியாமல் சிந்தைகெட்டு வாடுகின்றார்
(என்று திருந்தும் இந்தச் சமுதாயம்?, நவமணிகள், ப. 23)

தனியுடைமைச் சமுதாயம் நீங்கி, சமத்துவச் சமுதாயம் மலர்ந்திட விரும்புகிறார். கீழ்வரும் பாடல் இக்கருத்தை உணர்த்துகிறது.

திசையெங்கும் சிதறிகிடக்கும் திருவைய மக்களெலாம்
இதயத்தால் ஒன்றுபட்டு எல்லோரும் கைகோர்த்து
மனிதச் சங்கிலியால் மனஉறவு கொண்டு விட்டால்
சுற்றியுள்ள தீமையெலாம் சுடுகாடு சென்றடையும்
துன்பங்கள் தீர்ந்து விடும் துயரங்கள் தொலைந்துவிடும்!
இன்பமிகு சமுதாயம் இனி வருவது நிச்சயமே!
மனிதச் சங்கிலியின் மகத்துவத்தை உணர்ந்து விட்டால்
தனியுடைமைச் சமுதாயம் தரைமட்டம் ஆகுமன்றோ!
சமத்துவ சமுதாயம் தழைத்துவிடும் இயல்பாக!
அமுதான சமூகத்தை அமைப்பதற்கு முயன்றிடுவோம்!
(மனித சங்கிலி, புதுப்புனல், ப. 32)

அரசியல்

அரசியல்வாதிகளின் இழிசெயலைக் கவிஞர் தம் பாடல் களில் புனைந்துள்ளார். அரசியல்வாதிகளைப் 'பெரும்புள்ளிகள்' எனவும் ' அரசியல் குற்றவாளிகள்' எனவும் சாடுகிறார். பொய்ம்மை, கயமை, தன்னலம், நஞ்சுளம், பொருளாசை ஆகியவற்றைப் பெரும்புள்ளிகளின் குணங்களாகக் காட்டுகிறார்.

தன்னை முன்னிறுத்தி – என்றும்
தன்னலம் தனைக்காத்து
முன்னேறத் துடித்திடுவார் – அடுத்தவர்
முன்னேற்றம் தடுத்திடுவார்!
முகத்துதி செய்வதிலே – ஆயுள்
முழுமையும் செலவிடுவார்
நகைமுகம் காட்டுவதுபோல் – நடித்து
நஞ்சுளம் பூண்டிருப்பார்
ஆசைகள் இலாதவர்போல் – பேசி
அடுத்தவர் பொருள்பறிப்பார்
பூசைகள் புரிவதாக – பிறர்
பொன்பொருள் கவர்ந்திடுவார்!. . . (புதுப்புனல், ப. 33)

மேலும், அரசியல் குற்றவாளிகள் என்ற கவிதையிலும் சாடுகிறார்.

கோடி கோடியாய் அடித்தனர் கொள்ளை – இன்று
கோடி கோடியாய்க் கண்டனர் தொல்லை!
ஓடி ஓடியே குவித்தனர் உடைமை – தம்
உள்ளம் உடைந்து இழந்தனர் கடமை! (புதுப்புனல், ப. 44)

அறிவியல் சிந்தனை

வருங்காலத் தமிழகம் அறிவியல் துறையில் தலைமை கொள்ளும் என்ற அசையாத நம்பிக்கையோடு தொலை நோக்குச் சிந்தனையை வித்திட்டிருக்கிறேன்

என்கிறார் கவிஞர் (கவிமுரசு, நுழைவாயில், ப. 5). இதுவரை நடைமுறையில் இல்லாத ஒரு புதிய கண்டுபிடிப்பைத் தன் சிந்தனையின் வெளிப்பாடாகக் காட்டியிருக்கிறார். 'மூவழி ஊர்தி' என்றும் புதிய படைப்பைத் தன்னுடைய எதிர்காலக் கனவாகக் காட்டுகின்றார்.

உறக்கம் இன்றிச் சிந்திப்பான் – அவன்
உரிய இலக்கை அடைந்ததுமே
சிறப்புறும் மூவழி ஊர்திதனை – தனது
சிந்தனை வளத்தால் படைத்தளிப்பான்
மண்ணின் மீதில் ஊர்தியாகும் – விரி
வானின் மேலே பறவையாகும்
தண்ணீர் கண்டால் மீனாகும் – எத்
தடையும் கடப்பதில் காற்றாகும்
எளியோர் எளிதில் அமர்ந்தேகும் – ஊர்தி
இருபத் தோராம் நூற்றாண்டில்
களிகொள் வகையில் பறந்திடுமாம் – நம்
கண்முன் வியப்பு நிகழ்ந்திடுமாம்
மூவழி ஊர்தி எய்திவிட்டால் – பயணம்
மூன்று வழியிலும் புரிந்திடலாம்
பாவழி மூலம் படம் பிடித்தேன் – புதுப்
பாதை காட்ட ஆள்வருவார்!!!

(மூவழி ஊர்தி, கவிமுரசு, ப. 53)

கவிதை

கவிஞர் தன்நிலையில் கவிதையை எவ்வாறு காணுகிறார் என்பதை அவரது சில கவிதைகள் உணர்த்துகின்றன.

மனதைச் செம்மையாக வைத்துக் கொண்டு இருப்பவரிடம்
தான் தங்கு தடையின்றிக் கவிதை ஊற்றுச் சுரந்து கொண்டே
இருக்கும்

எனக் கவிஞர் கூறுகிறார் (புதுப்புனல், என்னுரை, ப.3) தன்னுடைய கவிதை பற்றிய எதிர்காலக் கனவைக் கூறுவதாவது.

என்கவிதை ஓர்நாள் நூலாகும் – மாந்தர்
இன்னுயிர் வளர்த்திடும் பாலாகும்
என்கவிதை ஓர்நாள் வாளாகும் – சூழும்
இடர்கள் அனைத்தும் தூளாகும்
என்கவிதை ஓர்நாள் நெருப்பாகும் – அஃது
ஏழ்மையை அழிக்கப் பொறுப்பாகும்
என்கவிதை ஓர்நாள் கருவாகும் – கேட்ட(து)
எல்லாம் அளிக்கும் தருவாகும்
என்கவிதை ஓர்நாள் விழியாகும் – அறிஞர்
எடுத்துச் சுவைக்கும் மொழியாகும்
என்கவிதை ஓர்நாள் மெய்யாகும் – கற்றோர்
எடுத்திட மணக்கும் நெய்யாகும்

(என்க்விதை, மலைத்தென்றல், ப. 9)

எது கவிதை? என்பதற்குக் கவிஞர் விளக்கம் அளிக்கிறார்.

நெஞ்சைத் தொடுவது கவிதை – மக்கள்
நினைவில் நிற்பது கவிதை
கொஞ்சி மகிழ்வது கவிதை – புகழைக்
கொண்டு சேர்ப்பது கவிதை
உண்மையைச் சொல்வது கவிதை – நம்
உயிரை வளர்ப்பதும் கவிதை
எண்ண மலர்ச்சியே கவிதை – பேர்
இன்பம் பயப்பதும் கவிதை
அமுதைப் பொழிவது கவிதை – பேர்
அழகைக் குவிப்பது கவிதை
அமைதி கொடுப்பது கவிதை – மன
அழுக்கைத் துடைப்பது கவிதை (கவிக்குயில், ப. 24)

மேலும், 'கவிதைச் சக்தி' (புதுப்புனல், ப. 37) என்ற தலைப்பில் கவிதையின் இயல்புகளைக் கூறுகின்றார்.

அன்னைக்கு இரங்கற்பா

கவிஞர் தன்னுடைய அன்னையின்மீது மிகுந்த அன்பும், மதிப்பும் கொண்டவர். பல துன்பங்களுக்கிடையில் தன்னைப் பேணி வளர்த்து ஆளாக்கிய தன் அன்னை அரசூரில் இயற்கை எய்தியபோது கவிஞர் துன்பப்பெருக்கை இரங்கற்பாவாகப் பாடியுள்ளார்.

வீடாண்ட என்தந்தை
　　விண்ணுலகம் சென்றபின்னே
காடுசுற்றி மேடுழன்று
　　கால்கடுக்கத் தோள்வலிக்க
பாடுபட்டுப் பயன்விளைத்துப்
　　பள்ளிக்கே அனுப்பிவைத்(து)
ஏடுதூக்கிப் போமகனே
　　என்றழைத்து வளர்த்தாயே. . .
ஏனம்மா பிரிந்து விட்டாய்!
　　எமைத்துயரில் ஆழ்த்திவிட்டாய்
போனயிடம் தெரியாமல்
　　புலம்பித்தான் அழுகின்றோம்
ஆனமட்டும் தேடுகின்றோம்
　　அனாதையாகித் துடிக்கின்றோம்
தேனொழுகும் குடம் இன்று
　　திடீரென்றே உடைந்ததாமே?

(பைந்தமிழ்த் தாய்மடியில் பச்சையம்மாள் துயில்கின்றார், புதிய உலக விளக்கு, ப. 86)

"இராக்கிங்" கொடுமை

கல்லூரி மாணவர்கள் 'இராக்கிங்' என்ற பெயரில் கொடுமைச் செயல்கள் புரிவதைக் கண்டிக்கும் வகையில் ஒரு கவிதை புனைந்துள்ளார். இக்கவிதை, சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பி.கே. பொன்னுசாமி அவர்களின் புதல்வரும், அண்ணாமலைப் பல்கலைக்கழக முதலாண்டு மாணவருமான பொன் நாவரசன் மறைவு குறித்து எழுதப்பெற்ற இரங்கற்பா ஆகும்.

நிகழாத கொடுமையன்றோ நிகழ்ந்த தம்மா!
　　நெஞ்சமெல்லாம் தீப்புண்ணாய் மாறிற் றம்மா!

முகிழ்க்காத மொட்டாயுள் முடிந்த தம்மா!
முளைத்துவந்த் இளங்குருத்துக் கருகிற் றம்மா!
புகழாளும் இளம்பரிதி சாய்ந்த தம்மா;
புத்தெழிலின் மொத்தஉரு போன தெங்கோ?
மகத்தான பொன்மேனி மறைந்த தம்மா!
மணிமுத்து நாவரசன் மறைந்திட் டானே...
இதுபோன்ற வன்செயல்கள் இந்த நாட்டில்
இனிமேலும் தொடராமல் தடுக்க வேண்டும்
பொதுநிலையில் உள்ளவர்கள் கவலை கொள்ளும்
புன்செயல்கள் முழுவதுமே ஒழிய வேண்டும்
புதுமை நோக்கி விரைந்தோடும் இந்த நாளில்
புண்படுத்தும் செயல்புரிதல் வெட்க மன்றோ?
பதுமைநிகர் மாணவர்கள் உங்கள் காலம்
பாழ்படுத்த நினையாதீர்! உணர்ந்து செல்வீர்!
(புதுப்புனல், ப. 106)

வாழ்க்கைத் தத்துவம்

கவிஞருடைய பாடல்களில் வாழ்வியல் தத்துவங்கள் நிறைந்திருக்கின்றன. இக்கருத்துகள் அவருடைய வாழ்க்கை அனுபவத்தைக் காட்டுகின்றன. பல துன்பங்கள் நிறைந்தது வாழ்க்கை என்பதற்குக் கவிஞரின் பாடல் விளக்கம் அளிக்கிறது.

வாழ்க்கை என்பதோ வண்ண மலர்களால்
செய்யப் பட்ட சிவிகை அல்ல
முள்மேல் ரோசா முடிவிலா துயரம்
வின்னற் கரிய வேதனைச் சுமையும்
பள்ளமும் மேடும் பரவிக் கிடக்கும்
நெடுவழிக் காட்டும் நீண்ட சாலை
அலைகடல் எழும்புயல், வான்படும் இடிஒலி
நிலம்படும் கல்முள், நீர்படும் திமிங்கலம் (கவிக்குயில், ப. 65)

வாழ்வின் நிலையாமையை உணர்த்தும் வகையில் கவிதை பாடியுள்ளார். இக்கவிதையில் துறக்க வேண்டிய பண்புகளையும், கற்க வேண்டிய பண்புகளையும் கூறுகிறார். நம்முடைய மனமொன்றே நம்மை வழிநடத்தும் அளவுகோல் என்பதை உணர்த்துகிறார்.

ஆசையைத் துறக்கலாம்!
அன்பைத் துறக்கலாமா?
கோபத்தைத் துறக்கலாம்!
குணநலன் துறக்கலாமா?
பற்றியிருப்பதில் பயனொன்றில்லை
எனத்தெரிந்தால் அப்பொழுதே
விட்டுவிடலாம் விருப்பப்படியே
எதுவுமே நிரந்தரமில்லை!
மனமொன்றே அளவுகோலாம்! (புதுப்புனல், ப. 48)

தொழிற்புரட்சி

ஒரு நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழைப்பாளிகளைப் பற்றியும், அவர்களின் ஒற்றுமை பற்றியும் பல புரட்சிக் கருத்துகளைக் கவிஞருடைய கவிதைகளில் காண முடிகிறது. உழைப்பின் இன்றியமையாமையைப் பல பாடல்களில் உணர்த்துகிறார்.

உழைத்து வாழப் பிறந்துவந்தாய் – இந்த
உலகம் காக்கப் பறந்து வந்தாய்
உழைப்பே உன்றன் சொத்தாகும் – உடலில்
ஊறும் வியர்வை முத்தாகும்
(உலகம் நடப்பது உன்னாலே, நவமணிகள், ப. 56)

ஆளும் வர்க்கத்திடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் பாட்டாளி மக்கள் சார்பில், அவர்களுக்காகத் தொழிற்சங்கம் அமைக்கக் கோரிப் பாடல்கள் பல புனைந்துள்ளார்.

ஆளும் வர்க்கத்தார் – நம்மை
ஆட்டிப் படைத்திடுவார்
தோளின் வலியால் தோழர் துணையால்
தொழிற்சங்கம் வளர்த்திடுவோம்
குருதியைக் கொட்டி வியர்வையைச் சிந்திக்
குவித்தோம் பொருள் கோடி
உருகும் மெழுகாய் ஒவ்வொரு நொடியும்
உழல்வது சரிதானோ? (நவமணிகள், ப. 50)

புத்துலகு கண்ட சிற்பி பாவேந்தர்

பாவேந்தர்மீது மிகுந்த ஈடுபாடுடைய கவிஞர், அவரைப் பற்றிய பாடல்களும் புனைந்துள்ளார். பாவேந்தர் பற்றிய கவிதையை ஒரு குறுங்காவியமாகவே படைத்துள்ளார். அக்கவிதையின் தொடக்கம் வெண்பாவிலும், பின்னர் எண்சீர் விருத்தத்திலும் அமைந்துள்ளது. பாவேந்தரை மறுமலர்ச்சிப் பாவலராகவும், பாரதியின் தோழனாகவும், சமூக விடுதலைக்குப் போராடியவராகவும் பலவகைகளில் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பாவேந்தர் புலமையிலே இமயம் ஆனார்
படைப்பாளர் வரிசையிலே சிகர மானார்
பாவேந்தர் கவித்திறத்தை நாடு மெச்ச
பணமுடிப்பு வழங்கிப்பொன் னாடைபோர்த்தி
நாவேந்தர் நம்அண்ணா சிறப்புச் சேர்த்தார்
நானிலமே பாராட்ட எம்பா வேந்தர்
பூவேந்தும் புண்ணுடலை இழந்து விட்டுப்
புகழேந்தும் பொன்னுடலால் வாழுகின்றார்!
(புத்துலகு கண்ட சிற்பி பாவேந்தர், கவிமுரசு, ப. 64)

மேலும் பல கவிதைகளிலும் பாவேந்தரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

தமிழ்ப்பற்று

கவிஞர் ஒரு சிறந்த தமிழ்ப்பற்றாளர். 'என் தமிழன்னை நான் படைப்பதற்காகவே இன்னும் என்னை வாழ வைப்பாள்' எனக் கவிஞர் கூறுகிறார். கவிஞரின் தமிழுணர்வு அவர் பாடல் களிலும் வெளிப்படுகிறது. தன்னைக் காக்கும் தமிழன்னைக்குக் கவிஞர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகிறார்.

அவனியில் மூத்தவளே – மாமுனி
அகத்தியர்க் கன்புடையாய்–
கவலைகள் தீர்ப்பவளே – தமிழ்தொல்
காப்பியர் கொற்றவளே
தவநெறி கூறுகின்ற – தெய்வத்
தமிழ்மறை தந்தவளே
கலைஞனின் நாவமர்ந்தாய் – மூச்சுக்
காற்றேயான் வாழ்த்துகிறேன்
(தமிழ்த்தாய் வாழ்த்து, மலைத் தென்றல், ப. 41)

எவ்விடத்திலும் தமிழ்மொழி தழைத்தோங்க வேண்டிப் பாடல் புனைந்துள்ளார்.

குழந்தைக்குத் தமிழ்ப்பெயரைச் சூட்ட வேண்டும்
குடும்பத்தில் தமிழாட்சி நடத்த வேண்டும்
குழந்தைஎலாம் தமிழ்ப்பாலைக் குடிக்க வேண்டும்
கொன்றழிக்கும் பிறமொழியைத் தடுக்க வேண்டும்.
தொழும் மொழியாய்த் தமிழ்ஒன்றே கோயில் தோறும்
சூழ்ந்திருக்க வாழ்ந்திருக்கச் செய்ய வேண்டும்
பழக்கத்தில் சந்திப்பில் கலைக் கூத்தின்
பஞ்சணையில் தமிழ்மொழிதான் கொஞ்ச வேண்டும்
(தலைநகரில் தமிழ்க்கோட்டம் எழவேண்டும், மலைத்தென்றல், ப. 42)

தன்மானமிக்க தமிழரின் மாட்சிதனைத் தம்முடைய பாடலில் வெளியிட்டுள்ளார்.

மானத்தை விடச்சொல்லி
வானத்தைத் தந்தாலும்
மானத்தை விடமாட்டான் – தன்
மானத்தை விடமாட்டான்
மொழி உணர்வை விடச்சொல்லி
முத்துமாலை போட்டாலும்
மொழிஉணர்வை விடமாட்டான் – தமிழ்
மொழிஉணர்வை விடமாட்டான்
(புதிய உலக விளக்கு, ப. 12)

நிறைவுரை

கவிஞரது கவிதைகள் மரபுக்கவிதைகளாக இருந்த போதிலும் படிப்பவர்க்கு எளிதில் விளங்கும் வண்ணம் அமைந்துள்ளன. இவரது கவிதைகள் முற்போக்கு வழியில் நடை போட ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன. கவிதையை உயிராகவும், உயிரோடு சம்பந்தப்பட்ட மூச்சாகவும், மூச்சோடு சம்பந்தப்பட்ட காற்றாகவும் நினைத்து வாழ்ந்து வருகிறார். கவிதைமீது தீராத காதல் கொண்டவர். நலிவடைந்து வரும் மரபுக்கவிதைத் துறையை வலிமையுறச் செய்யும் வல்லமை இவரது கவிதைகளுக்கு உண்டு. இவரது கவிதைகள் இன்றைய கவிதை உலகிற்குப் புத்துயிர் அளிக்க வல்லன. சமூக நலனைத் தம் கவிதைகளில் மட்டுமல்லாது நடைமுறையிலும் செயல்படுத்தி

யுள்ளார். தமிழ்க்கவிதையை உலகின் உச்சிக்கே எடுத்துச் செல்லவேண்டும் என்பது கவிஞர்தம் தணியாத வேட்கையாகும்.

முதன்மை நூல்கள்

1. **மலைத்தென்றல்,** பொன். அய்யனாரப்பன், தமிழ்மணி புத்தகப் பண்ணை, சென்னை, 1985.

2. **நவமணிகள்,** மேலது, 1985.

3. **கவிமுரசு,** பொன். அய்யனாரப்பன், பச்சையம்மாள் பதிப்பகம், சென்னை, 1990.

4. **கவிக்குயில்,** மேலது, 1991.

5. **புதிய உலக விளக்கு,** முதற்பதிப்பு, 1992.

6. **புதுப்புனல்,** முதற்பதிப்பு, 1997.

7. **தேனும் திணையும்,** மேலது, 2001.

கவிஞர் பற்றிய குறிப்புகள் அனைத்தும் கட்டுரையாளருக்கு அனுப்பிய கடிதத்திலிருந்தும் (நாள். 19-7-05), 24-07-05 அன்று நேர்காணலின் போதும் பெறப்பட்ட தரவுகளிலிருந்தும் தரப்படுகின்றன.

சேஷாசலம்

கவிஞர் சேஷாசலம் வெளியிட்ட ஆகாசம்பட்டு எனும் கவிதை நூலுக்குக் கி. ராஜநாராயணன் எழுதியுள்ள வாழ்த்துரையின் மூலம் இக்கவிதைத் தொகுப்பு கி. ராஜ நாராயணன் வீட்டில் அரங்கேறியுள்ளது, அதாவது இதன் முதல் வாசிப்பு அவர் வீட்டில் நடைபெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது. கவிஞரைப் பற்றி,

> *கிராமத்தையும், கிராமத்தானையும் அவனது சிந்தனைகளையும் அப்படியே வெண்பாக்களில் வடித்துத் தள்ளியிருக்கிறீர்கள். வெண்பாவை வா என்றால் வருகிறது, போ என்றால் போகிறது; அப்படி வசக்கி வைத்திருக்கிறீர்கள் அந்தப் புலியை... ஏட்டுத் தமிழ் மொழியை மனித மொழியில் - பேச்சுத் தமிழில் - அதிலும் வெண்பாக்களில் பொதிந்து சாதனை புரிந்துள்ளீர்கள்*

என்று கூறுவது இக்கவிதைகளுக்குச் சிறந்ததோர் அறிமுகம்.

கவிஞர் சேஷாசலம், **'என் கவிதைகளைப் பற்றி நானே'** எனும் பகுதியில்,

> "நான் புலவனில்லை, Zoo படித்தவன், முழுநேர விவசாயி... ஆகாசம்பட்டு, எங்கள் கிராமத்தின் பெயர். நான் பழகிய மனிதர்களை வார்த்தையில் படம் பிடித்திருக்கிறேன்"
> "புதுக்கவிதைச் சந்தடியில், நாம் புதுமைப்பித்தனின் வெண்பாக்களை மறந்துபோனதும் அந்தப் பணியைத் தொடராததும், நமக்கு நஷ்டம்தான்; தமிழுக்கும் நஷ்டம்தான். நான் இங்குப் புதுமைப்பித்தனின் பணியைத் தொடர்ந்திருக்கிறேன்"
>
> "எனக்கு நீண்ட நாட்களாக ஓர் ஆசை. கி. ராஜநாராயணன் அவர்கள் உரையாடலில் செய்து பார்த்ததை, நாம் கவிதையில் செய்து பார்த்தால் என்ன என்று..... இம் முயற்சியில் பிறந்ததுதான் ஆகாசம்பட்டு"

எனக் கூறிச் செல்லும் கூற்றுகளால் இவரது கவிதைகளின் தோற்றம், தன்மை போன்றன புலப்படுகின்றன. மேலும், தன்னுடைய கவிதைகள் யதார்த்தமானவை என்பதனை இவரே,

இயல்பாய் இருத்தலும் ஓர் அழகுதானே! என் கவிதைகள்
இயல்பாய் இருக்கின்றன

என்று குறிப்பிடுகின்றார்.

ஆகாசம்பட்டு எனும் தொகுப்பிலுள்ள பேச்சு வழக்குக் கவிதைகளை ஆறு ஆண்டுகளாக எழுதியுள்ளார் கவிஞர். இதில் 60 தலைப்புகளில் 93 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு பொருளில் / தலைப்பில், ஒரு கவிதை / ஒன்றிற்கு மேற்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு கவிதை தவிரப் பிற கவிதைகள் ஒவ்வொன்றையும் 8 வரிகளில் வடித்துள்ளார். பல கவிதைகளில் ஏழாவது அடி இறுதிச் சொல்லின் இறுதி அசையை எட்டாவது அடியாக அமைத்துள்ளார்.

. . . .நான் சமா ளிக்கமாட் டே
ணா (ப. 9)

. . . . . லோல்பட்(டு) அரிசிவாங்
க! (ப. 29)

இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தும் அவர் அனுபவித்த, கண்டுணர்ந்த யதார்த்தமான உணர்வுகள். தான் மற்றும் தன்னைச் சுற்றி வாழும் கிராம மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் தன்மையில் பெரும்பாலான கவிதைகள் அமைந்துள்ளன. விவசாயிகள், அவர்களின் கடன், வறுமை இவற்றிற்குமேல் அவர்களின் சின்னச்சின்ன ஆசைகள் இவற்றை எல்லாம் பிரிக்க முடியாதோ என்ற உணர்வினை இக்கவிதைகள் எழுப்புகின்றன. சிலவற்றை இங்குக் காண்போம்.

விவசாயிகளின் நிலை

வெள்ளாட்டை வித்து
வெரப்பயிர் வாங்கிவந்து
மள்ளாட்டை போட்டேன்
மதிகெட்டு; கல்லாட்டம்
செம்பை வச்சித் தான்
களைவெட்ணேன்? வேற எந்தத்
தெம்பை வச்சி ஜிப்சம் வாங்கு
வேன்? (ப. 23)

தழை, மணி சாம்பலு
சத்துவேணு மிண்ணு
கழுத்துக்கை காதுநகை
போச்சி! – ஒழைச்சொழைச்சி

இப்ப இவனுக்கே
சத்துவேணு மாம்! குளுக்கோஸ்
இப்பவும் ஏறிட்
டிருக்கு! *(ப. 86)*

கடன் பற்றி

ஞாயிறு திங்க(ள்) செவ்வா(ய்)
நாங்கேட்டேன் கைமாத்து;
போய்யா புதன் வியாழன்
பார்ப் போம்ணான்! – நாயலைச்சல்!
வெள்ளிசனி போச்சே!
கடனாளி வாழ்க்கையில்
உள்ளசனி எண்ணைக்குப்
போம்? *(ப. 41)*

வறுமையைக் காட்டுவன

பட்டிலையே கட்ட;
பவுனிலையே நானணிய;
எட்டலையே இந்த
வருமானம்! – முட்டி முட்டி
மீன் ஏறப் பார்க்குந்தான்;
மீண்டும் முயலுந்தான்;
சாண் ஏறும்; வான் ஏறு
மா? *(ப.35)*

மாமிக்கோ சுட்ட செங்கல்;
மாமனுக்கோ கற்பாறை;
நாம் மிதிக்கும் வாச(ப்)படி
நாத்திக்கு! – பூமியே
எந்தலைக்கு; அந்த
மணப்பலகை நம் மகட்கு
அந்தோ தலையணையாய்
ஆச்சு! *(ப.34)*

இந்த ஊர் மக்களின் சின்னச்சின்ன ஆசைகளை,

கிலுகிலுப்பைக் கேங்கி
நடைவண்டிக் கேங்கி
பலப்பம் சிலேட்டுக்கும்
ஏங்கி – செலையாட்டம்
சின்ன வயசெல்லாம்
சேலைக்கும் ஏங்கினமே
சந்ததிக்கு மா, இக்
கதி *(ப. 39)*

உண்டி ஒடைக்கலாம் தான்;
இல்லியே? மேட்ணிக்கு
வண்டியுங் கட்லாந்தான்;
இல்லியே?! – சுண்(ை)டக்கா(ய்)
வத்தக் கொழம்பு வச்சா
ஊரெல்லாம் வாசனை
சுத்துந்தான்; இல்லியே
சே! (ப. 42)

என்றிவ்வாறாக மக்களின் நிலையினைக் குறிப்பிடும் இவர் அரசியலைப் பற்றிய எள்ளல் கவிதைகளையும் வெளியிட்டுள்ளார்.

ஊரிருக்கும்; ஊரில்
தெருவிருக்கும்; வீடிருக்கும்;
டோரிருக்கும்; டோர்க்கும் ஓர்
எண்ணிருக்கும்; – பேரிருக்கும்;
ஓட்டர்லிஸ்ட் இண்றதுல
ஓடிப்போய்ப் பார்த்தாக்கா
பீட்டராம் சேகருக்குப்
பேர்! (ப. 79)

லூப்புக்கும் மீறி
அரசாங்கத்தின் லேப்ராஸ்
கோப்புக்கும் மீறிப்
பிறந்தவன்ல?! . . . ஏப்பா . . !
அவனுக்காச் சொல்லணும் நீ
கள்ளஓட்டுப் போட?
இவனுக்கே எம்டன்
எவன்? (ப. 56)

சில கவிதைகளில் இவரது இயற்கை இரசனையினையும் காணமுடிகிறது.

பூவை வியந்தபடி
போனார்கள்; சிற்சிலர்பூங்
காவை வியந்தபடி
போனார்கள்; ஆவலினால்
இந்த இலைகளையே
இன்னும் வியக்கவச்சான்
அந்தக் கடவுள்
அடா! (ப. 44)

இவரது கவிதைகள் பலவற்றில் இவர் வாழும் மண்ணின் மக்களின் வறுமை உணர்வு, துன்ப உணர்வு வெளிப்படினும் நம்பிக்கையூட்டும் சிந்தனைகளையும் சிலவற்றில் காணலாம்.

அம்பைச் செலவழிச்சேன்;
வில்மட்டும் வச்சிருந்தேன்;
தும்பை செலவழிச்சேன்;
முல்லைமட்டும். . .! – எம்புட்டுக்
கண்ணீர் செலவழிச்சேன்;
நம்பிக்கை வச்சிருந்தேன்;
இண்ணைக்கி வாழ்வை ஜெயிச்
சேன்! (ப. 43)

இவரது ஒரு பிரார்த்தனை எனும் கவிதையும் இதன் அடிப்படையில் அமைந்துள்ளது.

வாட்சி செயின் போல்
வயிறுள்ள பாம்புகளும்
காட்சி குடுக்கிற
காட்டுவழி! – மீட்சிக்கே
உன்னை மகுடியாக்கேன்
என்னை வழிநடத்தேன்
இன்னல் விலகி
விடும் (ப. 9)

இவ்வாறு வாழ்க்கையைப் பொருளாக அமைத்துப் பேச்சுத் தமிழில் இவர் படைத்துள்ள கவிதைகளில் காணப்படும் மொழி பற்றி ஒரு சில சிந்தனைகளை இங்குக் காணலாம்.

சேஷாசலம் தனது கவிதையினைப் பேச்சு வழக்கில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் படைத்திருந்தாலும் இலக்கிய வழக்குச் சொற்களும் ஆங்காங்கே பரவிக்கிடக்கின்றன.

. . . . பருகுதற்கும்
பானமெல்லாம் வேணாமே!
தண்ணீர்கொடு; போதும் (ப. 9)

தாத்தாவின் தொட்டிலில் தான்
அப்பா கெடந்தாராம் (ப. 19)

பறிச்சிக் கிழிஞ்சதுவே
எந்தன் விரல்கள் . . . . .
பறந்து பறந்தே
இறக்கை இழந் தாச்சி (ப. 43)

பூவை வியந்தபடி
போனார்கள்; சிற்சிலர்பூங்
காவை வியந்தபடி
போனார்கள் . . . (ப. 44)

இவ்வாறு இலக்கிய வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளதோடு இலக்கிய வழக்கு இலக்கணக் கூறுகளும் இடம்பெற்றுள்ளன.

சேடையில் ஏர்கட்ணா
சேத்துப்புண்; கார்த்திகை<u>யில்</u>
ஓடையில மீன்பிடிச்சா (ப. 22)

இங்கு இட வேற்றுமை உருபு -இல் இடம்பெற்றுள்ளது.

சீப்பால் சீவுரச்ச
கண்ணாடி ஓரத்தில்
சோப்<u>பால்</u> குளிக்கையில்
பாத்ரூமில் (ப. 69)

இங்குக் கருவி வேற்றுமை உருபு -ஆல் இடம்பெற்றுள்ளது.

. . . . . எள்<u>ளை</u>
அறுக்கறச்சே வந்து போடி
அம்மாடி! சேலை
இருக்கிற<u>தை</u>ச் சுத்திப்போ
டி! (ப. 22)

இங்குச் செயப்படுபொருள் வேற்றுமை உருபு -ஐ இடம் பெற்றுள்ளது.

மத்திய கிளைமொழிப் பகுதியான ஆகாசம்பட்டுப்பகுதிப் பேச்சு வழக்கில் /ற/ பயன்பாட்டில் இல்லை. /ற/ தமிழ்நாட்டின் தென்பகுதியிலும் கோவை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தான் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் ஆகாசம்பட்டு கவிதைகள் பலவற்றில் /ற/ இடம்பெற்றுள்ளது.

வர்றச்சே (ப. 49)
அடிச்சிக்கிறதால் (ப. 58)

இது இலக்கிய வழக்கின் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கலாம். மேலும் 'அண்ணாச்சி' என்ற தென்பகுதிச் சொல்லும் ஒரு சில கவிதைகளில் இடம்பெற்றுள்ளது. ஒரு குறிப்பிட்ட இன மக்களை அழைக்கும் / குறிப்பிடும் சொற்கள் இவை. இவ் இன மக்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு இப்பகுதிக்கு வந்திருக்கலாம். இதனால் இச்சொற்களும் இவர் கவிதைகளில் இடம் பெற்றிருக்கலாம்.

முழுமையாக இக்கவிதைகளை நோக்கும்போது பொருள் செறிவும், எளிமையும், மனத்தில் பதியும் வண்ணம் இருப்பதை உணரமுடிகிறது; அவ்வப்போது இவர் மனத்தில் தோன்றிய உணர்வுகளின் வெளிப்பாடுகளாக இவை அமைந்திருப்பதும்

புலப்படுகிறது. பொதுவாகப் பேச்சுவழக்கு இலக்கியம் அந்த மண் சார்ந்த மக்களுக்கே தெளிவாகப் புரிவன என்ற நிலை இருப்பினும் இவற்றுள் பொதுவாகக் காணப்படும் சிந்தனைகள் படிப்போர்க்கு உணர்வுப்பூர்வமான சுவையினைக் கொடுக்க வல்லன; மனத்தில் ஆழமாகப் பதிய வல்லன; பாதிப்பையும் ஏற்படுத்த வல்லன என்ற நிலையில் பேச்சு வழக்கு இலக்கியங்கள் பெறும் வெற்றியை ஆகாசம்பட்டு கவிதைகளும் பெற்றுள்ளன என்றால் அது மிகையல்ல.

மூலநூல்

சேஷாசலம், **ஆகாசம்பட்டு**, அன்னம் (பி) லிட் வெளியீடு, சிவகங்கை, 1991.

துணை நூல்கள்

கோ. சீனிவாச வர்மா, **கிளைமொழியியல்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1972.

செ. ஜீன் லாறன்ஸ், கு. பகவதி (பதி.), **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்**, 'கருத்தரங்கச் சிறப்புரை', ச. அகத்தியலிங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

ஆவத்தி வெங்கடாசலம்

கவிஞர்

கவிமுரசு ஆவத்தி வெங்கடாசலம் 1946இல் பிறந்தார். இவரது ஊர் இராசிபுரம் வட்டம், குருக்கபுரம். தாயார் பொன்னம்மாள், தந்தை பொங்கியண்ணன். மனைவி சிவகாமி. 4 பெண் குழந்தைகள். ஓர் ஆண் பிள்ளை. முதுகலை படித்தவர். இடைநிலை ஆசிரியராக 34 ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். தற்போது ஈரோட்டிலுள்ள பூலக்காட்டூரில் வாழ்ந்து வருபவர். ஈரோடு தமிழ்ச்சங்கப் பேரவையின் பொருளாளராகவும், ஈரோடு தமிழ்க் கவிஞர் மன்றத் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளவர்.

'அன்புப்பரிசு', 'கடவுளைக் கண்டேன்', 'காலத்தின் கோலம்', 'புனிதமலர்' ஆகிய நாடகங்களை எழுதியவர்; பல மேடைகளில் இவரே இயக்கி அரங்கேற்றியவர். இவற்றுள் 'புனிதமலர்' நாடகம் இருபத்தெட்டு ஊர்களில் மேடையேறியுள்ளது.

1968இல் திருச்சி வானொலி கவியரங்கப் போட்டியில் 'வீரிய மக்காச்சோளம்' என்ற கவிதைக்கு மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் மாவட்ட முதல் பரிசு பெற்றவர். 1986இல் தாய் மண் இலக்கியக் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களால் 'கவிமுரசு' பட்டம் பெற்றவர். தாம் எழுதிய சிறந்த கவிதைகளுக்காகப் பரிசும், பணமும், சான்றிதழும் பெற்றவர். தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய கட்டுரைப் போட்டியில் மாவட்ட முதல் பரிசினை அடைந்தவர்.

இருநூறுக்கும் மேற்பட்ட கவியரங்கம், பட்டிமன்றம், தனிச் சொற்பொழிவுகள் ஆகியவற்றில் கலந்து கொண்டவர். முல்லைச்சரம், ராணி, கோவைச்செய்தி, நிலா, வாரமுரசு, தினமலர், தினகரன், வளரும் தமிழ் உலகம், துளி, தமிழ்ப் பேழை, தாய்மண், கவியமுதம், பொன்மனம், மனம், உழைக்கும் சக்தி ஆகிய இதழ்களில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. இவர் முருகன்மீது எழுதிய பக்திப் பாடல்கள், சீர்காழி கோவிந்தராசனின் மகனான புகழ்பெற்ற டாக்டர் சிவ. சிதம்பரம் அவர்களால் திருச்செந்தூர், பழனி, சேலம் போன்ற நகரங்களில் பாடப்பட்டுள்ளன.

இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றில் ஏற்றமிகு சிந்தனையாளர் என்பதை இவரது படைப்புகள் காட்டுகின்றன; தமிழ் மட்டுமின்றி ஆங்கிலப் புலமையும் உடையவர். வானூர் மதியம், ஆனூர் அம்மன், முருகன் அந்தாதிக் கோபுரமும் பாமாலைத் தோரணமும் ஆகிய பக்தி நூல்களையும், ஒரு பொம்மலாட்டம் என்ற சிறுகதைத் தொகுப்பையும் தந்தவர். **An Obvious study in Kural** எனும் சிறு ஆங்கில நூலையும் எழுதியவர்.

பாவேந்தரின் அழகின் சிரிப்பை நினைவுகூர வைக்கும் தமிழ் முல்லை எனும் கவிதை நூலும், சிறந்த காதல் காவியமாக விளங்கும் மோனம் கலைத்த மோகனம் எனும் புதுக்கவிதைத் தொகுப்பும், பூவும் புயலும், வான் நீலமல்ல இது வங்கக் கடல் நீலம் ஆகிய சமூகச் சிந்தனை மிக்க கவிதை நூல்களும் தந்தவர். இவரது கவிதைப் படைப்புகளுள் முதலிரண்டின் அறிமுகமும், பின்னிரண்டின் சிறப்பும் அறிதல் இக்கட்டுரையின் நோக்காகிறது.

தமிழ் முல்லை

> *என் கண்கள் இயற்கைப் படைப்புகளை, உன்னதங்களைப் பார்க்குந் தோறும் என் மனத்தில் வளைய... வளைய வந்து ... வந்து எண்ணமிட்டு இனிய நறுங் கவிதைகளாகச் சித்தரிக்க வைத்தது. அதுவே தமிழ் முல்லை எனும் நூல் வடிவம் (என் இதயம் பேசுகிறது, ப.viii)*

என்கின்றார். எளிய இனிய நடையில் தமிழின் சிறப்பை வெளிப்படுத்தும் இந்நூலில் இருபது தலைப்புகள் உள்ளன. ஒவ்வொரு தலைப்புக்கும் பத்து பாட்டுகள் வீதம் இருநூறு கவிதைகள் இடம்பெறுகின்றன. தமிழே வாழ்க எனும் தலைப்பில் உள்ள முதல் கவிதை மட்டும் எண்சீர் விருத்தத்திலும், ஏனையவை அறுசீர் விருத்தங்களிலும் வருகின்றன. முல்லைக்கொடிப் பூக்கள் கவிஞருக்கு, மரகதப் பட்டில் முத்து மணிகளைப் பதித்தாற் போலத் (ப. 21) தெரிகின்றதாம். இதுபோல் நல்ல நயமான உவமைகள் பலவற்றை நூலெங்கிலும் காணமுடிகின்றது.

நித்திரை செய்த போதும்
நீள்கனா உற்ற போதும்
சித்தமே மாறி நல்ல
செய்கையை இழந்த போதும்
வித்தகத் தமிழே! உன்றன்
வியனெழில் மறவேன் (ப. 72)

என்ற கவிதை கவிஞரின் தமிழ் உள்ளத்தை வெளிப்படுத்து கின்றது. சூரியன், நிலவு, மழை, அருவி, காடு, தென்றல் போன்ற இயற்கையின் துணையுடன் தமிழையும், தமிழ்நாட்டையும் சிறப்பிக்கும் சீர்மிகு இலக்கியப் படைப்பாக இந்நூல் மிளிர்கின்றது.

மோனம் கலைத்த மோகனம்

வசன கவிதை வார்ப்பான இந்நூல் எண்ணுந்தோறும் உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பினை உண்டாக்கி, உயிருக்கு உரம் சேர்க்கும் காதலைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது; கவிஞர் வாழ்வில் அடைய முடியாமல் அசைபோட்டு வந்த காதலை, கற்பனை மாளிகையில் உட்காரவைத்து, எண்ண வீதியில் அத்தியாயம், அத்தியாயமாக உலாவரச் செய்கிறது. இந்நூல் இவர்தம் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக எழுந்து, எழில் சிந்தும் இனிய சொற்களால் **மோனம் கலைத்த மோகனம்** என்ற தலைப்பில் ஓர் உணர்ச்சிச் சித்திரமாக உருவாகியுள்ளது. ஆசிரியரைக் கவர்ந்த மோகனராகமே மோகனா என்ற காவிய நாயகியாகக் கவிதைகளில் உலா வருகிறார் (உங்களோடு, கொஞ்சம் மனம் திறந்து. . . , ப. 25).

காதல் தந்த இன்பம், அது ஏற்படுத்திய வடு, வடு தந்த கற்பனை சுகம், மீண்டும் காதலியைப் பார்த்த போது ஏற்பட்ட தவிர்க்க இயலாத கற்பனை சுகம் போன்றவற்றைக் கொண்டமைந்த அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டும் கவிதைத் தொடர்கள் சில:

தோப்பை விட்டு விலகி; தொலை. . . .
தூரத்தில் நிற்கும் ஒற்றைப் பனையாய்
இப்போது
நீ இருப்பதை நினைக்கும் போதுஎன்
நெஞ்சம் கந்தலாய்க் கிழியுதடி (ப. 32)

கூடு மாறிய பறவைகளைப் போல்
வீடு மாறிய நாம் ஒருவருக்கொருவர்
மீண்டும்
சந்திக்காமல் இருந்திருந்தால் இதுபோல்
சிந்தனையைச் செதுக்க உளி கிடைத்திருக்காது (ப. 38)

இப்போ தெல்லாம் தூக்கம்
எனக்கு வருவதே இல்லை!
ஏன்!
அந்த இடத்தை நிரந்தரமான ஓர் ஏக்கம்
ஆக்கிரமிப்பு செய்து கொண்டதனால் (ப. 40)

அவரவர் வாழ்க்கை இப்போது தடுப்புச்
சுவராக இருந்து காயப்படுத்துகிறது (ப. 46)

உயிரே! மோகனமே! உன்னை, மன
ஊஞ்சலில் அமரவைத்து;
எப்போதும்
மௌனமாய் ஆட வைப்பேன் (ப. 87)

பரவாயில்லை! ஒருதலைராகம் சுவரொட்டி
உன்னை
எனக்கு அடையாளம் காட்டி விட்டது (ப. 115)

பூவும் புயலும்

இதில் பூ, புயல் என இரண்டு பகுதிகள் உள்ளன. இவற்றுள் பூ என்பது மரபுக் கவிதைகளையும், புயல் என்பது புதுக்கவிதைகளையும் குறிக்கின்றன. கவிஞர் இந்நூலின் தொடக்கத்தில் எனது வேலை என்னும் தலைப்பில்,

ஏற்றதொரு கொள்கையிலே இடறி வீழேன்!
எதுவரினும் புயலாக எதிர்ப்பேன்! அஞ்சேன்!
சாற்றரியச் சமுதாயப் புற்று நோய்க்குச்
சாவுமணி அடிப்பதுவே எனது வேலை! (ப. 1)

என்கின்றார். இதன்வழி, சமூகக் கடமையை முதன்மையாகத் தாம் எடுத்துக் கொண்டிருப்பதை உணர்த்துகிறார். இவர்தம் கவிதைகளில் கருத்தாழமும், உவமைச் சிறப்பும், தத்துவ நுட்பமும் கலந்து கிடப்பதை,

இறந்தழியும் உடம்பென்ற தேரில் ஏறி
இருவினையும் மும்மலமும் சூழ வாட்டும்
உறவார்ந்த சுற்றமொடு பிணியும் மூப்பும்
உறுகின்ற உயிர்ப்பயண மாய வாழ்வில்; (ப. 25)

எனும் தொடர்கள் காட்டுகின்றன. விடுதலை பெற்று ஐம்பதாண்டுகள் கழிந்தும் சமுதாயத்தில் பசியும் பட்டினியும் இன்னும் விலகிய பாடில்லை என்பதனை,

தனியொருவன் சோறின்றித்
தவிப்பதையே பார்த்திருப்போன்
தலையைச் சீவு! (ப. 28)

எனும் தொடர்கள் உணர்த்துகின்றன. மேலுமிது, வறுமையை ஒழித்துக் கட்ட அரசு தவறும் போது தனி மனிதன் பொறுப்பினைத் தன் கையில் எடுத்துக் கொண்டு கடமையாற்ற

வேண்டும் என்ற விழிப்புணர்வையும், வேகத்தோடு கூடிய விவேகத்தையும் தருகின்றது. பசித்திருப்பவனை அடையாளம் கண்டு கொண்ட பின்பும் பாராமுகமாகப் போகின்றவனை, மனித நேயமில்லாதவனை அழித்து விடு எனக் கவிஞர் கூறுகிறார். பாரதியோ, "தனியொருவனுக் குணவில்லை யெனில் செகத்தினை அழித்திடுவோம்' என்றார். அதாவது தனி மனிதனுக்கு உணவு அளிக்க முடியாத உலகம் இருந்து என்ன பயன்? அழிந்து ஒழியட்டும் என்றார். ஆயின் இக்கவிஞரோ உலகு அழிவதும், அழிக்கப்படுவதும் எளிதன்று என்பதால் உடனடியாகச் செயல்படுத்தக் கூடிய ஒரு வழியாகத் தனிமனிதனை அழித்து விடு, என்கிறார். ஆனால் வறுமை ஒழிய, சமூகத்தை மாற்ற வேண்டும்; தனி மனித அழிப்பு தக்க தீர்வு ஆகாது. இருப்பினும், உத்வேகத்தை எழுப்பும் இக்கவிதை ஒவ்வொரு மனிதனும் சமூகக் கடமையை ஏற்றுக் கொண்டு சமூகத்தை உணர்ந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

பறத்தல் என்றோ எனும் தலைப்பில் அமைந்த கவிதையில் அறமற்ற செயல்புரிவோரையும், அரசியல் வாதிகளையும் பற்றிக் கூறுவதாக அமையும்.

ஏய்த்துயர்ந்தே மிகச்சுரண்டி எள்ளிநகை யாடும்
எத்தரினைச் சந்தியிழுத் தடிப்பதுவும் என்றோ (ப.12)

இவ் அடிகளில் சந்தியில் நிறுத்தி அடிக்க வேண்டும் என்று கோபத்தோடு கூறுவது நல்ல சாட்டையடியாக இருக்கிறது.

எங்கே எனும் தலைப்பில், மனிதருக்குள்ளேயே இறைவன் இருக்கிறான்! அவனால் படைக்கப்பட்டவனே இறைவன் என்பதை,

வானத்தைக் கூரையாகக் கொண்டு வாழும்
வழியற்ற வறியோரின் ஏழ்மை நீங்க;
தானமிட விரும்புகின்ற உள்ளம் கொண்ட
தனம்மிகுந்த வள்ளலன்றோ உலகின் தெய்வம் (ப. 33)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்தை இக்கவிதை நினைவூட்டுகிறது. வரதட்சணைக் கொடுமையை **வீறுகொண்டெழுக** எனும் கவிதையில்,

பேசுகின்றோம் பெண்ணுரிமை!
பேசிஎன்ன கிழித்து விட்டோம்
வீசுந்தென்றல் 'அமுதா' போல்
விளங்குவோர்கள் கோடி! கோடி!

'காசு'பெரிதாய் எண்ணாமல்
காளையர்கள் முன்வந்து
ஆசு'சேர்'வ ரதட்சணையப் பேய்"
அழிக்க வீறு கொண்டெழுக! (ப. 17)

என்று சாடுகின்றார்.

பூவும் புயலும்

இன்றைய உலகின் தேவை மனிதநேயம். இது அன்றும் இன்றும் அனைவராலும் வலியுறுத்தப்படுவது. அவ்வகையில்,

மானுடம் வளர – கவி
மகுடம் புனைகிறேன்!
அநீதி
நிறைந்திடும் போது – கண்
நீரில் நனைகிறேன்! (ப. 71)

என்கின்றார். இது வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் கருத்தினை உள்ளடக்கியதாக உள்ளது. கண்ணீரில் நனைகிறேன் என்ற கூற்று கூடுதலாகவே மனத்தைத் தொடுகின்றது. காலங்காலமாக வகுப்பறைகளில் ஆசிரியர் கரும்பலகையில் எழுதி அழிப்பதென்பது ஒரு நிகழ்வு. இதனைக் காதலுக்குரிய உவமப்பொருளாக்கி,

கரும்பலகை அல்ல
காதல்
எழுதி அழிப்பதற்கு
அது கல்வெட்டு! (ப. 72)

என்று கூறுகிறார். காதலின் உயர்வை வெளிக்காட்டும் இக்கவிதை நறுக்குத் தெறித்தாற்போல் மனத்தில் பதிகிறது. நட்சத்திரங்கள் என்ற தலைப்பில் உள்ள,

பச்சைக் கொடி இல்லாமலேயே
பளிச்சிடும்
பிச்சிப் பூக்கள்! (ப. 74)

என்ற கவிதையானது புதிய கற்பனை, புதிய வடிவம் தாங்கி, சீரிய சிந்தனையின் வெளிப்பாடாகத் திகழ்கிறது.

நிலவு சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று உலகுக்கு அளிக்கிறது. ஆயின் ஒளியைக் குறைவாகத் தந்தாலும் தானாக வழங்குவதனை,

கொஞ்சம்தான் என்றாலும்
கெஞ்சாமல் யாரிடமும் போய்
பிறர்க்கொளி
தந்திடும் சுயமரியாதை
தெரிந்த முதல் ஈ.வெ.ராக்கள் (ப. 74)

என்று கூறுகின்றார். இதில் நிலவின் பெருநோக்குச் சுயமரியாதையின் வெளிப்பாடாகக் காட்டப்படுகிறது. உழைத் துழைத்துப் போதிய ஊதியம் இல்லாமல் காயம்பட்டு உள்ளங் குமுறும் உழைப்பாளிகளின் வியர்வைத் துளிகளை, விண்ணில் தோன்றும் நட்சத்திரங்களாக எண்ணிப் பார்த்து,

விண்மீனாய் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி!

என்கின்றார் பாவேந்தர். இக்கவிஞரோ மாறுபட்டு,

இளம் விதவைகள் உளம்
வெறுத்துப் போய்
கோபத்தால்
வீசி எறிந்திட்ட
வைரக்கல் மூக்குத்திகள்! (ப. 75)

என்கிறார். இதில் நட்சத்திரங்களை வைரக்கல் மூக்குத்திகள் என உவமைப்படுத்துகிறார். இளம் விதவைகள் உளம் வெறுத்துப் போய் வீசியெறிந்த என்று கூறியிருப்பது மனத்தை நெருடுவதாக உள்ளது. அதிர்ச்சி எனும் தலைப்பில் வரும்,

பச்சைக் கொடி இல்லாமலேயே
பளிச்சிடும்
பிச்சிப் பூக்கள்! (ப. 74)

என்ற கவிதை நடைமுறை எதார்த்தத்தையும், இன்றைய சூழலையும் எடுத்துக் காட்டுகிறது.

பணநாயகத்துக்கு வாய்தவறி வைத்த
பெயரல்லவா . . . ஜனநாயகம்?
ஜனநாயகம் அமைத்தோம்! அவ்வப்போது
'ஜனகனமன . . .'
பாடுவதன்றி வேறென்ன சமைத்தோம்?

என்ற தொடர்களிலும், இதே கவிதையின் இறுதியாக வரும்,

பாவம்
நடைவண்டி கேட்கிறாள் எங்கள் பாரதத்தாய் (ப. 87)

என்ற அடியிலும் நாட்டு நடப்பு அப்பட்டமாக அங்கதச் சுவை ததும்ப வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

வான் நீலமல்ல இது – வங்கக் கடல் நீலம்

'செம்மாந்த தமிழ், இறுமாந்த நோக்கு, தளராத எழுத்து, தகை சான்ற பொருண்மை என இந்நூலைச் சுருங்கக் கூறுதல் இயலும். இந்நூல் தமிழர் தம் இன்றைய அவலத்தையும், தமிழ்ச் சமுதாயம் தன் பண்டைய பண்பாட்டுச் சுவடை விட்டு விலகிச் செல்வதையும், சமூகத்தின் அவலங்களுக்கு வித்திடும் ஊழல், கையூட்டு, சுரண்டல் போன்ற தீயசக்திகளின் கொடூரத்தையும் இக்கவிதை நூல்

> **கோணல் வகிடு கொண்ட இந்தக்**
> **குமுகாயத்திற்குக் கவிதைச் சீப்பால்**
> **நேர் வகிடு எடுப்பேன்!**
> **வீணது விலக்கி – என்னால்**
> **ஆனது கொடுப்பேன்** (உங்களுடன் சில மணித்துளிகள், ப. 29)

என்ற சமுதாயச் சிந்தனையோடு, சமூக மாசுகளைக் களைய முயன்றுள்ள கவிஞரின் உள்நோக்கம் புதுமையானது.

கடுமையான வாழ்க்கையை நகர்த்திச் செல்ல மனஉறுதி தேவை. அதனைப்பெற வாழ்க்கை நடப்புகளை எண்ணி மருண்டு விடக்கூடாது. அது இயல்பானதே என்ற நம்பிக்கை நம் உள்ளத்தில் எழ வேண்டும். கவிஞர் இதனை உணர்த்த, பலரும் அறிந்த எளிய காட்டுகள் பலவற்றை வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். வாழ்க்கை எனும் தலைப்பில் அமைந்த,

> **தெளிந்த பரப்பில் குளம்!**
> **ஆனால்**
> **அதனுள் பாம்பும், நண்டும் உண்டு!**
> **ஆம்!** (ப. 57)
> **வாழ்க்கை கூட அப்படித்தான்!**

என்ற இக்கவிதை இத்தத்துவத்தை உள்வாங்கியே எழுந்துள்ளது. பிரவேசம் என்னும் தலைப்பில் அமைந்த,

> **கோடி ரூபாய் செலவில்**
> **குடி இருக்கக் கட்டினான் ஒரு வீடு!**
> **கிரக**
> **பிரவேசம்! அன்றே . . . பூகம்பம்** (ப. 114)
> **பிரவேசம்! . . . கண்டான் மண்மேடு**

என்ற கவிதை இயற்கையின் சீற்றத்தை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. இன்றைய அசிங்கமான அரசியல் நிகழ்வுகளின் நிலைகளைக் காட்டுவதாக,

கட்டு மரங்களைக் கடலில் விடாமல்
காட்டில் விட்டு வேடிக்கை பார்க்கிறோம் (ப. 59)

என்ற கவிதை அமைகிறது. சமுதாயம் என்ற தலைப்பிலான மூன்று வரிகளில் அமைந்த,

தரிசுநிலம் அருகில் . . .
மண்வெட்டிகள்
காம்பு கழன்று கிடக்கின்றன! (ப. 55)

என்ற கவிதை உழைப்பு மதிக்கப்படவில்லை அல்லது உழைப்பு சுரண்டப் படுகிறது என்ற மறைபொருளை உணர்த்துகிறது. தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு நல்ல காட்டாகவும் ஆகிறது.

ஆண்டவா போதும்! போதும் எனும் தலைப்பில் அறுசீர் விருத்தங்களால் ஆன 21 பாடல்களைக் கொண்டு அமைந்த கவிதைகளில் சமூக அவலத்தின் அலங்கோலங்கள் தாண்டவமாடுகின்றன. தொடக்கத்தில் அமைந்த எட்டுப் பாடல்கள் ஏர்வாடி மனநலக் காப்பகத்தில் நடந்த நிகழ்வுகளை மையப்படுத்துகின்றன; சமூகக் கொடுமைகளை உள்ளம் கரையுமாறு படம்பிடித்துக் காட்டுகின்றன; பெண்படும் பேரிடர்களுக்கு வடிகாலாகச் சில தீர்வுகளைக் கொடுக்கின்றன. இத்தலைப்பில் வரும்,

மனநலக் காப்ப கத்தில்
மாபெரும் செந்தீ! வைத்தோர்
மனநலம் உள்ளோர் தானா?
மனிதராய் பிறந்தோர் தானா? (ப. 144)

என்ற சீரிய தொடர்கள் வினாக் கனல் எழுப்புகின்றன. **கடிக்காத பல்** என்ற தலைப்பில் அமைந்த,

எவரையும் கடிக்காத பல்
எதற்குண்டு? காதில் விழுந்தது
கேள்வி!
கண்களில் . . . சுவரில் மாட்டப்பட்ட
கண்ணாடிமேல் தெரிந்தது சீப்பு! (ப. 93)

என்ற கவிதை சிரிக்க வைத்து, விடைதேடிச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

காலங்காலமாகக் கவிஞர்கள் நிலவைப் பாடுபொருளாகக் கொண்டு பாடிவருகின்றனர். அவற்றுள் காதலியின் முகத்திற்கு ஒப்பிட்டுப் பாடியவையே அதிகம். ஆனால் இவரோ நிலா என்ற தலைப்பில்,

பசித்த குழந்தை உன்னைப்
பார்த்துச் சிரிக்கிறது
இட்லி
ஒன்றைக் கண்டு கொண்டதால் (ப. 114)

ஓர் ஏழைக் குழந்தையின் பார்வையில் நிலா இட்லியாகக் காணப்படுகின்றது. கவிதையின் வடிவமும், உருவகத் திறமும் படிப்போர் நெஞ்சைச் சற்று நெகிழச் செய்கின்றன.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் எவ்விதமான துன்பமும் இருக்காது. இக் கருத்தினை மையப்படுத்தித் தொடங்கும் கவிதை,

அலைமோதிக் கரைசிதறிப் போவ தில்லை!
அயல்சேர்க்கை காய்காய்க்க மறுப்ப தில்லை
மலைமோதி வளி, காயம் அடைவ தில்லை!
மலர்வாடி மணமிழந்து விடுவ தில்லை! (ப. 139)

சுதியின்றி பாட்டின்பம் பெறுவ தில்லை!
சுடரின்றி இருள்விலகிப் போவ தில்லை!
எதிலெனினும் நீதியின்றி உண்மை இல்லை
இடையறாது நாமுழைப்போம்! துன்பம் இல்லை!
(ப. 140)

என்று முடிகின்றது. மனமானது மும்மலங்களை விட்டொழித்து இருவினைக்கு ஆட்படாமல் எதையும் விருப்பு வெறுப்பு இன்றிப் பார்க்கும் மனப்பக்குவம் பெற்றுவிட்டால் அதுவே ஞானம் பெறுவதற்கான வழி என்பதை,

பூகோளத்தில் எந்தப் புள்ளியில்
பயணம் தொடங்கினோ மோ
அந்த
புள்ளிக்கே வந்து சேர்கிறோம்! (ப.160)

என்ற கவிதை தெளிவுபடுத்துகின்றது. இது ஞானம் கைகூடத் துணைபுரிவதுடன் பிறப்புத் தத்துவத்தை அசை போட வைத்து அமைதி காணவும் செய்கிறது. வரும்போது ஒன்றுமின்றி வந்தோம்; போகும் போதும் ஒன்றும் இல்லாமல் போகிறோம் என்கின்ற சூட்சுமம் இக்கவிதையில் இழையோடுகின்றது. இது

கவிஞரின் சிந்தனா சக்தியின் ஆழமும் அகலமும் விண்ணுக்கும் மண்ணுக்குமாக வியாபித்திருப்பதைப் புலப்படுத்துகின்றது.

சமூகத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, சமுதாய எழுச்சியுடன் எழுந்து, தமிழுக்குப் புதிய ஆற்றலையும், புதிய உயிர்ப்பையும் தந்துள்ள ஆவத்தியாரின் கவிதைகள் சமுதாய முன்னேற்றத்திற்கு நல்ல விதையாக அமையும் எனில் அது மிகையாகாது.

மூலநூல்கள்

1. **தமிழ் முல்லை,** சிவகாமி பதிப்பகம், ஈரோடு, 1999. (பக். 80; விலை ரூ.20).

2. **பூவும் புயலும்,** சிவகாமி பதிப்பகம், ஈரோடு, 1998. (பக். 116, விலை ரூ.30).

3. **மோனம் கலைத்த மோகனம்,** சிவகாமி பதிப்பகம், ஈரோடு, 2001. (பக். 148, விலை ரூ.35).

4. **வான் நீலமல்ல இது வங்கக் கடல் நீலம்,** சுஜித்தா வெளியீடு, சென்னை, 2002. (பக். 160, விலை ரூ. 45).

ரவி சுப்பிரமணியன்

இன்றைய நிலையில் கவிதைகளுக்குரிய இலக்கணங்களாக, தெளிவு, எளிமை, சுருக்கம், பொதுவான, சிறப்பான பொருள், சிறந்த மொழி இவற்றைக் கூறலாம். இந்த இலக்கணங்கள் கொண்ட கவிதைகளே போற்றப் பெறும்; காலஓட்டத்தில் தானும் ஓடாது மக்கள் மனத்தில் பதிந்து நிற்கும்.

ரவி சுப்பிரமணியனின் 'ஒப்பனை முகங்கள்' 1990இல் முதற்பதிப்பாக வெளிவந்த கவிதைத் தொகுப்பு. இவர் இந்தத் தொகுப்பின் என்னுரையில்,

> கடந்த எட்டு வருடங்களில் எழுதியதில் கவிதை என்று எனக்குப் பட்டதை மாத்திரம் இதில் வைத்திருக்கிறேன்

என்று கூறுகிறார். இந்தக் கவிதைத் தொகுப்பினை, பாலகுமாரனின் முன்னுரையும், பாலாவின் விமர்சன உரையும் அறிமுகப்படுத்துகின்றன.

பொய்யற்றவை
ஸ்நேகம் உள்ளவை
எளிமையானவை
வாழ்க்கைக் கலையை வியப்பவை

எனப் பாலகுமாரன் தன் முன்னுரையில் இக்கவிதைகளின் இயல்புகளை எடுத்தியம்புகின்றார். பாலாவின் விமர்சனம் கவிஞரின் வளர்ச்சியை மேலும் எதிர் நோக்கி அமைகிறது.

ஒரு மூத்த கவிஞன் என்ற வகையிலும் ஒரு விமர்சகன் என்ற வகையிலும் ரவி சுப்பிரமணியத்தை நான் அன்போடு எச்சரிக்கிறேன். இந்நூலின் பிற்பகுதியில் இடம்பெற்றுள்ள காதற் கவிதை நாட்டுப்புறப் பாணியில் சொற்கூட்டமும் ஒலிக்கூட்டமு மாய்த் தேய்ந்து நிற்கின்றது. புதுக்கவிதை என்ற முகத்திரை பெற இயலாது கழன்று நிற்கிறது. கவிதையின் வழித்தடத்தை மறிக்கும் இத்தகைய வெளியீட்டு முறைகளிலிருந்து விடுதலை பெறுவதன் மூலம்தான் ரவி சுப்பிரமணியன் ஒரு புதுக்கவியாக மலரமுடியும். அத்தகு ஆற்றல் அவருக்கு உள்ளது என்பதைக் காட்டும் கவிதைகள் இந்நூலில் உள்ளன என்று கவிஞரின் கவிதையாற்றல் மேலும் மெருகு பெற ஆற்றுப்படுத்துகிறார்.

இந்தக் கவிதைத் தொகுப்பில் 36 தலைப்புகளில் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கேள்வியாக, கேள்வி - பதிலாக, உரைநடையாக எனக் கவிதைகள் அமைந்துள்ளன. பல நீண்ட கவிதைகளுடன் சில மூன்று வரிக் கவிதைகளும் காணப்படுகின்றன. இக்கவிதைகளில் கவிஞரின் தனிமனிதச் சிந்தனைகளும், சமுதாயச் சிந்தனைகளும் வெளிப்படுகின்றன. அஃறிணைப் பொருட்களும் சில கவிதைகளில் பாடுபொருளாக அமைகின்றன. இக்கவிதைத் தொகுப்பினுள் சிறந்த சில கவிதைகளை இங்குக் காணலாம்.

முதற் கவிதை 'ஒப்பனை முகங்கள்' என்ற கவிதை. இயல்பு போதும் வேடம் வேண்டாம் என்பதைச் சொல்லும் கவிதை. இயல்பு நிலையானது வேடம் கலைந்து விடக் கூடியது என்பதை இவ்வாறு தருகிறார் கவிஞர்.

ஒப்பனையே
உனக்கேன்
முகமாய்ப்
போனது?
இயல்பு இழிவென்று
யார் சொன்னது?
ஒரு நாள்
அழுகை வரும்
எது தடுத்தாலும்
நில்லாது
கண்ணீர்
கலைக்கும் – உன்
ஒப்பனை (ப. 17)

'இன்றைக்குத் தானே' என்ற தலைப்பில் அமையும் கவிதையில் இயல்பற்ற, தன்னலம் மிக்க உலகைக் காட்சிப் படுத்துகிறார்.

எனக்கே தெரியாது
என்னைச் சுற்றி
இத்தனை கண்கள் இருக்குமென்று
பால்யத்தில் என்னோடு
சிநேகமாம்
எனக்கே மறந்து போனதை
சொன்னது ஒரு கண்
படிக்கும் போது பழக்கமாம்
சிரமப்படுத்தி
உறுதிப்படுத்தியது ஒரு கண்

என் காதலிக்குத் தோழியாம்
சொல்லிக் கொண்டு வந்தது
ஒரு கண்
எனக்கு ஒரு முறை
மயக்கம் வந்த போது
தாங்கிப் பிடித்ததாய்
சொன்னது ஒரு கண்
அடேயப்பா
என்னைச் சுற்றி
எத்தனைக் கண்கள்
இத்தனை நாட்கள் ஏன்
இருட்டில் இருந்தன
ஓ
இன்றைக்குத் தானே
கிடைத்த தெனக்கு
நாற்காலி (பக். 23, 24)

சமுதாயத்தில் காணப்படும் வன்முறைகளும் வெறிச் செயல்களும், வேரிலேயே களையப்படாத காரணத்தால் மிகுதியாகிப் போனமை, கவிஞரின் மனத்தில் உருவாக்கிய பாதிப்பைப் புலப்படுத்துகின்றது. 'தலையுதிர் காலமா?' என்ற கவிதை,

சீழ்பிடித்துப் போனது
  என் தேசம்
காயமாய் இருக்கும் போதே
  கட்டுப்போடாத
  காரணத்தால்
சீழ்பிடித்துப் போனது
  என் தேசம் (ப. 20)

என்று தொடங்கி, தொடர்கிறது. இவருடைய 'வெயிலை உணர்' என்ற கவிதை மிகச் சிறந்ததொரு கவிதை. அதிகாரிகள் எப்படியிருக்க வேண்டும், தன் துறையை எப்படி நிர்வகிக்க வேண்டும் என அறிவுரை கூறும் பாங்கில் அமையும் கவிதை இது.

ஏசி ரூமுக்குள் இருந்து கொண்டு
வெயிலைப் பற்றி
விவாதம் நடத்தாதே
வா
இறங்கி
வெயிலுக்கு
பாதம் சுட

வியர்வை வழிய வழிய
நட
"உஸ் அப்பாடா"
பெருமூச்சு வாங்கு
எங்கேனும்
நிழல் கிடைக்காதா
ஏங்கு –
வெயிலை உணர்!
வியர்வையை அறி!
இப்போது யோசி,
அப்புறம்
போய்ப் பேசு! *(ப. 19)*

எளிய, சிறிய சொற்கள் ஆயின் ஆழமான பொருள். கவிதை சிறக்கிறது. இந்தச் சமுதாயத்தில் எல்லாம் மாறுகின்றன. ஆயின் ஏழ்மை மட்டும் நிரந்தரமாக இருப்பதை 'நேற்றும் இன்றும்' என்ற கவிதையின் இறுதியில்

எல்லாம்
    மாறுகிற
எங்கள்
    தேசத்தில்
நேற்று
    ஏழைகள்
இன்றும்
    ஏழைகள் *(ப. 38)*

எனச் சுட்டுகிறார். விஞ்ஞானம் வளர்கிற அளவுக்குச் சமுதாயம் உயரவில்லை. எனவே விஞ்ஞானத்தைப் பிறகு வளர்க்கலாம். முதலில் வாழ்க்கையைக் கண்டு பிடிக்கலாம் என்று சொல்கிறது இவரின் இன்னொரு கவிதை (ப. 39).

சமுதாயத்தில் காணப்படும் இழிநிலைகளுக்குக் காரணம் மனிதன் மனிதப் பண்பு அற்றவனாக இருப்பதுதான். எனவே மனிதன் மனிதனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். 'மனிதாபிமானம்' என்ற கவிதையில் (ப. 27) அக்கம் பக்கத்தில் நடக்கும் துன்பங்களைக் கண்டு நமக்கேன் வம்பு என மரித்துப் போனதாக மனத்தைக் காட்டும் இவர், மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற தனது ஆசையை 'மனிதனாக' என்ற கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

ஒவ்வொருவனுக்குள்ளும்
கனவு

பெரிய மனிதக் கனவு
பணத்துக்காய்
பதவிக்காய்
புகழுக்காய்
ஏங்கும் கனவு
மனிதா! மனிதா!
என்றேனும் ஒரு நாள்
ஓர் இரவேனும்
மனிதனாகக்
காண்பாயா கனவு (ப. 37)

இச்சிந்தனையின் தொடர்ச்சியை இன்னொரு கவிதையில் கேள்வி - பதில் மூலம் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறார் இவர். 'ஒரு கேள்வி - ஒரு பதில்' என்ற தலைப்பில் அமைந்த கவிதை அது.

நாம்: ஒரே ஒரு
கௌதம புத்தனின்
கர்ப்பத்துக்குப் பின்
உன்
கர்ப்பப்பைக்
காலியாய்க் கிடக்கிற
காரணமென்ன?

போதிமரம்: வருபவனெல்லாம்
புத்தனாய்ப்
போக எண்ணி
வருகிறானே தவிர
சித்தார்த்தனாய்
எவனுமிங்கு
வருவதே யில்லை (ப. 62)

புத்தனாக ஆவதற்குப் போதிமரம் காரணமில்லை. சித்தார்த்தனாய் இருக்க வேண்டும், என்பது புதியதொரு சிந்தனை வெளிப்பாடு. ஒவ்வொரு மனிதனுடைய மேன்மைக்கும் அவன்தான் காரணமே ஒழிய, பிறர் காரணமில்லை. எனவே சித்தார்த்தனாய் இருந்தால் மட்டுமே அவன் புத்தனாய்த் திகழ்தல் இயலும் என்பது ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்கத் தூண்டும் சிந்தனை. இவ்வாறு சமூகத்தையும் தனி மனிதனையும் பாடிய கவிஞரின் கவிதையில் காதலுக்கும் இடமுண்டு.

இரத்த அழுத்தக் கருவியின்
துணியைக்
கையில் கட்டி
காற்றுப் பையைக்

கனமாய் அழுத்த
மெல்ல . . . . மெல்ல. . . .
எகிறும் பாதரசமாய்
எகிறி இறங்குது மனசு
என் வாசப்படியை
நீ
தாண்டும் போது (ப. 25)

சிறுசிறு கவிதைகளில் இவர் வெளிப்படுத்தும் சிந்தனைகளும் பலதரப்பட்டவை.

மேட் இன் ஜப்பானுக்கு
ஏக கிராக்கி
ஹைகூவிலும் (ப. 65)

வலைக் குள்ளிருந்து
வழுக்கி விழுந்தது மீன்
மீனின் வாய்க்குள் (ப. 32)

பட்டுப் புழுவே
வளராதே
வெந்நீர் (ப. 66)

ரவி சுப்பிரமணியன் தான் விரும்புவதை, எளிய தெளிவான தமிழில் சொல்லும் தன்மையும், சமூக நலனில் அக்கறை மிக்க பொருண்மைத் தேர்வும் இக்கவிதைகளின் சிறப்புக்குக் காரணங்களாகின்றன.

கவிஞர் பாலா இந்த நூலின் விமர்சன உரையில் குறிப்பிடுவது போன்று, 'இன்று கவியரசர்கள் நிறையக் கவிதை தான் ரொம்பவும் கொஞ்சம்' என்பது இன்றைய கவிதையுலகின் நிலை. மேலும் இன்று வாழும் கவிஞர்களுள் ஒரு சிலர் சிறந்த கவிஞர்களாகத் தெரியவரினும் பலர் தெரிய வருவதில்லை. எனினும் முன்னோர் கவிதைகளுள் இன்று சிறப்பானவற்றை நாம் அடையாளம் கண்டு கொள்வது போன்று, இன்றைய சிறந்த கவிஞர்கள் நாளை அடையாளம் கண்டு கொள்ளப்படுவார்கள் என நம்பலாம். இந்நிலையில் இத்தொகுப்பில் உள்ள ரவி சுப்பிரமணியத்தின் சில கவிதைகள் இவரைக் கவிஞராக அடையாளம் காட்டுகின்றன.

மூல நூல்

ஒப்பனை முகங்கள், ரவி சுப்பிரமணியன், அன்னம் (பி) லிட், சிவகங்கை, 1990.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00

596 இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 100.00